



லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ தென்றலைத் தேடி... ★ முத்துலட்சுமி ராகவன்




# முத்துலட்சுமி ராகவன்

# தென்றலைத் தேடி...




லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ தென்றலைத் தேடி... ★ முத்துலட்சுமி ராகவன்



முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# தென்றலைத் தேடி

## 1

அறைக் கதவு மெலிதாகத் தட்டப்பட்டது.. தன் முன்னிருந்த லேப் - டாப்பிலேயே கவனமாக இருந்த ஆகாஷ் முகம் நிமிர்த்தாமல்,

"யெஸ்.. கமின்.." என்றான்..

"யுவர் சிக்னேச்சர் ப்ளீஸ் சார்.." என்றபடி அவன் முன் நீட்டப்பட்ட ஃபைலைப் பிடித்திருந்த சிவந்த வளைக் கரத்தைப் பார்த்தவுடன், சிலிர்த்துப் போனவனாய் அவள் முகம் பார்த்தான்..

'வர்ஷா..!' அவன் மனதில் தென்றலடித்தது.. எதிரில் நின்று கொண்டிருந்தவளும் தென்றலைப் போல்தான் இருந்தாள்.. ஓரளவு உயரமாய்.. ஒல்லியாய்.. கொடி போன்ற உடல்வாகுடன்.. வட்ட வடிவமான முகத்துடன் இருந்தாள்.. ஆர்வமாய் அவள் முகத்தில் படிந்த பார்வையைக் கண்டு கொள்ளாமல் சலனமற்ற முகபாவத்துடன் நின்றிருந்தாள்.. அவனது ஆவல் அவளை எந்த விதத்திலும் பாதித்ததாகத் தெரியவில்லை..

"வர்ஷா.. வந்து விட்டீங்களா..?" அவன் பரபரப்பாய் கேட்டான்..

"ஏன் சார் இப்படிக் கேட்கறீங்க..?" அவள் புரியாதவள் போல வினவினாள்..

"இரண்டு நாட்களாய் லீவ் போட்டிருந்தீங்களே.."

"எனக்குப் பதில் வயலெட் இந்த வேலையைப் பார்த்திருப்பாங்களே.."

அவளது பதிலின் அர்த்தம் அவனுக்குப் புரிந்தது..

'நான் வந்தாலும்.. வராவிட்டாலும்.. அலுவலக வேலை நடக்கிறதுதானே.. அப்புறம் ஏன் எனது வரவைப் பற்றி

கேட்கிறாய்..' என்று சொல்லாமல் சொல்லுகிறாள்..

இவள் இப்படித்தான் பேசுவாள் என்பது அவனுக்கு அத்துப்படி.. ஒரு நாளல்ல.. இரண்டு நாளல்ல.. மூன்று வருடங்களாய் அவளைக் காதலிக்கிறான்.. இவனது மனதை மறைமுகமாய் பலமுறை அவளிடம் சொல்லியிருக் கிறான்.. அவள் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை.. அவளைக் கண்டால் அவனது உடலில் புது ரத்தம் பாய அவளைப் பருகி விடுவது போல் பார்ப்பான்.. அவளோ பதிலுக்குக் கல்லையும்.. மண்ணையும் பார்ப்பது போல் இவனையும் உணர்ச்சியில்லாமல் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போய் விடுவாள்..

மூன்று வருடங்களாக இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு நடந்து கொண்டிருக்கிறது.. ஆகாஷின் அனைத்துப் பிரயத்தனங்களுக்கும் வர்ஷாவிடமிருந்து

எந்த எதிரொலியும் கிடைக்கவில்லை.. அவன் நேரடியாகப் பேச முயன்றால் அவள் பிடி கொடுக்காமல் நழுவினாள்.. தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல் ஆகாஷ் முயற்சிகளைத் தொடர்ந்து கொண்டே யிருக்கிறான்..

வர்ஷா அலட்சியப்படுத்தும் அளவிற்கு ஆகாஷ் ஒன்றும் சாமானியன் அல்ல.. உயரமாய் கோதுமை நிறத்துடன் கம்பீரமாகத் தோற்றமளிப்பவன்.. எம்பிஏ முடித்து அந்தக் கம்பெனியில் பெர்ஸனல் மேனேஜர் ஆகப் பதவி வகிப்பவன்.. சென்னை மாநகரில் சொந்த வீடும் காரும் உள்ளவன்.. பெற்றோருக்கு ஒரே பிள்ளை.. அவனது கடைக்கண் பார்வைக்காக பலர் தவமிருக்க.. அவனோ வர்ஷாவின் கடைக்கண் பார்வைக்காக தவமிருந்தான்..

காதலில் உருகும் ஆகாஷைத் தெனாவெட்டாய் பார்த்துவிட்டு நகரும் வர்ஷா.. ஆகாஷை அலட்சியமாய் பார்க்கும் அளவிற்கு திமிர் பிடித்த பெண் அல்ல.. பழகுவதற்கு இனிய நற்குணங்கள் கொண்ட பெண்.. ஆகாஷ் ஒருவனைத் தவிர அனைவரோடும் நன்றாகவே பழகினாள்.. ஆகாஷை மட்டுமே அலட்சியப் பார்வை

பார்த்தாள்.. பொருளாதார ரீதியில் பார்த்தால் வர்ஷா நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள்.. வாடகை வீட்டில் அம்மாவுடன் குடியிருப்பவள்.. அந்தக் கம்பெனியில் செக்ரட்டரியாய் வேலை பார்ப்பவள்.. அவளது நிலைமைக்கு ஆகாஷ் எட்டாக் கனி.. அவன் கையருகே வந்தான்.. அவன் அவளது காதலுக்காக ஏங்கி நின்ற போதும் அவள் அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை..

"சைன் ப்ளீஸ் சார்.." அவளது குரல் அவனது சிந்தனையைக் கலைத்தது..

'வேலையிலேயே கவனமாக இரு..' பெருமூச்சுடன் கையெழுத்தைப் போட்டவன் அவளிடம் பைலை நீட்டினான்..

பைலை வாங்கிக் கொண்டவள் பிஸ்கெட் கலர் பிரிண்டட் சேலை உடுத்தியிருந்தாள்.. நீண்ட பின்னலாட போகத் திரும்பியவளை,

"வர்ஷா.. ஒன்மினிட்.." என்ற ஆகாஷின் குரல் நிறுத்தியது..

"யெஸ் சார்.." அவள் நின்று திரும்பினாள்..

"எதற்காக லீவ் போட்டிருந்தீங்க..?"

"பெர்சனல் சார்.."

"என்னிடம் கூட சொல்லக் கூடாத பெர்சனலா..?"

"மூன்றாம் மனிதரிடம் சொல்லக் கூடாத பெர்ஸனல் தான் சார்.." ஆகாஷின் மனம் காயப்பட்டது..

"நான் மூன்றாம் மனிதனா..?"

"நீங்கள் ஆபிஸில் எனது சுப்பீரியர் ஆபிஸர் சார்.."

'சொந்த வாழ்க்கையில் நீ யாருமில்லை என்கிறாள்..' ஆகாஷ் தாடை இறுக மௌனமானான்..

"நான் போகலாமா சார்.."

அவனது தலை அசைவை உத்தரவாய் ஏற்றுக் கொண்டு வெளியேறியவளைப் பார்க்கையில் அவனது மனம் பொங்கியது.. ஏன் இவள் அவன் மனதைப் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாள்.. தாய் என்னதான் கடிந்து கொண்டாலும் மீண்டும் மீண்டும் அவளையே தேடி வரும் குழந்தையைப் போல்.. வர்ஷா என்னதான் முகத்தில்

அடித்தாற்போல் பதில் கூறினாலும் ஆகாஷின் மனம் அவளையே தேடி அவள் பின்னால் ஓடியது..

'தென்றல் வந்து என்னைத் தொடும்..

ஆஹா சத்தமின்றி முத்தமிடும்..'

எப்போதோ கேட்ட பாடல் வரிகள் அவனது இதயத்தில் ஒலித்தது.. வர்ஷாவைக் காணும் போதெல்லாம் அவன் மனதில் தென்றலடிக்கும்.. தென்றல் அவனது இதயத்தைத் தொடும் உணர்வை அவன் பெறும் போதெல்லாம் இந்தப் பாடல் வரிகள் அவன் மனதில் ஒலிக்கும்..

தென்றலாய் வந்து அவன் இதயத்தில் புகுந்தவள்.. நிஜத்தில் கடும் புயல் போல அவனைப் பாதித்தாள்.. நெருப்பாகச் சுட்டாள்.. அவள் ஏற்படுத்திய காதலின் வலிக்கு அவளிடமே மருந்திருக்கும்போது நோய் தீர வழியேது..? அவன் பித்தனைப் போல் தலையைப் பிடித்துக் கொண்டான்..

"என்னடா.. தலையை பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிற..?" அறைக் கதவைத் திறந்து கொண்டு வந்த மணியன் வினவினான்..

"ச்சு.. தலை வலிக்குதுடா.."

"இன்றைக்கும் தலைவலியா..? இரண்டு நாட்களாக அவளைக் காணோம்ன்னு தலையைப் பிடித்துக் கொண்டு இருந்தாய்.. இன்று தான் அவள் வந்து விட்டாளே.. இன்னுமா உன் தலைவலி நிற்க வில்லை..?"

"ச்சு.. அவளால் தான் தலைவலிடா.."

"அதை நீ தெரிந்து கொண்டால் சரி.."

"என்ன சொல்கிற..?"

"நேற்று உன் அப்பாவை பீச் ரோட்டில் பார்த்தேன்.. ஈவினிங் வாக்கிங் போய் கொண்டிருந்தார்.. உன் கல்யாணத்தைப் பற்றிப் பேசினார்.. ரொம்பவும் வருத்தப் பட்டார்.. 'ஒற்றைப் பிள்ளை.. காலா காலத்தில் கல்யாணம் பண்ணிப் பார்க்க எங்களுக்கு ஆசை இருக்காதா..' ன்னு கேட்கிறார்.. அவர் கேட்பதும் நியாயம்தானே.."

"ச்சு.. அவருக்கு வேறு வேலை இல்லை.."

"எல்லாவற்றிற்கும் 'ச்சு' கொட்டிக் கொண்டிருந்தால் எப்படிடா.. அப்படியென்ன இந்தப் பெண் பெரிய ரதியா..?"

"எனக்கு அவள்தான் ரதி.."

"சும்மா பிதற்றாதே ஆகாஷ்.. உன் அருமை புரியாத வளுக்காக உருகிக் கொண்டிருக்காதே.. நான் இவ்வளவு தான் சொல்வேன்.. அவளை நீ மறந்து விடுவதுதான் உன் எதிர்காலத்திற்கு நல்லது.."

"என் எதிர்காலமே அவள்தான்.."

"போடா முட்டாள்.. எந்த வகையிலும் அவள் உனக்கு ஏற்றவள் அல்ல.. காதலுக்கு கண் இல்லை.. புத்தியுமா இல்லாமல் போய் விட்டது..? உன் அழகிற்கும்.. படிப்பிற்கும்.. வசதிக்கும் நான்.. நீயென்று போட்டி போட்டுக் கொண்டு கியூவில் வந்து பெண்கள் நிற்பார்கள்.."

"அதில் ஏண்டா இவள் நிற்க மாட்டேன் என்கிறாள்..?"

"நீ அந்தக் கவலையிலேயே இரு.. நீ திருந்தவே மாட்டாயாடா..?"

"காதலிப்பது தவறா..? என்னை ஏன் திருந்தச் சொல்கிற..?"

"நீ திருந்தாத ஜென்மமாகவே இரு.. நீ தேறாத கேஸ்டா.."

"அவள் இன்றைக்கு பிஸ்கெட் கலரில் பிரிண்டட் சேலை கட்டியிருக்கிறாள் மணி.. தேவதை போல் இருக்கிறாள்டா.."

"நான் தேவதையையெல்லாம் நேரில் பார்த்தது இல்லை.."

"அப்போ வர்ஷாவைப் பார்.."

"அது எதற்கு எனக்கு வேண்டாத வேலை..? நான் வீட்டிற்குப்போய் என் பெண்டாட்டியைப் பார்த்துக் கொள்கிறேன்.."

"ம்ம்.. கல்யாணம் முடிந்துவிட்ட பெருமையை என்னிடம் காட்டுகிற.."

"தெரிந்தால் சரி.. சொல்ல மறந்து விட்டேன்.. உன் அப்பா இதையும் சொல்லிப் புலம்பினார்.."

"என்னன்னு புலம்பினார்..?"

"உனக்கும் கல்யாணமாகி ஒரு குழந்தைக்கும் தகப்பன் ஆகி விட்டாய்.. என் மகன் இன்னும் தனி மரமாய்

நிற்கிறானேன்னு புலம்பினார்."

"என்னை மரமாக்குவதில் அவருக்கு ஒரு சந்தோசம்.."

"அவரைப் புலம்ப வைப்பதில் உனக்கு சந்தோசம்.."

மணியன் எழுந்து சென்று விட்டான்.. அவன் சொல்வது உண்மை தானே என்று ஆகாஷின் மனம் வினவியது..

உறவினர் வீட்டுத் திருமணங்களுக்குப் போய் வந்த பின்னால் ஆகாஷின் அம்மா ராஜேஸ்வரி சொல்லிச் சொல்லிப் புலம்புவாள்..

"கல்யாண வீட்டில் கேட்காத ஆள் பாக்கியில்லை.. உன் மகனுக்கு எப்போது கல்யாணம்னு.. பெண்ணைப் பெற்றவங்க என்னையே சுற்றிச் சுற்றி வருகிறாங்க.."

"அது ஏன்மா.. உங்களையே சுற்றி வருகிறாங்க.. கோவிலில் உள்ள தெய்வத்தைச் சுற்றினாலாவது புண்ணியம் கிடைக்கும்.."

"பிள்ளையைப் பெற்றவங்களைச் சுற்றினால் மாப்பிள்ளை கிடைக்குமே.. ஏண்டா ஆகாஷ்.. எனக்குக் கை காலெல்லாம் குடையுது.. தலையெல்லாம் நோவுது.."

"டாக்டரிடம் போகலாமா அம்மா.."

"இவன் ஒருத்தன்.. மண்ணு மாதிரி பேசிக் கொண்டு.. என்னால் எந்த வேலையையும் செய்ய முடியலைடா.."

"வேலைக்கு ஆள் இருக்கிறாங்களே அம்மா.."

"ஏண்டா இப்படிக் குதர்க்கமாவே பேசுகிற..? ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு எனக்கு நிம்மதியைக் கொடுக்கக் கூடாதா..?"

ஆகாஷ் மௌனிப்பான்.. அவனது தந்தை பார்த்த சாரதியின் அணுகுமுறையே வேறு..

"ஆகாஷ்.. வாக்கிங் போகலாமா.."

"ஓகேப்பா.."

இருவரும் கடலோரச் சாலையில் நடந்து கொண்டிருக்கும் போது மெதுவாக பேச்சை ஆரம்பிப்பார்..

"ஆகாஷ்.. எனக்குப் படிக்கிற காலத்தில் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்ங்கிற ஆசை

இருந்தது.."

"இன்ட்ரெஸ்டிங்.. அப்புறம்.."

"ஏனோ.. எனக்குப் பிடித்ததுபோல் ஒரு பெண்ணைக் கூட என்னால் சந்திக்க முடியவில்லை.."

"அப்செட் ஆகிட்டிங்களா..?"

"அதெல்லாம் இல்லை.. வீட்டில் பெண் பார்க்க அழைத்துப் போனாங்க.. போய் பார்த்தால்.. நான் எதிர் பார்த்த அத்தனை அம்சங்களுடன் உன் அம்மா வந்து அமர்ந்தாள்.. என் கண்களையே என்னால் நம்ப முடிய வில்லை.. எப்படிடா.. நாம் கனவில் நினைத்த காதலியே எதிரில் வந்து உட்காருகிறான்னு ஆச்சரியப்பட்டுப் போனேன்.."

தகப்பனார் எங்கே வருகிறார் என்று ஆகாஷிற்கு புரிந்து விடும்.. பேசாமல் கடலைப் பார்த்துக் கொண்டே நடப்பவனிடம் மெதுவான குரலில் விசாரிப்பார் பார்த்த சாரதி..

"அப்படி எதுவும் உனக்குள் எதிர்பார்ப்பு இருக்கிறதா ஆகாஷ்..? இருந்தால் என்னிடம் சொல்.. அதற்கேற்றாற் போல் பெண் தேடுகிறேன்.. என்னிடம் சொல்லத் தயக்கமாக இருந்தால் எங்களுடன் வந்து பெண்ணைப் பார்.. ஒரு வேளை எனக்கு அமைந்தது போல் உனக்கும் நீ தேடிய பெண் போலவே அமைந்து விடுவாள்.."

'எனக்கு நான் தேடும் பெண் போல வேண்டாம் அப்பா.. நான் தேடும் பெண்தான் வேண்டும்..' மனதிற்குள் சொல்லிக் கொள்வான் ஆகாஷ்..

"என்னப்பா பதில் சொல்ல மாட்டேங்கிற..?"

"எனக்கு இப்போது கல்யாணத்தில் இன்ட்ரெஸ்ட் இல்லைப்பா.."

அதற்கு மேல் தோளுக்கு மேல் வளர்ந்த மகனிடம் எப்படி அவனது திருமணத்தைப் பற்றி வற்புறுத்திப் பேசுவது..? பார்த்தசாரதி விட்டு விடுவார்.. ஆனால் ஆகாஷின் நண்பர்களிடம் தூண்டித் துருவி விசாரிப்பார்..

"ஏன் விவேக்.. அவன் யாரையாவது காதலிக்கிறானா..?"

விதியே என்று நொந்து கொண்டு,

"இல்லைப்பா.." என்று பதில் சொல்வான் விவேக்..

"உனக்குத் தெரியாமல் இருக்காதே மணி.. ஆகாஷின் மனதில் ஏதும் பெண்ணைப் பற்றிய நினைவு இருக்கிறதா..?"

'பேசாமல் சுற்றி வளைத்து வாக்கிங் போயிருக்கலாம்.. இவ்வளவு பெரிய மனிதரிடம் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இருந்திருக்காது..' என்று பெருமூச்சு விட்டபடி,

"சேச்சே.. அவன் தங்கம்பா.." என்று பொய் சொல்லுவான் மணியன்..

காய்கறி வாங்கப் போகும் இடத்தில் மாலதி மாட்டிக் கொள்வாள்.. தப்பிக்க வழி தேடி விழிப்பவளிடம்,

"அம்மா மாலதி.. நீ ஆகாஷின் பெஸ்ட் பிரண்ட்.. உனக்கு அவன் மனதில் என்ன இருக்கிறதுன்னு கண்டிப்பாகத் தெரியும்.." என்று தூண்டில் போடுவார் பார்த்தசாரதி..

'அவன் மனதிலிருப்பதை அவன் மனதிலிருப் பவளிடமே இன்னும் சொல்லவில்லையே..' என்ற ஆதங்கத்துடன்,

"அப்படி எதுவும் இருந்தால் உங்களிடம் நானே சொல்லியிருப்பேனே அப்பா.." என்று வருத்தத்துடன் கூறுவாள் மாலதி..

மொத்தத்தில் ஆகாஷ் வர்ஷாவின் காதலைத் தேடி அலைந்து கொண்டிருந்ததில் அவளது தோழர்களும் தோழிகளும் பாதிப்புக்கு உள்ளானார்கள்..

## 2

பஸ் ஸ்டாப்பை விட்டு பஸ் நகர ஆரம்பிக்க அவசரமாய் ஓடிப் போய் பஸ்ஸில் தொற்றிக் கொண்டாள் வர்ஷா..

"டிக்கெட்.." என்ற கண்டக்டரிடம்,

"திருவான்மியூர்.." என்று கூறி பணத்தைக் கொடுத்து டிக்கெட்டை வாங்கிக் கொண்டாள்..

பஸ்ஸில் கூட்டம் அதிகமில்லை.. ஆசுவாச மூச்சு விட்டவள் பஸ்ஸின் தாங்கு கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.. அடுத்த ஸ்டாப்பில் ஒரு பெண் இறங்க, காலியான

இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.. ஜன்னலோரம் இருந்த பெண்ணும் இறங்கிக் கொள்ள நகர்ந்து அமர்ந்து வெளியே வேடிக்கைப் பார்த்தாள்.. மாலை நேரத்து இதமான காற்று முகத்தில் பட்டது.. முன்னால் சென்று கொண்டிருந்த காரைப் பார்த்தபோது ஆகாஷின் நினைவு வந்தது.. அவனுடைய காரின் நிறமும் இதுதான்..

'வர்ஷா.. வந்து விட்டீங்களா..?' ஆவலாய் அவன் கேட்டது நினைவில் ஆடியது.. 'மூன்று வருடங்களாய் இதே ஆவலைக் காட்டுகிறானே.. அவளது பாரா முகம் கொஞ்சம் கூட அவனது ஆவலைக் குறைக்க வில்லையா..?' வேதனையுடன் நினைத்துக் கொண்டாள்..

அலுவலகத்தில் அவனுக்கு அவ்வளவு நல்ல பெயர்.. கீழே வேலை பார்ப்பவர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கும் திறமைசாலி.. மற்றவர்களின் மனம் புண்பட அவன் ஓர் வார்த்தை சொன்னதாக ஒருவர்கூட அவளிடம் கூறியதில்லை.. அந்தக் கம்பெனியில் நேர்முகத் தேர்வு வைத்தபோது அவளை இன்டர்வியூ செய்தவர்களில் அவனும் ஒருவன்.. பயத்தில் முகமெல்லாம் வியர்க்க.. படபடப்புடன் பதில் கூறியவளைப் பார்த்து ஆதரவாய் புன்னகைத்தான்..

"ஏன் பயப்படுகிறீங்க..? பதட்டமில்லாமல் பதில் சொல்லுங்கள்.. நாங்கள் ஒன்றும் சிங்கம்.. புலி.. கரடியில்லை.."

அவனது இந்த வார்த்தைகளைக் கேட்டு அவனுடன் இருந்த மற்ற இருவரும் சிரித்தார்கள்..

"நம் மூவரில்.. யார் சிங்கம்.. யார் புலி.. யார் கரடி என்றும் சொல்லி விடு ஆகாஷ்.."

அந்த நேர்முகத் தேர்வில் அவள் தேர்வு செய்யப் பட்டு ஆகாஷின் செயலாளராக நியமிக்கப்பட்டாள்.. மூன்று வருடத்திற்கு முன் அவனது அறைக்குள் சென்று அவள்,

"குட்மார்னிங் சார்.." என்று கூறியபோது நிமிர்ந்து பார்த்தவனின் முகத்தில் தோன்றிய ஆவலும்.. ஆர்வமும் இன்று வரை குறையவில்லை..

'ஏன் லீவ் போட்டீங்க வர்ஷா..?'

ஏனென்று சொன்னால் அவன் தாங்குவானா..? சொல்ல முடியவில்லை.. 'என்னைப் பெண் பார்க்க வந்திருந்தாங்க..' என்று அவளால் அவனிடம் சொல்ல முடியவில்லை... அவனது கேள்வியைத் தடுக்க 'பெர்ஸனல்..' என்று ஒற்றை வார்த்தையைக் கேடயமாகப் பயன்படுத்த முயன்றால்.. 'நான் மூன்றாம் மனிதனா..?' என்று கேட்கிறானே..

விழிகளை மூடிக்கொண்டு தலையை லேசாய் ஆட்டி தன்னிலைக்கு வர முயன்றாள் வர்ஷா..

'ஆமாம்.. நீ மூன்றாம் மனிதன்தான்..' என்று நேரடியாய் ஏன் அவளால் சொல்ல முடியவில்லை.. மூடிய விழிகளுக்குள் அவனது கம்பீரமான தோற்றம் வந்து நின்றது.. அந்த அலுவலகத்தின் பெர்ஸனல் மேனேஜர்.. பல வருடங்களாக அந்த அலுவலகத்தில் வேலை பார்க்கும் உயர் மட்டத்தைச் சேர்ந்தவன்.. அவளைக் காதலிக்கிறான்.. அவள் அவனைக் காதலிக்கிறாளா.. இல்லையா..?

நிராசையுடன் இந்தக் கேள்வியைத் துரத்தினாள் வர்ஷா..

"வர்ஷா.. இந்தப் புடவையில் நீங்க அழகா இருக்கிறீங்க.."

"வர்ஷா.. உங்களைப் பார்த்தால் தென்றலைப் பார்ப்பது போல் இருக்கிறது.."

"வர்ஷா.. என் மனமெல்லாம் உங்களைப் பற்றிய நினைவுதான்.."

"வர்ஷா.. நேற்று ஒரு கவிதை எழுதினேன்..

தென்றலைத் தேடி.. நான்
திசைதோறும் அலைந்து வந்தேன்..
தென்றலோ என் கண் முன்னே..! நான்
திசை தேட இனித் தேவையில்லை..

எப்படி இருக்கிறது வர்ஷா..? நன்றாக இருக்கிறதா..?"

மூன்று ஆண்டுகளாய் அவன் தினமும் ஏதாவது ஒரு வகையில் அவனது மனதைச் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறான்.. அவள்தான் மனக் கதவைத் திறக்கத் தயாராக இல்லை.. மனச்சாளரக் கதவுகளை இறுக்கி மூடித் தாழிட்டு விட்டாள்..

அவள் இறங்க வேண்டிய இடம் வந்து விட்டது.. எழுந்து இறங்கினாள்.. வீட்டை நோக்கி நடக்க ஆரம் பித்தாள்.. ஏப்ரல் மாத விடுமுறையில் தெருவெல்லாம் வருங்கால சச்சின் டெண்டுல்கர்கள் கிரிக்கெட் மட்டையுடன் விளையாடிக் கொண்டிருந்தனர்.. பந்து ஒன்று அவளை நோக்கிப் பறந்து வர.. அவள் தாவிப் பிடித்தாள்..

"சூப்பர் கேட்ச்சுக்கா... நீங்களும் எங்களுடன் விளையாட வருகிறீங்களா..?"

அவள் பந்தைப் பிடித்த விதத்தைப் பார்த்து கண்கள் விரிய நின்ற சிறுவன் கேட்டான்.. அவனுடன் இருந்த மற்றொருவன் அவனை அதட்டினான்..

"டேய்.. அவங்கல்லாம் பெரியவங்க.. நம்முடன் விளையாட வர மாட்டாங்க.. பேசாமல் இரு.. நீ விளையாடக் கூப்பிட்டால் அவங்க கோபித்துக் கொண்டு பந்தை தர மாட்டேன்னு சொல்லிட்டுப் போயிடப் போறாங்க.."

அவள் சிரித்துக் கொண்டே பந்தை அவனிடம் கொடுத்தாள்.. அவர்கள் 'ஹோ'வென்ற கூச்சலுடன் ஓடினார்கள்.. வர்ஷாவும் இவர்களைப் போல இருந்தவள் தான்.. மூன்றரை வருடங்களுக்கு முன்னர்.. கவலை யில்லாமல் பட்டாம்பூச்சி போல் சிறகடித்துக் கொண்டு இருந்த கல்லூரிப் பறவைதான்.. ஓர் நாள் மாலை அவள் கல்லூரியிலிருந்து வீடு திரும்பினாள்.. மறுநாள் காலைக்குள் அவளது வாழ்வே தடம் புரண்டு விட்டது..

வீடு வந்து விட்டது.. அவள் அந்தப் பெரிய வீட்டின் காம்பவுண்டு கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனாள்.. பரந்திருந்த தோட்டத்திற்கு குழாய் மூலம் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்த பார்வதியம்மாள்,

"என்னம்மா வர்ஷா.. இப்போதுதான் வருகிறாயா..?" என்று வினவினாள்..

"ஆமாம் ஆன்ட்டி.." மரியாதையுடன் பதில் கூறினாள் வர்ஷா..

"சரி போ.." கடமை முடிந்தது போல் அவள் தன் வேலையைத் தொடர்ந்தாள்..

வர்ஷா தோட்டத்தைத் தாண்டிக் கட்டப்பட்டிருந்த 'அவுட் ஹவுஸ்' எனப்படும் அந்தச் சின்னஞ்சிறு வீட்டிற்குள் போனாள்.. சின்னத் தாழ்வாரம்.. ஒரு

பெரிய அறை.. அதைத்தான் ஹாலாக பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள்.. அதை ஒட்டிய சிறிய அறையைப் படுக்கை அறையாக மாற்றியிருந்தார்கள்.. சின்னச் சமையலறை.. பின் பக்கம் குளியலறை.. குளியலறையை ஒட்டிய சிமெண்ட் மேடையில் மல்லிகா துணிகளை துவைத்துக் கொண்டிருந்தாள்..

"என்னம்மா.. கதவைத் திறந்து வைத்து விட்டுப் பின் பக்கம் இருக்கறீங்க.." என்ற வர்ஷாவின் குரல் கேட்டு நிமிர்ந்தாள்..

"இங்கே என்னம்மா பயம்..? வாசலில் வாட்ச்மேன் இருக்கிறார்.. யார் வந்தாலும் அவரைத் தாண்டித்தான் உள்ளே வரனும்.. கொஞ்சம் பொறு.. துணிகளைக் காய வைத்து விட்டு வந்து விடுகிறேன்.."

வர்ஷா தாயின் வார்த்தைகளைக் கேட்டு தனக்குள் புன்னகைத்துக் கொண்டாள்.. பெரிய வீட்டின் அவுட் ஹவுஸில் இருப்பதில் இது ஒரு சௌகர்யம்.. நெல்லுக்கு இறைக்கும் தண்ணீர் கொஞ்சம் புல்லுக்கும் பாய்வது போல.. பெரிய வீட்டிற்கு இருக்கும் பாதுகாப்பில் அந்த அவுட் ஹவுஸில் இருந்த பெண்கள் இருவரும் பத்திரமாய் இருந்தனர்..

கடலூரில் இருந்து சென்னைக்குக் கிளம்ப வேண்டி வந்தபோது மல்லிகா மறுகினாள்.. பயந்தாள்..

"இதுவரை தாய் பறவையின் சிறகின் அடியிலிருக்கும் குஞ்சைப் போல பாதுகாப்பாய் இருந்தேனே.. இப்போது வயதுப் பெண்ணை வைத்துக் கொண்டு சென்னையில் எப்படித் தனியாக காலம் தள்ளப் போகிறேனோ.."

பக்கத்து வீட்டு வசந்தாவிடம் அழுது புலம்பியபோது அவள்தான் ஆறுதல் சொல்லி வழிகாட்டினாள்..

"திக்கற்றவர்களுக்கு தெய்வம்தான் துணை மல்லிகா.. அந்தத் தெய்வத்தை நம்பி அதன் மேல் பாரத்தைப் போட்டு விட்டு உன் மகளோடு சென்னைக்குக் கிளம்பிப் போ..

அங்கே என் பெரியம்மா வீடு இருக்கிறது... அவங்க பங்களாவில் அவுட் ஹவுஸ் காலியாகத்தான் இருக்கிறது.. நல்ல குடும்பமாக இருந்தால் குடி வைக்கலாம்ன்னு சொல்லிக்கிட்டு இருந்தாங்க.. நான் அவங்களிடம் போனில் கேட்டுச் சொல்கிறேன்.. பயப்படாதே.."

சொன்னது போல் அவள் போனில் பேசி பார்வதியம் மாளின் வீட்டு அவுட் ஹவுஸை மல்லிகாவிற்குப் பேசி முடித்தாள்..

கடலூர் வீட்டைக் காலி செய்துவிட்டு சென்னையில் அடியெடுத்து வைத்தபோது.. பார்வதியம்மாள் கறாராக அவர்களை வரவேற்றாள்..

"இதோ பாரம்மா.. இது சென்னை.. கடலூரில்லை.. தண்ணி பட்டபாடு என்பதெல்லாம் இங்கே செல்லாது.. தண்ணீர் இங்கு தங்கம் போல.. பார்த்துச் செலவழிக்க வேண்டும்.. அவுட் ஹவுஸை குப்பையில்லாமல் வைத்துக் கொள்ள வேண்டும்.. அவுட் ஹவுஸைச் சுற்றிப் பெருக்கி நல்ல முறையில் பார்த்துக் கொள்ள வேண்டும்.. வசந்தா சொன்னதால் உங்களை வீட்டுக் காம்பவுண்டிற்குள் விடுகிறேன்.. வயதுப்பெண்.. வேலைக்கு வேறு போகிறாள்.. டான்னு ஏழடிக்கும் முன்னால் அவள் வீட்டுக் காம்பவுண்டிற்குள் ஆஜராகிவிட வேண்டும்.. ஏதேனும் தப்புத் தண்டாவை கேள்விப்பட்டேன்னு வை.. அடுத்த நொடியிலேயே வீட்டைக் காலி பண்ண வைத்து விடுவேன்.. கடலூர் கதை இங்கே வரக்கூடாது.."

கடலூரில் சொந்த வீட்டில் வாழ்ந்தவர்கள்.. மலங்க.. மலங்க விழித்தார்கள்.. மல்லிகா பயந்தபோது வர்ஷா தான் ஆறுதல் சொன்னாள்..

"பயப்படாதீங்க அம்மா.. நாம் இருக்கும் இருப்பைப் பார்த்து அவங்களே நம்மைப் புரிந்து கொள்வாங்க.."

வர்ஷா சொன்னது போலவே இந்த மூன்று வருடமும் இருக்கும் இடம் தெரியாமல் அமைதியாய் வாழ்ந்த தாயையும்.. மகளையும் பார்வதியம்மாளுக்கு பிடித்துப் போய்விட்டது.. மகளும்.. மகனும்.. திருமணமாகி அவரவர் குடும்பங்களுடன் வெளிநாட்டில் வசிக்க.. கணவருடன்

தனியே வாழ்ந்து வந்தவளுக்கு மல்லிகா நல்ல பேச்சுத் துணையானாள்..

"இந்தாம்மா வர்ஷா.. கோவிலுக்குப் போனேன்.. உனக்கு பூ வாங்கி வந்தேன்.." என்று ஓர் நாள் நீட்டுவாள்.

"வர்ஷா.. என் வீட்டுக்காரருக்கு பிறந்தநாள்.. வடை பாயசம் செய்தேன்.. உனக்கும் அம்மாவிற்கும் கொண்டு வந்தேன்.." என்று இன்னொரு நாள் நீட்டுவாள்..

மெல்ல.. கடலூரின் கசப்புகளை மறந்து சென்னை வாழ்க்கைக்கு பழகிப் போனார்கள் வர்ஷாவும்.. மல்லிகாவும்.. அப்போது பார்வதி அம்மாள்தான் வர்ஷாவின் கல்யாணத்தைப் பற்றிப் பேச்செடுத்தாள்..

"ஏன் மல்லிகா.. வர்ஷாவிற்கு கல்யாண வயசாயிடுச்சே.. மாப்பிள்ளை யாரும் சொந்தத்தில் இருக்கிறாங்களா..?"

"இல்லைங்கம்மா.. எங்க சொந்தங்களைப் பற்றித் தான் உங்களுக்குத் தெரியுமே.. அவங்ககிட்டே மாப்பிள்ளை யிருந்தாலும் நான் வர்ஷாவைக் கொடுப்பதாக இல்லை.."

"அப்ப.. அந்நியத்தில் ஒரு மாப்பிள்ளை இருக்கிறான்.. முடித்து விடுவோமா..? நீ என்ன சொல்கிறாய்..?"

"மாப்பிள்ளை.. யாரு எவருன்னு தெரியலையே.."

"எல்லாம் என் பெரிய மாமனாரின் பேரன்தான்.. இங்கே தான் வேலை பார்க்கிறான்.. தாய் தகப்பன் கிடையாது.. சொந்த பிளாட் இருக்கிறது.. கார் வைத்திருக்கிறான்.. என் வீட்டிற்கு வந்து போனபோது வர்ஷாவைப் பார்த்திருக்கிறான்.. என்னிடம் விசாரித்தான்.. நான் உங்கள் வீட்டுக் கதையெல்லாம் சொல்லி விட்டேன்."

"அதைக் கேட்ட பின்னாலுமா என் மகளைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுகிறார்..?"

"ஐந்து விரல்களும் ஒன்று போலவா இருக்கிறது..? அது போல்தான்.. உலகத்தில் இருக்கிற மனிதர்கள் எல்லோரும் உன் சொந்தக்காரர்கள் போலவே இருக்க மாட்டார்கள். இவன் தங்கமானவன்.. 'பெண் அழகாய் இருக்கிறாள்.. படித்திருக்கிறாள்.. வேலைக்குப் போய் சம்பாதிக்கிறாள்.. அது போதும் பெரியம்மா..' என்கிறான்.. நீயும் வர்ஷாவுக்கு

குறைவாகவா செய்யப் போகிறாய்..? நகையே எவ்வளவு சேர்த்து வைத்திருக்கிறாய்ன்னு எனக்குத் தெரியாதா..? நீயே உன்னை ஏன் மட்டமாக நினைத்துக் கொள்கிறாய்..?"

"அது இல்லைங்கம்மா.. வர்ஷாதான் எனக்கிருக்கும் ஒரே சொந்தம்.."

"பைத்தியம்.. அவன் தாய்.. தகப்பனில்லாதவன்னு சொன்னேனா இல்லையா.. உன்னை பெற்ற தாய் போல் கடைசி வரைக்கும் கூட வைத்துக் காப்பாற்றுவான்.. கவலைப்படாதே.."

மல்லிகா யோசித்தாள்.. பார்வதியம்மாள் சொல்வது சரி என்று பட்டது.. பெண் பார்க்க வரச் சொல்லி விட்டாள்.. இரண்டு நாட்களுக்கு முன்னால் அதற்காகத்தான் வர்ஷா லீவ் போட்டாள்..

"இப்போது என் கல்யாணத்திற்கு என்னம்மா அவசரம்..?"

"உனக்கு இருபத்தி இரண்டு வயதாகிறது வர்ஷா.."

"அதற்காக..? எனக்கு உங்களை விட்டு விட்டுப் போக இஷ்டமில்லைம்மா.. என்னைப் போர்ஸ் பண்ணாதீங்க.."

"நானும் உங்களோடு வந்து விடலாம்ன்னு மாப்பிள்ளை சொல்லி இருக்கிறாராம்.. இதுபோல் இடம் நமக்கு அமையாது வர்ஷா."

எல்லாக் கேள்விகளுக்கும் பதில் இருக்கிறதா..? வர்ஷாவின் விழிகள் கலங்கின.. விழிநீரை தாய் கவனிக்காமல் மறைத்தபடி..

"உங்களுக்கு இதுதான் விருப்பம்ன்னா சரி அம்மா.. நான் என்ன சொல்லப் போகிறேன்.. நான் சொல்லத்தான் என்ன இருக்கிறது..?" என்றாள் மனவேதனையை மறைத்தபடி..

மல்லிகா சந்தோசமாக வீட்டிற்குள் போனாள்.. மூன்று வருடங்களுக்குப் பின்னால் முதன் முறையாக தாயின் முகத்தில் முகிழ்ந்திருக்கும் மலர்ச்சியைக் கவனித்த வர்ஷா அதைக் கலைக்க முடியாதவளாய் வாய் வரை வந்த வார்த்தைகளை தொண்டைக் குழியிலேயே கொன்று சமாதி கட்டினாள்.. தன் மன உணர்வுகளை இதயத்தில் ஆழமாய் குழி தோண்டிப் புதைத்தாள்..

மனதிற்குள் வசீகரமாய் சிரித்தபடி ஆகாஷின் உருவம் எழும் போதெல்லாம் வர்ஷாவின் இதயம் துடிக்கும். ஆனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பெண் பார்க்க வந்த விவேக்கின் முன்னிலையில் மணமகளாய் நின்றாள்.

## 3

'சிரிக்கச் சொன்னால் சிரிப்பேன்..

பார்க்கச் சொன்னால் பார்ப்பேன்..

எனக்கென ஓர் உணர்ச்சியில்லை தோழி..'

என்பது போல் மல்லிகா வரச் சொன்னதும் முன்னறைக்குப் போனாள் வர்ஷா.. வணங்கச் சொன்னதும் வணங்கினாள்.

"இவன்தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற மாப்பிள்ளை.. உன்னை ஏற்கனவே பார்த்து விட்டான்.. நீதான் இவனை இன்னும் பார்க்க வில்லை.. பார்த்துக் கொள் வர்ஷா.." என்று பார்வதியம்மாள் கூறவும் விழி உயர்த்தினாள் வர்ஷா..

அவளது விழிகளைச் சந்தித்த விவேக் சிவந்த நிறத்துடன் கவர்ச்சிகரமான தோற்றத்துடன் இருந்தான்.

அவனது பார்வையைச் சந்தித்தபோது ஏனோ வர்ஷாவிற்கு ஆகாஷின் பார்வையே நினைவில் வந்தது.. விழிகளை அவசரமாய் தாழ்த்திக் கொண்டாள்.. அதை 'வெட்கம்' என்று பொருள் கொண்ட விவேக்கின் முகத்தில் திருப்திகரமான புன்முறுவல் வந்தது..

"பின்னே என்ன மல்லிகா.. எங்க வீட்டுப் பையனுக்கு உன் பெண்ணைப் பிடித்துப் போச்சு.. கல்யாணத்தை எப்போ வைத்துக் கொள்ளலாம்..?"

"நீங்கள் எப்போது நாள் குறித்தாலும் சரிங்கம்மா.. நான் என்ன சொல்லப் போகிறேன்..? எனக்கு எடுத்துச் செய்ய ஆள் யாரிருக்காங்க.. நாங்க தனியாய் நிற்கிறோம்.." மல்லிகா கண்கலங்கினாள்..

"அசடு.. நல்ல காரியம் பேசறபோது கண் கலங்கலாமா..? ஆள் இல்லைன்னு இனிமேல் நீ பேசக்கூடாது.. நாங்கள் எதுக்கு இருக்கிறோம்..? நாங்கள் பார்த்துக் கொள்வோம்.." என்ற பார்வதியம்மாள் தாழ்ந்த குரலில் விவேக்குடன் விவாதித்தாள்..

"இது பங்குனி மாதம் மல்லிகா.. சித்திரை கழியட்டும்.. வைகாசியில் அக்கினி நட்சத்திரம் முடிந்தவுடன் கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம்.. மண்டபம் பார்க்க.. மற்ற வேலைகளை ஏற்பாடு செய்ய எங்களுக்கும் நாள் வேண்டுமே.."

பார்வதியம்மாள் கூறியதை ஏற்றுக் கொண்டாள் மல்லிகா.. வர்ஷா.. யாருக்கு வந்த விருந்தோ.. என்பது போல் பொம்மையாய் அமர்ந்திருந்தாள்.. அவள் மனம் தவித்துக் கொண்டு இருந்தது.. திருமண நாளை முடிவே பண்ணி விட்டார்களே.. ஒரு நொடி 'அம்மா.. எனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லை..' என்று சொல்லி விடலாமா என்று நினைத்தாள்.. மல்லிகாவின் முக மலர்ச்சி அவளுடைய எண்ணத்தை தடை செய்தது..

"நிச்சயதார்த்தம்னு தனியாக பண்ணாவிட்டால் என்ன மல்லிகா.. பந்தக்காலில் பரிசம் போடுன்னு பெரியவங்க சொல்வது போல் கல்யாணத்திற்கு முதல் நாள் மண்டபத்திலேயே நிச்சயதார்த்தம் பண்ணிக் கொள்ளலாமே.. இப்போதுதான் கல்யாணத்துக்கு முதல் நாளே.. பெண்ணும்.. மாப்பிள்ளையும் ஜோடியாய் ரிசப்ஷன் வைத்து நின்று விடுகிறார்களே.. நாமும் நிச்சயதார்த்தத்தை முடித்துவிட்டு ரிசப்ஷன் நடத்தி விடலாம்.. மறுநாள் காலையில் கல்யாணம்.. மதிய விருந்தோடு மண்டபத்தை காலி பண்ணி சாவியை ஒப்படைத்து விடலாம் என்ன சொல்கிறாய் மல்லிகா..?"

"நான் சொல்ல தனியாய் எதுவும் இல்லைன்னு ஏற்கனவே சொல்லி விட்டேனம்மா.."

வர்ஷாவின் மனதில் சுமை ஏறிக் கொண்டே இருந்தது.. ஆகாஷின் சிரித்த முகம் அவளது நெஞ்சில் தோன்றி அலைக்கழித்தது.. அந்த இடத்தை விட்டு எழுந்து ஓடி

விடலாமா என்று தோன்றியது.. ஒரு கணம் அந்த நினைவில் திளைத்தவள்.. மறு கணம் அதிர்ந்தாள்..

'ஓடுவதா.. வீட்டை விட்டு ஓடுவதா.. இந்த எண்ணம் என் மனதில் எழலாமா..? ஒருத்தி ஓடியதால் வீடு என்ன கதிக்கு ஆளானது என்பதை மறந்து விட்டு மனம் போன போக்கில் தறிகெட்டு எண்ணங்களும் போகலாமா..? அடங்கு.. மனமே.. அடங்கு..' மனக் குதிரைக்கு கடிவாளமிட்டு அடக்கினாள் வர்ஷா..

லேசாகத் தலை நிமிர்ந்து விவேக்கைப் பார்த்தாள்.. அவனும் அவளையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.. தலை கவிழ்ந்து கொண்டாள்..

'கடவுளே.. இவனுக்கும் ஏன் என்னைப் பிடித்துப் போனது..'

விவேக் அவளது தவிப்பிற்கு வேறு அர்த்தம் கற்பித்துக் கொண்டு பரவசமடைந்தான்.. அவளைப் பருகுவது போல் மீண்டும் பார்க்க ஆரம்பித்தான்..

வர்ஷா மிகமிக தர்ம சங்கடமடைந்தாள்.. இது கொடுமை.. விருப்பமில்லாத பெண் பார்க்கும் படலத்தில் மனதில் ஒருவனை நினைத்துக் கொண்டு மாற்றான் ஒருவன் முன் மணமகளாய் அமர்வது.. வர்ஷா முள்மேல் அமர்ந்திருப்பதைப் போல் உணர்ந்தாள்.. எழுந்து சென்று விடலாம். ஆனால்.. அதன்பின் மல்லிகா உயிரோடு இருக்க மாட்டாள்.. எனவே வர்ஷா அமைதியிழந்த மனதை மறைத்துக் கொண்டு தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தாள்..

தாமரைப் பூ ஒன்று தலை சாய்த்து அமர்ந்திருப்பதைப் போல் தோற்றமளித்தவளைக் கண்ட விவேக்.. அவளை ரசித்துக் கொண்டிருந்தான்..

"போகலாமா விவேக்.." பார்வதியம்மாளின் குரலில் எழுந்து கொண்டான்..

"போகலாம் பெரியம்மா.."

"அப்போ நாங்க கிளம்பறோம் மல்லிகா.."

தோட்டத்தைக் தாண்டி தன் பங்களாவிற்குள் போவதற்கு ஊர் விட்டு ஊர் கிளம்புவதைப் போல விடை பெற்றாள்

பார்வதியம்மாள்.. விவேக் மல்லிகாவைப் பார்த்துக் கைகூப்பினான்..

"நான் வருகிறேன்.."

சங்கோஜத்துடன் தலை அசைத்த மல்லிகா.. அவனது பார்வை வர்ஷாவின் மீது படிவதைக் கண்டதும்.. அவசரமாய் வர்ஷாவின் தோளைத் தொட்டு எழுப்பினாள்.. வர்ஷா எழுந்து நின்றாள்..

"போய் வரட்டுமா வர்ஷா.."

விவேக் வர்ஷாவிடமே நேரடியாய் விடை பெற்றான்.. என்ன சொல்ல என்று தெரியாமல் தடுமாறிய வர்ஷா தலையை மட்டும் அசைத்தாள்.. அவளது தடுமாற்றத்திற்கு தானாய் ஓர் அர்த்தம் கண்டுபிடித்துக் கொண்டு புன்னகையோடு விடை பெற்றுக் கொண்டு சென்று விட்டான் விவேக்..

"எப்படிப்பட்ட பையன் பார்.. தங்கமான குணம்.. இந்தக் காலத்தில் மாமியாரைப் பெற்ற தாயாக நினைப்பவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்.. சொல்லு.. என்னைப் பெற்ற தாயாக நினைத்துக் கொள்கிறேன்.. வர்ஷாவின் அம்மா.. கடைசி வரை எங்கள் கூடவே இருக்கலாம்ன்னு சொன்னாராம்.. கடவுளுக்கு நம் மேல் கருணை கொஞ்சம் இருந்திருக்கிறது போல.. அதுதான்.. இவள் பட்ட துன்பம் போதும்.. மகளைப் பிரிந்து இவள் இருக்க மாட்டாள்ன்னு இப்படிப்பட்ட மாப்பிள்ளையை நம் கண்ணில் காண்பித்து இருக்கிறார்.. மகளுக்குக் கல்யாண வயது வந்து விட்டதே.. நாம் எப்படி இவளை கரை சேர்க்கப் போகிறோம்.. அவளைக் கரை சேர்த்த பின்னால் தனிமையில் எப்படி வாழப் போகிறோம்ன்னு தவித்துக் கொண்டிருந்தேன்.. என் தவிப்பிற்கு ஒரு முடிவு வந்து விட்டது.. இருண்டு கிடந்த நம் வாழ்க்கையில் ஓர் விடியல் வந்து விட்டது.. வர்ஷா.. மூன்று வருடங்களுக்குப் பின்னால் இன்றைக்கு ராத்திரிதான் நான் நிம்மதியாய் தூங்கப் போகிறேன்."

மல்லிகா மகிழ்ந்து போனாள்.. தாயை நெகிழ்வுடன் பார்த்தாள் வர்ஷா.. அவளால் அன்னையின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடிந்தது.. பிறந்ததிலிருந்து சந்தோசத்தை மட்டுமே பார்த்தவள்..

அன்பான, காதலான கணவன்.. பாசத்தைப் பொழியும் பிள்ளைகள் என்று பாதுகாப்பான கூட்டிற்குள் வாழ்ந்தவள்.. ஒரே நாளில் அந்தக் கூடு சிதைந்து விட்ட அதிர்ச்சியிலிருந்து அவளை மேடேற்றிக் கொண்டு வர படாத பாடுபட்டு விட்டாள் வர்ஷா..

"நானிருக்கிறேன்.. அம்மா.. உங்களுடன் கடைசி வரை நானிருப்பேன்.. என்னை விட்டுப் போய் விடாதீங்கம்மா.. எனக்கென்று யாருமில்லை.."

அன்று தாயின் முகத்தை கைகளில் ஏந்திக் கதறினாளே அந்த வார்த்தைகள் பொய்த்துப் போவதா..? ஆகாஷ் யார்..? இடையில் வந்தவன்.. இந்தப் பாசத்தை விடவா.. அவனது நினைவு தரும் இதமான உணர்வு முக்கியம்..?

வர்ஷா துக்கத்தை விழுங்கிக் கொண்டு தாயின் அருகே படுத்தாள்.. தூக்கமிழந்து இவள் விடியும் வரை புரண்டு கொண்டிருக்க மாறாக மல்லிகா அயர்ந்து தூங்கினாள்.. தாயின் நிம்மதியான உறக்கத்திற்காக தன் உறக்கத்தைத் தியாகம் பண்ணுவதில் தவறில்லை என்று தோன்ற வர்ஷா எழுந்து சென்று பூஜை மாடத்தின் முன் கை கூப்பி நின்றாள்..

மறுநாளும் அதே மலர்ச்சியுடன் மல்லிகா பார்வதியம்மாளைத் தேடி ஓடுவதையும் வந்து வரப் போகும் மாப்பிள்ளையின் புராணத்தைப் படிப்பதையும் கேட்டபடி உணர்ச்சியில்லாமல் இயங்கிக் கொண்டிருந்தாள் வர்ஷா.. மல்லிகாவின் மனதில் இருந்த சந்தோசத்தில் வர்ஷாவின் மாற்றம் அவளது கவனத்தில் படவேயில்லை..

"மாப்பிள்ளை எம்.பி.ஏ. படித்திருக்கிறாராம்.. பெரிய கம்பெனியில் மேனேஜர் வேலையாம்.."

"ஏம்மா.. இதையெல்லாம் கேட்காமலா பெண் பார்க்க வரச் சொன்னீங்க.."

"ச்சு.. அன்றைக்கு எதையும் கேட்கத் தோணலைடி.. இன்றைக்கு கல்யாணத்திற்கு நாள் குறித்து விட்டோம் கேட்க வேண்டாமா..?"

"சரி.. விடுங்க.."

"விட்டு விடுவதா.. இன்னும் கேள்.. சொந்தமாய் ஒரு அபார்ட்மென்டில் பிளாட் வாங்கியிருக்கிறாராம்.. கார் வைத்திருக்கிறாராம்.."

"அப்படியா..?"

சுரத்தில்லாமல் கேட்டாள் வர்ஷா..

"என்னடி சாதாரணமாய் அப்படியான்னு கேட்கிற.. மாப்பிள்ளை எவ்வளவு பெரிய இடம் பார்த்தாயா..?"

"ஏம்மா.. நமக்குன்னு சொந்த வீடு இல்லாமல் வாடகை வீட்டில் இருப்பது இந்த மூன்று வருசங்களா கத்தான்.. வசதி ஒன்றும் நமக்குப் புதிது இல்லை அம்மா.."

மல்லிகா வாயடைத்துப் போய் விட்டாள்.. தாயின் முகமாற்றத்தைக் கண்டு வர்ஷாவிற்குள் பரிதாபம் எழுந்தது. தாயின் அருகே வந்து அவளைத் தோளோடு அணைத்தபடி,

"ஏம்மா.. முகம் வாடிப் போயிட்டீங்க.. அவர் வசதியானவராகவே இருக்கட்டும்.. அதனால் ஒன்றும் நாம் அவரைக் கொண்டாட வேண்டாம்.. அவருக்கு நல்ல மனம் இருக்கிறது.. அதற்காக கொண்டாடுவோம்.. பணத்தை விட குணம் பெரிது அம்மா.." என்று இதமாக சொன்னாள்..

"அவர் குணத்திலும் பெரியவர்தான் வர்ஷா.."

"ம்ம்... அது உண்மைதான்.."

வர்ஷா தாயுடன் இசைந்து பதில் சொன்னாள், மல்லிகா மனத்திருப்தியுடன் வீட்டிற்குள் போனாள்..

'உனக்கு குணமில்லையா..?' வர்ஷா மனதிற்குள் ஆகாஷிடம் வினவினாள்..

'உனக்கு நல்ல மனதில்லையா..? ஆனால் உன்னைப் பற்றி நான் அம்மாவிடம் சொல்ல முடியுமா..? நீ என்னைக் காதலித்துத் தொலைத்து விட்டாயே.. என்னையும் உன்னைக் காதலிக்க வைத்து விட்டாயே.. என் குடும்பத்திற்குள் வரக்கூடாத ஒரு சொல் 'காதல்..' அது என் மேல் உனக்கும்.. உன் மேல் எனக்கும் வந்து தொலைத்து விட்டதே.. இந்த விவேக்கைப் போல் நீ நேரடியாய் பெண் கேட்டு வந்திருந்தால் ஒரு வேளை நம் காதல் நிறைவேறி

இருக்கலாம்.. ஆனால் இனி அது சாத்தியமில்லையே.. நீ உன் தாய் தகப்பனுக்குச் சொந்தமானவன்.. விவேக் தாய் தகப்பனில்லாதவன்.. என் தாயை.. தன் தாயாய் பார்த்துக் கொள்கிறேன் என்ற வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறான்.. அந்த ஒன்றில் அவன் முன்னேறி ஜெயித்து விட்டானே.. நான் என்ன செய்வேன்.. என் தாய்க்கு என்னை விட்டால் சொந்தமென்று சொல்லிக் கொள்ள யாருமில்லை.. என்னை மன்னித்து விடு..'

அலுவலகம் போகவே கலக்கமாய் இருந்தது வர்ஷாவிற்கு.. இதற்கு முன்னாலும் ஆகாஷின் காதல் பார்வைக்கு பதில் பார்வை தந்தது இல்லை.. ஆனால் அன்று இருந்த நிலைமை வேறு இன்று இருக்கும் நிலைமை வேறு.. அன்று ஆகாஷின் பார்வையில் அவள் மனம் குளிரும்.. ஒவ்வொரு நாளும் உடையுடுத்தும் போது இது அவனுக்குப் பிடிக்குமா என்ற நினைவோடு பார்த்துப் பார்த்து உடுத்துவாள்.. எளிமையான காட்டன் சுடிதாராக இருந்தாலும் அதை அவள் அணியும் விதத்தில் நேர்த்தி இருக்கும்.. காலையில் அவளைக் கண்டவுடன் ஆகாஷின் கண்களில் தோன்றும் ரசனையைக் கண்டதும் அவளுக்குள் ஏதோ உயிர்த்தெழும்..

"ஹாய் வர்ஷா.. பெர்ஸனல் மேனேஜர் உன்னைக் காணாமல் இரண்டு நாளாய் தவிச்சுப் போயிட்டாராம்.." வயலட் சிரித்தாள்..

"டோன்ட் பி ஸில்லி வயலட்.. நீ சரியாக வேலை செய்திருந்தால் அவர் ஏன் தன் செக்ரட்டரியைத் தேடப் போகிறார்..?" வர்ஷா மனதில் இயலாமையால் விளைந்த எரிச்சலுடன் பதில் கூறினாள்..

"ஈஸிட்..? செக்ரட்டரி செய்யும் வேலைக்காகவா அவர் உன் முகம் தேடினார்..? ஐ கான்ட் பிலிவ் இட்.."

"ஐ டோன்ட் கேர் பார் யுவர் பிலிவ்னெஸ்.."

வர்ஷா முகம் இறுக ஆகாஷின் அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள்..

"குட் மார்னிங் சார்.." என்ற வார்த்தையில் நிமிர்ந்தவன்,

"வந்து விட்டீங்களா வர்ஷா.." என்று முகம் மலர வினவியதும் அவளுக்கும் துக்கம் கரை புரண்டோடியது..

'வந்துவிட்டேன்.. இன்னொருவனின் வருங்கால மனைவியாக..'

## 4

வீனஸ் அபார்ட்மென்ட் வாசலில் விவேக்கின் கார் நுழைந்தபோது வாசலில் இருந்த செக்யூரிட்டி எழுந்து நின்று சல்யூட் அடித்தான்.. கார் பார்க்கிங் ஏரியாவில் அவனுடைய பகுதியில் சரியாக நிறுத்தி பூட்டிவிட்டு இறங்கி லிப்டிற்குள் நுழைந்தபோது,

"வெயிட்.. வெயிட்.." என்றபடி ஓடி வந்து அவனுடன் சேர்ந்து கொண்டாள் மாலதி.. கையிலிருந்த பையில் காய்கறிகள் நிரம்பி வழிந்தன..

"என்ன மாலதி.. இன்றைக்கு நல்ல அலைச்சலா.. வியர்த்து விறுவிறுத்து வந்திருக்கிறாயே.. டிபிகல் ஹவுஸ் வொய்பாகவே மாறி விட்டாய்.. உன் கனவுகளெல்லாம் என்ன ஆனது..?" சிரித்தான் விவேக்..

"ஏண்டா சொல்ல மாட்ட..? நீ ஆண்..! கனவு கண்டால் நனவாக்குவாய்.. நான் பெண்..! கனவுகளை தொலைத்து விட்டு வீடு, குடும்பம்.. குழந்தைகள்னு மூழ்கிப் போய் விட்டேன்.. அது உனக்கு கேலிக்குரிய விஷயமாக இருக்கிறதா..?" முறைத்தாள் மாலதி..

"பஸ்.. பஸ்.. உன் அனல் பார்வையில் என்னைப் பொசுக்கி விடாதே.. நாம் காலேஜில் படித்துக் கொண்டிருந்த போது மேடையில் நீ வீர முழக்கமிடுவாயே.. 'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்றதெல்லாம் அந்தக் காலம்.. இப்போது பெண்கள் விண்ணையும் தொட்டு வருகிறார்கள்.. நாங்கள் சாதிக்கப் பிறந்தவர்கள்.. அடுக்களையில் புதையப் பிறந்தவர்கள் அல்ல..' ன்னு அதை நினைத்துப் பார்த்தேன்.. காலேஜில் உனக்குப் 'பெண் சிங்கம்..' ங்கிற பெயராயிற்றே.." லிப்டிலிருந்து வெளிப்பட்டவாறே பேசினான் விவேக்..

"நீ வேற.. எப்போது கரண்.. என் முகத்தைப் பார்த்து.. உன் கண்கள் மருளுவதைப் பார்த்தால் மான் குட்டி மருளுவது போல் இருக்கிறதுன்னு சொன்னாரோ.. அப்போதே சிங்கமாய் இருந்தவள் மான் குட்டியாகவே மாறிப்போனேன்.." கணவனின் நினைவில் சிரித்தாள் மாலதி..

"குழந்தைகள் பிறந்ததும் கஸ்தூரி மானாக மாறி விட்டாய் போல.." என்றபடி விவேக் தன் பிளாட்டை நோக்கி நடக்க ஆரம்பிக்க..

"நல்லாயிருக்கே.. என் பிளாட்டைக் கடந்து போய் கிட்டே இருக்கிறாயே.. வந்து ஒரு கப் காபி சாப்பிட்டு விட்டுப் போடா.." என்று அழைத்தாள் மாலதி..

"ஏன் உன் கணவருக்கும்.. குழந்தைகளுக்கும் சர்வீஸ் பண்ணியது போதாதா.. எனக்கும் சேர்த்துப் பண்ண வேண்டுமா..? வேண்டாம் தாயே.. நான் இன்னும் உன்னை சிங்கமாகவே நினைத்துக் கொண்டிருக்கிறேன்.. ஆளை விடு.." என்றான் விவேக்..

"அடி வாங்கப் போகிற.. காபி சாப்பிட்டு விட்டுப்போ என்றால் சிங்கம்.. சிறுத்தைன்னு காட்டுக் குள்ளேயே அலைகிறான்.. வந்து காபி சாப்பிட்டு விட்டுப் போகப் போகிறாயா இல்லையா..?" என்று அதட்டல் போட்டாள் மாலதி..

"அரட்டியாவது காபி குடிக்க ஆள் பிடிக்கும் அளவிற்கு நீ மோசமாகவா காபி போடுவாய் மாலதி..?" கிண்டல் பண்ணியவாறு அவளுடன் வீட்டுக்குள் சென்றான் விவேக்..

"இதற்கு முன் என் காபியை குடித்துவிட்டு 'பேஷ்.. பேஷ்.. ரொம்ப நன்னாயிருக்கு மாலதி..'ன்னு நொட்டை விட்டவன் தானேடா நீ.. அதற்குள் மறந்துவிட்டாயா..?"

"சரி..சரி.. அதெல்லாம் இப்போது எதற்கு.. காபி கொடு.."

மாலதி கிச்சனுக்குள் நுழைந்துவிட விவேக் டீப்பாயின் மேலிருந்த வார இதழ் ஒன்றை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தான்..

"ஹாய் விவேக்.. எப்போது வந்தீங்க.." என்றபடி கரன் குழந்தை நிஷாவுடன் உள்ளே வந்தான்..

"ஜஸ்ட் நௌ.. ஹாய் நிஷா.. எங்கே போயிருந்தாய்..?"

"டாடிகூட பார்க் போனேன்.. நீங்க..?"

"நான் சம்பாதிக்க வேண்டுமில்லையா.. வேலைக்குப் போனேன்.."

மகளுடன் விவேக் பேசுவதைக் கேட்டவாறே காபி டிரேயுடன் வந்த மாலதி..

"கில்லாடிடா நீ.. குழந்தையுடன் அவளுக்கேற்ற மாதிரியே பேசுகிறாயே.." என்று சிலாகித்தபடி காபிக் கோப்பையை நீட்டினாள்..ஷ

"ஹாய் டார்லிங்.. மார்க்கெட் போய்விட்டு வந்து விட்டாயா..?" என்னவோ அன்றுதான் முதன் முதலாய் பார்த்தது போல மனைவியை புதிதாய்ப் பார்த்தபடி காதலாய் வினவினான் கரண்..

"ம்ம்.." பேச்சிழந்தவளாய் அவனைப் பார்த்து பிரத்யேகமாய் புன்னகைத்தபடி காபிக் கோப்பையை கொடுத்தாள் மாலதி.

பெண் சிங்கம்.. மான் குட்டியானது எப்படியென்று புரிந்தது விவேக்கிற்கு.. காதலில் கட்டுண்டு விட்டால் தான் என்ற எண்ணம் போய் விடும் போல என்று நினைத்த விவேக்.. தன்னிடமும் வர்ஷா இப்படிக் கட்டுண்டு விடுவாளா என்று நினைத்துக் கொண்டான்.. அந்த நினைவு தந்த இதத்தில் புன்னகைத்தவனிடம்,

"என்னடா ஒரு தினுசாய் சிரிக்கிற.. பெண் எதுவும் செட்டாகி விட்டதா..?" என்று வினவினாள் மாலதி..

பதில் சொல்லாமல் நிஷாவைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டவனின் முகத்தில் தெரிந்த பிரகாசத்தைக் கவனித்த கரண்..

"அவர் முகத்தைப் பார்த்தாலே தெரியவில்லையா..? கல்யாணம் முடிவாகி விட்டது போல.. என்ன விவேக்.. நான் சொல்வது சரிதானே.." என்றான்..

"யெஸ்.. கரண்.."

"அடப்பாவி.. என்னிடம் நீ சொன்னாயாடா..?"

"கோபித்துக் கொள்ளாதே மாலதி.. இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் பெண் பார்க்கவே போனேன்.. எல்லாம் ஒத்து வந்ததில் தேதி பேசி முடித்துவிட்டோம்.."

"கண்டதும் முடிவு பண்ணி விட்டாயா..?"

"ஊஹூம்.. ஏற்கனவே பார்த்த பெண்தான்.. அவள் என்னைப் பார்த்ததில்லை.."

"இது என்னடா புதுக்கதையாக இருக்கிறது.. எங்கே நீ அவளைப் பார்த்தாய்..?"

"என் பெரியம்மாவின் வீடு திருவான்மியூரில் இருக்கிறது இல்லையா..?"

"ஆமாம்.."

"அவர்கள் வீட்டு அவுட் ஹவுஸில் இந்தப் பெண்ணும் அவளுடைய அம்மாவும் குடியிருக்கிறார்கள்.."

"அவுட் ஹவுஸிலா.. வசதி கொஞ்சம் கம்மியா..?"

"ஆமாம்.. பட் ஐ டோன்ட் கேர் பார் இட்.. எனக்கு அந்தப் பெண்ணைப் பிடித்திருக்கிறது.."

"வேலைக்குப் போகும் பெண்ணா..?"

"ஆமாம் மாலதி.. நக்சத்திரா குரூப் ஆப் கம்பெனியில் செக்ரட்டரியாக வேலை பார்க்கிறாள்.."

"அட.. அங்கேதான் நம் ஆகாஷ் பெர்ஸனல் மேனேஜராக இருக்கிறானேடா.. அவனிடம் அந்தப் பெண்ணைப் பற்றி விசாரித்தால் போச்சு.."

"விசாரிக்க வேண்டிய அவசியமே இல்லை மாலதி.. மூன்று வருடங்களாக அவர்களின் குடும்பம் என் பெரியம்மாவின் வீட்டில்தான் வசிக்கிறது.. தங்கமான பெண் என்று என் பெரியம்மாவே சர்டிபிகேட் கொடுத்து விட்டார்கள் என்றால் பாரேன்.."

"உன் பெரியம்மா என்ன யுனிவர்சிட்டியா.. சர்டிபிகேட் கொடுக்க..?"

"ஒரு வகையில் அப்படித்தான்.. மனிதர்களை எடை போடுவதில் அவங்க கை தேர்ந்தவங்க.. எப்படிப்பட்ட

வங்களிடமும் ஏதாவது ஒரு குறையைக் கண்டு பிடித்து விடுவாங்க.. இந்தப் பெண்ணைப் பற்றியும் அவளது அம்மாவைப் பற்றியும் குறைவாய் ஒரு சொல் சொல்ல வில்லை மாலதி.."

"ஓஹோ.. அந்தப் பெண்ணுக்கு அப்பா இல்லையா..?"

"இல்லை.. இறந்து விட்டார்.."

"பாவம்.. இவள் ஒரே பெண்ணா..?"

"இப்போது அப்படித்தான்.."

"இப்போதுதான் அப்படியென்றால்..?"

மாலதி துளைத்து துளைத்துக் கேள்வி கேட்பதை புன்னகையுடன் கவனித்துக் கொண்டிருந்த கரண்..

"விடு மாலதி.. விட்டால் அவர்களது பூர்வீகத்தையே அலசி விடுவாய் போல.. ஆமாம்.. உன் செட்டில் எல்லோருக்கும் கல்யாணமாகி விட்டது.. மணியன்.. இப்போது விவேக்கிற்கும் திருமணம் நிச்சயம் ஆகி விட்டது.. ஆகாஷ் மட்டும் அப்படியே இருக்கிறாரே.." என்று பேச்சை மாற்றினான்..

"அந்தக் கதையை ஏன் கேட்கிறீங்க..? அவன் ஒரு பெண்ணை லவ் பண்ணுகிறானாம்.. அதை வீட்டில் சொல்லித் தொலைக்கவும் இல்லை.."

"ஏன்.. அவர்கள் வீட்டில் ரொம்பக் கண்டிப்போ..?"

"அதெல்லாம் ஒரு மண்ணும் இல்லை.. இவன் சொல்வான்னு அவங்க காத்திருக்கிறாங்க.. இவன் தான் காதலிக்கும் பெண்ணிடமே இன்னும் தன் காதலைச் சொல்லவில்லையே.."

"ஒருதலைக் காதலா..?"

"ஒரு தலை ராகம் தான் பாடிக் கொண்டிருக்கிறான்.. அவனுடைய அப்பா என்னவென்றால் என்னைக் கண்ணில் கண்டு விட்டால் புலம்ப ஆரம்பித்து விடுகிறார்.. இப்போது கூடப் பாருங்கள்.. நான் மார்க்கெட்டில் அப்போதே காய் வாங்கி முடித்து விட்டேன்.. ஒரு மணி நேரமாக இவர் என்னைப் பிடித்துக் கொண்டு விட்டார்.. ஆகாஷ் மனதில் என்ன இருக்குன்னு என்னைக் கேட்கிறார்.. நான்

என்னவென்று பதில் சொல்ல..? ஒரு வழியாய் அவரிடம் பரிவாய் பேசி அனுப்புவதற்குள் போதும்.. போதுமென்றாகி விட்டது.."

"அந்தப் பெண் யாராம்..?"

"அவனுடைய கம்பெனியில் வேலை பார்க் கிறாளாம்.."

"விவேக்கோட வுட்பியும் அங்கேதானே வேலை பார்க்கிறாள்.. அவளிடம் சொல்லி பேசிப் பார்க்கச் சொல்லலாமா..?"

"நல்ல ஐடியா.. ஏண்டா.. நீ உன் வுட்பியிடம் சொல்லி அந்தப் பெண்ணிடம் ஆகாஷின் காதலைச் சொல்லச் சொல்கிறாயா..?"

விவேக்கின் மனதில் குனிந்த தலையுடன் அமர்ந்திருந்த வர்ஷா தோன்றினாள்.. அவளுடன் இன்னும் தனிமையில் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.. அவளுடன் பேச இதை ஒரு காரணமாக பயன்படுத்திக் கொண்டால் என்ன..?

"அதற்கென்ன மாலதி.. நாளைக்கே அவளுடன் பேசி விடுகிறேன்.." என்று உற்சாகமாய் கூறினான் விவேக்..

"டாய்.. உனக்கு உன் வுட்பியுடன் பேச ஒரு சாக்குக் கிடைத்து விட்டதுன்னு சந்தோசப்படுகிறாயா..? படவா.." என்றாள் செல்லக் கோபத்துடன் மாலதி..

"ஏன்.. உன்னைக் கல்யாணத்திற்கு முன்னால் கரண் சந்தித்தது இல்லையா..? என்னவோ நான் மட்டும் தான் பேசப் போவது போல மிரட்டுகிறாயே நீயும்தான் பேசியிருப்பாய்.."

கரணின் விழிகளும்.. மாலதியின் விழிகளும் சந்தித்துக் கொண்டன.. அந்த நாட்களின் நினைவில் அவர்கள் விழிகள் மின்னின.. விவேக் கிண்டலாக கரணின் தோளின் மேல் கை போட்டு,

"அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே..
வந்ததே... நண்பனே.. நண்பனே.. நண்பனே.."
என்றான்..

"தொடர்ந்து பாடி விடாதே.. இந்த நாளும்.. அந்த நாள் போல் இன்பமாகத்தான் இருக்கிறது.." முகம் சிவக்கக் கூறினாள்

மாலதி..

"ஓகே.. மாலதி.. போய் வருகிறேன்.." எழுந்து கொண்டான் விவேக்..

"ஏண்டா.. இந்த ப்ளோரில் இருக்கும் கடைசி பிளாட்டுக்குப் போகப் போகிறாய்.. அதற்கு இத்தனை பில்ட் அப்பா..?" மாலதி நிஷாவைத் தூக்கிக் கொண்டாள்..

"ஆகாஷின் காதலியின் பெயர் என்ன..?"

"யாருக்குடா தெரியும்..?"

"பெயர் தெரியாமல் எப்படி வர்ஷாவிடம் சொல்லி விசாரிப்பது..?"

"வர்ஷா யார்..?"

"அவள்தான் என் வுட்பி.."

"சொல்லும்போதே ஜொலிக்குதுடா உன் முகம்.. ஆகாஷ் அவனுடைய காதலியைப் பற்றி என்னிடம் எதுவும் சொல்லவில்லை.. பட் நம்ம மணியனும் அங்கே தானே வொர்க் பண்ணுகிறான்.. அவனிடம் கேட்டு உனக்குச் சொல்கிறேன்.."

"செய்.. பை.. பை.. கரண்.. பை நிஷா.."

"பை.. அங்கிள்.."

நிஷா கையாட்ட அவர்களது பிளாட்டை விட்டு வெளியேறி தன் பிளாட்டிற்கு நடந்தான் விவேக்.. கதவு திறந்து உள்ளே சென்று கதவை அடைத்தான்.. அழகான பிளாட் அது.. பெட்ரூமிற்குச் சென்று குளித்து கைலி டி.சர்ட்டிற்கு மாறியவன்.. சமையலறைக்குச் சென்று பிரட்டை எடுத்து பிரட் ரோஸ்டரில் அடுக்கினான்..

பிரட் ரோஸ்டுகளை எடுத்துப் பிளேட்டில் பரப்பிக் கொண்டு பிரிட்ஜைத் திறந்து இன்ஸ்டன்ட் தக்காளி சட்னி இருந்த பாட்டிலைத் திறந்து இரண்டு கரண்டி எடுத்துப் போட்டுக் கொண்டான்.. ஹாலுக்கு வந்து டி.வியைப் போட்டு விட்டு டி.வியின் முன்னிருந்த சோபாவில் சரிந்து அமர்ந்து கொண்டான்..

'என்ன மாதிரியான வாழ்க்கை இது..' சலித்துக் கொண்டவனுக்கு மாலதியின் வீட்டிலிருந்த உயிர்ப்பு நினைவிற்கு வந்தது.. பெண் இருக்கும் வீட்டில்தான் உயிர்ப்பு இருக்கும் போல.. இந்த வீட்டிற்கும் வர்ஷா வந்தபின் உயிர்ப்பு வந்துவிடும்..

ஒரு கணம் தான் அலுவலகத்திலிருந்து வந்து கதவைத் தட்ட வர்ஷா திறந்து விடுவதைப் போலக் கற்பனை செய்து பார்த்தான்.. வர்ஷா கதவைத் திறந்து விடுகிறாள்.. விவேக்கை காதலுடன் பார்த்து,

"ஏன் லேட்.." என்று வினவுகிறாள்..

"ஆபிஸில் வேலை அதிகம் டியர்.." என்கிறான் விவேக்..

"அடடா.. சூடாய் டிபன் காபி கொண்டு வருகிறேன்.." என்று ஓடிப்போய் பரிமாறி எடுத்து வருகிறாள்..

"உன்னைப் பார்த்தாலே டயர்ட்னெஸ் போய் விடுமே.." விவேக் அவளது கரத்தைப் பிடித்துக் கொள்கிறான்.. அதன் பின்..

விவேக்கிற்கு உடலில் அலையலையாய் உணர்வுகள் பொங்கி எழுந்தன.. வர்ஷாவுடன் பேச வேண்டும் போல் இருந்தது.. ஆனால் அவளது செல்போன் நம்பர் அவனுக்குத் தெரியாதே.. மறுநாள் அவளைச் சந்தித்கும் போது மறக்காமல் அவளுடைய செல்போன் நம்பரை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும்..

சந்திப்பதற்குத்தான் காரணம் கிடைத்து விட்டதே.. ஆகாஷின் காதலை நிறைவேற்ற வர்ஷாவின் உதவியைக் கேட்பது போல் அவளிடம் பேசி விட்டால் போகிறது..

விவேக் உறங்குவதற்கு முன்னர் ஆகாஷின் காதலியாராக இருப்பாள் என்று யோசித்தான்.. அவனுக்கு ஒரு அனுமானமும் தோன்றவில்லை..

'சரி.. அவள் யாராக இருந்தால் எனக்கென்ன.. வர்ஷா என்னுடைய வருங்கால மனைவி..' என்ற நினைவுடன் தூங்கிப் போனான் விவேக்..

பூஜையறையில் மணி அடிக்கும் சத்தம் கேட்டது.. பார்த்தசாரதி பூஜையை முடித்துவிட்டதை உணர்ந்த ராஜேஸ்வரி.. டைனிங் டேபிளில் சாப்பாட்டு பாத்திரங்களைக் கொண்டு வந்து வைத்தாள்..

"ஈஸ்வரா.. பெருமாளே.." என்றபடி சாப்பாட்டு மேஜைக்கு வந்தார் பார்த்தசாரதி..

"சைவமும்.. வைணவமும் பின்னிப் பிணைவது உங்களிடம்தான்.. ஒரு தெய்வத்திற்கு இரண்டு தெய்வமாக கும்பிட்டு வைத்துக் கொள்கிறீங்களே.." என்றபடி பரிமாற ஆரம்பித்தாள் ராஜேஸ்வரி..

"ஆகாஷ் ஆபிஸ் போய் விட்டானா..?"

"நீங்கள் பூஜையறைக்குள் நுழைந்தபோதே போய் விட்டான்.."

"சாப்பிட்டானா..?"

"சாப்பிடாமலா போவான்..? நான்தான் அப்படி அனுப்புவேனா..?"

"என்னவோடி ராஜேஸ்வரி.. அவன் மனதில் என்ன இருக்குதுன்னே தெரியலை.. அவனோட சிநேகிதங் களைக் கேட்டால் எல்லோருமே இவனைப் போலவே பிடி கொடுக்காமல் ஓடுகிறாங்க.. நேற்று.. இவன் கூடப் படிச்ச மாலதிப் பெண்ணை மார்க்கெட்டில் பார்த்தேன்.. ஏம்மா உனக்காவது ஆகாஷின் மனதில் என்ன இருக்குன்னு தெரியுமான்னு கேட்டால் சிரித்து மழுப்புது அந்தப் பொண்ணு.."

"ம்ஹூம்.. நாம பிள்ளை பெத்த நேரம்.. ஊரில் இருக்கிறவங்ககிட்டயெல்லாம்.. என் மகன் மனசில் என்ன இருக்குன்னு கேட்டுக்கிட்டு அலைய வேண்டியதா இருக்கிறது.."

"வேறு என்னடி செய்யச் சொல்கிறாய்..? இவன் வாயைத் திறந்து ஒரு வார்த்தையும் சொல்ல மாட்டேன் என்கிறான்.. கல்யாணம் பண்ணிக்கவும் மாட்டேன் என்கிறான்.."

"உங்களுக்காவது பரவாயில்லை.. ஆம்பளை.. நான் பதில் சொல்ல முடியவில்லை.. கோவிலுக்குப் போனால் அங்கே

நாலு தெரிஞ்ச பொம்பளைகள் கேள்வி கேட்க ஆரம்பித்து விடுகிறாங்க... கல்யாணம் காட்சின்னு கலந்துக்கப் போனால்.. அங்கே சொந்தக்காரங்க ஒருவர் பாக்கியில்லாமல் விசாரிக்க ஆரம்பித்து விடுகிறாங்க.. கேட்கிறவங்களுக்கு பதில் சொல்வதற்குள் போதும் போதும் என்றாகி விடுகிறது.."

"எனக்கு ஒன்று மட்டும் நல்லாத் தெரியுது ராஜேஸ்வரி.. அவன் மனதில் ஏதோ நினைப்பிருக்கு.. அதை வெளியில் சொல்லத்தான் மாட்டேன் என்கிறான்.."

"என்னவோ போங்க.. இவன் மருமகள் என்று எந்தப் பெண்ணைக் கை காட்டினாலும் வாயே திறக்காமல் நான் ஏற்றுக் கொள்வேன் காட்ட மாட்டேன்கிறானே.."

அவர்கள் மனதில் கவலையை ஏற்றியிருந்த ஆகாஷ்.. அப்போது வர்ஷாவைப் பற்றிய நினைவுகளை ஏற்றிக் கொண்டிருந்தான்..

'ஏன் அவள் முகம் வாடியிருக்கிறது..? இரண்டு நாட்கள் லீவிற்குப் பின்னால் அவள் முகமே சரியில்லையே..'

அவனும் அவளைப் பலமுறை கேட்டுப் பார்த்து விட்டான்..

"வாட் இஸ் ராங் வித் யு வர்ஷா..?"

"நத்திங் சார்.."

"ஏதேனும் பிரச்னைன்னா என்னிடம் சொல்லாம்.. என்னால் உதவ முடிந்தால் உதவுகிறேன்.."

"பிரச்னை இருந்தால் தானே சொல்ல முடியும்..?"

"உங்கள் முகம்.. உங்கள் மனதைக் காட்டும் கண்ணாடி வர்ஷா.. அது சரியாக இல்லை.."

"சார்.. நான் ஆபிஸ் வொர்க்கில் ஏதேனும் மிஸ்டேக் விட்டிருக்கிறேனா.. அதை மட்டும் பாருங்கள்.. என் முகத்தை ஏன் பார்க்கிறீங்க..?"

ஆகாஷ் அவளுடைய முகத்தில் அடித்தாற் போன்ற பதிலால் பாதிக்கப்பட்டவனாய் அவளுடைய முகத்தையே பார்த்தான்.. வர்ஷாவின் முகம் முதல் முறையாகச் சிவந்தது.. அதை உணர்ந்து கொண்ட ஆகாஷின் மனதில் குளிர் பரவியது.. அவனது குரல் மிருதுவானது..

"என்னால் எப்படி உங்கள் முகம் பார்க்காமல் இருக்க முடியும்..? என்னால் முடிந்ததைச் செய்கிறேன் என்று தான் உங்களிடம் சொன்னேன்.. முடியாததைக் கேட்டால் நான் என்ன செய்ய..?"

"சார்.. வேறு எதுவும் வேலை இல்லையே.. நான் என் சீட்டிற்குப் போக வேண்டும்.."

ஆகாஷ் அவளை இப்போது ஆழமாய் ஓர் பார்வை பார்த்தான்.. வர்ஷா இப்போது வெளிப்படையாகவே தடுமாறினாள்..

'ஏன் இப்படி பார்த்துத் தொலைக்கிறாய்..? நான் இன்னொருவனுக்கு நிச்சயிக்கப்பட்டவள்.. என்னை நினைத்து உனக்கு ஆகப் போவது ஒன்றுமில்லை.. என்னை இப்படிப் பார்க்காதே..'

அவளது தடுமாற்றத்தை ரசித்துக் கொண்டிருந்தான் ஆகாஷ்.. மூன்று வருடக் காத்திருப்பிற்கு பலன் கிடைத்து விட்டது என்று அவனது உள் மனது கூறியது.. அவனது பார்வையில் வேகம் தாளாமல் வர்ஷா பதற்றமாய் எழுந்தாள்..

"ஏன் எழுந்து விட்டீங்க..?" அவன் அறியாதவன் போல் வினவினான்..

"என் சீட்டிற்குப் போக வேண்டும்ன்னு சொன்னேனே.." அவள் அவன் முகம் பார்க்காமல் நிலம் பார்த்தாள்..

"இங்கே என்ன நின்று கொண்டா இருக்கிறீங்க..? என் முன் உட்கார்ந்து கொண்டுதானே இருக்கிறீங்க..?" அவன் அவளது விழியோடு விழி கலக்க முயன்றான்..

"நீங்கள் ஆபீஸ் விசயமாய் பேசினால் நான் இங்கே உட்கார்ந்து அதைக் கேட்பதில் அர்த்தமுண்டு.. நீங்கள் அபிஸியலாய் எதுவும் பேசவில்லையே.." அவள் அவனுக்கு விழி கலக்க வாய்ப்புக் கொடுக்க மறுத்தவளாய் நிலம் நோக்கியபடியே இருந்தாள்..

ஆகாஷ் எழுந்து அவளருகில் வந்தான்.. வர்ஷாவின் திடம் குலைந்து விட்டது.. இத்தனை நாட்களாய் அவள் காட்டி

வந்த வைராக்கியம் உடைந்து கொண்டிருந்தது.. அவள் உடல் நடுங்க ஆரம்பித்தது..

'ஏன் இவன் எழுந்து வருகிறான்..? இவன் என்னருகே வந்து விட்டால் நான் என்னையறியாமல் என்னைக் காட்டிக் கொண்டு விடுவேனே..'

அவளது நாக்கு வறண்டு விட்டது.. பயத்தில் தொண்டை உலர்ந்து விட்டது.. தன்னோடு போராடிக் கொண்டிருந்த வர்ஷா.. தான் போராட்டத்தில் தோற்றுக் கொண்டிருப்பதை உணர்ந்தவளாக கலவரம் அடைந்தாள்.

ஆகாஷ் அவள் பயந்தது போல அவளருகில் வந்து தொட முயலவில்லை.. மாறாக குனிந்து தரையில் எதையோ தேடினான்.. மெல்ல உயிர் திரும்ப வரப் பெற்ற வர்ஷா குழப்பத்துடன்,

"எதைக் தேடுகிறீங்க சார்..?" என்று வினவினாள்..

"இவ்வளவு நேரமாக நீங்க தரையில் எதைத் தேடிக்கொண்டு இருந்தீங்களோ.. அதைத் தேடுகிறேன்.." அவன் தீவிரமாகத் தேடிக் கொண்டே பதில்

சொன்னான்..

வர்ஷாவின் முகம் இப்போது நன்றாக சிவந்து விட்டது.. அவள் அவனது முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்து தரையைப் பார்த்துக் கொண்டிருந்ததைக் குறிப்பிடுகிறான்.

அவளது மௌனம் அவள் புரிந்து கொண்டதை உணர்த்த ஆகாஷ் நிமிர்ந்து அவளருகில் வந்தான்.. அவள் முகத்தேயே ஊடுருவிப் பார்த்தான்.. வர்ஷாவின் விழிகள் அலை பாய்ந்தன..

"ஏன் உங்களால் என்னைப் பார்க்க முடியவில்லை வர்ஷா..?" அவன் நிதானமாகக் கேட்டான்..

"அப்படியொன்றுமில்லையே.." அவள் தடுமாறினாள்..

"அப்படியானால்.. என் முகம் பார்த்துப் பேசுங்க.." அவன் ஆணையிட்டான்..

"நான் போக வேண்டும்..." வர்ஷா அவசரமாய் திரும்பினாள்..

"நில்லுங்க.." அவன் அவளது வழியை மறத்தான்..

"வர்ஷா.. ஏன் இந்த விலகல்..? என் மனதில் நீங்க தான் இருக்கிறீங்க... ஒரு வருடமல்ல... இரண்டு வருடமல்ல.. மூன்று வருடங்களாக நான் உங்களைக் காதலிக்கிறேன்.. இது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.. தெரிந்திருந்தும் ஏன் என்னை ஒதுக்கித் தள்ளுகிறீங்க..?"

'சொல்லிவிட்டானே..' அவள் உடைந்து போனாள்..

'கடைசியில் அவன் மனதிலிருந்த காதலை வெளிப் படையாகச் சொல்லி விட்டானே.. இதை மறுக்க வேண்டிய நிலையில் அவளை வைத்து விட்டானே.. இதுவரை சொல்லாதவன் இப்போது போய் இதைச் சொல்ல வேண்டுமா..? இன்னும் மூன்று மாதம் கழித்துச் சொல்ல நினைத்திருந்தால் அதற்குள் அவள் இன்னொருவனின் மனைவியாகி விட்டிருப்பாளே.. அவனும் கண்ணியம் காத்து மௌனித்திருப்பானே..'

"பதில் சொல்லுங்க வர்ஷா.. ஏனிந்த மௌனம்..?"

'சொன்னால் நீ தாங்கிக் கொள்வாயா..? நீ தாங்கிக் கொள்ள முடியாமல் தவிப்பதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது..'

"என்னைப் பிடிக்கவில்லையா..?"

'உன்னைப் பிடித்துத் தொலைக்கிறதே.. அதுதானே என் பிரச்னை..'

"காதல் சொன்னதால் என்னை வெறுக்கிறீங்களா..?"

'உன் காதலை ஏற்றுக் கொள்ள முடியாத என்னை நான் வெறுக்கிறேன்..'

"பேசுங்க வர்ஷா.. வாய் திறந்து பேசுங்க.."

'நான் பேச மறந்து மூன்று வருடங்களாகின்றன ஆகாஷ்.. நான் பேச முடியாதவள்.. வாயிருந்தும் ஊமையானவள்..'

"என்னிடம் உங்களுக்கு பிடிக்காத குணம்.. இல்லை பழக்கங்கள் ஏதாவது இருக்கின்றனவா..? இருந்தால் சொல்லுங்க.. என்னை நான் மாற்றிக் கொள்கிறேன்.."

வர்ஷா தனக்குள் உறுதியை வரவழைத்துக் கொண்டு பதில் சொன்னாள்..

"உண்மையாகவா சொல்கிறீங்க..?"

"அதிலென்ன சந்தேகம்.."

"வார்த்தை மாற மாட்டீங்களே.."

"வார்த்தை தவற மாட்டேன்.."

"அப்படியென்றால் சரி.. நீங்கள் என்னிடம் காதல் சொன்னது எனக்குப் பிடிக்கவில்லை.. அந்தக் குணத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.. நீங்கள் என்னைக் காதலிப்பது எனக்குப் பிடிக்கவில்லை.. அந்தப் பழக்கத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.. இனிமேல் என்னிடம் இப்படிப் பேசாதீங்க.."

ஆகாஷ் பதில் சொல்லாமல் அவளையே உற்றுப் பார்த்தான்.

'இப்படிப் பார்த்துத் தொலைப்பதை நிறுத்து.. பார்வையாலேயே என்னைக் கொல்லாதே..' வர்ஷா தவிப்புடன் முகம் திருப்பிக் கொண்டாள்..

"உங்களுக்கு பொய் பேசக்கூடத் தெரியுமா வர்ஷா..?"

"என்ன சொல்கிறீங்க..?"

"ஏன் மனதை மறைத்துப் பொய் பேசுகிறீங்க.. உங்கள் வார்த்தைகள் உங்களுடைய மனதிலிருந்து வரவில்லை.. உண்மையிலேயே உங்கள் மனதைத் தொட்டுச் சொல்லுங்க.. நான் உங்களைக் காதலிப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா..?"

"பிடிக்கவில்லை.."

"அதை என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்க.."

ஆகாஷ் பிடிவாதமாய் சொல்ல வேறு வழியின்றி வர்ஷா அவனது முகம் பார்த்தாள்.. பேச வாயெடுத்தாள்.. அவளால் பேச முடியவில்லை..

"ம்ம்.. சொல்லுங்க.. என்னைப் பிடிக்க வில்லையா..? என் காதலைப் பிடிக்கவில்லையா..?"

அவள் விழிகளுக்குள் ஊடுருவிப் பார்த்தபடி அவன் கேட்டான்.. அவள் உடைந்து நொறுங்கினாள்.. அப்படியே

சேரில் அமர்ந்து டேபிளில் தலை கவிழ்ந்தவள் விம்மி அழ ஆரம்பித்து விட்டாள்.. ஆகாஷின் மனம் அவளது அழுகையைக் கண்டு பதறவில்லை.. மாறாக வெற்றிக் களிப்பில் மிதந்தது..

'அவள் மனதில் அவன் இருக்கிறான் என்பதற்கு இதைவிட வேறென்ன அத்தாட்சி வேண்டும்..?'

அவளது அழுகை ஓயுமட்டும் காத்திருந்து அவள் அழுது முடித்து தலை நிமிர்ந்ததும் தண்ணீர் பாட்டிலை நீட்டினான்.. வாங்கியவள் பதில் பேசாமல் குடித்து முடித்துவிட்டு அவனிடம் பாட்டிலை நீட்டினாள்.. மௌனமாக அவளைப் பார்த்தபடி வாங்கி டேபிளில் வைத்தான்.. அவள் எழுந்து கொண்டாள்..

"உன் மனம் இப்போதாவது உனக்குப் புரிகிறதா வர்ஷா.." அவன் அவளை முதன் முறையாய் ஏகவசனத்தில் அழைத்தான்..

"சார்.. நீங்கள் 'வா.. போ..' என்று பேசுவது போல் தோன்றுகிறது.."

"தோன்றுவது என்ன..? அப்படித்தான் பேசினேன்.. என்னால் உன்னை 'வாங்க.. போங்க' என்று அந்நியமாக்கிக் கொள்ள முடியாது வர்ஷா.."

"நான் அந்நியம்தான் சார்.."

"எனக்கு நீ அந்நியம் இல்லை.."

"இந்தப் பிடிவாதத்தினால் நீங்கள் சாதிக்கப் போவது எதுவுமில்லை.."

"நான் ஏற்கனவே சாதித்து விட்டேனே.."

"என்ன சொல்கிறீங்க..?"

"உன் மனதில் இடம் பிடித்து விட்டேனே.."

ஒரு கணம்.. ஒரேயொரு கணம்.. அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள் வர்ஷா.. ஆண்மையின் பெருமிதத் துடன் சிரித்த கம்பீரமான முகம்.. அவளை ஈர்த்த காந்தப் பார்வை.. அவசரமாய் விழி தாழ்த்திக் கொண்டவள்,

"நான் துரதிர்ஷ்டசாமி சார்.. உங்கள் காதலை என்னால் ஏற்க முடியாது.." என்று கலங்கிய குரலில் கூறினாள்..

அவனோ அதைக் கேட்டுச் சிரித்தான்.. அவள் புரியாமல் விழித்தாள்..

"என்னைக் காதலிக்காமல் இருக்கவும் உன்னால் முடியாது.."

"நீங்கள் என்னை என் இவ்வளவு சோதனை செய்கிறீங்க..?"

"நானா.. நான் என்ன செய்தேன்..?"

"நான் பாட்டுக்கு நானுண்டு.. என் வேலை யுண்டுன்னு இருக்கிறேனே.. ஏன் என் மனதைச் சலனப் படுத்துகிறீங்க..?"

ஆகாஷ்.. முன்புறமாக குனிந்து அவளது முகத்தைப் பார்த்தான்.. பின் நிதானமாகக் கூறினான்..

"யாரைப் பார்த்தாலும் சலனப்பட்டு விடும் மனமா உன் மனம்..? என்னைத் தவிர மற்றவரால் உன்னை சலனப்படுத்திவிட முடியுமா..? ம்ம்..?"

அவனது கேள்வியிலிருந்த உண்மை அவளைத் தாக்கியது.. இரண்டு நாட்களுக்கு முன்னால் இவனை விட அழகானவனாய்.. கவர்ச்சியானவனாய்.. அவளை அவளது குறைகளோடு ஏற்றுக் கொள்ளக் கூடியவனாய்.. வசதியானவனாய்.. ஒருவன் அவளது வருங்காலக் கணவன் என்ற உரிமையோடு அமர்ந்திருந்தானே.. அவனும் இவனைப் போல்தானே பார்த்தான்..? அவனிடம் ஏன் அவளது மனம் சலனப்படவில்லை..?

# 6

வர்ஷாவை அந்த உண்மை தாக்கியது.. ஆகாஷின் பின்னால் போகும் மனம்.. விவேக்கின் பின்னால் போகவில்லை.. அவளால் விவேக்கை காதலிக்க முடியவில்லை.. ஆகாஷை மறக்கவும் முடியவில்லை.. இத்தனை நாளாக எந்தவித பந்தத்திலும் பிணைபடாம லிருந்தவள் ஆகாஷிற்கு போக்குக் காட்டினாள்.. இன்று

விவேக்கிற்கு நிச்சயிக்கப்பட்டவுடன்.. அவள் மனம் பதறுகிறது.. ஆகாஷிடமிருந்து விலக முடியாமல் கதறுகிறது.. இப்படி இருந்தால்.. எப்படி அவளால் விவேக்குடன் குடும்பம் நடத்த முடியும்..?

அவள் கண்கள் ஆகாஷிடம் இறைஞ்சின..

"என்ன வர்ஷா..?"

"என் மேல் கருணை காட்டுங்கள் ஆகாஷ்.. என்னை விட்டு விடுங்கள்.." அவள் மீண்டும் அழுதாள்..

ஆகாஷ் புருவங்கள் முடிச்சிட அவளையே பார்த்தான்.. முதன் முறையாக அவனைப் பெயர் சொல்லி அழைக்கிறாள்.. அந்த அழைப்பு தந்த நெருக்கத்தில் மனம் குளிரும்போதே.. விலகச் சொல்லிக் கெஞ்சுகிறாள்..

'இவள் மனதில் இருக்கும் பிரச்னைதான் என்ன..?'

ஆகாஷ் பெருமூச்சுடன் வர்ஷாவைப் போகச் சொல்லி சைகை செய்தான்.. அவள் 'தப்பித்தேன்.. பிழைத்தேன்..' என்ற பாணியில் புயல் வேகத்தில் இடத்தைக் காலி செய்தாள்..

'ஏன் இப்படி ஓடுகிறாள்..?'

டேபிள் மேலிருந்த அவனது செல்போன் ஒலித்தது.. எடுத்துப் பேசினான்..

"ஆகாஷ்.. சாயந்திரம் சீக்கிரமா வீட்டுக்கு வாடா.." ராஜேஸ்வரி பேசினாள்..

"வேலையிருக்கும்மா.. என்ன விசயம்..?"

"ஒன்றுமில்லைடா.."

"ஒன்றுமில்லாததற்காக என்னை வரச் சொல்லுகிறீங்க.."

"சாந்தோமில் என் சித்தப்பாவோட பேத்தியை பார்த்து விட்டு வரலாம்.."

"உங்க சித்தப்பாவோட பேத்தியை நீங்க மட்டும் போய் பார்த்துவிட்டு வாங்க.. என்னை டிஸ்டர்ப் பண்ணாதீங்க.."

"ஆகாஷ் சொன்னால் கேளுடா.. நீ ஒரே ஒரு தடவை அந்தப் பெண்ணைப் பாருடா.. கிளியாட்டம் இருக்கிறாள்."

"மூக்கு வளைந்திருக்கிறதா..?"

"உன் கூடப் பெரிய லொள்ளா ஆகிப் போச்சுடா.. பொண்ணு கிளியாட்டம் அழகா இருப்பாள்னு சொல்ல வந்தால் மூக்கு கிளிமூக்கா என்கிற... மயிலாட்டம் இருக்கிறாள்ன்னு சொன்னால்... அவள் குரல் கேட்க அவ்வளவு பயங்கரமாகவா இருக்கும்ன்னு கேட்டு வைக்கிற.. குயிலைப் போல் பாடுகிறாள்ன்னா ஐயய்யோ.. கருப்பு நிறமா.. என்கிற.. என்னை என்னதான் சொல்லச் சொல்கிற..?"

"நீங்கள் ஏன் மனிதப் பிறவிகளை பறக்கும் பறவையின் பெயர் சொல்லி என்னிடம் அறிமுகப்படுத்து கிறீங்க..?"

"எல்லாம் ஒரு பேச்சுக்குச் சொல்கிறதுதான்.."

"எனக்கு வெறும் பேச்செல்லாம் புரியாதும்மா.. எதுவாக இருந்தாலும் நேருக்கு நேர்தான்.."

"அடடா.. இப்போது என்னதான்டா சொல்கிற..?"

"என்னால் வர முடியாதும்மா.."

"அதைச் சொல்லு.. இப்படித் தட்டிக் கழிக்கத்தான்.. கிளி.. மயில்.. குயில் என்று பேசி என்னை கதி கலங்க வைத்தாயா..?"

ராஜேஸ்வரி கோபமாய் போனை வைத்து விட்டாள்.. ஆகாஷ் போனை அணைத்துவிட்டு வந்திருந்த ஈமெயில் களில் கவனத்தைத் திருப்பினான்..

"ஆகாஷ்.. உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும்.." என்றபடி அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் மணியன்..

"என்னடா.."

"நம் மாலதி இருக்கிறாளே.."

"ஆமாம் இருக்கிறாள்.. அவள் பாட்டுக்கு.. அவளுண்டு அவள் குடும்பமுண்டுன்னு இருக்கிறாள்.. அவளுக்கு என்ன..?"

"அவள் உன் காதலியின் பெயர் என்னன்னு என்னிடம் விசாரித்தாள்... இது ஏதடா வம்பாகப் போயிற்றேன்னு எனக்குத் தெரியாதுன்னு சொல்லி விட்டேன்.."

"அவள் ஏன்டா இதைக் கேட்கிறாள்..?"

"என்னைக் கேட்டால்..? எனக்கென்ன ஜோசியமா தெரியும்..? ஆமாம்.. யார்கூட போனில் பேசிக் கொண்டிருந்த.. கிளி.. குயில்ன்னு பறவைகள் பெயராய் பறந்ததே.."

"ஆமாம்.. இறக்கை விரித்துப் பறந்தது.. நீயேன் பிடிக்காமல் போனாய்..? நான் வேற டென்சனில் இருக்கிறேன்.. என் வாயைப் பிடுங்காதே.."

"உன் வாயைப் பிடுங்கி நான் என்ன செய்யப் போகிறேன்..? அதை நீயே வைத்துக் கொண்டு.. என்ன பிரச்னை என்பதை மட்டும் சொல்லு.."

"எல்லாம் உங்களால்தான்டா பிரச்னை.."

"எங்களால்ன்னா.. யார்.. யார்..?"

"நீ சுந்தரம்.. மாலதி.. அப்புறம் நம்ம செட்டில் இருக்கிற பிரண்ட்ஸ்னால்தான் எனக்குப் பிரச்னை.."

"நாங்க என்னடா பண்ணினோம்..?"

"உங்களை யாருடா கல்யாணம் பண்ணி.. குழந்தை குட்டி பெற்றுக்கச் சொன்னது.."

"அடப்பாவி.. அடிமடியிலேயே கை வைக்கிறாயே.. ஏன்டா.. காலம் பூராவும் கட்டை பிரம்மச்சாரியாய் நீ இருப்பே.. உனக்காக ஊரில் இருக்கிறவன் கல்யாணம் பண்ணிக்கக்கூடாதா..? கல்யாணம் பண்ணிக் கொண்டவன் கையை கட்டிக்கிட்டா இருப்பான்..? குழந்தை குட்டி பெற்றுக்கத்தான் செய்வான்.. இது ஒரு தப்பா ராஜா..?"

"தப்புத்தான்.. உங்களைப் பார்த்துத்தான் என் அம்மாவும் அப்பாவும் என்னையும் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லி பிராணனை எடுக்கிறாங்க.."

"உன் பிராணனை எடுக்கிறாங்களா.. ஏண்டா பொய் சொல்றே.. எங்கள் பிராணனை வாங்குறாங்கடா.. காலையில் வாக்கிங் போனால் உங்க அப்பா வந்து பிடிச்சுக்கிறார்ன்னு பயந்து நான் காலையில் வாக்கிங் போகிறதையே நிறுத்தி விட்டேன்டா.. இப்போது பார்..

லேசாய் தொப்பை போட்டு விட்டது.. எப்போதும் என்னைப் பார்த்தால் அவசரமாய் ஹேன்ட் பேகிலிருக்கும் கண்ணாடியை எடுத்து முகம் பார்த்துக் கொள்ளும் ஷகிலா இந்த ஒரு மாதமாய் என்னைக் கண்டு கொள்வதே இல்லை.."

"நல்ல விஷயம்தானே.. கழுத்தில் ஒரு தாலியைக் கட்டி உன் குழந்தைக்கு அம்மாவாகவும் ஆக்கி உன் மனைவியை குடும்பம் என்கிற கூண்டில் அடைத்து விட்டு.. நீ ஊரில் இருக்கிற பெண்களையெல்லாம் சைட் அடித்துக் கொண்டு அலைந்தாயே.. கொஞ்சமாவது உன் மனைவியின் பாவத்தைக் கொட்டிக் கொள்கிறோமேன்னு நினைத்துப் பார்த்தாயா..?"

"ஏன்டா.. கல்யாணம் பண்ணிக் கொண்டால் பெண்டாட்டியை மட்டும்தான் சைட் அடிக்கணுமா..? நீ கல்யாணம் பண்ணிப் பாருடா மகனே.. அப்புறம் தெரியும் புருசன்காரனின் கஷ்டம்.. என்னவோ வெளியே இப்படி ஓர் பார்வை பார்த்து இளைப்பாறிக் கொள்வதால் எங்கள் வண்டி ஓடுகிறது.."

"தூ.. நீயும் உன் வியாக்கியானமும்.. பாவம்டா உன் பெண்டாட்டி.. கல்யாண மேடையில் ஒரு பூப்போல் உன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தது.. அதை விட்டுட்டு ஷகிலாவைப் போய் சைட் அடிக்கிறானாம்.."

"பூப்போல அவள் இருந்ததெல்லாம் அந்தக் காலம் மச்சி.. இப்போதெல்லாம் புயல் வேகம் தான்.. கோபம் வந்தால் பூரிக் கட்டையைத் தூக்கி வீசி விடுகிறாள்.. இவள் மட்டும் கிரிக்கெட் விளையாடப் போயிருந்தால் நல்ல வேகப்பந்து வீச்சாளராக வந்திருப்பாள்.."

"உன் மேலேயெல்லாம் பூரிக்கட்டையை எடுத்து வீசக்கூடாது.. நல்ல விறகுக்கட்டையாய் எடுத்து விச வேண்டும்.."

"அடப்பாவி.. நீயே அவளுக்கு சொல்லிக் கொடுத்து விடுவ போல இருக்கே.. வீட்டுப் பக்கம் வந்திராதேடா ராஜா.."

"ஏண்டா.. கல்யாணத்தில் இவ்வளவு வில்லங்கம் இருந்தால் அதை ஏன்டா பண்ணித் தொலைக்கறீங்க..?"

"அதெல்லாம் நடக்க வேண்டியது காலா காலத்தில் நடக்கணும்டா.. இல்லாவிட்டால் ஊரில் இருக்கிறவங்க.. உன்னைச் சொல்கிறது போல் என்னையும் சொல்லி விடுவாங்களே.."

"என்னைச் சொல்ல என்னடா இருக்கிறது..?"

"எதுவோ இருக்கிறது என்றுதான் தெரிந்த வட்டாரங்களில் உன்னைப் பற்றிப் பேச்சு அடிபடுகிறது.. எதுவும் இல்லாமலா இவ்வளவு வசதியிருந்தும் ஒரு ஆண்பிள்ளை கல்யாணமே வேண்டாம்ன்னு இருப்பான்னு ஊருக்குள் ஒரு மாதிரி பேசிக்கிறாங்கப்பா.."

"ஆமாம்.. உன்னைக் கூப்பிட்டுத்தான் எல்லாரும் சொல்கிறாங்க.."

"சொல்லாமலா உன்னிடம் வந்து சொல்கிறேன்.."

"வேண்டாம்டா.. போயிரு.. வெறியேத்தாதே.. நானே இத்தனை வருசம் கழித்து அவள் என்னுடன் பேசி விட்டாளேயென்று சந்தோசப்படுவதா.. ஏன் இப்படி அழுது புலம்பினாள்ன்னு வருத்தப்படுவதான்னு தெரியாமல் குழம்பிப் போயிருக்கிறேன்."

"என்னடா இது.. புதிதாய் கதை சொல்கிற.. வர்ஷா உன்னுடன் பேசி விட்டாளா..? என்னால் நம்பவே முடிய வில்லையே.."

"என்னாலும் தான் நம்ப முடியவில்லை.. அவளானால் என்னை விட்டுவிடுங்கள்ன்னு இல்ல அழுது தொலைக் கிறாள்.."

ஆகாஷ் சலித்துக் கொள்ள.. மணியன் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.. ஆகாஷ் புரியாமல் விழித்தான்..

"ஏன்டா.. ஒரு மார்க்கமாய் என்னைப் பார்க்கிற..?"

"அவள் என்னை விட்டுவிடுங்கன்னு அழுதிருக் காள்ன்னா.. நீ அவளை என்ன பண்ணித் தொலைத்த..?"

"சட்.. உன் புத்தி போகிற போக்கு இருக்கிறதே.. ஏன்டா இப்படி இருக்கிற..?"

"நீ சொல்லிய லட்சணம் அப்படி.. என்னை ஏன் குறை சொல்கிற..? முதலில் உங்களுக்குள் என்ன நடந்ததுன்னு

சொல்லு.."

"இந்த லட்சணத்தில் நீ கேட்டால் நான் எதுவும் சொல்ல மாட்டேன்.."

"வேறு எப்படிடா கேட்டுத் தொலைக்க..? உன்னோடு எனக்கு பெரும் பாடாப் போயிருச்சு.. ம்ம்ம்.. இப்படிக் கேட்கவா..? உனக்கும்.. அவளுக்கும் இடையில் என்ன பேச்சு வார்த்தை நடந்தது..? எப்படி.. சரியாய் கேட்டு விட்டேனா..?"

ஆகாஷ் சிரித்துக் கொண்டே மணியனின் மேல் கையிலிருந்த பேனாவை விட்டெறிந்தான்.. அவன் அதை அழகாக 'கேட்ச்' பிடித்தான்..

"எப்படிடா..?"

"பழக்க தோசம்.. வீட்டில் என்னை நோக்கி என் பெண்டாட்டி வீசியெறியும் வஸ்துகளை தாவிக் கேட்ச் பண்ணிய பழக்கம்.."

"எப்படியோ.. குடும்பம் நடத்துகிறீங்களோ இல்லையோ.. கிரிக்கெட் விளையாட்டை நன்றாக பிராக்டிஸ் பண்ணுகிறீங்க.."

ஆகாஷ் சிரித்துக் கொண்டே நடந்தவற்றை விவரித்தான்..

"என்னை இத்தனை நாள் கழித்து ஆகாஷ்ன்னு என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டாள்டா.."

"அதுதானே உன் பெயர்..? அதைச் சொல்லிக் கூப்பிட்டால் இவ்வளவு பரவசமா..?"

"நீயெல்லாம் காதலிக்க இல்லை.. காதலைப் பற்றிக் கேட்கக்கூட லாயக்கில்லைடா.."

"நீ லாயக்காய் இருந்து வருடங்களை வேஸ்ட் பண்ணிக் கொண்டிருப்பது போதும்.. நான் வேறு உன்னுடன் சேர வேண்டுமா..? ஆகாஷ்.. ஒன்றை மட்டும் தெரிந்து கொள்.. அவள் மனதில் நீ இருக்கிறாய்.. ஆனால் அதை ஒத்துக் கொள்ள முடியாமல் ஏதோ ஒன்று அவளைத் தடுக்கிறது.."

ஆகாஷ் மௌனமாய் தலை அசைத்து நண்பன் சொல்வதை அங்கீகரித்தான்..

"அது என்னவாக இருக்கும்..?"

"குடும்பச் சூழ்நிலை காரணமாக இருக்கலாம்.. ம்ம்.. நான் ஒன்று செய்கிறேன்.. நம் மாலதியிடம் பேசிப் பார்க்கிறேன்.."

"அவளிடம் போய் இதைப் பேசப் போகிறாயா..?"

"பேசித்தான் பார்ப்போமே.. இந்த சினிமாக்களில் எல்லாம் ஒரு டயலாக் தவறாமல் வரும்.. நீ கவனித் திருக்கிறாயா..?"

"என்ன டயலாக்..?"

"ஒரு பெண்ணின் மனசு... இன்னொரு பெண்ணுக்குத்தான் புரியும்.."

"ச்ச்ச்.. எங்கேயோ போயிட்டடா நீ.."

"உன்கூட சேர்ந்து விட்டேனில்லையா..? விதி விட்ட வழியில் போய்த்தானே ஆகனும்..?"

கிண்டலாகப் பேசினாலும் அன்று மாலையே மணியன் மாலதியின் வீட்டில் இருந்தான்..

காலிங் பெல்லின் சத்தத்தில் கதவைத் திறந்த கரணின் கையைப் பிடித்து ஆர்ப்பாட்டமாய் குலுக்கிய படியே வீட்டிற்குள் போனான் மணியன்..

"கரண்.. எப்படி நீங்கள் இன்னும் அதே ஹேன்ட்சம் மோடு இருக்கிறீங்க.. உங்களைப் பார்த்தால் ஒரு குழந்தைக்கு தகப்பன் ஆகி விட்டீங்கன்னு யாருமே சொல்ல மாட்டாங்க.. ரோட்டில் நடந்து போனீங்கன்னா எல்லாப் பெண்களும் உங்கள் பின்னாடிதான் வருவார்கள்.. ஹா.. ஹா.." என்று சிரித்தவனின் சிரிப்பு பாதியிலேயே நின்று போனது..

அனல் பார்வை பார்த்தபடி வந்தாள் மாலதி..

"ஏண்டா.. நீ கெட்டது போதாதுன்னு என் ஹஸ்பெண்டையும் கூட்டு சேர்க்கிறாயா..? அது என்ன சொன்ன..? இவர் ரோட்டில் போனால் எல்லாப்

பெண்களும் இவர் பின்னாடிதான் வருவாங்களாமா.. ஏன் பெண்களுக்கு வேறு வேலையே இல்லையா..? உன்னையும் இவரையும் விட்டால் ஊரில் வேறு ஆண்களே இல்லையா..?"

"பார் மாலதி.. உன் பிரண்ட் சொன்னதற்கு என்னையும் சேர்த்து ஏன் காய்ச்சுகிற.. ஊரில் உள்ள பெண்களில் யாரும் என் பின்னாடி வரவேண்டுமென்று நான் ஆசைப்பட்டதே இல்லையே... என்னுடைய மகாராணி.. நீ ஒருத்தி மட்டும் என் பின்னால் வந்தால் போதுமென்றுதானே தவமிருக்கிறேன்.."

கரண் காதைப் பிடித்துக் கொண்டு மாலதியின் முன் நின்றான்..

## 7

ஒரு அரை மணி நேரம் மணியனையும்.. கரணையும் காய்ச்சு.. காய்ச்சென்று காய்ச்சி எடுத்து விட்டாள் மாலதி.. தாங்க மாட்டால் மணியன் காதோரம் சரிந்து முணுமுணுத்தான் கரண்..

"ஏன் மணியன்.. நீங்கள் ஒரு திட்டத்தோடுதான் இந்த வீட்டிற்குள் அடியெடுத்து வைத்து இருக்கிறீங்களா..? காலிங்பெல் சத்தம் கேட்டு உங்களுக்கு கதவைத் திறந்து விட்ட தவறைத் தவிர நான் வேறு என்ன தவறு செய்தேன்..? என் பெண்டாட்டியே ரொம்ப பொஸஸிவ் டைப்.. என் அம்மா என்னைப் பாசமாக பார்த்தாலே அவள் தாங்க மாட்டாள்.. இதில் ஊரில் இருக்கிற பெண்களை யெல்லாம் இழுத்து விட்டால் அவள் என்னை சும்மாவா விடுவாள்..?"

'ஐயோ பாவம்..' என்று தோன்றிவிட கரணுக்கு அபயமளித்தான் மணியன்..

"கவலைப்படாதீங்க கரண்.. உங்கள் மாலதியின் கவனத்தை திசை திருப்புகிறேன்.."

மாலதியின் முன் அமர்ந்து சமாதானக் கொடி போல் தன் வெள்ளைக் கைக்குட்டையை ஆட்டியபடி பேச ஆரம்பித்தான் மணியன்..

"போதும் மாலதி.. போர் நிறுத்தம் செய்து விடு.. நானே உன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு.. உன் நட்பிற்கு மரியாதை கொடுத்து உன் வீட்டிற்கு வந்திருக்கும்போது.. உன்

அருமை.. பெருமைகளைப் புரிந்து உன் கணவர்.. உன் அழகு திருமுகத்தைவிட்டு வேறொரு முகத்தை கனவிலும் நினைத்துப் பார்ப்பாரா..? மலையிறங்கும்மா.. மாரியாத்தா.."

"அது என்னடா சரடு திரிக்கிற..? என் நட்பிற்கு மரியாதை கொடுத்து என் வீட்டிற்கு வந்தாயா..? சும்மா இருக்கும் சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி.. அது போல் சாதுப் பிள்ளையான என் ஹஸ்பெண்டை கிளப்பி விடத் திட்டம் போட்டு வந்த கள்ளன் நீ.. இதுதான் நீ நட்பிற்கு மரியாதை கொடுக்கும் லட்சணமா..?" இன்னும் மலையேறினாள் மாலதி..

"இதோ பார் மாலதி.. நீதானே ஆகாஷின் காதலியைப் பற்றி விசாரித்தாய்..?" என்று மணியன் வினவியதும் மாலதி கொஞ்சம் மலை இறங்கினாள்..

"பேச்சை மாற்றாதே.."

"நான் ஏன் பேச்சை மாற்றப் போகிறேன்..? நாள் பூராவும் வேலை செய்தவன் அலுப்பு தீர வீட்டிற்குப் போய் குளித்துவிட்டு பெண்டாட்டி கையால் டிபன் காபி சாப்பிடுவதை விட்டு விட்டு உன் வீட்டிற்கு வந்து உன்னிடம் அர்ச்சனை வாங்கிக் கட்டிக் கொள்ளனும்னு எனக்கு என்ன தலையெழுத்தா..? நீயே சொல்லு.." மணியன் சோர்வாய் முகத்தை வைத்துக் கொண்டான்..

"நிஜமாகத்தான் சொல்கிறாயா..?" மாலதி சுத்தமாய் மலை இறங்கி விட்டாள்..

நிம்மதியாய் ஆசுவாசப் பெருமூச்சு விட்ட கரண்.. மாலதியைப் பார்த்து,

"அவரென்ன பொய்யா சொல்லப் போகிறார்..? பாவம்.. அவர் முகத்தைப் பார்த்தாலே பசி தெரிய வில்லையா..? போனால் போகிறது.. கொஞ்சம் டிபன்.. ஒரு கப் காபி கொண்டு வா மாலதி.." என்று பரிந்து பேசினான்..

"நீங்க சொல்வதற்காகப் போகிறேன். இல்லா விட்டால் இவன் பேசிய பேச்சிற்கு பச்சைத் தண்ணீர்கூட குடுத்திருக்க மாட்டேன்.." என்று முறைத்தபடி உள்ளே போகத் திரும்பியவள்.. ஏதோ நினைவுக்கு வந்தவளாய்,

"டேய்.. நான் கிச்சனுக்குப் போகிற கேப்பில் என் ஹஸ்பெண்டிடம் எதையாவது கிளப்பி விட்டுக் கொண்டு இருந்தேன்னு வை... உன்னை பொலி போட்டு விடுவேன்.. ஜாக்கிதை.." என்று எச்சரித்து விட்டு உள்ளே சென்றாள்..

"என்ன ஒரு டெர்ரர் லேடி.. கரண் இவளுடன் எப்படி நீங்க குப்பை கொட்டுகிறீங்க..?"

"அவளுக்கு என் மீது இருப்பது அதீதமான காதல் மணியன்.."

"இப்படி ஒரு கட்டுக்குள் வைத்திருக்கிறாள்.. இதுதான் காதலா..?"

"இதுவும் காதலின் ஒரு வெளிப்பாடு.."

மாலதி டிபன் காபியோடு திரும்பி வந்து,

"குடி.." என்று மணியனிடம் நீட்டினாள்..

"அப்படியே மாட்டுக்கு தண்ணீர் காட்டுவது போலவே இருக்கிறது.."

"மாட்டைக் கண்டவன் போல் பேசாதே.."

"சொந்தக்காரர் வீட்டு விசேஷத்திற்குப் போனபோது மாட்டையும் பார்த்தேன்.. அதற்கு தண்ணீர் காட்டுவதையும் பார்த்தேன்.."

"நீ பார்த்த கதையை விட்டுவிட்டு நான் கேட்ட கதைக்கு வா.. ஆகாஷின் காதலியின் பெயர் என்ன..?"

"இதை ஏன் திடிர்ன்னு கேட்கிற..?"

"எல்லாம் காரணமாகத்தான்.. ஆகாஷின் அப்பா படுத்தும் பாடு தாங்க முடியலைடா.. வரவர மார்க்கெட் போகவே பயமாய் இருக்கிறது.. எந்த மூலையில் இருந்து வந்து அவர் பிடித்துக் கொள்வாரோன்னு மனசு திக்கு திக்குன்னு அடிச்சுக்குதுடா.."

"உனக்குமா..?"

"உனக்குமான்னா..?"

"நானும் அனுபவசாலிதான் மாலதி.. ஆகாஷின் அப்பாவிற்கு பயந்து வாக்கிங் போவதையே நிறுத்தி விட்டேன்னா பாரேன்.."

"அதான் தொப்பையா..?"

"உன் கண்ணிலும் பட்டு விட்டதா..?"

"அதனால்தான்டா ஒரு முடிவிற்கு வந்திருக்கிறேன்.. இந்த ஆகாஷிற்கு கல்யாணம் ஆனால்தான் எனக்கு நிம்மதி.."

"நமக்கு நிம்மதின்னு சொல்.."

"மணி.. நம்ம விவேக்கிற்கு மேரேஜ் பிக்ஸ் ஆகியிருக்குடா.."

"அடிசக்கை.. பெண் யாராம்..?"

"அவள் நீயும்.. ஆகாஷும் வேலை பார்க்கிற நக்ஷத்திரா குரூப் ஆப் கம்பெனியில்தான் வேலை பார்க்கிறாளாம்.."

"ஈஸிட்.. பெயர் என்னவாம்..?"

"ஏதோ ஒரு பெயர் சொன்னான்.. நினைவுக்கு வரவில்லையே.. ஏங்க.. உங்களுக்கு நினைவு இருக்கிறதா..?"

"ஸாரி டியர்.."

"அவருக்கும் தெரியவில்லையாம்டா.. நீ ஆகாஷின் காதலியின் பெயரைச் சொல்லு.. நான் விவேக்கிடம் பேசி.. அவனுடைய வுட்பியிடம் சொல்லி.. அந்தப் பெண்ணிடம் பேச வைக்கிறேன்.."

"இது எதற்கு தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிற..?"

"நீ சும்மா இருடா.. நீயும்தான் அந்தக் கம்பெனி யிலேயே வேலை பார்க்கிற.. அந்தப் பெண்ணிடம் பேசி ஆகாஷின் காதலை புரிய வைக்க உன்னால் முடிந்ததா..? அதற்குத்தான் இந்த ஐடியா.."

"ஓஹோ.. இந்த ஐடியாவால் என்ன நடக்குமாம்.."

"இது என்னடா இப்படிச் சொல்கிற... ஒரு பெண்ணோட மனசு இன்னொரு பெண்ணிற்குத்தான் புரியும்.."

"என்ன சொன்ன..?" என்று கேட்டுவிட்டு மணியன் ஏன் விழுந்து விழுந்து சிரித்தான் என்று மாலதிக்குப் புரியவில்லை..

"இவன் ஏங்க இப்படிச் சிரிக்கிறான்..?"

"தெரியவில்லையே மாலு டியர்.."

"ஏன்டா.. நீயென்ன லூஸா..?"

"அதைவிடு.. நீ பகல் நேரத்தில் எப்படி டைமை ஸ்பென்ட் பண்ணுகிற..?"

"ஏன்டா..?"

"சும்மா தெரிந்து கொள்ளலாமேன்னுதான்.."

"டி.வி.யில் சினிமா பார்ப்பேன்.."

"அதுதானே பார்த்தேன்.."

"இவன் ஏங்க இப்படி பினாத்துகிறான்..?"

மாலதிக்கு சுத்தமாக விளங்கவில்லை.. மணியன் தான் வந்து காரணத்தைக் கூறவும் கரண் வயிற்றைப் பிடித்துக் கொண்ட சிரிக்க ஆரம்பித்தான்.. மாலதியின் முகத்தில் குடம்.. குடமாய் அசடு வழிந்தது..

"போதும்ங்க.. இவன் சும்மாவே என்னைக் கிண்டல் பண்ணுவான்.."

"மாலதி.. ஆகாஷ் காதலிக்கும் பெண்ணின் பெயர் வர்ஷா..!"

மணியன் இதைச் சொன்னதுதான் தாமதம் கரணின் சிரிப்பு ஸ்விட்ச் போட்டது போல் நின்றது.. மாலதியின் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது.. கணவனும் மனைவியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்..

"ஏங்க.. விவேக்கின் வுட்பி பெயரும் வர்ஷாதானே.."

"ஆமாம் மாலதி.. அவர் இந்தப் பெயரைத்தான் சொன்னார்.."

மணியனுக்கு அவர்கள் பேசிக் கொள்வதன் பொருள் விளங்கவில்லை.. பொருள் விளங்கியவுடன் கதி கலங்கிப் போனான்..

"என்ன மாலதி கதை இப்படிப் போகிறது..?"

"நீ வேற சும்மா இருடா.. நாமாய் எதையும் கற்பனை பண்ணிக் கொள்ள வேண்டாம்.. ஒரு வேளை இரண்டு பெண்களும் வேறு வேறு நபராய் கூட இருக்கலாம்.."

"சான்ஸே இல்லை மாலதி.. எங்கள் கம்பெனியில் வேலை பார்ப்பது ஒரே ஒரு வர்ஷாதான்.. அவள் திருவான்மியூரில்தான் குடியிருக்கிறாள்.. அவளும் அவளுடைய அம்மாவும் மட்டும்தான் குடும்ப உறுப்பினர்கள்.. சர்வீஸ் பைலில் அப்படித்தான் போட்டிருந்தது.. அவள் இரண்டு நாட்களுக்கு முன்னால் இரண்டு நாள் லீவில் போயிருந்தாள்.. திரும்பி வந்தவுடன் தான் ஆகாஷிடம் 'என்னை விட்டு விடு..' ன்னு அழுதிருக்கிறாள்.."

"விவேக்.. இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் அவளைப் பெண் பார்த்துக் கல்யாணம் பேசி முடித்தான்.. மணி.. அந்தப் பெண்ணை நம் ஆகாஷ் ஏதாவது லவ் டார்ச்சர் செய்தானா..?"

"சேச்சே.. உனக்கு ஆகாஷைப் பற்றித் தெரியாதா..?"

"அப்புறம் ஏன் அந்தப் பெண் என்னை விட்டு விடுன்னு சொல்லி அழுதாளாம்.."

"மாலதி.. அந்தப் பெண் இந்த மூன்று வருடங்களாக காட்டாத மன நெருக்கத்தை இன்று காட்டியிருக்கிறாள்.. ஆகாஷை சார்ன்னுதான் அழைப்பாள்.. இன்று பெயர் சொல்லி அழைத்திருக்கிறாள்.. என்னைப் பிடிக்க வில்லைன்னு என் முகத்தைப் பார்த்துச் சொல்லுன்னு ஆகாஷ் கேட்டானாம்.. அதற்குத்தான் அந்தப் பெண் அவனது முகத்தைப் பார்க்காமல் என்னை விட்டு விடுன்னு சொல்லி அழுதாளாம்.."

மாலதி நிதானமாக யோசித்தாள்.. அவளுக்குக் கிடைத்த விடை ஒன்றே ஒன்றுதான்.. நிமிர்ந்து மணியனின் முகம் பார்த்தாள்..

"மணி.. எனக்கு ஒன்று தோன்றுகிறது.."

"எனக்கும் அதேதான் தோன்றுகிறது.."

"என்னடா இது.. சோதனையாக இருக்கிறது.. ஆகாஷ்.. விவேக் இரண்டு பேருமே நம்முடைய பிரண்ட்ஸ்.. இதில் யாருக்கென்று நாம் பார்ப்பது..?"

"எனக்கும் அதே குழப்பம்தான்.. அந்தப் பெண் மனதில் யார் இருக்கிறாங்கன்னு தெளிவாகத் தெரிய வில்லையே.."

"விவேக்கை அந்தப் பெண் இதுவரை பார்த்தது இல்லையாம்.. இவன்தான் அவனுடைய பெரியம்மா வீட்டிற்குப் போனபோது அந்தப் பெண்ணைப் பார்த்திருக் கிறான்.."

"ஆனால் ஆகாஷை அந்தப் பெண் தினமும் பார்த்திருக்கிறாள்.. ஆகாஷின் காதல் அவளுக்கு நன்றாகத் தெரியும்.."

"மணி.. நான் ஒரு யோசனை சொல்கிறேன்.. செய்கிறாயா..?"

"சொல் மாலதி.."

"நான் ஆகாஷையும்.. வர்ஷாவையும் சேர்த்து வைத்து ஒரே இடத்தில் பார்க்க வேண்டும்.. அவள் ஆகாஷுடன் எப்படிப் பழகுகிறாள் என்பதை வைத்து அவள் மனதில் இருப்பது யார் என்பதை எளிதாக கண்டுபிடித்து விடுவேன்.. என் வீட்டிற்கு அவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு வருகிறாயா..?"

"இதே அபார்ட்மென்ட்டில்.. இதே ப்ளோரில்.. நான்கு பிளாட் தள்ளி விவேக்கின் பிளாட் இருக்கிறது என்பதை நீ மறந்து விட்டாயா..? அவன் இவர்கள் இருவரையும் பார்த்து விட்டாலோ.. இல்லை.. ஆகாஷ் வர்ஷாவையும்.. விவேக்கையும் இணைத்து கேள்விப்பட்டு விட்டாலோ காரியமே கெட்டுக் குட்டிச் சுவராய் போய்விடும்.. நாம் இதை ஜாக்கிரதையாய் ஹேண்டில் பண்ண வேண்டும்.. இப்படிச் செய்தால் என்ன..?"

"என்ன..?"

"என் வீட்டில் ஏதாவது ஒரு காரணம் சொல்லி விருந்துக்கு அவர்கள் இருவரையும் அழைத்து விடுகிறேன்.. நீயும் குடும்பத்துடன் வந்துவிடு.. அவர்கள் இருவரும் பழகும் விதத்தைப் பார்த்து ஒரு முடிவுக்கு வா.."

"வெல்டன் மணி.. உன் மூளை கூட சில சமயம் வேலை செய்கிறதே.."

"என்னை என்னவென்று நினைத்த..? உன் கூடப் படித்ததினால் உன்னைப் போலவே மழுங்கிப் போன மூளையுடன்தான் நானும் இருப்பேன்னு நினைத்தாயா..?"

"டேய்.." மாலதி கையிலிருந்த நாவலைத் தூக்கி அவன் மேல் விட்டெறிந்தாள்.. "கேட்ச்.." என்று அவன் அதை தாவிப் பிடித்தான்..

"நீ கிரிக்கெட் விளையாடப் போயிருக்க வேண்டிய வன்டா.."

"ஆகாஷ் விட்டெறிந்ததை தாவி பிடித்தபோது அவனும் இதைத்தான் சொன்னான்.."

"ஆக.. எல்லோருமே கையில் இருப்பதை உன் மேல் விட்டெறியும் கொலை வெறியோடுதான் இருக்கிறார் கள்ன்னு சொல்லு.."

ஆப்பிள் நறுக்க கத்தியை எடுத்துக் கொண்டே மாலதி வினவ மணியன் அங்கிருந்து மாயமாய் மறைந்து விட்டான்..

"இவன் எங்கேங்க போனான்..?"

"நீ கத்தியை எடுத்ததுமே எஸ்கேப் ஆகிவிட்டார்.."

"அடடா.. நான் அவனுக்குப் பழம் நறுக்கிக் கொடுக்கலாம் என்றுதானே கத்தியை எடுத்தேன்..?"

"உன்மேல் உன் பிரண்டிற்கு அவ்வளவு நம்பிக்கை.."

எதற்கும் இருக்கட்டுமென்று படுக்கையறைக்குள் நுழைந்தவாறே கரண் இதைக் கூறினான்..

# 8

வர்ஷா வேலையில் மும்முரமாக இருந்தாள்.. கோப்புக்களில் இருந்த விவரங்களை கம்ப்யூட்டரில் பதிவு பண்ணிக் கொண்டு இருந்தபோது மணியன் அவள் எதிரில் வந்து நின்றான்.. எதிரில் நிழலாட நிமிர்ந்து பார்த்தவள் அவசரமாய் எழுந்து நின்றாள்..

"சார்.."

"ஒன் மினிட் என்னோடு வர முடியுமா வர்ஷா..?"

"என்ன சார்..?"

"என் வொய்ப் உங்களைப் பார்க்க வந்திருக்கிறாங்க.."

"என்னைப் பார்க்கவா..?"

"ஆமாம்.. என்னோடு வாங்க.."

வர்ஷா குழப்பத்துடன் வேலையைப் பாதியில் நிறுத்தி விட்டு மணியனின் பின்னாலேயே சென்றாள்.. வரவேற்பறையில் கையில் குழந்தையோடு அமர்ந்திருந் தாள் வாசவி.. மணியனின் மனைவி..

"வாசவி.. இவங்கதான் வர்ஷா.."

வர்ஷா வாசவியைப் பார்த்துக் கை குவித்தாள்.. பதிலுக்கு வாசவி சிரித்தாள்.. அவள் கையிலிருந்த மயூர் வர்ஷாவிடம் தாவியது.. ஆவலாக குழந்தையைத் தூக்கிக் கொண்டாள் வர்ஷா..

"வர்ஷா.. உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்.."

"சொல்லுங்க.."

"எங்க வீட்டில் ஒரு சின்ன விருந்து அரேன்ஜ் பண்ணியிருக்கிறேன்.. நீங்க வரனும்.."

"விருந்திற்கா..? நானா..?"

வர்ஷா யோசனையுடன் வாசவியைப் பார்த்தாள்.. மணியன் அவளுக்கு உயரதிகாரி.. ஆனால் வர்ஷா அவனின் நேரடிப் பார்வையின் கீழ் வேலை பார்க்கவில்லை.. அப்படியிருக்கையில் அவளை விருந்துக்கு அழைக்கக் காரணம் என்ன..?

"என்ன யோசிக்கிறீங்க..?"

"இல்லை.. எதற்காக விருந்து கொடுக்கிறீங்க..?"

"எங்க வீட்டில் விருந்து கொடுக்கக் காரணமே தேவையில்லை.. எங்க மயூர் இன்றைக்கு வீடு பூராவும் கீழே விழாமல் தானாக நடந்து விட்டான்.. அதைக் கொண்டாடத்தான் விருந்து.."

"எனக்கு வெளியே எங்கேயும் போய் பழக்கமில்லை.."

"நல்ல பழக்கம்தான்.. ஆனால் நீங்க வெளியில் எங்கேயும் போக வேண்டியது இல்லையே.. எங்க வீட்டிற்குத்தானே வரப் போகிறீங்க.. உங்களையெல்லாம் நம்பித்தான் சாப்பாடு பிரிபேர் பண்ணி வைத்து விட்டேன்.. சாப்பிட ஆள் வேண்டாமா..?" என்று வாசவி கூறவும்,

"சாப்பிட எப்படி ஆள் பிடிக்கிறாள்ன்னு பாருங்க.." என்றான் மணியன் வேடிக்கையாக..

செல்லக் கோபத்துடன் வாசவி கணவனை முறைப் பதையும் அவன் பொய்யாய் கன்னத்தில் போட்டுக் கொள்வதையும் கவனித்த வர்ஷாவிற்கு மனதிற்குள் இதம் பரவியது.. மூன்று வருடங்களாய் இருந்து வரும் மூச்சுத் திணறல் மாற ஏன் ஒரு மாற்றமாய் இவர்கள் வீட்டு விருந்திற்கு போய் வரக்கூடாது என்ற எண்ணம் அவளுள் எழுந்தது..

'அம்மா.. என்ன சொல்வாங்களோ..' என்று எண்ண மிட்டாள்..

"வாங்க வர்ஷா போகலாம்.. உங்களை அழைத்துக் கொண்டு போகத்தான் நானே நேரில் வந்தேன்.." என்றாள் வாசவி..

"இன்றைக்கேவா விருந்து..?" தாயிடம் எப்படி அனுமதி வாங்குவது என்ற கவலை நீங்கப் பெற்றவளாய் வர்ஷா வியப்புடன் கேட்டாள்..

"இன்றைக்கேதான்.. இப்போவேதான்.." வாசவி வேடிக்கையாக கூறிச் சிரித்தாள்..

"நான் பெர்மிஷன் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன்.."

"ஊம்.. நான் இங்கேயே வெயிட் பண்ணுகிறேன்.. திரும்பி வரும்போது நானே காரில் கொண்டு வந்து விட்டு விடுவேன்.. கவலைப்படாதீங்க.."

போக்குவரத்தைப் பற்றிய கவலையும் நீங்கப் பெற்ற வர்ஷா நிம்மதியுடன் தலை அசைத்துவிட்டு அனுமதி வாங்கச் சென்றாள்..

அவள் தலை மறைந்ததும் மனைவியை மெச்சிக் கொண்டான் மணியன்..

"குட் ஜாப் வாசவி.. நான் உன்னை என்னமோன்னு நினைத்தேன்.. நீ இப்படித் தூள் பரத்துகிறாயே.. நீ இவ்வளவு புத்திசாலியா..?"

"மனைவிமார்கள் எல்லோரும் தங்களது புத்திசாலித் தனத்தை மறைத்துக் கொண்டு ஜீரோவாக இருந்தால் தானே குடும்பம்ங்கிற வண்டி ஓடுகிறது.."

"ஏதோ.. ஒரு மறை பொருளுடன் பேசுவது போல் தெரிகிறதே.."

"நான் கூட வரும்போதே அந்த ஷகிலா என்ற பெண்ணிடம் நீங்கள் வழிந்ததும் எனக்குத் தெரியும்.. அவள் அங்கு வரும்போதே இங்கே உங்கள் பேன்ட் பாக்கெட்டிலிருந்து சீப்பை எடுத்து தலை முடியை வரட்டு வரட்டென்று வாரிக் கொண்டதும் எனக்குத் தெரியும்.."

'ஆஹா.. இவள் இத்தனை உஷார் பேர்வழியா..' அவசரமாய் சமாளித்தான் மணியன்..

"அது ஒன்றுமில்லைடா செல்லம்.. நான் அவளுக்கு சுப்பீரியர் இல்லையா..? கலைந்த தலையுடன் இருக்கக் கூடாதுடா.. கம்பீரமாய் இருக்க வேண்டும்.. அதற்காகத் தான்.."

"இப்படியெல்லாம் செய்தால் கம்பீரத்திற்கும் உங்களுக்குமான தூரம் அதிகமாகிவிடும்.. பார்த்து நடந்து கொள்ளுங்கள்.. உங்கள் பதவியின் கம்பீரத்தை நீங்களே தொலைத்து விடாதீர்கள்.."

'இன்றைக்கு என்ன இவ்வளவு சூடாக இருக்கிறாள்..' மணியன் பொறியில் மாட்டிய எலியாய் விழித்துக் கொண்டிருந்தபோது வர்ஷா வந்து விட்டாள்..

'நல்லவேளை.. இவள் வந்து காப்பாற்றினாள்..' என்ற நிம்மதியுடன் வர்ஷாவை வரவேற்றான் மணியன்..

"பரவாயில்லையே.. சீக்கிரம் வந்து விட்டீங்களே.."

'அவள் சீக்கிரமாய் வந்ததால்தான் நீங்கள் தப்பித் தீர்கள்..' என்று விழியால் கணவனை எச்சரித்த வாசவி.. வர்ஷாவின் பக்கம் புன்முறுவலுடன் திரும்பினாள்..

"வாங்க வர்ஷா.. போகலாம்.."

"ம்ம்.." என்று தலை அசைத்த வர்ஷா.. மயூரைக் கையில் வாங்கிக் கொஞ்சிக் கொண்டே வாசவியுடன் நெடுங்காலம் பழகியவள் போல் பேசிக் கொண்டே சென்றாள்..

ஆகாஷின் அறைக்குள் சென்ற மணியன்..

"இன்னுமாடா லேப் டாப்பை நோண்டிக் கொண்டிருக்கிற.. வாவா.. நேரமாச்சு.." என்று அவசரப்பட்டுத்தினான்.

"பொறுடா.. இதை முடித்துவிட்டு வந்து விடுகிறேன்."

"வர்ஷா.. என் வொய்புடன் போயாச்சுடா.."

"என்ன சொன்னே.."

படக்கென்று லேப்டாப்பை மூடிவிட்டு எழுந்தான் ஆகாஷ்..

"அவளும் வருகிறாளா..?"

"இல்லையா பின்னே.. அவளையும் உன்னையும் சேர்த்துப் பார்க்கணும்னு மாலதி சொன்னதால்தானே இப்படி ஒரு பிளானையே நாங்கள் போட்டோம்.. மாலதி குடும்பத்துடன் வந்து இறங்கி விட்டாள்.. அவள் சொன்னதைக் கேட்ட வாசவியும் உற்சாகமாய் களத்தில் குதித்து விட்டாள்.. இங்கேயே வந்து வர்ஷாவை இன்வைட் பண்ணிக் கையோடு அழைத்துக் கொண்டு போய் விட்டாளென்றால் அவள் எவ்வளவு இன்வால்வ்மென்டாய் இருக்கிறாள் என்பது உனக்கேப் புரியும்.."

"வாடா போகலாம்.."

"வேலை இருக்கிறது என்றாயே.."

"வந்து பார்த்துக் கொள்ளலாம்.."

"அதுதானே பார்த்தேன்.."

வர்ஷாவுடன் காரிலிருந்து வாசவி இறங்கிக் கொண்டிருந்தபோதே புயல் வேகத்துடன் ஆகாஷின் கார் மணியனின் வீட்டுக் காம்பவுண்டிற்குள் நுழைந்தது..

"அப்பாடா.. ஒரு வழியாய் வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்து விட்ட.. என் மனைவியின் தாலி பாக்கியம்தான் என்னை இன்று காப்பாற்றி இருக்கிறது.. வாயுவேகம்.. மனோவேகம்ன்னு கேள்விப்பட்டிருக் கிறேன்.. அதை இன்று அனுபவத்தில் உணர்ந்து விட்டேன்.. எதற்குடா

காரை இப்படி விரட்டின..? அவள் இங்கு தான் வந்திருக்கிறாள்.. வேறு எங்கும் ஓடிவிட மாட்டாள்.. பொறுமையாய் இறங்கி வா.."

அதற்குள் வர்ஷாவுடன் வாசவி வீட்டிற்குள் போய் விட்டாள்.. மாலதியையும் கரணையும் அறிமுகப்படுத்தி வைக்க அவள் முயலும் போதே...

"ஹாய்.. ஐ ஆம் மாலதி.. ஹி இஸ் மை ஹஸ்பெண்ட் கரண்.. ஷி இஸ் அவர் டாட்டர் நிஷா.." என்று மாலதி தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டாள்..

"ஐ ஆம் வர்ஷா.."

"நைஸ் நேம்.. உட்காருங்களேன்.."

ஆகாஷ் உள்ளே வரும்போது வர்ஷாவுடன் சுவாரஸ்யமாக உரையாடிக் கொண்டிருந்தாள் மாலதி..

"இதப்பாருடா.. நீ கார் ஓட்டுவதில் வேகம் காட்டினால் மாலதி வர்ஷாவுடன் பழகுவதில் வேகம் காட்டு கிறாளே.." மணியன் ஆகாஷின் காதைக் கடித்தான்..

அதைக் கவனிக்காதவனாய் வர்ஷாவின் முகம் பார்த்தபடி,

"ஹாய் மாலதி, ஹவ் ஆர் யு.." என்றான் ஆகாஷ்..

"ஆகாஷ்.. இவங்க பெயர் வர்ஷா.. மாலதியில்லை.." என்றாள் மாலதி கிண்டலாக..

வர்ஷாவின் முகம் சிவந்ததைக் கவனித்த மாலதிக்கு வியப்பு வந்தது.. ஆகாஷின் முகத்தைப் பார்ப்பதை அவள் தவிர்த்ததையும் மாலதி கவனித்து விட்டாள்.. கரணைப் பார்த்துப் புருவம் உயர்த்தினாள்.. அவனும் அவளைப் போலவே புருவம் உயர்த்திப் பார்வையால் 'என்ன இது..?' என்று வினவினான்..

"டேய் சாப்பிடத்தானே கூப்பிட்ட.. சாப்பாடு போடாமல் அரட்டைக் கச்சேரியை ஆரம்பித்து விட்டாயே.. இது நியாயமா..?" என்றாள் மாலதி..

"செவிக்கு உணவு இல்லாதபோதுதான் வயிற்றுக்கு ஈயப்படும், என்னடா ஆகாஷ்.. நான் சொல்வது சரிதானே..?" மணியன் கேட்ட கேள்விக்கு வர்ஷாவின் முகத்திலேயே கவனமாக இருந்த ஆகாஷ் பதில் சொல்ல வில்லை..

எல்லோரும் அவனைக் கவனித்தார்கள்.. அவனோ வர்ஷாவைக் கவனித்துக் கொண்டிருந்தான்.. வர்ஷாவின் முகம் குங்குமமாகவே மாறி விட்டது.. மாலதி யோசனையில் ஆழ்ந்தாள்.. இந்த நாணச் சிவப்பு அந்நியரைப் பார்த்தோ.. இல்லை அந்நியராய் நினைப்பவர்களிடமோ வராதே.. அப்படியானால் வர்ஷாவும் ஆகாஷை விரும்புகிறாளா..?

டைனிங் டேபிளில் எதேச்சையாய் அமர்வதுபோல் வர்ஷாவின் பக்கத்தில் ஆகாஷ் உட்கார்ந்து விட்டான்.. வர்ஷாவுக்கு மூச்சுத் திணறியது.. கடைக்கண்ணால் ஆகாஷைப் பார்த்துக் கொண்டாள்.. அவள் முகத்தில் இதுவரை இல்லாத பிரகாசம் குடி கொண்டது.. சுற்றுப் புறத்தை மறந்தவளாய்.. கனவில் மிதப்பவள் போல் காணப்பட்டாள்.. சாப்பிடும்போது வர்ஷாவின் பக்கம் இயல்பாக பதார்த்தக் கிண்ணங்களை நகர்த்தி வைத்தான் ஆகாஷ்.. அவள் சங்கடத்துடன் முணுமுணுத்தாள்..

"ம்ம்.. என்ன சொல்கிற..?" என்று வினவியபடி அவளருகே குனிந்தான் ஆகாஷ்..

'எவ்வளவு உரிமையாய் பேசுகிறான்..' என்ற நினைவு தந்த கனிவில் வர்ஷாவிற்கு கண் கலங்கி விட்டது..

"என்னவென்று கேட்டேன்.." ஆகாஷ் தாழ்ந்த குரலில் கூறினான்..

"ஷ்ஷ்.. எல்லோரும் பார்க்கிறாங்க..." என்று லஜ்ஜையுடன் தலைகுனிந்து கொண்டாள் வர்ஷா..

"பார்த்தால் பார்க்கட்டும்.. நீ என்னவென்று சொல்லு.."

"எனக்கு வேண்டியதை நான் எடுத்துக் கொள்ள மாட்டேனா..?"

"ஏன்.. நான் உனக்காக நகர்த்தி வைக்கக்கூடாதா..?"

"எனக்கு ஏதோ வேலை வாங்குவது போல் கஷ்டமாய் இருக்கிறது.."

"அடி வாங்கப் போகிற.. இதை நான் செய்யாமல் வேறு யார் செய்வார்கள்..?"

அவன் உரிமையுடன் கோபித்துக் கொண்டான்.. வர்ஷா வீட்டை மறந்தாள்.. தனக்கு நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை

மறந்தாள்.. தன் நிர்பந்தமான நிலைமையை மறந்தாள்.. ஆகாஷ்.. அவனது அருகாமை மட்டுமே நினைவிலிருக்க மலர்ந்தாள்..

இருவரும் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டே சாப்பிடுவதைக் கண்ட மாலதிக்கு உள்ளங்கை நெல்லிக் கனி போல் வர்ஷாவின் உள்ளம் விளங்கி விட்டது.. அப்படியானால் விவேக் சொன்னது எந்த அளவிற்கு உண்மை..?

"வாசவி.. சமையல் தூள்.. மணியன் கொடுத்து வைத்தவன்.."

"என்னவோ மாலதி.. நீங்கள்தான் இப்படிச் சொல் கிறீங்க.. அவர் ஒரு நாள்.. ஒரு பொழுதாவது என்னை இப்படிப் பாராட்டியதேயில்லை.."

"ஏண்டா.. இப்படி இருக்கிற..? வெறும் உப்புமாவை நான் செய்து கொடுத்தால் கூட என் கரண் அமிர்தம் போல் இருக்கிறதுன்னு சொல்லுவார்.."

வாசவியின் பார்வையில் பொசுங்கிய மணியன் மாலதியை பரிதாபமாக பார்த்தான்.. அவள் அதைக் கண்டு கொள்ளாமல்,

"வீட்டைக் கூட அழகாக வைத்திருக்கிறீங்கப்பா.. நீங்க மட்டும் இன்டீரியர் டெக்கரேசன் படித்திருந்தீர் கள்ன்னு வைங்க.. நீங்கதான் அந்த பீல்டில் நம்பர் ஒன்னாய் இருந்திருப்பீங்க வாசவி.."

"உங்களுக்காவது ரசிக்கத் தோன்றுகிறதே.. இவரும் இருக்கிறாரே.. ஒரு நாள் கூட வீட்டை அலங்கரித் திருப்பதை ரசித்துப் பார்த்ததில்லை.."

"ஏண்டா.. இப்படி இருக்கிற..? சும்மா சோபாவை நான் இடம் மாற்றிப் போட்டிருந்தால் கூட என் கரண் 'வாவ்..' என்பார்.."

வாசவி விட்ட பெருமூச்சில் மணியன் பறக்கப் பார்த்தான்.. சீட்டில் அழுந்தி உட்கார்ந்து தாக்குப் பிடித்துக் கொண்டவனாய் மாலதியை இறைஞ்சல் பார்வை பார்த்தான்.. அவள் அவன் பக்கமே திரும்பவில்லை..

"தோட்டம் மட்டும் என்ன குறைவா..? என்ன அழகா வடிவமைத்து இருக்கிறீங்க.. தோட்டத்தின் அழகில் மயங்கி விட்டேன் தெரியுமா..?"

"இவர் தோட்டத்துப் பக்கம் எட்டிக்கூட பார்க்க மாட்டார் மாலதி.."

"ஏண்டா.. இப்படி இருக்கிற.. தனி வீடு.. அழகான தோட்டம்.. அதை ரசிக்கக்கூட மனமில்லையா..? எங்கள் பிளாட்டில் நான் வளர்க்கும் தொட்டிச் செடியைக் கூட என் கரண் கொண்டாடுவார் தெரியுமா..?"

"ம்ஹூம்.." என்று நீளமாக பெருமூச்சு விட்ட வாசவி.

"எல்லாவற்றிற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் மாலதி.." என்றாள்..

"ச்சு.. ஏண்டா.. இப்படி இருக்கிற..?" என்று மாலதி மீண்டும் ஆரம்பிக்க,

"அம்மா.. தாய்மார்களே.." என்று தலைக்கு மேல் கரம் கூப்பி வணங்கினான் மணியன்..

"மாலதி.. சத்தியமாய் இனிமேல் உன் வீட்டிற்கு வந்தால் கரணைக் கிளப்பிவிட மாட்டேன்.. உனக்கு நான் விருந்து வைத்தால் நீ என் இனிமையான குடும்ப வாழ்க் கைக்கு வெடி வைக்கப் பார்க்கிறாயே அது நியாயமா..? வேண்டாம்.. நாம் சமாதான உடன்படிக்கை செய்து கொள் வோம்.. என் பெண்டாட்டியுடன் கூட்டணி போடாதே.."

## 9

மாலதி வெற்றிப் பார்வையுடன் எழுந்து கை கழுவச் சென்றாள்.. கரண் மணியனைப் பார்த்து நமட்டுச் சிரிப்புடன் கண் சிமிட்டினான்..

"என்ன மணியன்.. இப்படி சரண்டர் ஆகிட்டிங்க.."

"வேறு வழி..? கரண் சார்.. உங்கள் மனைவியும் புத்திசாலி.. என் மனைவியும் புத்திசாலி.. இரண்டு புத்திசாலிகளும் ஒன்று சேர்ந்து விட்டால் சமாளிப்பது பெரிய கஷ்டம்.."

"இருந்தாலும்.. நீங்கள் இப்படி சரண்டர் ஆகியிருக்கக் கூடாது.."

"இப்போது இப்படிச் சொல்கிறீங்களே.. பெண்கள் இரண்டு பேரும் சேர்ந்து கொண்டு என்னை வறுத்து எடுத்த போது.. நீங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு தானே இருந்தீங்க..? எனக்கு சப்போர்ட் பண்ணவில்லையே..?"

"நல்லா இருக்குதே கதை.. நான் என் வீட்டிற்குப் போய் என் பெண்டாட்டியுடன் குடும்பம் நடத்த வேண்டாமா..?"

கரண் கழன்று கொண்டு எழுந்து கொள்ள ஆகாஷ் அதை ரசித்துச் சிரித்தான்..

"என்ன ஒரு ஜாக்கிரதை உணர்ச்சி.. மாலதி உங்களை அந்த அளவிற்கு மிரட்டி வைத்திருக்கிறாளா..?"

"அந்த அளவுக்கு மயக்கி வைத்திருக்கிறாள்."

கரணின் பார்வை வர்ஷாவின் மேல் அர்த்தத்துடன் படிந்தது..

ஆகாஷ் அதைக் கவனித்ததும் அவன் மனதிற்குள் உல்லாசம் புகுந்து கொண்டது..

"நிஜம்தான் கரண்.. இந்தப் பெண்கள் நம்மை மயக்கித்தான் வைத்திருக்கிறார்கள்.."

வர்ஷா சட்டென்று எழுந்து கை கழுவச் சென்றாள்.. பின்னாலேயே தொடர்ந்த ஆகாஷ் தாழ்ந்த குரலில்,

"கோபமா..?" என்று வினவினான்..

"கோபம் வராதா..? அது என்ன பெண்கள் எல்லோரும் ஆண்களை மயக்கி வைத்திருக்கிறார்கள்ன்னு அபாண்டமாய் பழி போடுகிறீங்க.. நீங்க எங்களை மயக்குவதில்லையா..?"

"அப்படி நீ சொன்னால் அதை விட சந்தோசம் எனக்கு வேறு என்ன இருக்கிறது.. சொல்லு.. நீ என்னிடம் மயங்குகிறாயா..?"

வர்ஷா பேச்சிழந்தாள்..

'இவன் என்ன திடீரென்று இப்படிக் கேட்டு விட்டான்..'

அதற்குள் கரணும்.. மணியனும் தங்களுக்குள் வழக்கடித்துக் கொண்டே கை கழுவ வந்துவிட.. அவசரமாய் அந்த இடத்தை விட்டு அகன்றாள்..

சாப்பாட்டிற்குப் பின் ஹாலில் அனைவரும் அமர்ந்தனர்.. ஆகாஷ் அமரும்போது அவனது முழங்கால் சோபாவில் இடித்துவிட,

"பார்த்து.." என்று பதறினாள் வர்ஷா..

"வலிக்கிறதா..?" என்று வினவியவாறு அவளையும் அறியாமல் ஆகாஷின் கரம் தொட்டு விட்டாள்..

அவளது தொடுகையில் சிலிர்த்துப் போன ஆகாஷ் அப்படியே நின்றுவிட, "டேய்.. உட்காருடா.." என்று உட்கார வைத்தான் மணியன்..

வர்ஷா கவலையுடன் ஆகாஷைப் பார்த்தபடி மாலதியின் அருகே சென்று அமர்ந்தாள்.. நண்பர்கள் குழாம் அரட்டையடிக்க ஆரம்பித்தது..

"டேய் ஆகாஷ்.. நம்ம மாலதி காலேஜ் டேஸ்ல என்னவோ சொல்லிக் கொண்டு இருப்பாளே.. அது உனக்கு நினைவு இருக்கிறதா..?" மாலதியை வம்புக்கு இழுக்க விரும்பிய மணியன் கேட்டான்..

"மறக்கிற வசனமா அது..? 'நான் கல்யாணமே பண்ணிக் கொள்ள மாட்டேன்.. கல்யாணம் என்பது பெண்களின் கால்களில் போடப்படும் விலங்கு.. பெண்களின் முன்னேற்றத்தை தடை செய்யும் தடைக்கல்.. ஆணுக்குப் பெண் அடிமையல்ல.. அடிமைப் படுத்தும் திருமணம் என்ற உறவு எனக்கு வேண்டாம்..' சரியாடா மணி.." ஆகாஷ் கேலியாக மாலதியைப் பார்த்தான்..

"இப்படியெல்லாம் பேசிய அம்மிணிதான்.. நம்ம செட்டிலேயே முதலில் கல்யாணம் பண்ணிக்கொண்ட ஆள்.. முதல் நாள் கல்யாணம்.. மறுநாளே வேலையை ரிசைன் பண்ணி விட்டாள்.."

"கேட்டால்.. என் கரண் ஒரு இடத்தில்.. நான் ஒரு இடத்தில் இருப்பதா.. என் கரண் இல்லாமல் நான் இல்லைன்னு புதிய வசனம் பேசுகிறாள்.."

"இப்போது என்னடாவென்றால் சாதுப் பூனையாய் இருக்கும் என் பெண்டாட்டியை புலியாய் மாற்ற டிரை பண்ணுகிறாள்.. பார் வாசவி.. இவளெல்லாம் ஊருக்குத் தான் உபதேசம் கேஸ்.. இவளை நம்பி கணவனே கண்கண்ட தெய்வம்கிற விசயத்தை மறந்து விடாதே.."

ஆகாஷும்.. மணியனும் மாறி மாறிப் பேச.. மாலதியும் வாசவியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.. அருகிலிருந்த வார இதழை சுருட்டிக் கையில் எடுத்துக் கொண்ட மாலதி எழுந்து ஆகாஷைம்.. மணியனையும் அடித்தாள்..

"ஏன்டா.. சான்ஸ் கிடைத்து விட்டதுன்னு நினைத்து ஓட்டிப் பார்க்கறீங்களா..? வாசவி ஜாக்கிரதை.. உன் ஹஸ்பெண்ட்தான் சாதுப்பூனை வேசம் போட்டுக் கொண்டு இருக்கிறான்.. இவன் காலேஜில் என்ன பண்ணினான் தெரியுமா..?"

"என்னங்க பண்ணினார்.." வாசவி ஆவலாய் வினவினாள்..

"என்னடா.. சொல்லட்டுமா..?" மாலதி பார்வை யிலேயே மணியனை மிரட்டினாள்..

"ஏய் மாலதி.. நாம் வந்த வேலையென்ன.. நீ செய்யும் வேலை என்ன..? நாமெல்லாம் உயிர் காக்கும் தோழர் பரம்பரையச் சேர்ந்தவர்கள்.. காட்டிக் கொடுக்கும் எட்டப்பன் வேலையை எல்லாம் நீ செய்யலாமா..?" மணியன் ஜகா வாங்கினான்..

"அது.. அந்த பயம் இருக்கட்டும்.. வாயை அடக்கு.."

"என்ன விஷயம் மாலதி.. என்னிடம் சொல்லுங்கள்."

வாசவி வற்புறுத்த மணியன் ஊடே விழுந்தான்..

"அவளே மறந்து விட்டாள்.. நீயேன் அவளை தொந்தரவு பண்ணுகிற வாசவி.. பாரு நம்ம டுட்டூ அழுகிறான்.."

"டுட்டூவா.. என்னடா அது..?"

"மயூரின் செல்லப் பெயர்டா ஆகாஷ்.."

"ஏண்டா மயூர்ங்கிற பெயரே அழகாகத்தானே இருக்கு..?"

ஆகாஷ் வேண்டுமென்றே பேச்சை வளர்க்க நண்பனின் நோக்கம் புரிந்த மணியன் நன்றிப் பெருக்கோடு அவனைப் பார்த்தபடி பதில் சொன்னான்..

"அவன் குழந்தையாய் இருந்தபோது.. அவனை டுட்டூ.. டுட்டூன்னு கொஞ்சுவோம்.."

ஆகாஷ் திரும்பி ஒரு வயதுக் குழந்தையான மயூரைப் பார்த்தான்..

"ஏன்டா.. அவன் இன்னும் குழந்தைதானேடா..?"

வர்ஷாவிற்கு ஆகாஷின் கேள்வியைக் கேட்டுச் சிரிப்பு வந்துவிட்டது.. வாய்விட்டு சிரித்து விட்டாள்.. அதைப் பார்த்த ஆகாஷின் மனம் இளகியது.. கனிவாக வர்ஷாவையே பார்த்தான்..

"ஏன்டா அவளை அப்படிப் பார்க்கிற..?"

"இல்லை மாலதி.. இவள் இப்படி மனம் விட்டுச் சிரித்ததே இல்லை.."

"அப்படியா சொல்கிற..?"

"ஆமாம் மாலதி.. எப்போதும் அவள் முகத்தில் ஒரு சோகத்திரை படிந்திருக்கும்.. அந்த சோகமே அவளை மற்றவரிடமிருந்து தனியாகப் பிரித்துக் காட்டும்..

அந்த தனித்தன்மையினால்தான் என்னையே அவள் கவர்ந்தாள்.."

"இந்த வயதில் அவளுக்கு என்னடா சோகம் இருக்க முடியும்..?"

"அது தெரியவில்லை மாலதி.. அவள் இன்று தான் என்னிடம் இவ்வளவு நெருக்கமாகப் பேசுகிறாள்.. இதற்கு முன் நின்று கூடப் பேச மாட்டாள்.."

மாலதி திரும்பி வாசவியிடம் ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்த வர்ஷாவைப் பார்த்தாள்.. அவள் மனதில் ஆயிரம் வினாக்கள்.. அதற்கு விடை கண்டு பிடிப்பது எப்படி..?

வாசவியின் அருகில் அமர்ந்து புன்னகையுடன் அவள் காதினில் ஏதோ ஓதினாள்.. அவள் முகம் ஒளிர உள்ளே

சென்று ஒரு டப்பா நிறைய சுருட்டி போடப்பட்டிருந்த காகிதத் துண்டுகளுடன் வந்தாள்.. மாலதி கை தட்டினாள்.

"எல்லோரும் என்னைப் பாருங்க.. இப்போது நாம் எல்லோரும் ஆளுக்கொரு காகிதச் சுருளை ஒவ்வொரு வராக எடுக்க வேண்டும்.."

"எடுத்து..?"

"அவசரக் குடுக்கை ஆகாஷே.. அதை பிரித்துப் படிக்க வேண்டும்.."

"எழுதப் படிக்கத் தெரியுமான்னு டெஸ்ட் பண்ணுகிறாயா..?"

"வாசவி.. உங்க ஹஸ்பெண்ட் பண்ணும் டார்ச்சரைத் தாங்க முடியவில்லை.. கொஞ்சம் கிட்ட வந்து காதைக் குடுங்க.."

"சரி.. சரி.. இப்போ நான் என்ன சொல்லி விட்டேன்னு நீ இவ்வளவு கோபப்படுகிற..? சந்தேகம் கேட்டால் அது தப்பா..?"

"தப்புத்தாண்டா மக்கு பிளாஸ்திரி.. அதைப் படித்து விட்டு அதில் போட்டிருப்பதைச் செய்ய வேண்டும்.."

"என்னடா ஆகாஷ் இது..?"

"பெண்களே தைரியமாய் கலந்து கொள்ளும்போது நாம் பின் வாங்கலாமா.. என்ன கரண்.. நான் சொல்வது சரிதானே..?"

"ஹன்ட்ரெட் பெர்ஸென்ட் கரெக்ட்.."

எல்லோரும் வட்டமாய் அமர்ந்து கொண்டனர்.. வர்ஷாவிற்கு அந்த விளையாட்டு மிகவும் பிடித்திருந்தது.. ஆர்வமாய் வேடிக்கை பார்த்தாள்.. கரண் எடுத்த சீட்டில் 'ஆட வேண்டும்..' என்று போட்டிருந்தது.. அவன் தயங்காமல் எழுந்து டி.வியில் பாடல்கள் கொண்ட சி.டியை ஓடவிட்டு அதற்கேற்றாற்போல் ஆடினான்..

"அடடா.. அடடா.. அடை மழைடா.." என்று அவன் ஆட மாலதியும் அவனுடன் சேர்ந்து கொண்டாள்.. சிரிப்பு அடங்கியதும் ஆகாஷ் ஒரு சீட்டை எடுத்தான்.. 'பாட வேண்டும்..' என்று போட்டிருந்தது.. அவன் வர்ஷாவைப் பார்த்தான்.. அவனது பார்வையால் தாக்கப்பட்டவள் கீழ் உதட்டை மடித்துக் கடித்துக் கொண்டாள்..

"உன்னிடம் மயங்குகிறேன்..
உள்ளத்தால் நெருங்குகிறேன்..
எந்தன் உயிர் காதலியே..
இன்னிசை தேவதையே.."

மென்மையான குரலில் ஆகாஷ் பாடிய பாடல் அனைவரையும் கவர்ந்தது.. அவனது குரலில் தெரிந்த மயக்கத்தில் வசீகரிக்கப்பட்டாள் வர்ஷா..

"சூப்பர்டா மச்சான்.." என்றவாறு மணியன் எடுத்த சீட்டில் 'ஜோக் சொல்ல வேண்டும்..' என்று போட்டிருந்தது..

"ஜோக்தானே.." என்று அவன் வாய் திறந்தபோது..

"மாலதி அவர் 'ஏ' ஜோக்தான் சொல்லுவார்.. வாயை மூடச் சொல்லுங்க.." என்று அலறினாள் வாசவி..

"அது தானே பார்த்தேன்.. டேய்.. நல்லதாய் ஒரு ஜோக் சொல்லு.. இல்லேன்னா.." என்று பொடி வைத்து மிரட்டினாள் மாலதி..

"பார் மாலதி வர வர.. நீ பூலான் தேவி ரேஞ்சுக்கு போகிற.." என்று சலித்துக் கொண்டபடி மணியன் ஜோக்கை சொல்ல ஆரம்பித்தான்..

"ஆறாம் வகுப்பு படிக்கும் பெண்ணின் அப்பா மகளைக் கூப்பிட்டுக் கொண்டு அந்தப் பெண்ணின் கிளாஸ் டீச்சரிடம் போய் கோபமாய்க் கேட்டாராம்.."

"என்னடா கேட்டார்.. அதைச் சொல்லித் தொலை.."

"ஏன் டீச்சர்.. என் பெண்ணைப் பார்த்து உனக்கு கிளாமரே வர மாட்டேங்குதுன்னு சொன்னீங்களாமே.. எப்படி நீங்கள் அப்படிச் சொல்லலாம்ன்னு கேட்டாராம்.."

"நினைத்தேன்.. நீ இப்படித்தான் ஜோக் சொல்லு வாய்ன்னு.."

"பொறு மாலதி.. முழுசாய் கேட்டுவிட்டு என் மேல் கோபப்படு.. அதற்கு அந்த டீச்சர்.. 'நாசமாய் போச்சு.. நான் கிராம்மர் வரமாட்டேங்குதுன்னுதானே சொன்னேன்..' அப்படின்னாங்களாம்.."

"ஒழுங்காய் முடித்து விட்டாய்.. பிழைத்துப் போ.." என்று சொல்லியபடி மாலதி சீட்டை எடுத்தாள்..

'மிமிக்ரி செய்ய வேண்டும்..' என்று போட்டிருந்தது..

"உனக்கேற்றதுதான்.. செய் செய்.." என்றான் மணியன்..

மாலதி அவனை முறைத்தவாறு தொண்டையைக் கனைத்துக் கொண்டாள்..

கே.பி சுந்தராம்பாள் குரலில் பேச ஆரம்பித்தாள்..

"அப்பா.. முருகா.. ஞான பண்டிதா.. நீ உன் டாடி சிவனிடமும் உன் மம்மி பார்வதியிடமும் பைட் பண்ணிக் கொண்டு இப்படி மலையேறி அமரலாமா..? ஒரு சின்ன மேங்கோ புருட்டிக்கா இந்த பைட்..? உன் பிரதர் விநாயகனுக்குத் தெரியாமல் புரூட்டியை அபேஸ் பண்ணி குடிப்பதை விட்டு விட்டு இந்த சம்மரில் போய் மலை யேறலாமா..?"

அவள் பேசப் பேச வர்ஷா வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தாள்.. கரண் மனைவியை மகா காதலுடன் பார்த்தான்.

'கள்ளி.. எவ்வளவு டேலன்டை பதுக்கி வைத்திருக் கிறாள்.. இவளுக்கு உடம்பெல்லாம் மூளை..'

மாலதி பேசி முடித்ததும் ஆகாஷ் கை கொடுத்துப் பாராட்டினான்..

"சான்ஸே இல்லை மாலதி.. அப்படியே கே.பி.எஸ். குரல்தான்.." ஆச்சரியப்பட்டான் மணியன்..

"உங்க ஹஸ்பெண்ட் ஏன் உங்களை கொண்டாடு கிறார்ன்னு இப்போ எனக்குப் புரியுது.." என்றாள் வாசவி..

அடுத்து வாசவி எடுத்த சீட்டில் 'ஜோக் சொல்ல வேண்டும்..' என்று வரவும்..

"இது என்ன ஆகாஷ்.. ஹஸ்பென்ட்.. அன்ட் வொய்ப் இருவருக்குமே ஜோக் சொல்ல வேண்டும் என்றே வருகிறது.." என்று கேட்டாள் மாலதி..

"அப்படியாவது சிரிக்கலாமேன்னுதான்.." என்றபடி வாசவி நெற்றியில் ஒரு விரலால் தட்டியபடி யோசித்தாள்..

"என்ன செய்கிறாங்க..?"

"தெரியவில்லையா மாலதி.. யோசிக்கிறாளாம்.."

யோசிப்பதை நிறுத்திவிட்டு கணவனை முறைத்தாள் வாசவி..

"கூல் டவுன் வாசவி.. நீங்கள் ஜோக்தான் சொல்ல வேண்டும்.. சண்டை போடக்கூடாது.." என்று சமாதனாப் படுத்தினாள் மாலதி..

"ஒரு சர்தார்ஜி ஸ்கின் ஸ்பெஷலிஸ்ட் கிட்டப் போனாராம்.. டாக்டர் அவரது தோலை பரிசோதித்து விட்டு.. உங்களுக்கு ஸ்கின் அலர்ஜி இருக்கிறது.. என்ன சோப் யூஸ் பண்ணுகிறீங்கன்னு கேட்டாராம்.. அதற்கு சர்தார்ஜி என்ன சோப்பின் பெயரைச் சொல்லியிருப்பார்ன்னு யாராவது சொல்லுங்கள் பார்க்கலாம்.."

அனைவரும் அவசரமாய் ஆளுக்கொரு சோப்பின் பெயரைச் சொன்னார்கள்..

10

"அதுதான் இல்லை.." என்றாள் வாசவி..

"நீங்கள் சொன்ன சோப் எதையும் அவர் சொல்ல வில்லை.. அவர் கோபால் சோப்பை யூஸ் பண்ணுகிறேன்.. என்றாராம்.."

"கோபால் சோப்பா.. ஏன்டா.. அப்படி ஒரு சோப் இருக்கிறதா..?"

"டாக்டரும் இப்படித்தான் கேட்டாராம்.. அதற்கு சர்தார்ஜி சொன்னாராம்.. கோபால் என் ரூம் மேட் டாக்டர்.. நான் அவனுடைய சோப்பைத்தான் யூஸ் பண்ணுகிறேன் என்றாராம்.. இது எப்படி இருக்கு.."

"நல்லாவே இருக்கு.." என்று மாலதி சிரித்தபடி கூற எல்லோரும் ஹோ.. ஹோவென்று சிரித்தார்கள்..

சந்தடி சாக்கில் மணியன் தன் மனைவிக்கு ஒரு முத்தத்தை கொடுத்தான்..

"இனி வர்ஷாவின் முறை.."

எல்லோரும் கைதட்ட வர்ஷா நடுக்கத்துடன் தன் கையிலிருந்த சீட்டைப் பார்த்தாள்.. 'பாட வேண்டும்..' என்று போட்டிருந்தது.. மெதுவாக நிமிர்ந்து ஆகாஷைப் பார்த்தாள்.. அவனது விழிகளில் எதிர்பார்ப்பு தென்பட்டது.. வர்ஷாவிற்கு ஒரு விஷயம் தெரியாது.. அவளைப் பாட வைத்தால்.. அவளது மனதைக் கண்டு பிடிக்க ஏதாவது

ஒரு வழி தென்படும் என்றே கடைசியாய் அந்த சீட்டை திட்டமிட்டே மாலதியும் வாசவியும் போட்டு வைத்திருந்தார்கள்..

வர்ஷா குரல் நடுங்க பாட ஆரம்பித்தாள்..

"ஆகாயம் பூமி இரண்டும் ஒன்றா..?
நீ அந்த வானம்.. நான் இந்த பூமி..
ஒன்றென்று யார் சொல்லுவார்..?
என்னை நானே.. கேட்கின்ற கேள்வி இது.."

மாலதியின் செவிகள் கூர்மையாகின.. அவளது பாடலின் உள்பொருளை அவள் கிரகித்துக் கொண்டிருந்தாள்..

"சாமந்திப் பூவோ எட்டாத தூரம்..
ஊமத்தம் பூவோ என்வீட்டின் ஓரம்..
இதில் வாசம் இல்லை.. என்நெஞ்சில் பாசம் இல்லை..
அதுபக்கம் இல்லை.. நான்கூட யோகமில்லை..
இதுமேடையின்றி ஆடும் நாடகம்..
வானத்து மீனை வலை போடச் சொன்னால்..
நான் எங்கு போவதம்மா.."

மணியன் கூட அமைதியாகி விட்டான்.. இந்தப் பாடல் சொல்லும் செய்தி என்ன..? வர்ஷா விவேக்கை விரும்ப வில்லையா..? ஆகாஷைத்தான் விரும்புகிறாளா..? ஆகாஷை திருமணம் பண்ணிக் கொள்ள முடியாத நிர்பந்தத்தில் அவள் அமிழ்ந்திருக்கிறாளா..?

"வேதங்கள் எல்லாம்.. பேதங்கள் பேசும்..
நாம் வாழும் நாட்டில் ஏனிந்த காதல்..?
இது ஊழிக்காற்று.. ஊருக்கு ஆகாதம்மா..

இது ஏரித்தண்ணிர் முத்துக்கள் இங்கேதம்மா..
கடல்மீனும் அந்த வானில் நீந்துமோ..?
நீ கொண்ட காதல்.. வேறல்ல கானல்..
தாகத்தை தீர்ப்பதுண்டோ..?"

வர்ஷா மிக அருமையாகப் பாடி முடித்தாள்.. அவளது குரலில் வெளிப்பட்ட துயரமும்.. சோகமும் அங்கே இருந்த எல்லோரின் மனதிலும் சுமையாக ஏறி அழுத்தியது.. யாரும்.. யாரோடும்.. பேசத் தேவையில்லாத.. பேச முடியாத மௌனம் அங்கே சூழ்ந்து கொண்டது.. மெல்ல வர்ஷாவே அந்த மௌனத்தைக் கலைத்தாள்..

"நான் வந்து ரொம்ப நேரமாகி விட்டது.. போக வேண்டும்.."

யாரும் அவளைத் தடுக்கவில்லை.. வாசவி எழுந்து டிரைவரை அழைத்துக் காரை எடுக்கச் சொன்னாள்.. வர்ஷாவை பத்திரமாக அனுப்பி வைத்தாள்..

ஆகாஷ் யோசனையுடன் அமர்ந்துவிட மாலதியும்.. கரணும் அங்கிருந்து நழுவினர்.. மணியன் வாசவியுடன் விவாதித்துக் கொண்டிருக்க அந்த இடத்திற்குச் சென்றனர்..

"என்னடா.. இவள் இப்படிப் பாடித் தொலைக்கிறாள்.."

"அதைத்தான் வாசவியும் சொல்லிக் கொண்டிருக் கிறாள்.. அவள் மனதில் இவ்வளவு வேதனையிருக்குன்னா அவளுக்கு விவேக்கைக் கல்யாணம் பண்ணிக்க இஷ்டமில்லையென்றுதானே அர்த்தம் என்கிறாள்.."

"மாலதி.. நான் ஒன்று சொல்லவா.."

"சொல்லுங்கள் கரண்.."

"எப்படி நீ ஆகாஷையும் வர்ஷாவையும் சேர்த்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வர நினைத்தாயோ.. அது போல் வர்ஷாவையும் விவேக்கையும் சேர்த்துப் பார்த்து விடேன்.."

"அப்படியா சொல்கிறீங்க.."

"யெஸ் மாலதி.. அப்போது வர்ஷா எப்படி பிஹேவ் பண்ணுகிறாள் என்பதையும் பார்த்துவிட்டு ஒரு முடிவுக்கு வரலாம்.."

"ஆனால் வர்ஷாவை நாம் இன்வைட் பண்ண முடியாதே.. அது அவளை தர்ம சங்கடப்படுத்தி விடும்.."

"விவேக்கை இன்வைட் பண்ணச் சொல்வோம்.."

"அதுதான் சரி.."

அவர்கள் பிரிந்தார்கள்.. மாலதி அன்று மாலையே விவேக்கின் பிளாட்டிற்குச் சென்றாள்.. காலிங்பெல்லை அழுத்தினாள்.. கதவு திறந்த விவேக் ஆச்சரியப் பட்டான்..

"ஹேய்.. மாலதி.. வாட் எ சர்ப்ரைஸ்.. என் பிளாட்டிற்கு வந்திருக்கிறாயே.. வாவா.. உள்ளே வந்து உட்கார்.."

சுவாதீனமாக உள்ளே சென்று அமர்ந்தாள் மாலதி.. விவேக் உள்ளே செல்லத் திரும்பினான்..

"எங்கே போகிற விவேக்..?"

"உனக்காக காபி போடத்தான்.."

"நீ போடும் காபியையெல்லாம் குடுத்து என்னை விரட்டப் பார்க்காதே உட்கார்.. நான் உன்னுடன் பேச வேண்டும்.."

"எனிதிங் இம்பார்டன்ட்..?"

"நத்திங் மேன்.. சும்மாதான் வந்தேன்.. ஏன் நான் உன் பிளாட்டிற்கு வரக்கூடாதா..? வந்து உன்னுடன் பேசக் கூடாதா..?"

விவேக் நட்புடன் சிரித்தான்.. அவனது சிரிப்பைக் கண்ட மாலதியின் மனம் நெகிழ்ந்தது.. இதுதான்.. இந்த சிநேகிதம் தரும் நெருக்கம்தான் அவளையும்.. மணியனையும்.. ஆகாஷையும்.. விவேக்கையும் இணைத்துக் கட்டிப் போட்டிருந்தது.. படிப்பை முடித்து வேலை, குடும்பமென்று ஆளுக்கொரு திசையில் பிரிந்தாலும்.. அவர்கள் காட்டிய உண்மையான நட்பின் வலிமையால்.. ஆகாஷும் மணியனும் ஒரே கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தனர்.. மாலதி பிளாட் வாங்கிய அதே அபார்ட்மென்டில் விவேக்கும் பிளாட் வாங்கினான்..

நண்பர்கள் நால்வரில் விவேக் அதிகம் அமைதியானவன்.. கண்ணியம் காப்பவன்.. மாலதியாய் அழைத்தாலொழிய

அவளது வீட்டிற்குத் தேவையில்லாமல் போகமாட்டான்.. அதே சமயம் மாலதிக்கு எதுவும் உதவி தேவையென்றால் உடனே ஓடிச்சென்று உதவுவான்.. கரணின் மதிப்பைப் பெற்றவன்..

"விவேக் இஸ் நைஸ் பெல்லோ.. மாலதி.." என்று கரண் அடிக்கடி சொல்வான்..

தன் நினைவில் ஆழ்ந்து போயிருந்த மாலதியின் முன் குனிந்து விரல் சொடுக்கிய விவேக்,

"என்ன மாலதி.. கனவில் ஆழ்ந்து விட்ட..? கரணை நினைத்துக் கொண்டாயா..?" என்று கேலியாக வினவினான்..

"இல்லைடா.. உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்.." என்றாள் மாலதி..

"என்னையா..?" ஆச்சர்யத்துடன் வினவினான் விவேக்..

"யெஸ் விவேக்.. உன்னைத்தான் நினைத்துக் கொண்டேன்.. இப்படித் தனியாக நீ இருப்பதால் ஒரு கப் காபி குடிக்கக்கூட நான் யோசிக்க வேண்டியிருக்கிறது.. மணியன் பார்.. நேற்று எங்களுக்கும் ஆகாஷிற்கும் ட்ரீட் கொடுத்து அசத்தினான்.."

"வாசவியின் கைச் சமையல் சூப்பராக இருக்குமே.. நான் நேற்று ஊரில் இல்லை.."

'அது தெரிந்துதானே நேற்று விருந்திற்கு ஏற்பாடு பண்ணினோம்..' என்று நினைத்துக் கொண்ட மாலதி..

"நீ எப்போதுடா அப்படி எனக்கு ட்ரீட் கொடுக்கப் போகிற..?" என்று எதிர்பார்ப்புடன் கேட்பதைப் போல் கேட்டாள்..

"கொஞ்ச நாள் பொறுத்துக் கொள்.. அதன் பின் வர்ஷா வந்து விடுவாள்.."

"அட.. அதை மறந்து விட்டேனே.. இரண்டு மாதம் கழித்து மேரேஜ் என்று சொன்னாய்தானே.. விவேக்.. நான் வர்ஷாவைப் பார்க்க வேண்டுமே.." என்று கஷ்டப் பட்டு சாதாரணக் குரலை வரவழைத்துக் கொண்டு கேட்டாள்..

"ம்ம்.. கட்டாயம் நீ பார்க்க வேண்டுமா..?" விவேக் யோசித்தான்..

"ஆமாம்டா.."

"எனக்கும் நீ இல்லாமல் போய் பெண் பார்த்து நிச்சயம் பண்ணி விட்டு வந்தது மனதிற்கு ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறது.. என் மேரேஜில் உன் பங்கை தட்டிக் கழித்து விட்டேனோன்னு தோன்றுகிறது.. நீ கரணை மேரேஜ் பண்ணிக் கொள்ளும் போது எங்கள் மூவரின் ஒப்பினியனைக் கேட்டாய்.. மணியனும் வாசவியை மேரேஜ் பண்ணிக் கொண்டபோது நம் மூவரின் அபிப்ராயத்தைக் கேட்டான்.. நான் தான் உங்கள் மூவரையும் விட்டு விட்டுப் பெரியம்மாவுடன் போய் பேசி முடித்து விட்டு வந்து விட்டேன். ஐ பீல் கில்ட்டி மாலதி.. நீ மனதில் எதையும் வைத்துக் கொள்ளாமல் வர்ஷாவைப் பார்த்துவிட்டு என் கல்யாணத்தை நடத்திக் கொடு.."

மாலதியின் மனம் வலித்தது.. எவ்வளவு நம்பிக்கையாகப் பேசுகிறான் இவன்.. மாலதி வர்ஷாவைச் சந்திக்க விரும்புவது விவேக்கிற்கு வர்ஷாவை மனம் முடித்துக் கொடுப்பதற்காக இல்லை.. வர்ஷாவின் மனதைத் தெரிந்து கொண்டு.. விவேக்குடன் நடக்க இருக்கும் அவளது கல்யாணத்தை நிறுத்துவதற்காக.. என்பதை அறிந்தால் அவன் என்ன சொல்லுவான்..?

'இல்லை.. நான் என் நண்பனுக்கு கெடுதல் செய்ய நினைக்கவில்லை.. விவேக்.. ஆகாஷ்.. இருவருமே எனது நண்பர்கள்.. வர்ஷாவை விவேக்.. திருமணம் செய்து கொள்ள விரும்பி நிச்சயம் வரை போய் விட்டான்.. ஆகாஷோ.. வர்ஷாவை மூன்று வருடங்களாக உயிருக் குயிராய் காதலிக்கிறான்.. வர்ஷாவின் மனம் ஆகாஷின் மேல் லயித்திருப்பது போல் தெரிகிறது.. அது உண்மையாக இருந்தால்.. விவேக் வர்ஷாவை மணந்து கொண்டாலும்.. விவேக்கின் வாழ்க்கை சந்தோஷமாக இருக்காது.. ஆகாஷ்.. விவேக்.. வர்ஷா.. மூவரின் வாழ்க்கையும் சிதிலமடைந்து விடும்.. நான்

இதை தடுத்துத்தான் ஆக வேண்டும்.. என் நண்பர்களின் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும்..'

மாலதி மனதார இதை நினைத்தாள்.. அவள் முதலில் மிக.. மிகச் சாதாரணமாகத்தான் ஆகாஷின் காதல் விஷயத்தில் ஆர்வம் காட்டினாள்.. எப்போது ஆகாஷின் காதலியும்.. விவேக்கிற்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணும் ஒருத்தி தான் என்பது அவளுக்குத் தெரிய வந்ததோ.. அப்போதே அவள் அந்த விசயத்தில் தீவிரமாக

இறங்கி விட்டாள்.. ஏனென்றால் அவர்கள் நால்வருக்கும் இடையே இருந்த நட்பு அத்தனை உறுதி வாய்ந்தது.. உயர்வானது..

வர்ஷா ஒருவேளை ஆகாஷை காதலித்துவிட்டு சூழ்நிலையின் நிர்பந்தத்தால் விவேக்கின் மனைவியாக மாற வேண்டிய நிலை வந்தால்.. விவேக்கிற்கு உண்மை தெரிய வரும்போது அவன் தன் நண்பனுக்கு தன்னை அறியாமல் துரோகம் இழைத்து விட்டோமே என்று துடித்துப் போய் விடுவான்.. அந்நிலை விவேக்கிற்கு வரக்கூடாது..

'நான் உனக்கு நன்மைதான் நினைக்கிறேன் விவேக்..' மாலதி மனதை திடப்படுத்திக் கொண்டு விவேக்கைப் பார்த்து புன்னகைத்தாள்..

"அதற்கென்னடா..? உன் கல்யாணத்தை நான் முன்னே நின்று நடத்தாமல் வேறு யார் நடத்துவார்கள்.. நான் உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்டா.." என்று மனதாரச் சொன்னாள் மாலதி..

அடுத்த இரண்டாவது நாளே விவேக் மாலதியின் பிளாட்டிற்கு வந்தான்.. கரணுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்த மாலதி அவனை வரவேற்றாள்..

"வாடா விவேக்.."

"கிளம்பு மாலதி.."

"எங்கே..?"

"வர்ஷாவைப் பார்க்க கரணும் வருகிறாரா..?"

மாலதி கரணைப் பார்த்தாள்.. அவன் கண்கள் எதையோ கூறின..

"நீ மட்டும் போய் விட்டு வா மாலதி.. நான் விவேக்கின் திருமண சமயத்தில் பெண்ணைப் பார்த்துக்

கொள்கிறேன்.."

கணவனின் குறிப்பு புரிய.. மாலதி மட்டும் விரைவாய் ஒரு பட்டுப் புடவையுடுத்தி விவேக்குடன் கிளம்பினாள்..

"நானும் மம்மி கூட போவேன்.." நிஷா சிணுங்க..

"டாடியும் நீயும் பார்க்குக்குப் போகிறோமாம்.." என்று கரண் குழந்தைக்கு ஆசைகாட்டி அழைத்துச் சென்றான்..

விவேக் மாலதிக்காக கார் கதவைத் திறந்து விட்டு.. அவள் ஏறவும் கதவை மூடிவிட்டு காரில் ஏறிக் கிளம்பினான்.. அவனின் செய்கையில் குளிந்து போனாள் மாலதி..

"கரண் அடிக்கடி விவேக் இஸ் ஸோ நைஸ்ன்னு சொல்வார்டா.. அது எவ்வளவு உண்மை.."

"திடீரென்று ஏனிந்த புகழாரம்..?"

"நீ பெண்களை மதிப்பவன் விவேக்.. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்பவள் கொடுத்து வைத்தவள் தான்.."

"அந்தக் கொடுத்து வைத்தவளைத்தான் இப்போது நீ பார்க்கப் போகிறாயே.."

வெள்ளை மனதுடன் கூறினான் விவேக்.. அவனுக்கு மட்டும் மாலதி வருவதன் உள் நோக்கம் தெரிந்திருந்தால் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லியிருப்பானா..? மாலதி பெருமூச்சுடன் சாலையை வெறித்தாள்..

## 11

பார்வதியம்மாள் வாசலில் நின்று கொண்டிருந்தாள்..

விவேக்கின் கார் உள்ளே நுழையவும்.. கண்களை சுருக்கிக் கொண்டு..

"யாரது.." என்று பார்த்தாள்..

"என்ன பெரியம்மா.. வாசலில் நிற்கறீங்க.." என்று வினவியபடி விவேக் காரை விட்டு இறங்கினான்..

"கோவிலுக்கு போகலாம்ன்னு கிளம்பினேன்.. டிரைவரைக் காணோம்.. அதுதான் பார்த்துக் கொண்டிருக் கிறேன்.. நீ

உள்ளே வா.." என்றபடி உள்ளே செல்லத் திரும்பிய பார்வதியம்மாள்.. காரிலிருந்து இறங்கிய மாலதியைப் பார்த்ததும்,

"அடடே.. மாலதிப் பொண்ணா.. வாம்மா வா.. உன் புருசன் குழந்தையெல்லாம் சௌக்கியமா.. உன் பிரண்டிற்கு கல்யாணம் கூடி வந்திருக்கு.. சொன்னானா..?" என்று கேட்டபடி மாலதியின் கையைப் பிடித்துக் கொண்டாள்..

"சொன்னான் ஆன்ட்டி.. அதுதான் பெண்ணைப் பார்த்துவிட்டுப் போகலாமேன்னு அவனுடன் கிளம்பி வந்தேன்.."

"தங்கமாய் பார்.. நீ பார்க்காமலா..? அவனுக்கு உன் வீட்டுக்குப் பக்கத்திலேயே வீட்டை வாங்கிக் குடுத்து குடி வைத்தவள் நீ.. இனி அவனுக்கு குடும்பத்தையும் ஏற்படுத்தி வைத்துவிடு.. அவனுக்கு கூடப் பிறந்தவள் இல்லாத குறையை நீ தீர்த்துக் கொண்டிருக்கிற.. நியாயமா கல்யாணப் பேச்சை பேசி முடித்த அன்றைக்கே உன்னையும் உன் வீட்டுக்காரரையும் வரச் சொல்லியிருக்க வேண்டும்.. ஆனால் அந்தப் பெண்ணின் அம்மா மகா சாது.. ரொம்ப பயந்த சுபாவம்.. ஏதோ அவளுடைய விதி.. சென்னைக்குக் கிளம்பி வந்து பெண்ணுடன் தனியே இருக்கிறாள்.. ஆட்கள் அதிகமாக இருந்தால் பேசப் பயப்படுவாள்.. அதனால்தான் நானே பேசி முடித்து விட்டேன்.."

"அதனால் என்ன ஆன்ட்டி.. விவேக்கிற்கு பெற்ற தாய் ஸ்தானத்தில் நீங்கள்தானே இருக்கறீங்க.. நீங்க பேசி முடிப்பதுதான் முறை.. ஆமாம்.. பெண்ணுக்கு சென்னை சொந்த ஊரில்லையா..?"

"இல்லைம்மா.. அவளுக்கு கடலூர்தான் சொந்த ஊர்.. ஆமாம் இந்தக் கதையை எல்லாம் வாசலில் வைத்துத்தான் பேச வேண்டுமா..? உள்ளே வந்து.. ஒரு வாய் காபி குடித்துக் கொண்டே பேசலாம் வாவா.."

உள்ளே சென்று ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்தாள் மாலதி.. பார்வதியம்மாள் வேலையாளை அழைத்து மாலதிக்கு காபி கொண்டு வரச் சொன்னாள்..

"என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்..? பெண்ணுக்கு சொந்த ஊர் எது என்றுதானே.. அவளுக்குக் கடலூர் தான் சொந்த ஊர்.. அங்கே அவர்களுக்கு சொந்த வீடு இருந்தது.."

"இருந்ததுன்னா.. இப்போது இல்லையா..?"

"அதை விற்று விட்டு சென்னைக்கு வந்து விட்டார்கள்.."

"ஏன்..?"

"என்னத்தைச் சொல்வது..? வர்ஷாவின் அப்பா திடீர்ன்னு ஹார்ட் அட்டாக்கில் போய் விட்டார்.. அவங்களுக்கு அந்த வீட்டில் இருக்க மனசில்லை.."

"அப்படியா..?"

"இந்தா காபியைக் குடி.."

மாலதி யோசனையுடன் காபியைக் குடிக்க ஆரம்பித்தாள்..

'இதுதான் வர்ஷாவின் சோகத்திற்குக் காரணமா..?'

"என்னம்மா யோசிக்கிற..?"

'இந்த அம்மா மகா புத்திசாலி.. இவள் முன்னால்.. மனதில் கூட எதையும் நினைக்க முடியாது..' என்று அலுப்புடன் நினைத்துக் கொண்டாள் மாலதி..

"இல்லை.. நான் பெண்ணைப் பார்க்கவென்று கூப்பிட்டால் அந்தப் பெண் சங்கடப்படாதா..?"

"ஆமாம்.. சங்கடப்படும்.. அதைப் பார்த்தால் முடியுமா..?"

"வேண்டாம் ஆன்ட்டி.. அப்படி அந்தப் பெண்ணை சங்கடப்படுத்த வேண்டாம்.. நீங்கள் கோவிலுக்கு கிளம்பிக் கொண்டிருக்கிறீர்கள்தானே.. பேசாமல் அந்தப் பெண்ணையும் கோவிலுக்கு கூப்பிடுங்கள்.. நானும் வருகிறேன்.. சாமி கும்பிடுவது போல் அந்தப் பெண்ணையும் நன்றாகப் பார்த்துக் கொள்கிறேன்.."

பார்வதியம்மாள் முகம் மலர்ந்து போனாள்.. கோவிலுக்குப் போக கூட ஆள் துணை கிடைத்துவிட்ட சந்தோசத்துடன்..

"அதுவும் சரிதான்.. இந்த டிரைவரையும் காணோம்.. நாம் எல்லோருமே.. விவேக்குடன் கோவிலுக்குப் போய் விட்டு

வந்து விடலாம்.." என்றபடி வர்ஷாவை அழைத்து வரச் சென்றாள்..

"தேங்க்ஸ் மாலதி.." என்றான் விவேக்..

"எதுக்குடா தேங்க்ஸ் சொல்கிறாய்..?"

"அவளை வெளியில் கூப்பிட்டால் வரமாட்டாள்.. இன்று உன் புண்ணியத்தில் அவளைக் கோவிலுக்கே கூப்பிட்டுப் போகப் போகிறேன்.."

மாலதி மௌனமாகி விட்டாள்.. வெளியே பார்வதி யம்மாள் அழைக்கும் குரல் கேட்டது.. இருவரும் எழுந்து சென்றனர்..

"வர்ஷா.. இவள்தான் மாலதி.. எங்க விவேக்குடன் படித்த பெண்.. வெறும் சிநேகிதியாக இல்லாமல் கூடப் பிறந்த பிறப்பாக இருப்பவள்.." என்று

மாலதியை வர்ஷாவிற்கு அறிமுகப்படுத்தி வைத்தாள் பார்வதியம்மாள்..

மாலதியைப் பார்த்த வர்ஷாவின் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாய் தெரிந்தது.. அவள் விழிகளில் கணநேரத்தில் ஒரு சைகை தோன்றி மறைந்தது..

"வணக்கம்.." என்று மாலதியைப் பார்த்து கரம் குவித்தாள் வர்ஷா.. மாலதிக்குப் புரிந்து விட்டது.. அவளைத் தெரிந்தவளாகக் காட்டிக் கொள்ள வர்ஷா விரும்பவில்லை..

'இவள் இயல்பானவளாக இருந்தால்.. என்னைத் தெரிந்தவள் என்று பார்வதி ஆன்ட்டியிடம் சொல்லி யிருப்பாளே.. இவளோ மறைக்க நினைக்கிறாள்.. ஏன்..?' என்று மனதில் நினைத்தபடியே பதிலுக்கு..

"வணக்கம்.." என்றாள் மாலதி..

விவேக்கோ வர்ஷாவையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.. பிங்க் கலர் ஷிபான் புடவையில் ஒரு தேவதையின் அழகோடு நின்றிருந்தாள் வர்ஷா.. நண்பனின் பார்வைக்கு வர்ஷாவிடமிருந்து என்ன பிரதிபலிப்பு வருகிறது என்பதை அறிந்து கொள்ள விரும்பி மாலதி வர்ஷாவை ஜாடையாகப் பார்த்தாள்..

வர்ஷா விவேக்கை நிமிர்ந்துகூட பார்க்கவில்லை..

ஆகாஷின் பார்வைக்கு முகம் சிவந்த வர்ஷாவின் அன்றைய தோற்றம் இன்று மாலதிக்கு நினைவில் வந்தது..

"வர்ஷா.. முன் பக்கமாய் ஏறிக்கட்டும் ஆன்ட்டி.. நான் பின்னால் உங்கள் பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிறேன்.." என்று மாலதி சொல்லிக் கொண்டிருக்கும் போதே வர்ஷா சட்டென்று பின் கதவைத் திறந்து பார்வதியின் அருகில் அமர்ந்து விட்டாள்..

மாலதி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அன்று ஆகாஷின் அருகே அமர்ந்து ரகசியம் பேசிக் கொண்டே சாப்பிட்டவள்.. இன்று திருமணம் பண்ணிக் கொள்ள இருக்கும் விவேக்கின் அருகே உட்கார மறுக்கிறாள் ஏன்..?

"ஷி இஸ் ஷை டைப்.." என்றான் விவேக் சிரித்துக் கொண்டே.. 'முட்டாள் நண்பனே.. இவளா ஷை டைப்..? இரண்டு நாட்களுக்கு முன்னால் எங்களோடு ஒரே குடும்பம் போல் கலகலப்பாய்ப் பேசிப் பழகியவள் தான் இவள்.. என்று சொல்லத் துடித்த மனதை அடக்கிக் கொண்டு விவேக்கின் அருகில் அமர்ந்தாள் மாலதி..'

கோவிலில் இயல்பாய் விவேக் வர்ஷாவின் அருகில் நடந்து வர அவள் மெல்ல விலகி.. பார்வதியம்மாளின் பக்கம் போய் நடந்து வர ஆரம்பித்தாள்.. ஒவ்வொரு பிரகாரமாய் பார்வதி அம்மாள் வணங்கிக் கொண்டு வர.. விவேக் வர்ஷாவின் அருகில் சென்று பேச முயன்றான்.. அவளோ அதைத் தவிர்த்து விலகிச் செல்வதிலேயே குறியாய் இருந்தாள்.. ஒரு கட்டத்தில் பொறுக்க மாட்டாமல் விவேக்.. வர்ஷாவின் அருகில் நெருங்கி..

"நில் வர்ஷா.. நான் உன்னுடன் பேச வேண்டும்.." என்றான்..

வர்ஷா தவிப்புடன் மாலதியைப் பார்த்தாள்.. மாலதி பின் தங்கி விட்ட பார்வதியம்மாளைப் பார்த்துவிட்டு..

"நீ வர்ஷாவுடன் பேசிக் கொண்டிரு விவேக்.. நான் ஆன்ட்டியைக் கூப்பிட்டுக் கொண்டு வருகிறேன்.." என்று கூறிவிட்டு வர்ஷாவின் தவிப்பைக் கவனிக்காதவள் போல் சென்று விட்டாள்..

தன்னருகில் தனித்து விடப்பட்ட வர்ஷாவைப் பார்த்த விவேக்,

"மாலதி.. இங்கிதம் தெரிந்தவள்.." என்று புன்னகைத்தான்..

வர்ஷா பதில் சொல்லாமல் வானத்தைப் பார்த்தாள்.. அவளது மை விழிகளைப் பார்த்த விவேக்.. மயக்கத்துடன்..

"முதன் முதலில் உன்னைப் பார்த்தபோது.. உன் கண்கள் பேசிய மொழி எனக்குப் பிடித்திருந்தது.." என்றான்..

வர்ஷா திரும்பி மாலதி வந்து விட்டாளா என்று பார்த்தாள்..

"அவர்கள் வர நேரமாகும்.. வாயேன்.. இப்படி உட்கார்ந்து பேசலாம்.."

விவேக் அங்கிருந்த மண்டபத்தின் மேடையில் ஏறி அமர்ந்து கொண்டான்.. வர்ஷா வரவில்லை..

"வா.. வர்ஷா.." விவேக்கின் குரலில் வற்புறுத்தல் இருந்தது..

வேறு வழியின்றி விவேக் அமர்ந்திருந்த மேடையின் அருகே வந்து சாய்ந்து நின்றாள்..

"என்னைப் பிடித்திருக்கிறதா..?" திடீரென்று கேட்டான் விவேக்..

'என்ன பதில் சொல்வது..?' வர்ஷா திணறினாள்..

'எனக்கு ஆகாஷைத் தான் பிடித்திருக்கிறது என்று எப்படி இவனிடம் சொல்வது..'

"என்ன வர்ஷா பதில் சொல்ல மாட்டேன் என்கிறாய்.."

'இந்த மாலதியும்.. பார்வதி ஆன்ட்டியும் சீக்கிரம் வந்து விட்டால் தேவலை..'

விவேக் பொறுமை இழந்தான்.. இவள் ஏன் பதில் சொல்ல மாட்டேன் என்கிறாள்..?

"சொல் வர்ஷா.. என்னைப் பிடித்திருக்கிறதா.. இல்லையா..?"

தொலைவில் மாலதியும்.. பார்வதியம்மாளும் வருவதைக் கண்ட வர்ஷா நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்..

"அவர்கள் வந்து விட்டார்கள்.. சொல் வர்ஷா.."

வர்ஷா பதட்டமடைந்தாள்..

'இவர்கள் ஏன் அன்னநடை நடந்து வருகிறார்கள்..?'

"வர்ஷா.." விவேக் கோபத்துடன் மேடையை விட்டு இறங்கி அவளருகே வந்து நின்றான்..

"உன் மௌனத்திற்கு என்ன அர்த்தம் வர்ஷா.. உனக்கு இந்தத் திருமணத்தில் விருப்பமில்லையா..? நான் பெரியம்hவிடம் சொல்லி உன் அம்மாவிடம் பேசி திருமண ஏற்பாடுகளை நிறுத்தச் சொல்லிவிடவா..?"

'அம்மா..' வர்ஷாவிற்கு பொறி கலங்கியது.. இந்த ஒரு வாரமாகத்தானே மல்லிகா சிரித்துக் கொண்டிருக்கிறாள்.. அவளது புன்னகையை கலைப்பதா..?

"வேண்டாம்.." என்றாள் அவள் அவசரமாக.. விவேக் கின் முகத்தில் மலர்ச்சி வந்தது..

"ஏன்..?" என்றான் நெருக்கமான தொனியில்..

"அம்மா இந்த திருமணத்தை விரும்புகிறாங்க.."

"அப்படியென்றால்.. உனக்கு விருப்பமில்லையா..?"

வர்ஷாவின் மனம் 'விருப்பமில்லை' என்று கூவியது..

"அம்மாவின் விருப்பம்தான் என் விருப்பம்.."

மாலதியும் பார்வதியும் வந்து விட அவர்களின் பேச்சு நின்றது..

மாலதியின் விழிகள் கூர்மையாக அவர்களை ஆராய்ந்தன.. விவேக்கின் முகத்தில் மலர்ச்சி இருந்தது.. வர்ஷாவோ முள் மேல் நிற்பது போல் நின்று கொண்ட டிருந்தாள்.. அவளது முகத்தில் சங்கடம் வெளிப் படையாகத் தெரிந்தது.. விவேக்கின் அருகாமையை உணராதவளாய் நின்றாள்..

'சாமந்திப் பூவோ எட்டாத தூரம்..
ஊமத்தம் பூவோ என் வீட்டின் ஓரம்..
அதில் வாசம் இல்லை..
என்நெஞ்சில் பாசம் இல்லை..'

வர்ஷா மணியனின் வீட்டில் பாடிய பாடல் வரிகள் மாலதியின் நெஞ்சில் எதிரொலித்தது.. அப்படியானால் தூரத்தில் விலகி நிற்கும் ஆகாஷ் சாமந்திப் பூவா..? அருகாமையில் நிற்கும் விவேக் என்ன ஊமத்தம்பூவா..?

இவளை விரும்பி மணக்க நினைப்பவனை ஏமாற்ற நினைக்கிறாளா இவள்..?

மாலதியின் மனம் துடித்தது.. பாவம் விவேக்.. தாய் தகப்பன் இல்லாதவன்.. ஈ எறும்புக்குக் கூட தீங்கு நினைக்காதவன்.. அவனுக்குப் போய் அவனை விரும்பாத ஒரு பெண் மனைவி ஆவதா..?

"போகலாமா.." மாலதி வினவ வர்ஷா வெகு சந்தாசமாக தலை அசைத்தாள்..

மணியனின் வீட்டிலிருந்து கிளம்பும்போது.. தயக்கத்துடன் ஆகாஷின் விழிகளைத் தழுவிப் பிரிந்த அவளது பார்வை மாலதியின் நினைவில் ஆடியது.. எரிச்சலுடன் விவேக்கின் அருகில் சென்றாள்.. முன்னே பார்வதியம்மாளுடன் உற்சாகமாய் பேசிக் கொண்டு நடந்து சென்ற வர்ஷாவைப் பார்த்தபடி..

"வர்ஷாவிற்கு வரும்போது இல்லாத உற்சாகம் போகும்போது வந்திருக்கறதே..." என்று இயல்பாகக் கூறுவது போல் கூறினாள்..

"ம்ம்.. வரும்போது நாங்கள் பேசிக் கொள்ள வில்லைலையே.."

"ஊஹூம்..? அப்படி என்னடா காதல் வசனம் பேசிக் கொண்டீர்கள்..?"

"அவள் ரொம்பவும் வெட்கப்படுகிறாள் மாலதி.."

"அப்படி எதற்குடா அவள் வெட்கப்பட்டாள்..?"

"என்னைப் பிடித்திருக்கிறதான்னு கேட்டேன்.."

"என்னது..?"

மாலதி ஒரு கணம் அசைவற்று நின்று விட்டாள்.. வர்ஷா என்ன சொல்லியிருப்பாள்..? வெட்கப்பட்டுக் கொண்டே.. பிடித்திருக்கிறது என்று சொன்னாளா..?

"அவள் பதில் சொல்ல கூச்சப்பட்டுக் கொண்டு பேசாமல் நிற்கிறாள்.." மாலதிக்கு மூச்சு வந்தது.. நல்ல வேளை.. வர்ஷா ஏமாற்றுக்காரி இல்லை..

"அப்புறம்..?"

"நான் விடவில்லை.. உனக்கு என்னைப் பிடிக்க வில்லை போல் தெரிகிறது.. உன் அம்மாவிடம் சொல்லி திருமண ஏற்பாடுகளை நிறுத்திவிடச் சொல்லி

விடுகிறேன் என்று ஒரு பேச்சுக்குத்தான் மாலதி சொன்னேன்.. அவள் வேண்டாம் வேண்டாமென்று

பதறி விட்டாள்.."

மாலதி பல்லைக் கடித்தாள்.. வேண்டாமென்று சொன்னாளா..? பின் என்ன செய்யப் போகிறாளாம்.. ஆகாஷை திருமணம் செய்து கொள்ளும் யோகம் எனக்கு இல்லை என்று மனதிற்குள் அழுது கொண்டே விவேக்கிற்கு மாலை சூட்டி மாலதியின் உயிர்

நண்பர்கள் இருவரின் வாழ்க்கையையும் பாழடிக்கப் போகிறாளா..?

# 12

"என் அம்மா நம் திருமணத்தில் மிகவும் விருப்பமாக இருக்கிறாங்க.. திருமணத்தை நிறுத்தி விடாதீங்க என்கிறாள்.. நான் இன்னும் கொஞ்சம் அவளை வம்பிழுக்கலாமென்று உன் அம்மாவிற்குத்தான் விருப்பமா உனக்கு விருப்பமில்லையா என்று கேட்டேன்.. அதற்கு அவள் என் அம்மாவின் விருப்பம்தான் என் விருப்ப மென்று மறைமுகமாய் அவளுடைய விருப்பத்தை சொல்லி விட்டாள் மாலதி.."

மாலதிக்கு தன் நண்பனின் அறியாமையை எண்ணி அழுவதா இல்லை சிரிப்பதா என்று தெரியவில்லை.. வர்ஷா தியாகி போல் பிதற்றியிருக்கிறாள்.. இவன் என்னவோ அவள் காதல் சொல்லி விட்டது போல் தேன் குடித்த நரியாய் துள்ளிக் கொண்டிருக்கிறான்.. வர்ஷா தியாகியாய் மாறுமளவிற்கு விவேக்கின் தரம் குறைந்து விட்டதா..?

வீட்டுக்குத் திரும்பி வரும்போது விவேக்கும் பார்வதியும் மட்டுமே மாறி மாறி பேசிக் கொண்டிருந் தார்கள்..

மாலதியும் வர்ஷாவும் அவரவர் போக்கில் சிந்தித்தபடி மௌனமாக வந்தார்கள்.. வீட்டு வாசலில் பார்வதி இறங்கிக் கொண்டே..

"உள்ளே வந்து நைட் டிபன் சாப்பிட்டு விட்டுப் போங்கப்பா.." என்றாள்..

"இல்லை ஆன்ட்டி.. அவரும் நிஷாவும் எனக்காகக் காத்திருப்பார்கள்.." என்று மறுத்தாள் மாலதி..

வர்ஷா எதுவுமே பேசாமல் அவளது வீட்டை நோக்கிச் சென்று விட விவேக்கின் முகத்தில் ஏமாற்றம் படிவதை ஜாடையாகப் hபர்த்தாள் மாலதி.

"ஓகே.. பெரியம்மா.. இன்னொரு நாள் வந்து சாப்பிடுகிறேன்.. இப்போது மாலதியை அவள் வீட்டில் ஒப்படைக்க வேண்டும் பை.." விவேக் விடைபெற்றுக் கொண்டு காரைக் கிளப்பினான்..

சென்னையின் இரவு நேரத்து அழகிய தோற்றம் நியான் விளக்குகளின் ஒளி வெள்ளத்தில் பளிச்சிட.. அந்த தோற்றத்தில் லயிக்காமல் வெறுமையாகப்

பார்த்தபடி வந்தாள் மாலதி..

"என்ன மாலதி பேசாமலே வருகிற..? வர்ஷா எப்படி..? என் செலக்ஷன் சரிதானா..?" ஆவலுடன் கேட்டான் விவேக்..

"விவேக்.. நான் சொல்வதை உன் நன்மைக்குத்தான் சொல்கிறேன்.. என்ற நம்பிக்கையுடன் கேட்பாயா..?" மாலதி நிதானமாக வினவினாள்..

"இது என்ன கேள்வி மாலதி..? நான் உன் நட்பிற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறேன் என்பது உனக்குத் தெரியாதா..?"

"அதனால்தான் நானும் சொல்கிறேன்.. நீ என் நண்பன்.. உன் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும்.. திருமணம் என்பது வாழ்வில் ஓர் முறைதான் வந்து போகும்.. அதில் நீ தோற்று விடக் கூடாது.. நானும் கரணும் ஏன் இவ்வளவு மகிழ்ச்சியோடு வாழ்கிறோம் தெரியுமா..? கரண் என்னை மட்டுமே காதலிக்கிறார்.. நானும் அவரை மட்டுமே

நேசிக்கிறேன்.. இப்படி ஒருவரையொருவர் உண்மையாக நேசித்து வாழும் வாழ்க்கையை நீ வாழ வேண்டும்.."

"மாலதி.. எதனால் இவ்வளவு பீடிகை போடுகிற..?"

"இந்தத் திருமண விசயத்தில் நீ இவ்வளவு ஆர்வம் காட்ட வேண்டாம்.. திருமணத்தை தள்ளிப் போடு..."

விவேக் காரை 'சரக்'கென்று பிரேக் அடித்து சாலை யோரமாய் நிறுத்தினான்.. பின்னால் வந்த வண்டியில் வந்தவன் விவேக்கின் பரம்பரையை இழுத்து பச்சை வண்ண வார்த்தைகளில் திட்டிவிட்டுப் போக அதை சட்டையே செய்யாமல் மாலதியின் முகத்தை அதிர்ச்சியுடன் பார்த்தான் அவன்..

"ஏன் இவ்வளவு பெரிய பெரிய வார்த்தைகளைப் பேசுகிற.."

"காரணம் இருக்கிறது விவேக்.."

"அதை என்னிடம் சொல்லு.."

"எனக்கே இன்னும் சரிவரத் தெரியவில்லை.. அதைத் தெரிந்து கொள்ள கொஞ்சம் டைம் கொடு.. அதற்கு பின்னால் நான் உன்னிடம் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்கிறேன்.."

"அதுவரை என்னைக் காத்திருக்கச் சொல்கிறாயா..?"

"பொறுமையாய் இருக்கச் சொல்கிறேன்.."

"எதுவரை நான் பொறுமையாய் இருப்பது..? அவளை நான் விரும்புகிறேன் மாலதி.. தினமும் அவள் நினைவோடுதான் தூங்குகிறேன்.. இதை எப்படி நான் நிறுத்தமுடியும்..?"

மாலதி ஓர் தீர்மானத்திற்கு வந்தாள்.. முனையிலேயே இந்த விருப்பம் கிள்ளி எறியப்படவில்லையென்றால் பின்னால் அது வளர்ந்து வேர் விட்டு விருட்சமாக

வளர்ந்து நின்று விடும்.. அப்போது அதை வெட்டுவது மிகவும் கடினம்.. கோடாரி கொண்டு வெட்டினாலும்.. வீழ்வது அந்த மரமா.. இல்லை அவளது நண்பனின் வாழ்க்கையா என்று தெளிவாக சொல்லி விட முடியாது.. அதற்கு இப்போதே மாலதியின் மனதிலிருக்கும் உணர்வுகளை விவேக்குடன் பகிர்ந்து கொள்வதுதான் சரி..

"விவேக் இந்த வர்ஷாவை இரண்டு நாட்களுக்கு முன்னாலேயே எனக்குத் தெரியும்.."

"எப்படி..?"

"மணியனின் வீட்டு விருந்திற்கு அவளும் வந்திருந்தாள்.."

"அவ்வளவுதானே.. அவள் மணியன் வேலை பார்க்கும் அதே கம்பெனியில்தானே வேலை பார்க்கிறாள்.. கோவொர்கர் என்ற முறையில் வந்திருப்பாள்.." இலகுவான குரலுடன் விவேக் கூறினான்..

"ஆனால் அவள் என்னைத் தெரிந்ததாகவே காட்டிக் கொள்ளாமல் நீ அறிமுகப்படுத்தியதும்.. 'வணக்கம்' சொன்னது ஏனென்று நீ யோசிக்கவே இல்லையே விவேக்.."

விவேக் ஓர் அதிர்வுடன் மாலதியைப் பார்த்தான்.. நிஜம்தானே.. வர்ஷா ஏன் மாலதியை தெரியாதவள் போல் நடந்து கொண்டாள்..?

"விவேக்.. இன்னொன்றையும் நீ யோசிக்கவில்லை.. மணியனும் வர்ஷாவும் வேலை பார்க்கும் அதே கம்பெனியில் தான் நம் ஆகாஷும் வேலை பார்க்கிறான்.. என்ன போஸ்ட் தெரியுமா..? அந்தக் கம்பெனியின் பெர்சனல் மேனேஜர்.. வர்ஷாவின் போஸ்ட் என்ன தெரியுமா..? பெர்சனல் மேனேஜரின் நேரடி செக்ரட்டரி.."

விவேக் பேச்சிழந்தான்.. இவள் என்ன சொல்ல வருகிறாள்..?

"விவேக்..! ஆகாஷ் அவனுடைய செக்ரட்டரியை மூன்று வருடங்களாக காதலிக்கிறான்.."

"மாலதி.."

"என்ன விவேக்.. உனக்கு அதிர்ச்சியாக இருக்கிறதா..? ஆகாஷின் காதலியும்.. உனது வருங்கால மனைவியும் ஒரே பெண்தான் என்று அறிந்தபோது எனக்கும்.. மணியனுக்கும் இதே அதிர்ச்சிதான் வந்தது.. நாங்கள் இருவரும் கலந்து பேசினோம்.. ஆகாஷ் வர்ஷாவை விரும்பி.. வர்ஷா அதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கிறவளாக இருந்தால் ஒரு பிரச்னையும் இல்லை..

இத்தனை நாளாக இல்லாமல் நீ திருமணத்தை பேசி முடித்த பின்பு அவளிடம் ஒரு மாற்றம் தெரிந்திருக்கிறது.."

"என்ன மாற்றம்..?"

"விவேக்.. இது இன்னமும் உனக்கு அதிர்ச்சி அளிக்கக் கூடிய விசயம்.. வர்ஷா ஆகாஷிடம் அழுதிருக்கிறாள்.. என் முகத்தைப் பார்த்துப் பேசுன்னு ஆகாஷ் கூறியதற்கு அவனது முகம் பார்க்க முடியாமல் தவித்திருக்கிறாள்.."

விவேக்கின் மனதிலிருந்த உல்லாசம் அவனை விட்டு வெளியேற ஆரம்பித்தது.. மாலதி அவனை இரக்கத்துடன் பார்த்தாள்..

"விவேக்.. எனக்கு நீ வேறு.. ஆகாஷ் வேறு இல்லை.. மணிக்கும் அப்படித்தான்.. அதனால் உண்மையை அறிந்து கொள்ள விரும்பி நீ வெளியூர் சென்றிருந்த சமயமாகப் பார்த்து மணியின் வீட்டில் விருந்து ஒன்றை ஏற்பாடு செய்தோம்.. வர்ஷாவையும்.. ஆகாஷையும் வரவழைத்தோம்.. அவள் வந்தாள்.. ஆகாஷின் பக்கத்தில் அமர்ந்து சாப்பிட்டாள்.. அவனுடன் பேசினாள்.. சிரித்தாள்.. விவேக்.. என்னை நீ தவறாக நினைக்காதே.. அன்று அவள் ஆகாஷிடம் காட்டிய நெருக்கத்தை.. இன்று உன்னிடம் அவள் காட்ட வில்லை..."

"மாலதி.. அவன் அவளுடைய சுப்பீரியர் ஆபிஸர்.. நான் அவளை மணந்து கொள்ளப் போகிறவன்.."

"அதைத்தான் நானும் சொல்கிறேன்.. அவனிடம் அவள் சுப்பீரியருக்குரிய மரியாதையை காட்டி விலகி நின்றிருக்க வேண்டும்.. உன்னிடம் மணந்து கொள்ளப் போகிறவனிடம் காட்ட வேண்டிய நாணத்தைக் காட்டி உறவாடியிருக்க வேண்டும்.. ஆனால் அவள் அவனிடம் நாணத்தோடு உரிமையாய் உறவாடிப் பேசினாள்.. உன்னிடம் மரியாதை காட்டி விலகி நிற்கிறாள்.. என்னடா இது..? எங்கோ இடிக்கிறதாய் உனக்குத் தோன்ற வில்லையா..?"

விவேக் யோசனையுடன் வர்ஷாவைப் பெண் பார்த்த போது நடந்த நிகழ்வுகளை நினைவுக்குக் கொண்டு வந்தான்..

'அவள் தலை நிமிராமல் அமர்ந்திருந்தாளே.. அது நாணம் என்று நினைத்தது தவறோ.. அவள் ஓர் பார்வை கூட

விரும்பிப் பார்க்கவில்லையே..'

"என்னடா யோசிக்கிறாய்..? அவளுடைய அம்மாவின் மனம் வருத்தப்படும் என்றுதான் திருமணத்தை நிறுத்தாதீர்கள்ன்னு சொல்லி இருக்கிறாள்.. அம்மாவின் விருப்பம்தான் அவள் விருப்பமென்று பெரிய தியாகி போல் சொல்கிறவள் கழுத்திலா நீ தாலியைக் கட்டப் போகிறாய்..? இவள் தியாகி பட்டம் வாங்க நீதான் கிடைத்தாயா..? அன்று ஆகாஷை அவள் பார்த்த பார்வையை நீ பார்த்திருந்தால் உடைந்து போயிருப்பாய் விவேக்.."

"இப்போதுதான் எனக்கு எல்லாம் புரிகிறது மாலதி.. அவளுடைய அம்மாவும் எங்களுடன் கடைசி வரைக்கும் இருக்கலாமென்று நான் சொல்லியிருந்தேன்.."

"உனக்குக் கருணை அதிகம் விவேக்.. அதுவே உனக்குப் பாதகமாக ஆகிவிட்டது பார்த்தாயா..? ஏன் அப்படிச் சொன்னாய்..?"

"உனக்கு அவர்களின் கதை தெரியாது மாலதி.. அவர்கள் கடலூரில் நன்றாக வாழ்ந்த குடும்பம்.. ஒரு நாள் ராத்திரியில் எல்லாமே மாறி விட்டதாம்.. வீட்டை விற்று விட்டுத் தாயும் மகளுமாய் நாடோடிகள் போல சென்னைக்கு வந்திருக்கிறார்கள்.. அந்த அம்மாவிற்கு உறவென்று சொல்லிக் கொள்ள வர்ஷா மட்டும்தான் இருக்கிறாள்.. அவளை எப்படி அவர்களிடமிருந்து நான் பிரிப்பேன்..? அதனால்தான் அவங்களையும் எங்களோடு வந்துவிடச் சொன்னேன்.."

"அப்படி என்னதான் அவளுடைய வாழ்க்கையில் நடந்ததாம்..?"

"வேண்டாம் மாலதி.. எனக்கு எல்லாம் தெரியும்.. பெரியம்மாவிற்கும் தெரியும்.. வீடு குடி வந்தபோதே எல்லா விவரங்களையும் அவர்கள் பெரியம்மாவிடம் சொல்லி விட்டுத்தான் குடிவந்தார்களாம்.. பெரியம்மா அவங்க வீட்டு விவரங்களை என்னிடம் சொல்லியிருந்தார்கள்.. ஆனாலும் திருமணப் பேச்சை எடுத்தபோது முதலில் என்னிடம் எல்லா விவரங்களையும் மறைக்காமல் வர்ஷாவின் அம்மா சொல்லிவிட்டு.. இதுதான் நாங்கள் கடலூரில் இருந்து

கிளம்பி வந்த கதை தம்பி.. இதற்கு மேலும் என் மகளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள விருப்பமிருக்கான்னு கேட்டாங்க.. எனக்கும்.. பெரியம்மாவிற்கும் அவர்களிடம் பிடித்த விஷயமே இந்த நேர்மைதான்.. இத்தனைக்கும் பெரியம்மா என்னிடம் எல்லா விவரத்தையும் சொன்னது அவங்களுக்கும் தெரியும்.."

"என்னடா.. என்னென்னவோ சொல்கிறாய்..?"

"மாலதி.. ஆகாஷின் காதலை வர்ஷா ஏற்றுக் கொள்ள மறுப்பதற்கு ஒரு வலுவான காரணம் இருக்கிறது.. யாரையும் நான் காதலிக்க மாட்டேன்னு அவள் அவளுடைய அம்மாவிற்கு சத்தியம் செய்து கொடுத்திருக் கிறாள்.."

"இது எப்படிடா உனக்குத் தெரியும்..?"

"அவள் வாழ்க்கையில் நடந்த எல்லாமும் எனக்குத் தெரியும்.. ஆகாஷ் மூன்று வருடங்கள் என்ன.. முப்பது வருடங்கள் காத்திருந்தாலும் வர்ஷா அவனிடம் காதல் சொல்ல மாட்டாள்.."

"அதனால்.. நீ அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாயா..?"

"என்ன மாலதி என்னைப் பார்த்து இப்படி ஒரு வார்த்தையைக் கேட்டு விட்டாய்..? வர்ஷாவை நான் விரும்பியது உண்மைதான்.. அவளைக் கல்யாணம் செய்து கொள்ள முடிவும் செய்தவன்தான்.. ஆனால் எப்போது ஆகாஷ் அவளைக் காதலிக்கிறான்.. அவளுக்கும் ஆகாஷின் மேல் ஓர் எண்ணம் இருக்கிறது என்று எனக்குத் தெரிந்து விட்டதோ.. அதன் பின் வர்ஷாவை மனதாலும் நான் நினைக்க மாட்டேன்.."

மாலதி மனம் நெகிழ்ந்து போனாள்.. விவேக்கின் கையைப் பிடித்துக் குலுக்கினாள்..

"நீ என் நண்பன்னு சொல்லிக்க எனக்குப் பெருமையாய் இருக்கிறதுடா.. நீ இப்படித்தான் சொல்லுவாய்ன்னு எனக்குத் தெரியும்.. ஐ ஆம் ரியலி அப்ரிஸியேட் யு.."

"என்னைப் பாராட்டுவது இருக்கட்டும்.. நீ வர்ஷாவிடம் பேசு.."

"நான் ஏன் அவளிடம் பேச வேண்டும்..? என் கண்ணெதிரேயே ஆகாஷிடம் நெருக்கம் காட்டிவிட்டு.. ஒன்றும் அறியாதவள் போல் உன் வுட்பியாக எனக்கு வணக்கம் சொல்கிறாள்.. அவளை நினைத்தாலே எனக்குப் பற்றிக் கொண்டு வருகிறது.."

"அவளைத் தவறாக நினைக்காதே மாலதி.. அவளது சூழ்நிலை அப்படி.."

"என்னடா பொல்லாத சூழ்நிலை..? உங்கள் கல்யாணம் நடந்திருந்தால் உன் வாழ்க்கையையும்.. ஆகாஷ் வாழ்க்கையையும் சேர்த்து அவள் வீணடித் திருப்பாளே.. அவளுக்கா நீ பரிந்து பேசுகிறாய்..?"

"எந்த ஒரு மனிதரின் செயல்பாட்டிற்கும் மறுபக்கம் என்று ஒன்று உண்டு மாலதி.. வர்ஷாவின் மறுபக்கத்தை அறிய வேண்டுமானால் அவளுடன் மனம் விட்டுப் பேசு.. என்னால் அவளது சூழ்நிலையைப் புரிந்து கொள்ள முடிகிறது.. ஆனால் அவளைப் பற்றி எனக்குத் தெரிந்த விவரங்களை நான் உன்னிடம் சொல்வது தவறு.. அதை அவளேதான் சொல்ல வேண்டும்.."

பகைவருக்கும் அருளும் மனம் கொண்ட இவன் எவ்வளவு உத்தமன்..? தன்னை ஏமாற்றி விட்டாளே என்ற வன்மம் இல்லாமல் அவளது சூழ்நிலை எப்படியோ என்று பரிந்து பேசும் இந்த நல்லவனின் வாழ்வு சிறக்க ஒரு தோழி என்ற முறையில் அவள் ஏதாவது செய்ய வேண்டாமா..?

மாலதி முதலில் விவேக்கின் வாழ்வை சிறப்பாக்க என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்தாள்..

# 13

மாலதியும் விவேக்கும் பிரிந்து அவரவர் வீட்டிற்குச் சென்ற பின் மாலதி ஆறு நாட்கள் விஷயத்தை ஆறப் போட்டாள்.. மனம் ஆற இந்த ஆறு நாட்கள் போதும் என்ற முடிவுடன் ஆறாவது நாள் மாலையில் விவேக்கின் பிளாட்டிற்குச் சென்றாள்..

"வா.. மாலதி.."

"இப்போதுதான் வேலை முடிந்து வந்தாயா விவேக்.."

"யெஸ்.. உட்கார்.. குடிக்க ஜூஸ் தரட்டுமா..?"

"வேண்டாம்.. நீ என்னுடன் கிளம்பி வர வேண்டும்.."

"எங்கே..?"

"கரணின் சித்தப்பா வீட்டில் ஒரு பார்ட்டி அரேன்ஜ் பண்ணியிருக்கிறார்கள்.. நாங்கள் போகிறோம்.. நீயும் எங்களுடன் வா.."

"நோ.. மாலதி.. உங்கள் ரிலேடிவ் வீட்டுப் பார்ட்டிக்கு நான் எதற்கு..?"

"நான் உன்னுடைய ரிலேடிவ் வீட்டிற்கு வரவில்லையா..?"

"ப்ளீஸ் மாலதி.."

"அதே ப்ளீஸை நான் போடுகிறேன் விவேக்.. கரண் உன்னை அழைத்து வரச் சொல்லி விட்டார்.. நீ வரவில்லை யென்றால் அவர் வருத்தப்படுவார்.. இது அவருடைய சித்தப்பா வீட்டுப் பார்ட்டி.. எனக்காக.. அவருடைய இன்வைட்டை ஏற்றுக் கொள் விவேக்.."

கரணின் பெயரைச் சொன்னதும் விவேக் மடங்கி விட்டான்..

"ஜஸ்ட் ஒன் மினிட்.."

"டேக் யுவர் ஓன் டைம்.. நாங்கள் எங்கள் பிளாட்டில் வெயிட் பண்ணுகிறோம்.."

மாலதி அரக்கு வண்ணப் பட்டுப் புடவையில் அழகாக கிளம்பி நிற்க விவேக் வந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டான்..

"ஹாய் நிஷாக்குட்டி அங்கிளுடன் சேர்ந்து உட்கார்.." அவன் பின் பக்கக் கதவைத் திறந்து நிஷாவுடன் ஏறிக் கொண்டான்..

மாலதியும் கரணும் முன் பக்கம் அமர்ந்து கொள்ள கார் தார் சாலைலயில் வழுக்கி ஓடியது..

"வர்ஷாவிடம் பேசினாயா மாலதி..?"

"இன்னும் பேசவில்லை.."

"ஏன் தள்ளிப் போடுகிறாய்.."

"அதற்கென்று நேரம் வரவேண்டாமா..?"

"நேரம் காலம் பார்க்க இதில் என்ன இருக்கிறது..?"

"நிறைய இருக்கிறது.. உனக்குப் புரியாது.. பேசாமல் வா.."

கரணின் கார் அழகான பிரம்மாண்டமான பெரிய பங்களாவிற்குள் நுழைந்தது..

"பார்ட்டி என்று சொன்னாய்.. அதற்கான அறிகுறி எதுவும் இல்லையே.."

"இந்தப் பார்ட்டி இப்படித்தான் இருக்கும்.. இறங்கி வா.."

அதற்குள் கரணின் சித்தப்பா ராமகிருஷ்ணனும்.. அவரது மனைவி அமிர்தாவும் வாசலுக்கு வந்து வரவேற்றனர்..

"வா கரண்.. வா மாலதி.. வாங்க.. ஹாய் நிஷாக் குட்டி.."

ராமகிருஷ்ணன் கை நீட்ட நிஷா விவேக்கின் பின்னால் ஒளிந்து கொண்டது.. அவர் சிரித்தார்..

"பார்த்தாயா கரண்.. நீ டிஸ்டென்ஸ் மெயின்டெயின் பண்ணுகிறேனென்று அடிக்கடி இங்கு வராமல் இருப்பதால் உன் பெண் என்னை அந்நியனாக நினைக்கிறாள்.."

"அப்படியெல்லாமில்லை சித்தப்பா.."

அவர்கள் உள்ளே போனார்கள்.. ஹாலில் யாரும் இல்லை... விவேக் மாலதியைப் பார்க்க... அவள் 'அமைதியாய் இரு...' என்று கண்களால் சமிக்ஞை செய்தாள்..

"உட்காருங்க.." ராமகிருஷ்ணன் உபசரித்தார்..

சற்று நேரத்தில் ஒரு டிரேயில் ஜூஸ் தம்ளர்களை அடுக்கி எடுத்துக் கொண்டு பவ்யமாய் ஒரு இளம் பெண் வந்தாள்.. எல்லோருக்கும் ஜூஸைக் கொடுத்து விட்டு அமிர்தாவின் அருகே அமர்ந்தாள்.. மாலதி விவேக்கைப் பார்த்தாள்..

"விவேக் இவள்தான் கரணின் சித்தப்பா பெண்.. அவருடைய தங்கை திவ்யா.."

விவேக் மரியாதையின் நிமித்தம் அந்தப் பெண்ணைப் பார்க்க அவளும் அப்போது அவனை விழியுயர்த்திப் பார்த்துக் கொண்டிருந்தாள்.. அவளது பார்வையைச் சந்தித்த விவேக்கின் உடலில் மின்சாரம் பாய்ந்தது..

அந்தப் பார்வை.. நாணம் கலந்த பார்வை.. ஆவல் ததும்பிய பார்வை.. உரிமையோடு உறவைச் சொல்லும் பார்வை.. வர்ஷாவிடம் அவன் எதிர்பார்த்து அவனுக்குக் கிடைக்காமல் போன பார்வை.. அள்ளிப் பருகும் பார்வை.

பார்வையை விலக்க முடியாமல் விலக்கிய விவேக்.. மாலதியைப் பார்த்தான்..

"திவ்யா.. எங்க மாமாவின் ஒரே பெண் விவேக்.. மாமா கிரானைட் கம்பெனி வைத்திருக்கிறார்.. திவ்யா டிகிரி முடித்திருக்கிறாள்.. நன்றாகப் பாடுவாள்.. வீணை வாசிப்பாள்.."

இதை எதற்காக தன்னிடம் சொல்கிறாள் என்பது புரியாமல் விவேக் தலையாட்டி வைத்தான்.. அதற்குள் அமிர்தாவின் கண்ணசைவில் வேலை செய்யும் பெண் வீணையைக் கொண்டு வந்தாள்.. திவ்யா வீணையை வாங்கி மீட்ட ஆரம்பித்தாள்.. மெல்லிய ரீங்காரத்துடன் ஆரம்பித்த ஓசையில் அங்கே ஸ்விட்ச் போட்டாற் போல் அமைதி சூழ்ந்தது.. வீணையின் இசை மட்டும் நிறைந்த அந்த இடத்தின் அழகான சூழ்நிலை விவேக்கின் மனதில் ரம்யத்தை ஏற்படுத்தியது..

திவ்யா இனிமையான குரலில் பாட ஆரம்பித்தாள்..

"அலை பாயுதே.. கண்ணா..

என் மனம் மிக அலை பாயுதே.."

அவளது விழிகள் உயர்ந்து விவேக்கைப் பார்த்தன.. அலைபாயும் அவள் மனதை விவேக்கிற்கு பார்வையின் மூலம் தெரியப்படுத்தியவளாக அவள் தொடர்ந்து பாடி முடித்தாள்..

அலை பாய்ந்த அவளது மனதை அறிந்தவனின் மனதில் அலையடித்துக் கொண்டிருந்த உணர்வுகள் அடங்கி சமனப்பட்டிருந்தன.. வர்ஷாவின் உருவத்தை

மிக இலகுவாக அகற்றி திவ்யா அந்த இடத்தில் அமர்ந்து விட்டாள்..

மாலதி ஏதோ ஒரு காரணத்தோடுதான் அவனை அழைத்து வந்திருக்கிறாள் என்பது விவேக்கிற்கு இப்போது புரிந்தது..

'இது பெண் பார்க்கும் படலமா..?' விழியால் மாலதியிடம் வினவினான்..

"திவ்யாவை உனக்குக் கொடுக்க என் மாமா விரும்புகிறார்.." மெல்லிய குரலில் விவேக்கிடம் கூறினாள் மாலதி..

உண்மைதானா..? இவ்வளவு அழகான யுவதி.. அவனுக்காக மட்டும் வீணை மீட்டிப் பாடினாளா..? விவேக் இப்போது நன்றாக திவ்யாவைப் பார்த்தான்.. கொடி

போன்ற உடல் வாகுடன் எலுமிச்சை நிறத்தில்.. மிக மிக அழகாக இருந்தாள்.. அந்த அழகிற்கு அழகு சேர்த்தது அவளிடமிருந்த அமைதி..

"என் பெண் என்பதற்காக சொல்லவில்லை.. திய்வா மிகவும் அமைதியானவள்.. அவளது அருமை தெரிந்த கணவர் அவளுக்கு வாய்க்க வேண்டும் என்பதுதான்

எனது பிரார்த்தனையாக இருந்தது.. கரணும் மாலதியும் உங்களைப் பற்றிச் சொன்னதுமே திவ்யாவிற்கு உங்களை மிகவும் பிடித்து விட்டது.. அவரை நான் பார்க்க வேண்டிய அவசியமேயில்லை.. நீங்கள் பேசி முடிவு பண்ணுங்கள்ன்னு சொல்லிவிட்டாள்.. நீங்கள் அவளைப் பார்க்க வேண்டாமா..? அதற்காகத்தான் உங்களை இங்கே வரச் சொன்னோம்.." ராமகிருஷ்ணன் பிசிறில்லாத குரலில் பேசினார்..

ஒரு பெண் கண்ணால் அவனைக் காணாமலே.. நேரில் அவனைப் பார்க்காமலே அவனைத் திருமணம் செய்து கொள்ள விரும்பியிருக்கிறாள்.. அவளோ பார்ப்பதற்கு இனியவள்.. அவளது பாடலும் இனிமை யானது..

விவேக் சிறகடிக்கும் உணர்வுகளுக்கு ஆட்பட்டான்.. இருந்த போதும் தன் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.. பிறரின் வாய் மொழியை வைத்து வர்ஷாவை மணக்க விரும்பியது போதும்.. இதில் மிகத் தெளிவான முடிவை எடுக்க வேண்டும்..

"நான் உங்கள் பெண்ணிடம் தனியாகப் பேச முடியுமா..?"

அவனது வேண்டுகோளை எதிர்பார்த்தது போல் திவ்யா விழி உயர்த்தி அவனைப் பார்த்தாள்.. ராமகிருஷ்ணன் புன்னகைத்தார்..

"வித் பிளெசர்.. நீங்கள் பேசிவிட்டே உங்கள் முடிவைச் சொல்லுங்கள்.. திவ்யா.. விவேக்கிற்கு நம் வீட்டைச் சுற்றிக் காட்டும்மா.."

அவளோ மாடியைச் சுற்றிக் காண்பிக்கச் சொன்னது போல் மாடிப் படியில் ஏறினாள்.. விவேக் பின் தொடர்ந்தான்.. மாடியின் விஸ்தாரமான ஹாலை அடுத்த பெரிய பால்கனி இருந்தது. அதில் ஊஞ்சல் கட்டித் தொங்க விடப்பட்டிருந்தது.. ஊஞ்சலை சமீபித்த திவ்யா.. ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு விவேக்கின் முகத்தைப் பார்த்தாள்..

அவளது பார்வையால் பாதிக்கப்பட்ட விவேக்..

"என்னைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்..? ஏன் என்னைப் பார்க்காமலே திருமணதிற்கு சம்மதம் சொன்னீர்கள்..?" என்று கேட்டான்..

"அண்ணி.. எனக்கொரு நல்ல சிநேகிதி.. எல்லா விசயத்தையும் என்னிடம் ஷேர் பண்ணிக்குவாங்க.. உங்களைப் பற்றிய விவரங்களையும் அதே போல் என்னிடம் ஷேர் பண்ணிக் கொண்டாங்க.. எனக்கு உங்களைப் பிடித்திருந்தது.. என் விருப்பத்தை அப்பா விடம் சொன்னேன்.."

"ஓ.. வர்ஷாவின் விஷயம் கேள்விப்பட்டதும் என் மேல் பரிதாபம் கொண்டு விட்டீர்களா..?"

"வர்ஷாவின் மேல் நீங்கள் கொண்டதுதான் பரிதாபம்.. நான் உங்கள் மேல் கொண்டது காதல்.."

"காதல்..?"

அந்த வார்த்தையால் தாக்கப்பட்ட விவேக் பேச்சிழந்தான்.. இது எப்படி..?

"ஆமாம் காதல்தான்.. உங்களுடன் பேசிப் பழகாமலே உங்கள் மேல் காதல் கொண்டு விட்டேன்.. வாழ்ந்தால்

உங்களுடன் தான் வாழ வேண்டுமென்ற வைராக்கியம்.. கொண்டு விட்டேன்.."

"நீங்கள் பேசுவதைக் கேட்க நன்றாகத்தான் இருக்கிறது.. ஆனால் நீங்கள் சொல்வது நடைமுறையில் இல்லாத ஒன்று.. சினிமாக்களில் வேண்டுமானால் இது நடக்கலாம்.."

"சினிமாக்களில்தான் காதல் கோட்டை கட்ட வேண்டுமா..? நிஜத்தில் கட்டக் கூடாதா..? ஒருவரின் தோற்றத்தை விட அவரின் குணம் தான் அழகாக இருக்க வேண்டும்.. உங்கள் குணம் அழகு வாய்ந்தது.. உங்களது தோற்றத்தைப் போலக் குணமும் அழகாக இருப்பதுதான் அதிசயம்.. சிக்கலான பின்னணி இருப்பது தெரிந்தும் ஒரு பெண்ணை மணக்க விரும்பியிருக்கிறீர்கள்.. மகளை விட்டால் உறவென்று சொல்லிக் கொள்ள யாருமில்லாத அவளது தாய்க்கு கடைசி வரை அடைக்கலம் கொடுக்கத் தயாராய் இருந்திருக்கிறீர்கள்.. அவளை உங்கள் நண்பர் காதலிக்கிறார்.. அவளுக்கும் அவர் மேல் விருப்பமிருக்கிறது என்று தெரிந்ததும் விலகியிருக்கிறீர்கள்.. உங்களது இந்தக் குணங்களை காதலிக்காமல் என்னால் எப்படி இருக்க முடியும்..?"

விவேக் பேச்சிழந்தான்.. என்ன மாதிரியான அன்பு இது..? இதற்கு பெயர் தான் காதலா..? ஒரு கதவு மூடினால்.. மறு கதவு திறக்குமாமே.. திறந்து கதவில்.. இப்படி

ஒரு தேவதை போன்ற பெண்ணொருத்தி மாலை சூட்ட காத்திருப்பாளென்று யாரும் சொல்லவில்லையே..

"திவ்யா.. எனக்கு இது புதிது.. இந்த உணர்வு புதிது.."

"புதிதென்று தெரிந்து கொண்டு விட்டீர்கள் இல்லையா.. இனி என்னைத் திருமணம் செய்து கொள்ளத் தயக்கம் எதுவுமில்லையே.."

விவேக்.. அவளது முகத்தையே பார்த்தான்.. வட்ட வடிவமான முகம்.. அதில் படபடவென்று சிறகடிக்கும் இமைகள்.. அவனது பார்வையைத் தாள முடியாமல் விலகிப் பார்க்கும் விழிகள்.. இவள் யார்..? இதுவரை

எனக்காகக் காத்திருந்தாளா..? எனக்கே எனக்கெனப் பிறந்தவள் இவள் தானா..?

"திவ்யா.. நான் ஏற்கெனவே ஒரு பெண்ணை விரும்பி திருமணப் பேச்சு வரை போய் திரும்யிருப்பவன்.."

"வர்ஷாவை நீங்கள் விரும்பியிருக்கலாம்.. காதலித்தீர்களா..?"

"இல்லை.."

"என்னை நீங்கள் விரும்புகிறீர்களா.. காதலிக் கிறீர்களா..?"

'இவளைக் காதலிக்காமல் எப்படி இருக்க முடியும்..?' நினைத்ததை வாய் விட்டுச் சொன்னான்.. திவ்யா கண்கலங்க அவன் முகம் பார்த்தாள்..

"இந்த ஓர் வார்த்தை எனக்குப் போதும்.. ஏனென்றால் நான் உங்களை அந்த அளவிற்கு நேசிக்கிறேன்.."

ஊஞ்சலைப் பிடித்திருந்த அவள் விரல்களைப் பற்றினான் விவேக்.. அவளது தளிர் விரல்கள் அந்தத் தொடுகையைத் தாங்க முடியாமல் நடுங்கின..

நடுங்கும் விரல்களில் குனிந்து மென்மையாக முத்தமிட்டான் விவேக்.. அவள் ஆனந்தம் தாங்க முடியாமல் விம்மினாள்.. ஆதரவுடன் அவளை அணைத்துக் கொண்டான் அவன்.. அவனது தோளில் சாய்ந்த திவ்யா.. மயக்கத்துடன் விழி மூடினாள்..

"திவ்யா.."

"ம்ம்ம்.."

"ஐ லவ் யூ.."

அவள் விழி உயர்த்தி அவன் முகம் பார்த்தாள்.. அவன் மென்மையாய் வினவினான்..

"என்னடா..?"

"என் காதல் நிறைவேறுமா என்று நான் பயந்து போயிருந்தேன் தெரியுமா..?"

"உன் காதலில் நீ உறுதியாக இருக்கும் போது எதற்குப் பயம்..?"

"உங்களைப் பற்றித் தினமும் அண்ணியிடம் கேட்பேன்.. அவங்க உங்களைப் பற்றிச் சொல்லும் மிகச் சாதாரண விஷயம் கூட எனக்கு முக்கியமானதாக இருக்கும்.."

"ஆனால் மாலதி உன்னைப் பற்றி என்னிடம் பேசியதே இல்லையே.."

"நான் என் காதலை இப்போதுதானே சொன்னேன்.. உங்களிடம் என் காதலைச் சொல்லச் சொன்னேன்.. அது சரி வராதுன்னு அண்ணி சொல்லிட்டாங்க.. அவங்க சொல்வதை விட நீங்களே நேரில் என்னை அறிந்து கொள்வதுதான் சரியாக இருக்கும்ன்னு சொன்னாங்க.. நீங்கள் இன்றைக்கு வரப் போவதை அவங்க சொன்ன வுடன் காலையிலிருந்தே நான் காத்துக் கொண்டிருக் கிறேன்.. நேற்று இரவு நான் தூங்கவில்லை தெரியுமா..?"

விவேக் ஆச்சரியமடைந்தான்.. இப்படியெல்லாம் கூட ஒரு பெண் அவனுக்காக தவித்தாளா..? கேட்கவே சுகமாக இருந்தது அவனுக்கு..

"பட் திவ்யா.. மாலதி எப்போது என்னைப் பற்றி உன்னிடம் கூறினாள்..?"

அவனது கேள்விக்கு திவ்யா சொன்ன பதிலைக் கேட்டு விவேக் ஆச்சர்யத்தின் உச்சிக்கே போனான்.. இந்த நாள் இனிய நான் என்று விடியும் போது அவனுக்கு ஏன் தெரியவில்லை..? இது போல் ஓர் நாள் இதற்கு முன் வந்ததுமில்லை.. இனி வரப்போவதுமில்லை என அவன் நினைத்தான்..

## 14

"அண்ணன்.. அண்ணியின் திருமணத்தின் போதே.. நான் உங்களைப் பார்த்துப் பேசியிருக்கிறேன்... நினைவிருக்கிறதா..?"

அவன் யோசித்துப் பார்த்தான்... நினைவுக்கு வர வில்லை..

"நினைவில்லையே.." வருந்தும் குரலில் கூறினான்..

"இதற்காக வருத்தப்படுவானேன்...?" அவள் மென்மையாகச் சொன்னாள்..

"இல்லை திவ்யா... நீ என்னை நினைவில் வைத்திருக்கிறாய்.. நான் உன்னைக் கவனிக்கக் கூட இல்லையே..."

"அதுதான் என்னைக் கவர்ந்தது.. உங்கள் கூட இருந்த உங்களின் நண்பர்களில் ஒருவர் எங்களையே பார்த்துக் கொண்டிருந்தார்.. அவரிடம் கேட்டால்.. அவர் என்னை நன்றாக அடையாளம் சொல்லுவார்.."

"மணியாக இருக்கும்.."

நண்பனின் நினைவில் அவன் புன்னகைத்தான்..

"அவர் பெயர் அதுவா..? நாங்கள் எல்லோரும் அவருக்கு 'ஜொள் மன்னன்..' என்றல்லவா பெயர் வைத்திருந்தோம்.."

"நாங்கள் என்றால்..?"

"நானும் என்னுடைய பிரண்ட்ஸும்.. நான் அப்போதுதான் காலேஜில் பி.எஸ்ஸி பர்ஸ்ட் இயரில் ஜாயின் பண்ணியிருந்தேன்.. உங்கள் பிரண்ட் எங்களிடம் வழிந்தார்.. என் பெயர் அட்ரஸை எல்லாம் விசாரித்தார்.. நான் மாப்பிள்ளையின் தங்கை என்றதும் ஐயையோ.. மாலதியிடம் போட்டுக் கொடுத்து விடாதேம்மான்னு அலறிவிட்டு ஒதுங்கிக் கொண்டார்.."

"அவன் அப்படித்தான்.. விளையாட்டுப் பிள்ளை.."

"தீராத விளையாட்டுப் பிள்ளையா..?"

"அப்படியும் சொல்லலாம்.. இப்போது மனைவி.. குழந்தையென்று செட்டில் ஆகிவிட்டான்.."

"பாவம்.. அவருக்கு கால்கட்டு விழுந்து விட்டதா..?"

"அவன் மேல் இவ்வளவு பரிதாபமா..? நீ எனக்கும் கால்கட்டுப் போடத் துடிப்பவள் தானே.."

"நீங்கள் சமத்துப்பிள்ளையாச்சே.."

"அப்படி எழுதி முகத்தில் ஒட்டி இருக்கிறதா..?"

"பின்னே இல்லையா.. பொறுப்பாய் கல்யாண வேலைகளை ஓடி ஓடி கவனித்துக் கொண்டிருந்தீர்கள்..

பார்க்க வேறு வெகு ஹேன்ட்சம்மாக இருந்து தொலைத்தீர்கள்.."

"அது என்னவோ என் தவறுன்னு என்னைக் குறை கூறுவது போலல்லவா இருக்கிறது."

"பின்னே இல்லையா.. என் பிரண்ட்ஸ் எல்லோரும் உங்கள் பின்னால் ஜொள் விட்டுக் கொண்டு அலைந்தார்கள்.."

"ஈஸிட்.. நான் அப்போது இதைக் கவனிக்காமல் போய்விட்டேனே.."

"சாருக்கு அதில் ரொம்ப வருத்தம் போல் தெரிகிறது.."

"ஏய்ய்.. நான் சும்மா கேட்டேன்.."

"எனக்கென்னவோ அப்படித் தெரியவில்லை.."

"திவ்யா.. நான் பெண்களைக் கவனிக்கமாட்டேன். கூச்சப்படுவேன்.."

"வர்ஷாவை மட்டும் எப்படிக் கவனித்தீர்கள்..?"

திவ்யா அவனது அணைப்பிலிருந்து விலகி ஊஞ்சலில் அமர்ந்து கொண்டாள்.. அவளது முகம் சிணுங்கியிருந்தது.. விவேக் புன்னகையுடன் அவள் அருகில் அமர்ந்து அவளது முகத்தைத் தொட்டுத் தன் புறம் திருப்பி ஆழமாக பார்த்தான்.. அவளது கண் மிக மிக லேசாக கலங்கி உதடுகள் துடித்தன..

"ஏய்ய்.. என்ன..? பொறாமையா..?"

"பின்னே இருக்காதா..? கரண் அண்ணாவின் கல்யாணத்தின் போதே என் மனதில் நீங்கள் குடியேறி விட்டீர்கள்.. நீங்கள் அண்ணனின் நண்பராக இருந்திருந்தால் அப்போதே.. நான் உங்களைப் பற்றி அண்ணனிடம் விசாரித்திருப்பேன்.. ஆனால் நீங்கள் அண்ணியின் நண்பனாகப் போய் விட்டீர்கள்.. எப்படி நான் உங்களைப் பற்றி அண்ணியிடம் விசாரிக்க முடியும்..? ஆரம்பத்தில் அண்ணியுடன் எனக்கு அவ்வளவாக பழக்கமில்லையே.. போகப் போக அண்ணி என் சிநேசிதியாகி விட்ட பின் உங்களைப் பற்றி விசாரித்த போது.. நீங்கள் அண்ணியின் வீட்டிற்குப் பக்கத்திலேயே வீடு வாங்கியிருப்பதாகச் சொன்னார்கள்.. சரி.. நீங்கள்

எங்கே போய் விடப் போகிறீர்கள்.. என்று நான் அமைதியாகப் படிப்பை முடித்தேன்.. என் திருமணப் பேச்சு வந்த போது உங்கள் பெயரைச் சொல்லுவதற்கு முன் உங்களிடம் என் காதலைச் சொல்லி சம்மதம் வாங்க எண்ணி அண்ணியின் உதவியை நாடி வந்தேன்.. அண்ணி வழக்கம் போல் உங்களைப் பற்றிச் சொன்னார்கள்.. சொல்லும்போது போனஸாக நீங்கள் வர்ஷாவை விரும்பி திருமணம் பேசி முடித்து விட்டதையும் சொன்னார்கள்.. விவேக்.. அன்றைக்கு நான் எப்படி வீடு வந்து சேர்ந்தேனென்று எனக்கே தெரியாது.. விவேக்.. நான் தோற்றுவிட்டேனென்று அன்று முழுவதும் எப்படி அழுதேன் தெரியுமா..? முயல் ஆமை கதை போல் என் கதையும் அன்று ஆகிவிட்டது.. நான் காதலைச் சொல்லத் தாமதம் செய்தேன்.. நீங்கள் என்கைப்பொருள்.. நழுவி விட மாட்டீர்கள் என்ற அசட்டு நம்பிக்கையோடு படித்துக் கொண்டிருந்து விட்டேன்.."

திவ்யா.. துயரம் மேலிட பேச்சை நிறுத்தினாள்.. அவள் கண்களில் வழிந்த கண்ணீரைத் தன் விரல்களால் துடைத்து விட்ட விவேக் அவளைத் தன் மார்பு மேல் சாய்த்துக் கொண்டான்.. ஊஞ்சலின் மெதுவான ஆட்டத்தில் அவன் மார்போடு சாய்ந்தவாறு மேலும் தொடர்ந்தாள் திவ்யா..

"தயக்கம்.. அப்பா.. என்னைப் பற்றி என்ன நினைப் பாரோ என்கிற தயக்கம்.. படிப்பை முடிக்காமல் எப்படி என் காதலைச் சொல்வது என்கிற தயக்கம்.. படிப்பை முடித்த பின் எப்படி எனக்குக் கல்யாணம் பண்ணி வையுங்கள்னு கேட்பது என்ற தயக்கம்.. நான் தயங்கித் தயங்கி ஒரு வழியாய் வீட்டில் திருமணப் பேச்சை எடுத்ததும் அண்ணியைத் தேடி வந்தால்.. அண்ணி உங்கள் திருமணச் செய்தியைச் சொன்னாங்க.. நான் என் மனதை மறைத்துக் கொண்டு திரும்பி விட்டேன்.. அதற்கப்புறமும் இந்தப் பாழும் மனது படுத்தும் பாட்டைத் தாங்க முடியாமல் உங்களைப் பற்றி விசாரித்துக் கொண்டே இருந்தேன்.. என் காதலுக்கும் சக்தி இருந்தது போல.. உங்கள் திருமணம் நின்று போய் விட்டது.. ஆறு நாள்களுக்கு முன்னால்

அண்ணி இங்கே வந்திருந்தாங்க.. என்னிடம் பேசினாங்க.. என்னவென்று தெரியுமா..?"

"என்ன..?"

"திவ்யா.. உன் அப்பா உனக்கு மாப்பிள்ளை பார்க்கச் சொல்லி உன் அண்ணனிடம் சொல்லியிருக்கிறார்.. நிறையப் படித்த அவருடைய தொழிலை அவருக்குப் பின் பொறுப்பாகப் பார்த்துக் கொள்ளும் திறமை கொண்ட.. அழகான.. நல்ல குணமுள்ள.. வீட்டோடு மாப்பிள்ளையாய் இருக்கச் சம்மதிக்கும் மாப்பிள்ளை வேண்டுமாம்..

உன் அப்பா போடும் கடைசி கண்டிசனுக்கு மட்டும் அவன் சம்மதிப்பானான்னு தெரியவில்லை.. ஆனால் அவன் எம்பிஏ படித்திருக்கிறான்.. திறமைசாலி.. அவன் குணத்தைப் பற்றி அவனைத் தெரிந்த எல்லோருக்கும் தெரியும்.. தங்கம் அவன்.. ரொம்ப அழகானவன்.. அவனை உனக்கும் தெரியும்.. அவனைப் பற்றி உன் அப்பாவிடம் பேசவா என்றாங்க.. நான் அசிரத்தையாய் யார் அது என்றேன்.. 'விவேக்' என்றாங்க.. எனக்கு எப்படியிருந்திருக்கும்ன்னு உங்களால் புரிந்து கொள்ள முடிகின்றதா.."

திவ்யா குழந்தையாய் கூறினாள்.. தன் கால்களால் தரையில் விந்தி ஊஞ்சலின் ஆட்டத்தை அதிகப் படுத்தினாள்.. விவேக் அவளது தலைமீது முகம் பதித்தான்..

"எனக்கு ஜிலிர்ன்னு ஆகிவிட்டது விவேக்.. எப்படி இந்த அற்புதம் நிகழ்ந்ததுன்னு புரியவில்லை.. ஆனால் அற்புதம் நடந்து விட்டது.. நான் அண்ணியென்று அவங்களைக் கட்டிக் கொண்டு அழுது விட்டேன்.. அவங்க பதறிட்டாங்க.. நான் சொல்லச் சொல்ல

திகைத்துப் போயிட்டாங்க.. அப்புறமாகத்தான்.. வர்ஷாவை நீங்கள் எதனால் திருமணம் பண்ணிக்கொள்ள விரும்பினீர்கள்.. அவளுடைய அம்மா மேல் எப்படி கருணை காட்டினீர்கள்.. அப்புறமாய் ஆகாஷைப் பற்றியும் வர்ஷாவைப் பற்றியும் கேள்விப்பட்டவுடன் எப்படித் திருமணத்தை நிறுத்தி விட்டீர்கள்ன்னு எடுத்துச் சொன்னாங்க.. உங்கள் மேல் எனக்கிருந்த காதல் இன்னும்

அதிகமாகி விட்டது.. அப்புறம் அண்ணிதான் அண்ணாவிடம் சொல்லி என் காதலை மறைத்து அப்பாவிடம் உங்களைப் பற்றி எடுத்துச் சொல்ல வைத்தாங்க.. அப்பா என்னிடம் சம்மதம் கேட்டார்.. உங்களைப் பார்க்க வேண்டுமான்னு கேட்டார்.. அதற்கு அவசியம் இல்லைன்னு சொன்னேன்.. அவராக அதற்கு ஒரு அர்த்தம் கண்டுபிடித்துக் கொண்டார்.. நீங்களும் வந்தீர்கள்.. என்னைப் பார்த்தீர்கள்.. என் பாடலை ரசித்தீர்கள்.. என்னுடன் பேச வேண்டும் என்றீர்கள்.. இப்போது பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.."

உண்மையான காதலுக்கு சக்தி இருக்கிறது என்பதை நிரூபித்த திவ்யா.. தன் காதல் ஜெயித்த கதையை எடுத்துக் கூறினாள்.. இங்கே ஒருத்தி தனக்காக ஏங்கிக் கொண்டிருக்க, வேறொருத்தியின் பின் தன் மனதைப் போக விட்டதற்காக விவேக் தன்னை நொந்து கொண்டான்..

"என்னை மன்னித்து விடு திவ்யா.."

"எதற்காக மன்னிப்புக் கேட்கிறீர்கள்.."

"உன் காதல் தெரியாமல் கானலின் பின் போக இருந்தேனே.."

"வர்ஷா கானலென்றால் நான் யார்..?"

"வற்றாத ஜீவ நதி.."

இருவரும் இணைந்து மாடியிலிருந்து வரும்போது அவர்களது ஜோடிப் பொருத்தத்தைக் கண்டு ராமகிருஷ்ணன் பூரிக்க.. விவேக்கின் முகத்திலிருந்த மலர்ச்சியைக் கண்டு மாலதி நிம்மதி அடைந்தாள்..

விவேக் என்னும் அவளுடைய இனிய சிநேகிதன் அவனை நேசிக்கும் காதல் புறாவின் சிறகில் பாதுகாப்பாக அடைக்கலம் அடைந்துவிட்டான்.. இனி அவனை திவ்யா பார்த்துக் கொள்வாள்.. மாலதி நிம்மதியாக இருக்கலாம்..

வீடு திரும்பும் போது விவேக்.. மாலதியிடம்,

"தேங்க்ஸ்.." என்றான்.. அந்த ஒரு வார்த்தையில் ஆயிரம் கோடி நன்றிகள் ஒளிந்திருந்தன..

"போடா.." என்றாள் விவேக்கின் உண்மை சிநேகிதி..

"உங்கள் பெரியம்மாவிடம் சொல்லி விட்டீர்களா விவேக்.." கரண விசாரித்தான்..

"ம்ம்.. மறைமுகமாய் சொல்லியிருக்கிறேன்.. இப்போதைக்கு கல்யாணம் வேண்டாம் பெரியம்மா.. கொஞ்ச நாள் போகட்டும் என்றேன்.."

"அவங்க வர்ஷா வீட்டில் சொல்லியிருப்பாங்களா.."

"தெரியவில்லை.. நாளை போய் அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டு வந்து விடுகிறேன்.."

"என்னவென்று சொல்லப் போகிறீர்கள்..?"

"என்னை வில்லனாக காட்டிக் கொள்ளப் போகிறேன்.."

"நீயாடா வில்லன்..? நீ ரியல் ஹீரோடா.."

"வேறு வழியில்லை மாலதி.. திவ்யா அவளுடைய காதலைச் சொன்னபோது உருகிவிட்டேன்.. காதல் கொண்டால் இவ்வளவு வேதனையை அனுபவிப் பார்களா..? ஆகாஷும் இப்படித்தானே வேதனைப் பட்டுக் கொண்டிருப்பான்..? அவனை வர்ஷாவின் அம்மா ஏற்றுக் கொள்ள வேண்டுமானால் நான் வில்லன் வேசம் போடத்தான் வேண்டும்.."

"என்னடா செய்யப் போகிறாய்..?"

"வர்ஷாவை விட அழகான.. பணக்காரப் பெண் கிடைத்ததினால் என் முடிவை மாற்றிக் கொண்டு விட்டேனென்று சொல்லப் போகிறேன்.. எப்படியும் திவ்யா வர்ஷாவை விடப் பணக்காரி தானே.."

"அவளுடைய பணத்துக்காகவாடா நீ அவளை ஏற்றுக் கொண்டாய்.."

"அவள் என்னுடையவள்.. எனக்காக வாழ்ந்து கொண்டிருப்பவள் என்று தெரிந்ததால் ஏற்றுக் கொண்டேன்.. அந்தக் கதை அவர்களுக்கு எதற்கு..? நான் இந்தக் கதையை எடுத்து விடப் போகிறேன்.. அதனால் என்னை விட.. ஆகாஷ் பெட்டர்ன்னு வர்ஷாவின் அம்மா நினைக்கலாம் இல்லையா..? அதன்பின்.. நீ வர்ஷா விடம் பேசு.."

"அவளிடம் என்னை என்ன பேசச் சொல்கிறாய்..?"

"அவளை வெறுக்காதே.. அவள் நல்ல பெண்.. பரிதாபத்துக்குரியவள்ன்னு அன்றே சொன்னேனா இல்லையா..? என் வார்த்தைக்கு நீ கொடுக்கும் மதிப்பு இதுதானா..?"

"என்னால் அவள் செய்ய இருந்த காரியத்தை தாங்கிக் கொள்ள முடியவில்லை விவேக்.. ஆகாஷை மனதில் நினைத்துக் கொண்டு உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள அவள் தயாராக இருந்ததை எப்படி மன்னிக்கச் சொல்கிறாய்..?"

"அவள் நிலையில் இருந்து பார்த்தால்தான் இது உனக்குப் புரியும்.."

"என்னடா பொல்லாத நிலைமை..?"

"பொல்லாத நிலைமைதான்.. அவளுடைய போதாத காலம்தான்.. அவளை உன்னைப் போன்ற ஒரு நல்ல பெண்ணை தவறாக நினைக்க வைத்திருக்கிறது.."

"திவ்யாவைப் பாருடா.. உன்னை நினைத்து உனக்காக வாழ்ந்திருக்கிறாள்.."

"திவ்யாவின் நிலைமை வேறு.. வர்ஷாவின் நிலைமை வேறு.. திவ்யா அவளுடைய வீட்டுக்கு ஒரே பெண்.. செல்லப் பெண்.."

"வர்ஷாவும் அவளுடைய வீட்டுக்கு ஒரே பெண் தானேடா.."

"இல்லை.."

விவேக் தலையை ஆட்டி மறுத்தான்.. மாலதி கேள்வியாய் அவனைப் பார்த்தாள்..

"என்னடா சொல்கிறாய்..?"

"நான் எதையும் சொல்ல மாட்டேன் மாலதி.. நீ வர்ஷாவிடம் பேசு.. நடந்த உண்மைகளை எடுத்துச் சொல்.. வர்ஷாவின் அம்மாவிடம் நான் கெட்டவன் வேசம் போடுவதற்கு காரணம்.. ஆகாஷின் காதல் நிறைவேற வேண்டும் என்பதற்காகத்தான் என்பதை அவளிடம் சொல்லு.. அவள் அதன் பின்னால் உன்னிடம் எல்லா உண்மைகளையும்

சொல்லுவாள்.. அவள் சொல்வதைக் கேட்டுவிட்டு ஒரு முடிவுக்கு வா.."

மாலதி விவேக்கின் முகத்தை கூர்ந்து பார்த்தாள்..

'இவன் மனதில் இன்னும் வர்ஷாவின் மேல் எண்ணம் இருக்கிறதா..'

"இல்லை.." என்றான் விவேக்..

"உன் மனதில் நீ என்ன நினைக்கிறாய்ன்னு எனக்குத் தெரியும் மாலதி.. என் மனதில் இனி நான் வாழும் காலம் முழுவதும் திவ்யாவைப் பற்றிய நினைவு மட்டுமே இருக்கும்.. வர்ஷாவின் மேல் எனக்கிருப்பது பரிதாபம்.. பாவம்... யாரோ செய்த தவறிற்கு அவள் காலம் முழுவதும் சிலுவை சுமக்க வேண்டியிருக்கிறது.."

# 15

விவேக் பார்வதியம்மாளின் வீட்டிற்கு போன போது அவள் அவனிடம் சரியாக முகம் கொடுத்துப் பேச வில்லை.. அவளின் கோபத்தின் காரணம் புரிந்தும் அறியாதவன் போல் வினவினான் விவேக்..

"என்ன பெரியம்மா.. பேச மாட்டேன்கிறீங்க..?"

"உன்னுடன் நான் எதற்கடா பேச வேண்டும்..? நீதானே அந்த வர்ஷாப் பெண்ணின் கதையைக் கேட்டுவிட்டு அவள் மேல் கருணை காட்டினாய்.. ஐயோ பாவம்.. நான் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்.. அவளுடைய அம்மாவும் அவங்க கடைசிக் காலம் வரைக்கும் என்னுடனே இருக்கட்டும் என்றாய்.. உன்னை நம்பி அந்த அப்பாவி மல்லிகாவின் மனதில் ஆசையை வளர்த்து விட்டேன்.. இப்போது வேறொரு பணக்கார இடம் கிடைத்ததும் இந்தப் பெண்ணை வேண்டாமென்று சொல்லிவிட்டாயே.. இதுதான் நீ படித்த லட்சணமா..?"

"கோபப்படாதீங்க பெரியம்மா.. கடல்போல் வீடு.. பெரிய கிரானைட் பேக்டரி.. இவை இரண்டுடன் கண்ணுக்கு அழகான பெண்.. இது மொத்தத்தையும் நீயே எடுத்துக்

கொள் என்று அதிர்ஷ்ட தேவதை என் வீட்டுக் கதவை தட்டும் போது நான் எப்படி பெரியம்மா திறக்காமல் இருப்பேன்.."

"நல்லா பேசக் கத்துக்கிட்டடா.. நீ.."

"நீங்க கொஞ்சம் என் பக்கம் இருக்கும் நியாயத்தைப் பாருங்க பெரியம்மா.. எனக்கோ அப்பா அம்மா இல்லை.. அவங்க வீட்டோடு மருமகனாய் இருங்க.. நீங்கதான் எங்களுக்கு மகன் மாதிரிங்கிறாங்க.. இந்தப் பெண் வர்ஷாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அவளுடைய அம்மா வேண்டுமானால் என் வீட்டோடு மாமியாராய் வந்து சேருவார்கள்.. காலமெல்லாம் அவங்க சுமையை நான் சுமக்க வேண்டும்.. எனக்கு இது தேவைதானா..?"

வரும்போதே வர்ஷாவின் அம்மா மல்லிகாவின் தலை வாசலில் தென்படுவதைக் கவனித்து விட்டான் விவேக்.. நிச்சயம் மகளின் வாழ்க்கைக்காக பேச அந்த அம்மாள் வருவாள் என்பதை யூகித்தவனாய் பலமாக பேச ஆரம்பித்தான்.. அவளும் வந்து நின்று கேட்க ஆரம்பித்து விட்டாள்.. அவளின் நிழலைக் கண்டதும் போட்டுக் கொண்டிருந்த வில்லன் வேடத்தை சிறப்பாக போட ஆரம்பித்தான் அவன்..

"நரம்பில்லாத நாக்குங்கிறது உன் விசயத்தில் சரியாகத்தான் இருக்குடா.. அப்போது என்னடான்னா.. வர்ஷாவின் குடும்பத்திற்கு நான்தான் குடை பிடிப்பேன்னு தவ்விக்கிட்டு நின்ன... இப்போது என்னடான்னா.. வீட்டோடு மாமியாரை வைத்துக் கொண்டு காலமெல்லாம் சுமக்கவாங்கிற.. நீ உன் மனதிலே என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிற..?"

"என் எதிர்கால வாழ்க்கையைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.. பெரியம்மா.. நான் ஏன் வர்ஷா விற்காக எனக்கு வரும் வளமான வாழ்க்கையை தட்டிக் கழிக்கணும்..? நான் என்ன கேணையனா..? ஒருவேளை வர்ஷாவை நான் காதலித்திருந்தேன்னா அந்தத் தியாகி வேலையை எல்லாம் பண்ணுவேன்.. நான் ஒன்றும்

வர்ஷாவைக் காதலிக்கவில்லையே.. பெண் கேட்டேன்.. சரின்னாங்க.. கல்யாணம் பேசினோம்.. நான் என்ன நிச்சயதார்த்தம் எதுவும் நடத்தினேனா..? வெறும் வாய் வார்த்தையில் பேசியதுதானே.. அதை வைத்துக் கொண்டு என்னைக் குற்றம் சாட்டினால் எப்படி..?"

"நீ இப்படியும் பேசுவ.. அப்படியும் பேசுவ.. தட்டிக் கழிக்கணும்னு முடிவு பண்ணிய பின்னால் எப்படி வேணும்னாலும் பேசுவடா.."

"என் பேச்சில் குத்தம் கண்டு பிடிக்காமல் என் பக்க நியாயத்தை புரிந்து கொள்ள முயற்சி பண்ணுங்க பெரியம்மா.."

"உன் பக்கம் நியாயம் இருந்தால்தானேடா நான் புரிந்து கொள்ள முயற்சி பண்ணுவேன்.. அதில் தான் நியாயமே இல்லையே.."

"ஊராருக்காக.. உறவுக்காரனை பகைத்துக் கொள்ளாதீங்க பெரியம்மா.. அவர்கள் உறவு இடையில் வந்தது.. என் உறவு தான் என்றைக்கும் நிலைத்திருப்பது.."

"அப்படியாடா ராஜா.. நீ இன்றைக்கு ஒரு பேச்சு பேசுவ.. நாளைக்கு ஒரு பேச்சு பேசுவ.. உன் உறவுக்காக நான் கொடுத்த வாக்குறுதியை காற்றில் பறக்க விட்டுட்டு 'ஈ'ன்னு உன்னிடம் சிரித்துப் பேசணும்.. கனவுதான்டா உனக்கு.."

"பெரியம்மா.. இந்தக் காலத்தில் வரதட்சணை.. நகை.. கார்.. வீடுன்னு அள்ளிக் கொடுக்காமல் என்னைப் போல ஸ்டேட்டஸ் உள்ள மாப்பிள்ளையை பிடிக்க முடியாது.. அவர்களின் ஆசைக்கும் ஓர் அளவு இருக்க வேண்டும்.."

"விவேக்.. என் வாயைப் பிடுங்காதே.. உன் ஸ்டேட்டஸை பார்த்து விட்டு பெண் கொடுக்கிறேன்னு அவங்களா வந்து உன் காலைப் பிடித்தாங்க..? நீதானேடா.. சும்மா இருந்தவங்க மனசில் ஆசையை விதைத்தாய்.. இது சரியில்லைடா விவேக்.. அவ்வளவுதான் நான் சொல்வேன்.."

"என் வாழ்க்கைக்கு எது சரியோ.. அதுதான் எனக்கும் சரி.. இதில் வீணாய் நீங்க தலையிடாதீங்க.."

விவேக் மல்லிகா நின்று கொண்டிருந்ததை கவனிக்காதவன் போல் விடுவிடென்று நடந்து காரில் ஏறிச் சென்று விட்டான்.. அவன் பின்னாலேயே திட்டிக் கொண்டு வந்த பார்வதியம்மாள் மல்லிகாவைக் கண்டதும் பதறி விட்டாள்..

"மல்லிகா.. நீ எப்போது வந்தாய்..?"

"உங்க மகன் வந்தபோதே வந்து விட்டேன்ம்மா.."

"அவன் பேசியதை கேட்டுவிட்டாயா..?"

"காது குளிர கேட்டுவிட்டேன்ம்மா.. நான் கடவுளிடம் என்ன வரம் வாங்கிப் பிறந்தேனோ தெரியவில்லையே.. இன்னும் எத்தனையைத்தான் நான் கேட்க வேண்டி யிருக்குமோ.. அந்த ஆண்டவன் கட்டளை என்னன்னு எனக்குப் புரியலையே.."

மல்லிகா கதறி அழுதாள்.. பார்வதியம்மாளின் மனது பாரமானது.. இந்தப் பெண்ணின் அழுகைக்கு ஒரு வகையில் அவளும் காரணமாகி விட்டாளே..

"அழுகாதே மல்லிகா.. இவன் போனால் என்ன.. வர்ஷாவைக் கட்டிக் கொள்ள வேறு ஒரு மாப்பிள்ளை கிடைக்காமலா போய் விடுவான்..? வசதியைப் பார்த்ததும் இவன் இந்த ஆட்டம் போடுகிறான்.. பணக்காரங்க குணம் என்ன.. உன்னைப் போன்றவங்க குணம் என்னன்னு புரிந்திருந்தால் இப்படிப் பேசியிருக்க மாட்டான்.. விட்டுத் தள்ளு.."

மல்லிகா பதில் சொல்லாமல் சேலைத் தலைப்பினால் கண்களை துடைத்துக் கொண்டு அவளுடைய வீடு நோக்கி நடந்தாள்.. வர்ஷா அப்போதுதான் வேலையிலிருந்து திரும்பியிருந்தாள்.. வீட்டிற்குள் தாயைக் காணாமல் தேடியவள்.. பார்வதியின் வீட்டிலிருந்து வெளிப்பட்ட தாயைக் கண்டதும்..

"நீங்க அங்கேயா இருந்தீங்க.. நான் உங்களைக் காணோமேன்னு தேடிக் கொண்டிருந்தேன்.." என்றாள்..

மகள் சொல்வதைக் கவனிக்காமல் உள்ளே சென்ற தாயைக் கண்டதும் வர்ஷாவிற்கு சந்தேகம் வந்தது..

'அம்மா.. என்னவோ போல் இருக்கிறார்களே..' அவசரமாய் மல்லிகாவின் அருகில் சென்று அவள் முகத்தை தன் பக்கம் திருப்பினாள்.. கரகரவென்று கண்ணீர் துளிகள் வழிய அழுது கொண்டிருந்தாள் மல்லிகா..

"அம்மா.." என்றாள் வர்ஷா அதிர்ச்சியுடன்..

"வர்ஷா.." என்று மகளைக் கட்டிக் கொண்டு கதறினாள் மல்லிகா..

"என்னம்மா.. என்ன ஆச்சு.." தாயை ஆதரவாய் தாங்கிப் பிடித்து உட்கார வைத்த வர்ஷா அவளருகே அமர்ந்து கொண்டாள்..

தூண்டித் துருவி வர்ஷா குடைந்த குடைச்சலில் விவேக் பேசி அனைத்தையும் சொல்லிவிட்டாள்

மல்லிகா..

உடலெங்கும் பிணைக்கப்பட்டிருந்த தளைகள் அகன்று சுதந்திரமாகிவிட்டது போல் உணர்ந்தாள் வர்ஷா..

'அப்பாடி..' என்ற விடுதலை உணர்வுடன்..

"இவ்வளவுதானே.. இதற்குப் போயா அழுதீங்க..?" என்று வினவினாள்..

"என்னடி வர்ஷா.. இப்படிச் சொல்லிவிட்ட..? உன் கல்யாணம் நின்று போய் விட்டது.. உனக்கு வருத்தமாக இல்லையா..?"

"அம்மா.. இது பெரிய விசயம் இல்லை.. நாம் இதைவிட பெரிய கஷ்டங்களைத் தாண்டி வந்திருக் கிறோம்.. அந்தக் கஷ்டங்களோடு ஒப்பிடும் போது.. இதெல்லாம் ஜுஜுபி..."

"இருந்தாலும் வர்ஷா.."

"அம்மா.. அந்த ஆளின் குணம் இப்போதே தெரிந்து வீட்டதேன்னு சந்தோசப்படுங்க... ஒரு வேளை கல்யாணம் ஆன பின் அவனின் குணம் தெரிய வந்திருந்தால் என்ன செய்திருப்போம்.. அதற்கு இது பெட்டர் இல்லையா..?"

"நீ பாட்டுக்கு வேலைக்கு போய் வந்து கொண்டிருந் தாய்.. உன் மனதில் ஆசையை கிளப்பிவிட்டு.. இப்போது

கல்யாணத்தை நிறுத்தி விட்டோமே.. இதனால் உன் மனம் என்ன பாடுபடும்..?"

"சுண்டைக்காகய் அளவு கூட பாடுபடாது.. அம்மா.. எனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமே இல்லை.. உங்களின் ஆசைக்காக அமைதியாக இருந்தேன்.. இந்தக் கல்யாணம் நின்று போனதால் எனக்கு எந்த வித பாதிப்பும் இல்லை."

அன்று இரவு வர்ஷா நிம்மதியாக உறங்கினாள்.. மறுநாள் காலையில் அலுவலகம் சென்றபோது உற்சாகத்துடன் காணப்பட்டாள்.. அவள் சீட்டில் அமர்ந்த அடுத்த நிமிடம் வழக்கம் போல ஆகாஷ் 'இன்டர்காமில்' அழைத்தான்.. எழுந்து ஒரு விரலால் கதவைத் தட்டி அனுமதி வாங்கிக் கொண்டு அவனுடைய அறைக்குள் சென்றவள்,

"குட்மார்னிங் சார்.." என்றாள் துள்ளலான குரலுடன்..

அவளது துள்ளலான குரலைக் கேட்டு அவளைக் கவனித்தவன்,

"ஹேப்பியாக இருக்கிறாயே ஏதும் விசேசமா..?" என்று புன்னகையுடன் கேட்டான்..

அவள், "ஊஹும்.." என்று தலையை ஆட்டும் போது.. அவள் காதில் போட்டிருந்த முத்து ஜிமிக்கியும் சேர்ந்து ஆடியது.. ஆகாஷ் ஒருகணம் தன்னை மறந்து அவளைப் பார்த்தான்.. எப்போதும் ஓர்வித சோகத்துடன் காணப்படும் அவள் முகத்தில் இன்று வெளிச்சம் தெரிந்தது.. அவனின் பார்வை கண்டு விலகும் விழிகள் இன்று விலகாமல் அவனது பார்வையோடு விளையாடின.. உதடுகளில் உல்லாசமாய் புன்முறுவல் ஒன்றை வேறு உதிர்த்து வைக்க ஆகாஷ் மெய் மறந்தான்..

"வர்ஷா.."

"ம்ம்.."

"இன்று புதிதாய் தெரிகிறாய்.."

"இல்லையே.. நான் உடுத்தியிருக்கும் சேலை முதல் போட்டிருக்கும் நகைகள் வரை எல்லாமும் பழையது தானே.."

"ஆனால் அதை போட்டிருக்கும் வர்ஷா புதியவள்.."

"ஆகாஷ்.." அவள் செல்லமாய் அழைத்தாள்..

அவன் சீட்டை விட்டு எழுந்து அவளருகில் வந்து விட்டான்.. அவள் முகம் சிவக்க தலை கவிழ்ந்தாள்..

"சொல்.. என்ன விசேசம்..?"

"எனக்கு உங்களைப் பார்க்க வேண்டும் போல் தோன்றியது.. அதுதான் விசேசம்.."

"ஏய்ய்.."

ஆகாஷ் அவள் தோள் தொட்டு தன்புறம் திருப்பினான்.. அவள் விலகாமல் அவன் புறம் திரும்பினாள்.

"இன்று என்ன.. எனக்கு ஆச்சர்யங்களை அள்ளித் தருகிறாய்.."

"நான் நானாக இருப்பது உங்களுக்கு ஆச்சர்யமா..?"

"நீ நீயாக இருக்கிறாயா..?"

"ஆமாம்..?"

"என் காதலை ஏற்றுக் கொண்ட வர்ஷாவாக இருக்கிறாயா.."

கணப்பொழுதில் அவளது உற்சாகம் வடிந்தது.. மீண்டும் சோகத்திரை அவள் முகத்தில் படிந்தது..

"ஆகாஷ்.. உங்கள் காதலை நான் ஏற்றுக் கொள் கிறேனோ இல்லையோ.. மற்றவர்களின் காதலை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்திலிருந்து இன்று விடுபட்டிருக்கிறேன்.. எனது சந்தோசத்திற்கு இதுதான் காரணம்.."

"வர்ஷா.."

"ஆமாம் ஆகாஷ்.. என் வீட்டில் எனக்கு கல்யாணம் பேசியிருந்தார்கள்.. அந்த கல்யாணம் நின்று போய் விட்டது.. அதுதான் நீங்கள் கேட்ட.. நான் கொண்டாடும் விசேசம்.."

"வர்ஷா.."

"என் அம்மா அழுது கொண்டிருக்கிறார்கள்.. நான் சிரித்துக் கொண்டிருக்கிறேன்.. நேற்று இந்தச் செய்தியைக் கேட்டதிலிருந்து வானில் பறப்பது போல் உணர்கிறேன்.."

"வர்ஷா.."

"இனியொருவன் இதுபோல பெண் கேட்டு வரமாட்டானான்னு நீங்கள் கேட்பீர்கள்.. வரமாட்டான்.. வர்ஷாவை பெண் கேட்டு இனி எவனும் வரமாட்டான்.. வர்ஷா சுதந்திரமானவள்.. என்னால் உங்களைக் காதலிக்க முடியாது.. ஆனால் உங்களால் காதலிக்கப் படும் உணர்வை ஆனந்தமாய் இனி நான் அனுபவிக்கலாம்.." வர்ஷா பைத்தியக்காரி போல் கடகடவென்று சிரித்தாள்..

## 16

ஆகாஷ் வர்ஷாவையே இமைக்காமல் பார்த்தான்..

'இவளுக்கு என்ன நேர்ந்து விட்டது..? ஏன் இப்படிச் சிரிக்கிறாள்..'

அவன் பார்ப்பதை உணர்ந்ததும் வர்ஷா சிரிப்பை நிறுத்தினாள்.. அவளது புருவங்களை உயர்த்தினாள்..

"என்ன ஆகாஷ் பயந்து விட்டீர்களா..? எனக்கு பைத்தியம் பிடித்து விட்டதோன்னு நினைத்து விட்டீர்களா..? இல்லை.. எனக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை.."

ஆகாஷ் கவலையுடன் அவளைப் பார்த்தான்.. 'இப்படி எதையும் வெளியில் சொல்லாமல் மனதிற் குள்ளேயே போட்டுப் பூட்டி வைத்திருந்தால் கூடிய சீக்கிரம் அது பிடித்து விடும்.. அதை எப்படி இவளிடம் சொல்வது..?'

"மனம் விட்டு உன் பிரச்சனை என்னவென்று என்னிடம் சொல்லக் கூடாதா வர்ஷா..? நான உனக்கு மூன்றாம் மனிதனா..?"

வர்ஷா காதலுடன் ஆகாஷைப் பார்த்தாள்.. அவளது பார்வை பல கோடிக் கதைகளைக் கூறியது..

"நீங்கள்தான் எனக்கு எல்லாமும்.."

"வர்ஷா.." ஆகாஷ் உணர்ச்சிப் பெருக்கோடு அவளது கையைப் பிடித்தான்.. அவனது கையிலிருந்து தனது கையை உருவிக் கொள்ளாமல் அப்படியே விட்டு வைத்த வர்ஷா..

"ஆனால் நான் உங்களிடம் காதல் சொல்ல மாட்டேன்.. உங்களது காதலை ஏற்றுக் கொள்ள மாட்டேன்.. காதல் கல்யாணம் பண்ணிக்கொள்ளவும் மாட்டேன்.." என்று கூறினாள்..

அவளது கையை ஆகாஷின் கை தானாய் விடுவித்தது..

"நீ சொல்வதன் அர்த்தம் புரிகிறதா உனக்கு..?"

"புரியாமல் என்ன.. நன்றாகப் புரிகிறது.."

"எனக்கும் அம்மா.. அப்பா இருக்கிறார்கள்.. அவர்களுக்கு நான் ஒற்றைப் பிள்ளை.. எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டுமென்று இந்த இரண்டு வருடங்களாய் படாதபாடு பட்டுக் கொண்டிருக் கிறார்கள்.. நான் இனியும் அதிக நாள் என் கல்யாணத்தை தள்ளிப் போட முடியாது.."

"ஏன் தள்ளிப் போட வேண்டும்..? மகாராஜனாய் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டியதுதானே.."

"நான் வேறொருத்தியைக் கல்யாணம் பண்ணிக் கொள்வது உன்னை பாதிக்காதா..? நீ அதை தாங்கிக் கொள்வாயா..?"

வர்ஷா ஏழைச் சிரிப்பொன்றை சிரித்தாள்.. ஆகாஷின் மனம் வலித்தது..

'இந்தப் பெண்ணின் மனதை துன்புறுத்தும் விசயம் என்ன..? இப்படி அநாதை போல் ஓர் சிரிப்பை சிரித்து வைக்கிறாளே..'

"தாங்கிக் கொள்ள முடியாத எத்தனையோ இழப்புக் களை தாங்கிக் கொண்டுதான் உயிர் வாழ்ந்து கொண்டிருக் கிறேன்.. என் அம்மாவிற்காக.. அவங்க பாவம்.. வெளியுலகம் தெரியாதவங்க.. வாசலில் வந்து நின்று காய் வாங்கக் கூடப் பயப்படுவாங்க.. அவங்களுக்காக.. அவங்களுடைய மன நிம்மதிக்காக.. நான் உங்களை இழக்க வேண்டி வந்தாலும் அதைத் தாங்கிக் கொள்ள பழகிக் கொள்வேன் ஆகாஷ்.. என்ன.. நான் சாகும் வரை என் மனம் வலிக்கும்.. இதுவரை நான் சந்தித்த இழப்புக்களை விட இது பேரிழப்பாக இருக்கும்.. மனம் வலித்து.. மனம் வலித்து.. நான் சீக்கிரமே உயிர் விட்டாலும்

விட்டுவிடுவேன்.. அது மிகப் பெரிய நிம்மதி ஆகாஷ்.. மரணம் கூட ஒரு வகையில் விடுதலைதான்.. நானாக சாக முடியாது.. தானாக சாவு வந்தால் அதைவிட சந்தோசம் வேறு என்ன எனக்கு இருக்க முடியும்..?"

"வர்ஷா.."

ஆகாஷ் ஆவேசமாய் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்... அவனது அணைப்பில் அடங்கிய வர்ஷாவிற்கு எல்லையற்ற மன நிம்மதி ஏற்பட்டது... ஆகாஷின் மார்பில் புதைந்து நின்றபோது இப்படியே இருந்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்

என்று அவள் மனம் ஏங்கியது... அடுத்த கணத்தைப் பற்றி அப்புறமாய் கவலைப்படலாம் இந்த நொடியில் கிடைத்திருக்கும் ஈடு இணையில்லாத இந்த பரவசத்தை நழுவ விடாமல் உணரலாம் என்ற முடிவோடு ஆகாஷை விட்டு விலகாமல் இணைந்து நின்றாள்..

மெல்ல தன்னுணர்வு வரப் பெற்ற ஆகாஷ் அவளை விடுவித்தான்.. அவளது முகத்தை கையில் ஏந்தி உற்றுப் பார்த்தான்.. இன்றைக்கெல்லாம் இருந்தால் இவளுக்கு இருபத்தி இரண்டு வயதுதான் இருக்கும்.. சாவைப் பற்றிப் பேசும் வயதா இது..? வாழ வேண்டிய வயது.. வாழ்ந்து பல்கிப் பெருக வேண்டிய வயது..

'நான் இவளை வாழ வைப்பேன்..' மனதிற்குள் அவன் சூளுரைத்தான்..

"அப்படி ஓர் நிலைமையை ஓர் நாளும் நான் உனக்கு கொடுக்க மாட்டேன் வர்ஷா.. வா இப்போது நம் ஆபிஸ் வேலையை பார்ப்போம்.."

வர்ஷா சுறுசுறுப்பாக அவன் கேட்ட வேலைகளை முடித்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.. அவள் இதழ்களில் பாடலை ஹம் செய்து கொண்டிருந்தாள்.. மலர்ச்சியாய் சிரித்த முகத்துடன் இருந்தாள்.. அவளை அப்படிப் பார்த்தது ஆகாஷிற்கு பிடித்திருந்தது..

'கல்யாணம் நின்று போனதற்கு இவ்வளவு சந்தோசமா..? என் காதலை ஏற்றுக் கொள்ள மாட்டாளாம்.. ஆனால் என்னால் காதலிக்கப்படும் உணர்வை மனமார

அனுபவிப்பாளாம்.. என்னைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டாளாம்.. ஆனால் வேறு யாரையும் நினைத்துக் கூட பார்க்க மாட்டாளாம்.. இப்படி ஒருத்தி எனக்காக வாழும்போது.. காதல் எதற்கு.. கல்யாண வாழ்க்கைதான் எதற்கு..? இவளது இந்த முகத்தைப் பார்த்துக் கொண்டே வாழ்க்கையை ஓட்டி விடலாமே.. இதுவரை அவள் மனதில் இடம் பிடிக்க ஆசைப்பட்டேன்.. இப்போது அவள் மனதில் கோவிலே கொண்டு விட்டேன்.. எனக்கு இது போதும்..'

"என்ன சார் யோசனை..?"

"சாரா..?"

"தப்புத் தப்பு.. கன்னத்தில் போட்டுக் கொள்கிறேன்.. போதுமா..?"

"சும்மாதான்.."

"சும்மா கூட யோசிப்பார்களா..?"

"ம்ம்.. நீ என்ன பாட்டை முணுமுணுக்கிறாய் என்று யோசித்தேன்.."

அவள் குதூகலத்துடன் வாய் விட்டுப் பாடிக் காட்டினாள்..

"காற்றுக்கென்ன வேலி..

கடலுக்கென்ன மூடி..

கங்கை வெள்ளம் சங்குக்குள்ளே

அடங்கி விடாது..

மங்கை உள்ளம் பொங்கும் போது

விலங்குகள் ஏது.."

"எப்படி.. இப்படி அர்த்தம் வாய்ந்த பாடல்களை தேடிப் பிடித்து ரசிக்கிறாய்..?"

"தேடிப் பிடிக்க வேண்டிய அவசியம் என்ன..? கண்ணதாசன் பாடல்களைக் கேட்டுப் பாருங்கள்.. மனிதர்களின் ஒவ்வொரு உணர்விற்கும் அவரிடம் பாடல் இருக்கும்.. நம் ஒவ்வொரு சூழ்நிலைகளையும் அவரது பாடல் விவரிக்கும்.."

"இப்போது நீ காற்றைப் போல் இருக்கிறாயா..? இல்லை கடலைப் போல் ஆர்ப்பரிக்கிறாயா..?"

"இரண்டும்தான்.."

அவள் சிரித்துக் கொண்டே வெளியே செல்லத் திரும்பியபோது எதிரில் வந்து கொண்டிருந்த மணியனின் மேல் மோத இருந்து.. கண நேரத்தில் விலகினாள்..

"ஸாரி சார்.." சிரித்த முகத்துடன் வெளியேறினாள்..

அவளைப் பார்த்துக் கொண்டே சேரில் அமர்ந்த மணியன்,

"என்னடா.. கிளி உன்னிடம் ரொம்ப நேரமாய் கொஞ்சிக்கிட்டு இருந்ததே.."

"கிளிக்கு இறக்கை முளைத்து விட்டதாம்.."

"அப்போ.. பறந்து உன்னிடம் வந்து விடும்ன்னு சொல்லு.."

"அப்படியெல்லாம் என்னிடம் பறந்து வந்து விடாதாம்.. இப்போதைக்கு கல்யாணம் என்ற கூண்டில் அடைய வேண்டியது நின்று விட்டதாம்.."

விவேக்குடனான கல்யாணம் நின்று விட்டதைச் சொல்கிறாள் என்பதை புரிந்து கொண்ட மணியன் ஒன்றும் அறியாதவன் போல் கூறினான்..

"அப்போ கூண்டுக்கிளி.. சுதந்திரவானில் சிறகடிக்குதுன்னு சொல்லு.."

"ஆமாம்டா.. ஆனால் இவள் ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாள்..?"

"என்ன பேசினாள்..?"

ஆகாஷ் விவரித்தான்.. கேள்வி.. துணைக் கேள்வி.. துணைக் கேள்விக் துணைக் கேள்வியென்று துளைத்து விசயத்தை கிரகித்துக் கொண்ட மணியன்,

"என்னவோ போடா.. நீ சொல்வதும் விளங்க வில்லை.. அவள் சொல்வதும் விளங்கவில்லை.. சரி சரி.. வேலையைப் பார்.." என்று கூறியபடி எழுந்து அவனது கேபினுக்குள் சென்று செல்போனை கையில் எடுத்தான்..

"மாலதி.." என்று அழைத்து ஆகாஷ் கூறிய விவரங்களை ஒப்பித்தான்..

"ம்ம்.. சொல்லு.. அப்படியா.." என்று கேட்டுக் கொண்ட மாலதி..

"அவளது செல்போன் நம்பரைக் குடுடா.." என்று கேட்டாள்..

"விளையாடுகிறாயா..? ஆகாஷிற்கே அவளது செல் நம்பர் தெரியாது.. எனக்கு எப்படித் தெரியும்..?"

"நீ என்ன செய்வாயென்று தெரியாது.. நான் அவளிடம் இப்போது போனில் பேச வேண்டும்.."

"இவ்வளவுதானே.. இதற்கா மலையை பெயர்த்து எடுப்பதைப் போல் பில்ட் அப் கொடுக்கிறாய்.. ஆபிஸ் போனிற்கு கூப்பிடு.."

மணியன் ஆபிஸ் போன் நம்பரைச் சொன்னான்.. சற்று நேரத்தில் ஆபிஸ் போன் ஒலிப்பதையும்.. அதை எடுத்த ரிஷப்ஷனிஸ்ட் வயலட்,

"வர்ஷா உனக்குப் போன்.." என்று அழைப்பதையும்.. வர்ஷா எழுந்து போனின் அருகே செல்வதையும் கேபினுக்குள் மறைவாக நின்று கொண்டு கவனித்தவன்.. இனி மாலதி பாடு.. வர்ஷா பாடு என்று தோளைக் குலுக்கிக் கொண்டு அவனுடைய சீட்டில் போய் அமர்ந்தான்..

வயலெட்டின் அருகிலிருந்த போனை பார்த்தபடி,

"யார்..?" என்று வினவினாள் வர்ஷா..

"தெரியவில்லை.. நீயே கேள்.." என்றவாறு அவள் வேலையில் ஆழ்ந்தாள்..

'யாராக இருக்கும்.. அம்மாவானால் என் செல்லுக்குத் தானே கூப்பிடுவாங்க..' என்ற நினைவோடு போனை எடுத்த வர்ஷா "ஹாலே.." என்றாள்..

"வர்ஷா.. நான் மாலதி.." என்றது மறுமுனை..

'மாலதியா.. இவள் ஏன் என்னுடன் பேசுகிறாள்..?' என்ற நினைவோடு,

"சொல்லுங்க மாலதி.. என்ன விசயம்..?" என்றாள் வர்ஷா..

"நான் உன்னுடன் பேச வேண்டும்.."

"எதைப் பற்றி.."

"அதை நேரில் சொல்கிறேன்.."

"பட்.. எனக்கு உங்களுடன் பேச நேரமில்லையே.."

"நேரத்தை உருவாக்கிக் கொள்.."

"நான் இன்றைக்கு சீக்கிரம் வீட்டிற்கு போக வேண்டும்.."

"பரவாயில்லை லேட்டாகவே வீட்டுக்குப் போ.."

வர்ஷாவுக்குள் சுறுசுறுவென கோபம் கிளம்பியது..

'இவள் யார் எனக்குக் கட்டளையிட..?'

"ஹலோ.. நான் அப்படியெல்லாம் லேட்டாக வீட்டுக்குப் போக முடியாதுங்க.. நீங்க யார் எனக்கு ஆர்டர் போட..?"

மறுமுனையில் மாலதி கடகடவென்று சிரித்தாள்..

"நான் யாரா..? நான் யார்ன்னு உனக்குத் தெரியாதா..? அது சரி.. என்னைத் தெரியாதவள் போல் விவேக்கின் முன்னால் நடித்தவள்தானே நீ..."

"மாலதி.. அது என் பெர்ஸனல் விசயம்.."

"நிச்சயமாக இல்லை.. என்னுடைய சிநேகிதர்கள் இருவரைப் பாதிக்கிற விசயம்.."

"நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்..?"

"நான் ஆகாஷ்.. விவேக் இருவருக்குமே சிநேகிதி.. அதை நீ மறந்துவிடாதே.. நீ டபுள் கேம் ஆடியது எனக்குத் தெரியாதென்றா நினைக்கிறாய்..?"

"நான் டபுள் கேம் ஆடினேனா..? மாலதி.. எப்போதுமே நான் ஆகாஷிடம் காதல் சொன்னதில்லை.. எனக்குத் திருமணமாகப் போவதை அவரிடம் மறைத்தது மில்லை.."

உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டியவள்.. சுதாரித்துக் கொண்டாள்.. எதிரிலிருந்த வயலெட்டின் காதுகளில் தான் பேசியது விழுந்துவிட்டதோ என்ற பதட்டத்துடன் அவளைக் கவனித்தாள்.. அவளோ கம்ப்யூட்டரில் கவனமாக திரையை பார்த்துக் கொண்டிருந்தாள்..

'நல்லவேளை.. நான் பேசியதை இவள் கவனிக்க வில்லை..' என்ற நினைவுடன் சுற்று முற்றும் பார்த்தாள்.. இது அலுவலகம்.. இங்கே எதுவும் பேசக் கூடாது..

வேறு வழியில்லை.. மாலதியை சந்தித்துத் தான் ஆக வேண்டும்..

"கெட்டிக்காரத்தனமாய் பேசுவதாய் நினைத்துக் கொண்டு பேசாதே வர்ஷா.. எனக்கு எல்லாமும் தெரியும்.." என்றாள் மாலதி..

"எல்லாமும் தெரிந்தவர்கள் என்று உலகில் யாருமில்லை மாலதி.. நாம் சந்திக்கலாம்.. எங்கே நான் வரவேண்டும்.." என்றாள் வர்ஷா..

## 17

கடற்கரையோரமாக இருந்த சாலையில் நடந்தாள் வர்ஷா.. தூரத்தில் காரின் மீது சாய்ந்து கொண்டு மாலதி நிற்பது தெரிந்தது.. அதிகப் படிப்பும்.. சென்னையின் உயர் மட்ட நாகரிகமும் தந்த நிமிர்வு அவளிடத்தில் இருந்தது.. அவளின் அலட்சியமான பார்வையை சந்தித்தவாறே வர்ஷா அவளருகில் சென்றாள்..

"என்ன விசயம்..?" என்று வினவினான்..

"அதை நான் கேட்க வேண்டும்.."

"என்னைக் கேட்க நீங்கள் யாரென்று ஏற்கனவே கேட்டுவிட்டேன்.."

"ஆகாஷ்.. விவேக் இருவருக்குமே சிநேகிதியென்று நானும் பதில் சொல்லிவிட்டேன்.."

"அதற்காக என்னை அதட்டும் அதிகாரத்தை யார் உங்களுக்குக் கொடுத்தது..?"

"என் நண்பர்கள் வாழ்க்கையோடு விளையாடும் அதிகாரத்தை மட்டும் யாராவது உனக்குக் கொடுத்திருக் கிறார்களா..?"

வர்ஷா எரிச்சலுடன் கடலை வெறித்தாள்.. காலடியில் இருந்த கடல் மணலை காலில் விந்தி இறைத்தாள்.. அவளது கோபத்தை லட்சியம் பண்ணாமல் மாலதி கடலை நோக்கி நடந்தாள்..

"என்னை வரச் சொல்லிவிட்டு நீங்கள் எங்கே போகிறீர்கள்..?"

"கடலோரமாய் உட்கார.."

"அப்போ.. நான் போகட்டுமா..?"

"போவதிலேயே குறியாக இரு.. பேச வந்துவிட்டு.. பேச ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே போனால் என்ன அர்த்தம்.."

"என்னை என்னதான் செய்யச் சொல்கிறீர்கள்.."

"என்னோடு வா.."

கடலோரமாய் சென்று கரை மீது அமர்ந்தாள் மாலதி.. சற்றுத் தள்ளி வேண்டா வெறுப்பாக அமர்ந்தாள் வர்ஷா.. நீலக்கடலின் மேல் படகுகள் மிதக்க.. அலையடித்துக் கொண்டிருந்தது.. கடலோரக் காற்றின் குளுமையோ.. அந்தக் கடற்பரப்பைப் பார்த்த உணர்வோ இல்லாமல் சிலையென வீற்றிருந்த வர்ஷாவைப் பார்த்த மாலதி பொறுமினாள்..

"நான் பார்த்தாலும் பார்த்தேன்.. உன்னைப் போன்ற அழுத்தக்காரப் பெண்ணைப் பார்த்ததே இல்லை.."

"இப்போது பார்த்து விட்டீர்கள் இல்லையா..? திருப்தி தானே.. இனி நான் கிளம்பலாமா..?"

"கிளம்பிப் போய் என்ன செய்யப் போகிறாய்..? விவேக்கின் வாழ்க்கையோடு விளையாடப் பார்த்தாய்.. நான் அவனைக் காப்பாற்றி விட்டேன்.. இப்போது ஆகாஷின் வாழ்க்கையை பாழடிக்க நினைக்கிறாய்.. நான் அதைப் பார்த்துக் கொண்டிருப்பேன்னு நினைத்தாயா..?"

வர்ஷா மனதில் அடி வாங்கினாள்.. எப்பேர்பட்ட குற்றச்சாட்டு இது..? ஆண்களின் வாழ்க்கையோடு விளையாடும் குணம் கொண்ட பெண்ணா அவள்.. ஆக்ரோசத்துடன நிமிர்ந்தாள் வர்ஷா..

"ஷட் அப் மாலதி.. நானும் ஆகாஷின் முகத்திற்காக.. அவருடைய சிநேகிதி என்பதற்காக பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டேன்.. நீங்கள் அடங்குவதாக இல்லை.. நீங்கள் உங்கள் மனதில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்..? உங்கள் நண்பர்களைத் தேடிப் பிடித்து நானா அவர்களுடைய வாழ்க்கையுடன் விளையாடினேன்..? அவர்கள் இரண்டு பேரும் தான் என் வாழ்க்கையோடு விளையாடினார்கள்.. நான் வேலை

பார்க்கத்தான் போனேன்.. ஆகாஷை மயக்க இல்லை... அவர்தான் மூன்று வருடங்களாக என்னைக் காதலிக்கிறேன்னு பாடாய் படுத்துகிறார்.. விவேக்கை பெண் கேட்டு நானா வரச் சொன்னேன்..? நான் அவர் முகத்தை நிமிர்ந்து பார்த்தது கூட இல்லை.. அவர்தான் பெண் கேட்டு வந்தார்.. கல்யாணத் தேதியைக் குறித்தார்.. இப்போது கல்யாணத்தை நிறுத்தி இருக்கிறார்..

இவர்களின் மனப்போக்குக்கு ஏற்ப இவர்கள்தான் என் வாழ்க்கையில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.. நானில்லை.."

மாலதி மௌனமாக நகம் கடித்தாள்.. வர்ஷா சொல்வதில் இருந்த உண்மை அவளுக்கு உறைத்தது.. ஆகாஷ்தான் வர்ஷாவை மூன்று வருடங்களாகக் காதலித்திருக்கிறான்.. வர்ஷா அதற்கு பதிலேதும் சொல்லவில்லை.. விவேக் திருமணம் பேசி முடித்ததும் 'என்னை விட்டு விடுங்கள்..' என்று முதன் முதலாக

வாய் திறந்து சொல்லி அழுதிருக்கிறாள் என்று மணியன் அவளிடம் ஏற்கெனவே சொல்லியிருந்தான்.. அது போக மணியனின் வீட்டில் வர்ஷா பாடிய பாடல் மாலதியின் மனதில் இன்னும் முள்ளாக தைத்துக் கொண்டிருந்தது..

'இருந்தாலும்.. இவள்..?' மாலதியின் மனம் இன்னும் சமாதானமடையவில்லை.. புருவங்கள் சுருங்க வர்ஷாவைப் பார்த்தாள்..

"உன் மனதைத் தொட்டுச் சொல்.. விவேக் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள மறுத்துவிட்டானே.. இதில் நீ சந்தோசப் பட்டாயா.. இல்லை துக்கப்பட்டாயா..?"

வர்ஷாவின் இதழோரம் புன்முறுவல் மலர்ந்தது..

"இப்போது கேட்டீர்களே.. இது கேள்வி.. விவேக் கல்யாணத்தை நிறுத்திவிட்டது தெரிந்ததும் இரண்டு நாள்களாக என் அம்மா அழுது புலம்பிக் கொண்டிருக் கிறாங்க.. நான்..? மிக மிக சந்தோசமாக இருக்கிறேன்.. இனி என் கல்யாணப் பேச்சு நடக்கும் என்ற பயமில்லாமல் நான் இருக்கலாம்.."

"ஏன் அப்படிச் சொல்கிறாய்..? விவேக் போல இன்னொருவன் வரமாட்டானா..?"

"எப்படி வருவார்கள்..? நான் ஒரு உண்மையை ஒத்துக்கொண்டு தான் ஆக வேண்டும் மாலதி.. விவேக் மிகமிக நல்லவர்.. கருணை மனம் கொண்டவர்.. எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாமல்.. என் தாயையும் ஏற்றுக் கொண்டு.. எனக்கு வாழ்வளிக்க முன் வந்தவர்.. அவர் கோடியில் ஒருவர்.. அவரைப் போல் இந்த பூமியில் யார் இருக்கிறார்கள்..?"

"ஏன் ஆகாஷ் இல்லையா..?"

வர்ஷாவின் முகம் மென்மையானது.. கடலைப் பார்த்தவாறு அவள் மெதுவாகப் பேசினாள்..

"ஆகாஷ் இருக்கிறார்.. அவர் மனதில் என் மேல் காதலும் இருக்கிறது.. கூடவே அவருடைய அப்பாவும்.. அம்மாவும் இருக்கிறார்கள்.. அவர்கள் மனதில் எதிர்பார்ப்பு இருக்கிறது.. நகை.. பணம்.. இவை இல்லாவிட்டாலும்.. நல்ல பின்புலம் உள்ள குடும்பத்தில் பெண் எடுக்கவே அவர்கள் விரும்புவார்கள்.. கடலூரில் இருந்த பிழைக்க வந்த குடும்பத்தை சேர்ந்த என்னை எப்படி அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்..? என்னை ஏற்றுக் கொண்டாலும்.. என்னோடு இலவச இணைப்பாக என் தாயையும் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.. என்று எப்படி நான் நம்ப முடியும்..? நான் என் அம்மாவைத் தனியே விடமாட்டேன்.. இந்த உலகத்தில் அவர்களுக்கு இருக்கும் ஒரே ஆதரவு நான்தான்.. நானும் அவர்களைக் கை விட்டுவிட்டால் அவங்க எங்கே போவார்கள்..? ஸோ.. என் வாழ்க்கையில் கல்யாணம் என்ற வார்த்தை இனிமேல் வராது மாலதி.. என்னைப் பெண் கேட்டு வருமளவிற்கு பெருந்தன்மை கொண்ட மனிதர்கள் யாருமில்லை.."

எவ்வளவு துயரமான வார்த்தைகள்.. இதை எவ்வளவு மகிழ்ச்சியோடு சொல்கிறாள் இந்தப் பெண்.. கல்யாணம் என்பது தளையா.. அதை ஏன் இவள் விரும்பவில்லை..?

"நான் விரும்பவில்லை என்று சொல்லவில்லையே மாலதி.. ஆகாஷைத் தவிர வேறு ஒருவருடன் வாழும் வாழ்க்கை

எனக்கு நரகமாகி விடாதா..?"

அப்படியானால் இவளும் ஆகாஷைக் காதலிக்கிறாளா..?

"ஆமாம் என்று நான் சொல்ல முடியாது மாலதி.. யாரிடமும் காதல் சொல்ல மாட்டேனென்று என் அம்மாவிற்கு வாக்குக் கொடுத்து இருக்கிறேன்.. நான் ஆகாஷை காதலிக்க முடியாது.. அதே சமயம் அவரை மறக்கவும் முடியாது.."

இது எப்படி இப்படி ஒரு வாதம் பண்ணுகிறாள் இந்தப் பெண்..

"என்னை வேறு என்ன செய்யச் சொல்கிறீர்கள் மாலதி.. நானும் ஒரு பெண்தானே.. ரத்தமும் சதையுமுள்ள மனுஷிதானே.. மழையை வேண்டும் பயிர் போல.. அன்பான ஓர் வார்ததைக்காக.. ஆறதலான ஒரு பார்வைக்காக என் மனமும் ஏங்கிக் கிடந்தது.. வறண்டு கிடக்கும் நிலத்தை குளிர்விக்க வந்த மழைபோல் ஆகாஷ் என் வாழ்வில் வந்தார்.. எனக்கென்று ஒரு இதயம் வேண்டுமென்று நான் தவித்தபோது.. என் பார்வைக்காக அவர் தவித்தார்.. என் காதலை யாசித்தார்.. நான் என் மனதில் ஓர் மகாராணி போல் உணர்ந்தேன் மாலதி.. என் கடைக்கண் பார்வைக்காக அவர் ஏங்கிக் கிடந்த போது என் மனதில் ஓர் கர்வம் வந்தது.. என் அழகை அவர் ரசித்தபோது.. கண்ணாடியின் முன் அதிக நேரம் நிற்கத் தோன்றியது.. என் வாய் திறந்து நான் உதிர்க்கும் வார்த்தைக்காக அவர் காத்து நின்றபோது என் வாழ்வில் வசந்தம் வந்துவிட்டது மாலதி.. என்னால் அவரை மறக்க முடியாது.. அவருடைய இடத்தில் வேறொருவரை வைத்து நினைக்கவும் முடியாது.."

அப்படியானால் ஆகாஷின் காதலை இந்தப் பெண் ஏற்றுக் கொள்ள வேண்டியது தானே..?

"நான்தான் என் அம்மாவிற்கு வாக்குக் கொடுத்திருக் கிறேனே.."

இவ்வளவு நேரம் அமைதியாய் வர்ஷாவிடம் விளக்கம் கேட்டுக் கொண்டிருந்த மாலதிக்கு சுர்ரென்று கோபம் வந்து விட்டத..

"இது.. இது.. இதைத்தான் உன் சுயநலம் என்கிறேன் நான்.. உன் வாழ்வில் என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது வர்ஷா.. ஏன் நீ உன் அம்மாவிற்கு வாக்குக் கொடுத்தாய்.. எதற்காக அந்த வாக்கிற்கு கட்டுப்பட்டு நிற்கிறாயென்று நான் கேட்க மாட்டேன்.. அது உன் சொந்த விசயம்.. ஆனால் உன் சொந்தக் காரணங்களுக்காக

என் நண்பர்களின் வாழ்வை பலியிடப் பார்ப்பது எந்த வகையில் நியாயம்..? உன் மனச்சாட்சியிடம் கேட்டுப் பார்.. ஆகாஷின் மேல் இவ்வளவு விருப்பத்தை வைத்துக் கொண்டு விவேக்கை கல்யாணம் பண்ணிக் கொள்ள நீ சம்மதித்தது எந்த வகையில் நியாயம்..? அவன் நல்லவன் என்று நீயே உன் வாயால் சொல்லுகிறாய்.. அவன் வாழ்வை அவன் மேல் விருப்பமில்லாத பெண்ணோடு வாழ வைக்கப் பார்த்தாயே.. இது தவறென்று உனக்குத் தோன்றவில்லையா..? நீ உன்னை மட்டுமே யோசிக்கிறாய்.. உன் செயல்களினால் மற்றவர்களின் வாழ்வை குலைப்பது சரியான செயலா..?

நீ ஏன் உன் மனதிலிருப்பதை விவேக்கிடம் சொல்ல வில்லை.."

மாலதியின் கோபத்திலிருந்த நியாயம் வர்ஷாவைத் தாக்கியது.. இந்தக் கோணத்திலிருந்து ஏன் அவள் யோசித்துப் பார்க்கவில்லை.. விவேக் எந்த வகையில் குறைந்தவன்.. அவனை 'விதியே..' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு தியாகி போல் மணந்து கொள்வது எந்த விதத்தில் நியாயம்.. மாலதியின் குற்றச்சாட்டில் நியாயம் உள்ளதே..

"தப்புத்தான் மாலதி.. எனக்கு இப்போதுதான் நான் செய்ய இருந்த தவறு புரிகிறது.. நல்லவேளை.. விவேக் தப்பித்தார்.."

"அவன் தப்பி விட்டான்... ஆகாஷ் மாட்டிக் கொண்டானா..?"

"மாலதி.. நான் ஆகாஷிற்கு எந்தக் கெடுதலும் கொடுக்கவில்லையே.. விவேக்கின் விசயத்தில் நான் என்னையறியாமல் கெடுதல் செய்து விட்டேன் தான்.. ஆகாஷ் விசயத்தில் அறியாமல் கூட ஒரு கெடுதலும்

செய்யவில்லையே.. அவர் நன்றாக இருக்க வேண்டு மென்றுதானே நினைக்கிறேன்.. அவர் மேல் நான் உயிரையே வைத்திருக்கிறேன் மாலதி.. அவருக்குப் போய் நான் கெடுதல் நினைப்பேனா..?"

"இவ்வளவு அன்பை அவன் மேல் நீ வைத்திருப்பது அவனுக்கு நீ செய்யும் கெடுதல்தானே.."

"இது அவர் ஏற்படுத்திய அன்பு.. மூன்று வருடங் களாக அவர் என்னிடம் காதல் சொல்லிக் கொண்டிருக் கிறார்.. நான் சில நாள்களுக்கு முன்னால் தான் அவரிடம் இயல்பாகவே பேச ஆரம்பித்தேன்.. இப்போதும் அவரைத் திருமணம் செய்து கொண்டு வாழத்தான் சொல்கிறேன்.."

"அதுசரி.. அவன் உன்னை மூன்று வருடங்களாகக் காதலிக்கிறான் என்பதை நீயே சொல்லுகிறாய்... அவ்வளவு சின்ஸியராய் உன்னை லவ் பண்ணிவிட்டு வேறொரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு எப்படி அவன் குடும்பம் நடத்துவான்..? அதோடு.. நீ விவேக்கிற்கு செய்ய இருந்த கொடுமையை அவன் வேறொரு பெண்ணுக்குச் செய்யட்டும் என்கிறாயா..? ஒன்றைத் தெரிந்துகொள்.. விவேக் உன் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டான்.. ஆனால்.. ஆகாஷ் உன்னைக் காதலிக்கிறான்.. உன் மனதில் ஆகாஷ் இருக்கிறான் என்பது தெரிந்த அடுத்த நொடியில் உன் வாழ்க்கையிலிருந்து விலகிக் கொண்டான்... ஏனென்றால் காதல் தோல்வி என்பது சம்பந்தப் பட்டவர்களுக்கு மட்டுமல்ல... அவர்களை அறியாமல் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் அப்பாவி ஜீவன்களுக்கும் கொடுமையானது.."

"என்ன.. விவேக்.. ஆகாஷின் காதல் தெரிந்ததால் தான் விலகிக் கொண்டாரா..? பெரிய பணக்காரப் பெண்ணைப் பார்த்ததும் மனதை மாற்றிக் கொண்டு விட்டதாக அவர் சொன்னது பொய்யா..?"

"பொய்தான்.. உனக்கு ஒன்று தெரியுமா..? ஆகாஷும் விவேக்கும் நெருங்கிய நண்பர்கள்.."

வர்ஷா பிரமித்துப் போனாள்.. இது அவளுக்குத் தெரியாத ஒன்று.. ஆகாஷ்.. மணியன்.. மாலதி மூவரும் நண்பர்கள்.. அதில் மாலதி விவேக்கின் பக்கத்து வீட்டுக்காரி என்றே இதுவரை வர்ஷா நினைத்திருந்தாள்.. 'கதை இப்படிப் போயிருக்கிறதா..?'

# 18

"ஆகாஷின் காதலைப் பற்றி மணியன் சொன்னான்.. ஆகாஷின் காதலியென்று மணியன் சொன்ன பெயரும்.. விவேக்கிற்கு நிச்சயம் செய்த பெண்ணின் பெயரும் ஒன்றாக இருக்கவும்.. நாங்கள் இருவரும் அதிர்ந்து போனோம்.. ஆகாஷின் காதலை விவேக் அறியவில்லை.. விவேக் உன்னை திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்திருந்ததை ஆகாஷும் அறிய வில்லை.. இந்த இருவரின் வாழ்விலும் இடம் பெற்றிருந்த பெண் நீ.. உன்னை விரும்பிய அந்த இரண்டு பேரும் எங்களின் நெருங்கிய நண்பர்கள்.. நாங்கள் நால்வரும் காலேஜில் ஒன்றாகப் படித்தவர்கள்.. நீண்டகால நட்பு எங்களுடைய நட்பு.. நால்வரில் எனக்கும் மணியனுக்கும் திருமணமாகி இரண்டு பேரும் அவரவர் கணவன்.. மனைவி.. குழந்தை.. குடும்பமென்று செட்டிலாகி விட்டோம்.. திருமணமாகாத எங்களின் இரண்டு நண்பர்களும் ஒரே பெண்ணை செலக்ட் பண்ணியிருப்பது தெரிய வந்தபோது எனக்கும் மணியனுக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை.. அப்போதுதான் நான் அந்த முடிவெடுத்தேன்.."

"என்ன முடிவு..?"

"இந்த இருவரில் யாரை நீ விரும்புகிறாய் என்று அறிய விரும்பினேன்.. உன் மனதை தெரிந்து கொண்ட பின்தான் நாங்கள் அடுத்து என்ன அடி எடுத்து

வைக்க வேண்டுமென்ற முடிவுக்கு வரவேண்டுமென்று நினைத்தேன்.. அதன்படி மணியனின் வீட்டில் விருந்து ஏற்பாடு பண்ணினோம்.. உன்னையும் ஆகாஷையும்

சேர்ந்து வர வைத்தோம்.. அந்த விருந்தின் போது உன் மனதில் ஆகாஷ்தான் இருக்கிறான் என்பது எனக்குத் தெளிவாகி விட்டது.. அடுத்து உன்னையும் விவேக்கையும் சேர்த்து சந்திக்க விரும்பினேன்.."

"எதற்காக..?"

"நீ எப்படிப்பட்டவள் என்று தெரிந்து கொள்வதற் காக.. ஒரு வேளை நீ விவேக்கிடமும் காதல் நாடகமாடிக் கொண்டிருந்தால் என்ன செய்வது..? எதையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா..? அத்தோடு விவேக் உனக்கு அந்தத் திருமணம் ஏற்பாட்டில் விருப்பம்தான் என்று சொன்னான்.. அது வேறு என் மனதை உறுத்தியது.. ஆனால் நீ விவேக்கிடம் காதல் நாடகமாடவில்லை.. அதே சமயம் திருமணத்தை நிறுத்தி விட வேண்டாமென்று சொல்லி இருக்கிறாய்.."

"அது என் அம்மாவிற்காக.."

"காரணம் எதுவாக இருந்தாலும் நீ செய்தது தவறு தான்.."

வர்ஷா தலைகுனிந்தாள்..

"நான் விவேக்கிடம் உண்மையைச் சொன்னேன்.. அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.. ஆனால் இரண்டு நாட்களில் சரியாகி விட்டான்.. அவனுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டுமென்று நினைத்தேன்.. என் சின்ன மாமனாரின் மகளுக்கு விவேக்கை பார்க்கலாம் என்று ஏற்பாடு பண்ணினால் நானே எதிர்பாராத இனிய திருப்பம் ஒன்று நடந்து விட்டது.."

"என்ன திருப்பம்.."

"திவ்யா.. அதுதான் என் சின்ன மாமனாரின் மகள் விவேக்கை காதலித்திருந்திருக்கிறாள்.. ஒன் சைட் லவ்.. இவள் காதலை சொல்ல நினைத்த போது விவேக் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதாக என்னிடம் சொல்லிவிட்டான்.. இப்போது கல்யாணம் நின்று விட்டது தெரிந்ததும் திவ்யா என்னிடம் எல்லா வற்றையும் சொல்லிவிட்டாள்.. நாங்கள் விவேக்கையும்... திவ்யாவையும் சேர்த்து வைத்து விட்டோம்.. திவ்யாவின் அப்பா பெரிய பணக்காரர்.. அவருக்கு திவ்யா ஒரே வாரிசு..

விவேக் திருமணத்திற்கு பின்னால் அவனுடைய மாமனாரின் பிஸினெஸ்ஸிற்கு முதலாளி ஆகப்போகிறான் என்பதெல்லாம் உண்மைதான்.. ஆனால் அதற்காக விவேக் திருமணத்தை நிறுத்தவில்லை.. ஆகாஷின் மனமும்.. உன் மனமும் தெரிந்ததால்தான் நிறுத்தினான்.. உன் அம்மாவின் மனம் நோக அவன் பேசியதும்.. நாளை ஆகாஷ் பெண் கேட்டு வந்தால் உன் அம்மா ஆகாஷை உயர்வாக நினைக்க வேண்டும் என்பதற்காகத் தான்.."

"ஆகாஷ் என்னைப் பெண் கேட்டு வருவதா...? நடக்காத ஒன்றைப் பேசாதீர்கள் மாலதி... விவேக் நல்லவரென்று தெரியும்.. இவ்வளவு நல்லவரா அவர்..?"

"அவன் கிடைப்பதற்கரிய வைரம்... அவனின் அருமை தெரிந்த திவ்யா அவனுக்கு கிடைத்திருக்கிறாள்.."

"உண்மைதான் மாலதி.. அவர் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும்.."

"அவன் வாழ்க்கை சரியாகிவிட்டது.. ஆகாஷின் வாழ்க்கை..?"

"அது என் கையில் இல்லை மாலதி.."

"நான் அதை என் கையில் எடுத்துக் கொண்டால் சரியாகிவிடும்.."

"செய்யுங்கள் மாலதி.. விவேக்கிற்கு திவ்யா கிடைத்தது போல் ஆகாஷிற்கும் அவரது அருமை தெரிந்த பெண் மனைவியாக கிடைக்க முயற்சி செய்யுங்கள்.. உங்களால் முடியும்.."

வர்ஷா முகம் வாட இதைக் கூறினாள்.. அவள் முகத்தைப் பார்த்த மாலதிக்கு அவள் மேல் பரிதாபம் ஏற்பட்டது..

"ஏன் வர்ஷா.. உனக்கு அவன் அருமை தெரியாதா..?"

"எனக்குத் தெரிந்து எந்த பிரயோஜனமும் இல்லை மாலதி.."

"மனம் வெறுத்துப் பேச வேண்டாம் வர்ஷா.. எனக்கு உன் மேல் இன்னும் கோபம் இருக்கிறது.. என்னதான் நீ மன்னிப்புக் கேட்டாலும் நீ சுயநலவாதி யென்றே என் மனதிற்கு இன்னமும் படுகிறது.. ஆனால் ஆகாஷ்

உன்னைக் காதலிக்கிறான்.. நீயும் அவனைக் காதலிக்கிறாய்.. உங்களை சேர்த்து வைக்க என்ன தடை இருக்கிறது என்று தான் எனக்குத் தெரியவில்லை.."

"வேண்டாம் மாலதி.. போகாத ஊருக்கு வழி தேடாதீர்கள்.. நடக்க முடியாத காரியத்திற்காக உங்களது நேரத்தை செலவளிப்பதை விட ஆகாஷிற்கு தகுந்த

பெண் தேடுவதில் உங்களது நேரத்தை செலவளியுங்கள்.."

"அவன் விரும்பும் பெண்தான் அவனுக்குத் தகுந்தவள்.."

"அவர் விரும்பினால் போதுமா..?"

"நீ அவனை விரும்பவில்லையா..?"

"என் விருப்பத்தை என் மனதில் புதைத்துக் கொள்வேனேயொழிய வாய் விட்டு அவரிடம் சொல்ல மாட்டேன்..."

"அந்த அளவிற்கு அவனை வெறுக்கிறாய்.."

"மாலதி.. அவர் மேல் எனக்கிருக்கும் நேசத்தின் அளவு வானம்தான்.."

"வெறும் நேசத்தால் என்ன பயன்..?"

"அதனால்தான் பயனளிக்கக் கூடிய பெண்ணாக அவருக்குப் பாருங்கள் என்கிறேன்.."

"ஏனிந்த பிடிவாதம் வர்ஷா.."

"இது என் தலைவிதி மாலதி.."

"என்னவென்று என்னிடம் சொல்.."

"சொல்லிப் பிரயோஜனமில்லை.."

"நான் வழிகண்டு பிடிக்கிறேன்.."

"வழியே இல்லாத ஊருக்கு எப்படி வழிகண்டு பிடிப்பீர்கள்.."

"மனமிருந்தால் வழி கிடைக்கும் வர்ஷா.. உனக்குத் தான் ஆகாஷ் நன்றாக வாழ வேண்டுமென்ற மனமில்லையே.."

அடிபட்ட பார்வை பார்த்தாள் வர்ஷா.. மாலதிக்கும் அப்படிப் பேசக் கஷ்டமாகத்தான் இருந்தது.. ஆனால் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நோய்க்கு அறுவை சிகிச்சை செய்து தானே தீர வேண்டும்.. எனவே வர்ஷாவின்

பக்கமிருந்த பார்வையைத் திருப்பி கடலைப் பார்த்தாள்.. கடலலைகள் கால் நனைக்க நின்றிருந்த சிறுமி ஒருத்தி.. அலையின் வேகத்தில் நனைந்து விழுந்தாள்.. மீண்டும் அலைவர சிரித்துக் கொண்டே அதை எதிர்கொண்டாள்..

"அங்கே பார்.. அந்தச் சின்னஞ்சிறு சிறுமிக்கு இருக்கும் தன்னம்பிக்கை கூட உனக்கு இல்லையே.. அலையைக் கண்டு பயந்தால் கடல் நீரில் கால்

நனைக்கும் அனுபவம் நமக்குக் கிடைக்காது.. வாழ்க்கையில் சோதனைகள் வருவது சகஜம்.. சோதனைகளைக் கண்டு பயந்து ஒடுங்கிவிட்டால் வாழ்க்கையை வாழ்ந்து பார்ப்பதுதான் எப்படி..?"

"ம்ம்.." கசப்புடன் சிரித்தாள் வர்ஷா..

"வாழ்க்கை உங்களுக்கு இன்பங்களை மட்டுமே வாரிக் கொடுத்திருக்கிறது.. அதனால் நீங்கள் வேதாந்தம் பேசுகிறீர்கள்.. ஏஸி காரில் சொகுசாக போகும் உங்களுக்கு பஸ்ஸின் நெரிசலில் இடம் பிடித்து.. வியர்வை வழிய ஆபிஸ் போய்.. மாடு மாதிரி உழைத்து.. மாதக் கடைசியில் சம்பளம் வாங்கி.. அந்தப் பணத்தில் வயிற்றுப் பாட்டைப் பார்க்கும் எங்களின் வேதனை எப்படிப் புரியும்..? வாழ்க்கை சிலரை வாழ வைத்து அழகு பார்க்கிறது.. சிலரை வஞ்சிக்கிறது.."

இது மேல்தட்டு வர்க்கத்தைப் பார்த்து மத்திய தர வர்க்கத்திற்கு வரும் இயல்பான கோபம்.. ஆனால் வர்க்க பேதம் குறித்து விவாதம் செய்யவா அவர்கள் இருவரும் இங்கே வந்து உட்கார்ந்து இருக்கிறார்கள்..? காதலைப் பற்றிப் பேசவல்லவா வந்திருக்கிறார்கள்..?

"ஓகே.. வர்ஷா.. வாழ்க்கை எனக்கு தாலாட்டுப் பாடி தூங்க வைக்கிறது.. உனக்கு அநியாயம் செய்து விட்டது.. சரி..வாழ்க்கை உன்னை தண்டித்ததற்காக நீ ஆகாஷை தண்டிக்க வேண்டுமா..?"

ஆகாஷின் பெயரைக் கேட்டதும் வர்ஷாவின் வேகம் தணிந்தது..

"நான் எதுவும் செய்ய முடியாதென்று சொல்லி விட்டேனே மாலதி.."

"முடியாதது என்று ஒன்றுமே இல்லை.. முயற்சி பண்ணிப் பார்ப்போமே.."

"ஓ.கே.. நான் உங்கள் வழிக்கே வருகிறேன்.. என்ன முயற்சி செய்வதாக இருக்கிறீர்கள்..?"

"ஆகாஷின் பேரண்ட்ஸ் ரொம்ப நல்லவர்கள் வர்ஷா.. அவர்களிடம் ஆகாஷின் காதலைப் பற்றிக் கூறினால் சந்தோசமாக ஏற்றுக் கொள்வார்கள்.. அதன்

பின் அவர்களை வந்து உன்னைப் பெண் கேட்கச் சொல்கிறேன்.."

"அப்படியா.. என்ன சொல்லி அவர்கள் பெண் கேட்பார்கள்..?"

"என்ன சொல்வார்கள்..? என் மகன் உங்கள் பெண்ணைக் காதலிக்கிறான்.. அதனால் பெண் கேட்டு வந்திருக்கிறோம் என்று சொல்வார்கள்.."

"அவ்வளவுதான்.. என் அம்மா என்னையும் கொன்று விட்டு தானும் செத்துப் போய் விடுவார்கள்.."

மாலதி திகைத்தாள்.. இது என்ன இந்தப் பெண் இப்படிப் பேசுகிறாள்..

"காதலிப்பது தவறில்லை வர்ஷா.."

"என் வீட்டில் அது தவறு மாலதி.."

"ஏன்.."

"ஏனென்றால்.. ஏனென்றால் அந்த ஓர் வார்த்தையால் எங்கள் குடும்பமே சின்னா பின்னமாகி விட்டது.. கடலூரில் வசதியாக வாழ்ந்து வந்த எங்கள் குடும்பத்தில் மிஞ்சிய நானும் என் அம்மாவும் சென்னைக்கு பிழைப்புத் தேடி ஓடி வந்தோம்..."

"உன் குடும்பத்தில் மிஞ்சியவர்களா..?"

"ஆமாம்.. என் குடும்பத்தில் மிஞ்சியவர்கள்தான்.."

"என்ன சொல்கிறாய் வர்ஷா.. நீயும் உன் அம்மாவும் மட்டும்தானே உங்கள் குடும்பம்..?"

"நல்ல கேள்வி கேட்டீர்கள்.. குடும்பத்தில் அப்பா இருப்பாரில்லையா.. அவர் என்ன ஆனார் என்று

உங்களுக்குத் தெரியுமா..?"

"அவர் இறந்து விட்டதாகச் சொன்னார்களே.."

"எப்படி இறந்து போனாரென்று தெரியுமா..?"

"எப்படி..?"

மாலதி.. ஏதோ இருக்கிறது என்பதை உயர்ந்தவளாய் கேட்டாள்.. வர்ஷா பேச ஆரம்பித்து விட்டாள்.. இனி தன் கதையை தானாகவே சொல்லி விடுவாளென்பதை அறிந்து கொண்டவளாய் வர்ஷாவை பேசவிட்டாள்..

"அவர் எங்கள் வீட்டில் அவருடைய பெட்ரூமில் தூக்கத்திலேயே.. ஹார்ட் அட்டாக் வந்த இறந்துவிட்டார்.."

"என்ன..?"

மாலதி உறைந்து விட்டாள்.. அவள் இதை எதிர்பார்க்கவே இல்லை..

"ஆமாம் மாலதி.. என் அக்கா ஹர்ஷா.. தன் காதலனுடன் வீட்டை விட்டு ஓடி விட்ட அந்த இரவில்.. நானும் அம்மாவும் அழுதழுது ஓய்ந்து போய் ஹால் சோபாவிலேயே சுருண்டு விட்டோம்.. விடிந்து எழுந்து பார்த்தால் என் அப்பா பெட்டில் இறந்து கிடந்தார்.."

"உனக்கொரு அக்கா இருந்தாளா..?"

"இருக்கிறாள்.. எனக்கு ஒரு அக்கா இருக்கிறாள்.. இந்தப் பரந்த உலகத்தில் ஏதோ ஒரு மூலையில் அவளுடைய காதலனுடன் நிம்மதியாகக் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறாள்.."

# 19

கடலூரில் ஜவுளிக் கடை வைத்திருந்த சந்தானத்தைப் பற்றி அறிந்தவர்கள் அவரது பெண்களின் மேல் அவர் வைத்திருந்த பாசத்தைக் கண்டு ஆச்சர்யப் பட்டுப் போவார்கள்.. அதிலும் மூத்த பெண் ஹர்ஷாவின் மீது அவர் உயிரையே வைத்திருந்தார்.. சொந்த வீடு..

ஜவுளிக்கடை என்ற வளமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்..

மூத்த பெண் ஹர்ஷா நீண்ட நாள்களாக குழந்தை இல்லாமல் இருந்த சந்தானம் தம்பதியினருக்கு காலங்கடந்து பிறந்தவள்.. அதனால் அவள் மேல் பெற்றவர்கள் இருவரும் பாசத்தைப் பொழிந்தனர்.. அவளுக்கு கேட்டதெல்லாம் உடனே கிடைத்தது.. கேட்காமல் மனதில் நினைத்ததும் தானே கிடைத்தது.. கொண்டாடக் கொண்டாட சேட்டை அதிகமாகும்.. ஹர்ஷாவும் அப்படியே தான் நினைத்தது கிடைக்க வேண்டும் என்ற வெறியோடு வளர்ந்து வந்தாள்..

நான்கு வயது வரை பெற்றோர்களின் ஏகோபித்த பாசத்தை பெற்றுக் கொண்டிருந்தவளுக்கு போட்டியாக வர்ஷா அடுத்துப் பிறந்தாள்... மல்லிகா வர்ஷாவைத் தூக்கினால் ஹர்ஷாவிற்கு பொறுக்காது... சந்தானம் வர்ஷாவைக் கொஞ்சினால் அன்று முழுவதும் சாப்பிடாமல் உண்ணாவிரதம் இருப்பாள்..

வேறு வழியின்றி ஹர்ஷா பள்ளிக்குச் சென்ற நேரங்களில் மட்டும் இளைய மகளை கொஞ்சி மகிழ்ந்தனர் சந்தானமும.. மல்லிகாவும்.. ஹர்ஷா வர்ஷாவை போட்டியாக நினைக்க வேண்டிய அவசியமே இல்லாமல் வர்ஷா அமைதியான பெண்ணாக வளர்ந்தாள்.. தப்பித் தவறி பெற்றவர்களின் கவனம் தங்கையில் மேல் போய் விடக் கூhதென்ற கவனத்துடன் ஹர்ஷா செயல்பட்டடாள்..

வர்ஷா கீழே விழுந்து அடிபட்டுக் கொண்ட அழுதவுடன் மல்லிகா தூக்கிக் கொள்ள ஓடி வருவாள்.. அதற்குள் ஹர்ஷா அவளை விட பெருங் குரலெடுத்து அழுக ஆரம்பிப்பாள்.. வர்ஷாவை மறந்து ஹர்ஷாவை விசாரிப்பாள் மல்லிகா..

"என்னடா செல்லம் ஏன் அழுகிறாய்..?"

"இந்த புக் காலில் விழுந்து விட்டது.." வலி தாங்க முடியாமல் துடிப்பது போல் அவள் நடிப்பாள்..

பெரிய டிக்ஷனரி புக்கைக் காண்பித்து பொய்யுரைப் பாள் ஹர்ஷா.. அதை நிஜமென்று நம்பும் மல்லிகா பதறிப்போய்

ஹர்ஷாவின் காலைப் பிடித்து நீவுவாள்..

"அச்சச்சோ.. எவ்வளவு பெரிய புத்தகம்.. என் குட்டிச் செல்லத்தின் காலில் விழுந்து விட்டதே.. வலிக்குதாடா தங்கம்.."

அந்தத் தங்கம் "ஆ.. ஐயையோ.. வலிக்குது அம்மா.." என்று பொய்யாக அலறும்..

கீழே விழுந்து அடிபட்ட வர்ஷா.. தானாக எழுந்து போகும் வரை ஹர்ஷா அலறலை நிறுத்தமாட்டாள்..

போகப் போக வர்ஷா.. இதைப் போன்ற பல இன்னல்களை சந்திக்க நேர்ந்தது.. வர்ஷாவின் சாப்பாட்டு விசயத்தில் கூட மல்லிகா கவனம் செலுத்தக் கூடாது என்பதில் ஹர்ஷா விழிப்பாக இருந்தாள்..

"வர்ஷா சாப்பிட வாம்மா.."

"அம்மா எனக்குப் பசிக்குது.."

"உட்காரும்மா.. டிபன் தருகிறேன்.. இந்த வர்ஷாவை இன்னும் காணோமே.."

"அம்மா பசியோடு உட்கார்ந்திருக்கும் என்னை முதலில் கவனியுங்கள்.."

"இதோ போடுகிறேன்.. வர்ஷாவிற்கு ஸ்பெசல் கிளாஸ் இருக்கிறதாம்.. சீக்கிரம் போக வேண்டும்ன்னா.."

"சாப்பாடு ரெடியாம்மா.."

"அப்போதே ரெடி.. பார் உன் அக்கா உனக்கு முன்னாலேயே சாப்பிட ஆரம்பித்து விட்டாள்.. சீக்கிரம் போகணும்னு சொல்லிவிட்டு நீதான் லேட்டாக வருகிறாய்.."

மல்லிகா வர்ஷாவிற்கு தட்டைப் போடப் போவாள்..

"அம்மா.. எனக்கு பிரெட் ஆம்லெட் வேண்டும்.." என்பாள் ஹர்ஷா..

"பூரி கிழங்கு செய்திருக்கிறேனே ஹர்ஷா.."

"எனக்கு இது பிடிக்கவில்லை.. பிரட் ஆம்லெட் தான் வேண்டும்.."

"கொஞ்சம் பொறு.. வர்ஷாவை அனுப்பிவிட்டு உனக்கு செய்து தருகிறேன்.."

"அதுவரை என்னைக் காத்திருக்கச் சொல் கிறீர்களா..? எனக்கு டிபனே வேண்டாம்.."

ஹர்ஷா கோபமாய் எழ முயல்வாள்.. மல்லிகா பதறிப்போய் தட்டைப் போடாமல் சமையலறைக்குள் ஓடுவாள்.. அப்போது ஹர்ஷா.. வர்ஷாவைப் பார்க்கும் பார்வை, இன்று வரை வர்ஷாவின் நினைவில் இருக்கிறது..

அந்தப் பார்வை.. ஒரு மகாராணி.. சேடிப் பெண்ணைப் பார்க்கும் அலட்சியப் பார்வை..

'எனக்கு நீ இணையா..?' என்று வினவும் அகம்பாவ பார்வை..

வர்ஷா பதில் பேசாமல் தானே தட்டைப் போட்டுக் கொண்டு சாப்பிட ஆரம்பிப்பாள்.. ஹர்ஷா அதற்கும் விடமாட்டாள்..

"ஏய்.. அந்தத் தண்ணீர் பாட்டிலை எடுத்துக்கொடு.."

"என் பெயர் ஏய்.. இல்லை.. வர்ஷா.."

"ஓஹோ.. பெயர் சொல்லித்தான் கூப்பிட வேண்டுமோ.."

"ஆமாம்.."

"எழுந்து வந்தால் அறைந்து விடுவேன்.."

"அடடா.. என்னடி உங்கள் இரண்டு பேருக்கும் பிரச்சனை..?"

"பாருங்கம்மா.. தண்ணீர் பாட்டிலை எடுத்துக் குடுடின்னு கேட்டால்.. நான் என்ன உனக்கு வேலைக் காரியான்னு கேட்கிறாள்.. எவ்வளவு திமிர் இருந்தால் என்னையே எதிர்த்துப் பேசுவாள்.."

"அதுக்கு ஏண்டி அவளைப் பார்த்து கையை ஓங்கு கிறாய்..? என்னிடம் சொன்னால் நான் கண்டிக்க மாட்டேனா..? வர்ஷா.. அக்காவிடம் மரியாதையாய் பேசாமல் ஏன் இப்படி வாய் பேசுகிறாய்.. வர வர நீ சரியில்லாமல் போய் கொண்டிருக்கிறாய் அக்காவிடம் மன்னிப்புக் கேள்.."

செய்யாத தவறிற்கு மன்னிப்புக் கேட்கும் வர்ஷா சாப்பிடாமலே பள்ளிக்குப் போய்விடுவாள்.. பசியோடு வந்தவளை சாப்பிட விடாமல் விரட்டி அடித்துவிட்டு அதற்கும் அவள் மேல் குறை சொல்லி போட்டுக் கொடுப்பாள் ஹர்ஷா..

"இந்த வயதிலேயே எவ்வளவு அழும்பு பார்த்தீர்களாம்மா.. உங்களையே முறைத்துக் கொண்டு போகிறாள்.. எல்லாம் நீங்கள் கொடுக்கும் செல்லம்.."

பெரிய மகளின் வார்த்தைகளை அப்படியே நம்புவார்கள் பெற்றவர்கள்.. மெல்ல.. மெல்ல.. அமைதியான சுபாவம் கொண்ட வர்ஷா வீட்டில் 'வாய்பேசும் பெண்..' என்று பெயரெடுத்தாள்.. அடுத்தவரின் வம்புக்கு போகாதவளை.. 'வீட்டில்

வம்புக்கு அலைகிறவள்..' என்று திட்டினர்... எதற்கும் ஆசைப்படாதவளை 'பொறாமை பிடித்தவள்..' என்றனர்..

"அம்மா.. இந்த சுடிதாரைப் பார்த்தீங்களா.."

"என்னடி இப்படி கிழிந்திருக்கிறது.."

"எல்லாம் உங்கள் சின்ன மகள் செய்த வேலை.."

"என்னடி வர்ஷா செய்தாய்..?"

"நான் ஒன்றும் செய்யவில்லை அம்மா.. அவள்தான் சுடிதாரை துவைத்துத் தரச் சொன்னாள்.. காயப்போடும் போது.. ஆணி மாட்டி அது கிழிந்துவிட்டது.."

"பொய் சொல்கிறாள் அம்மா.. இவள் வேண்டு மென்றே தான் என் சுடிதாரைக் கிழித்திருக்கிறாள்.. போன தடவை இந்த சுடிதாரை நாம் எல்லோரும் சினிமாவுக்கு போகும்போது போட்டுக் கொண்டு வந்தேனில்லையா..?"

"ஆமாம்.."

"அப்போது எதிர் வீட்டு ஆன்ட்டி இந்த சுடிதாரில் நான் அழகாக இருக்கிறேன்னு சொன்னாங்க இல்ல.."

"சொன்னாங்க.."

"இவள் அப்போதே என்னிடம் என்னை விட நீ பெரிய அழகியான்னு கேட்டாள்.. நான் அதற்கு.. நீ சிறிய பெண்.. படிப்பில் கவனம் காட்டுன்னு சொன்னேன்.. அந்த ஆத்திரத்தை மனதில் வைத்துக் கொண்டு இப்படிச் செய்திருக்கிறாள்.."

மல்லிகா புழுவைப் பார்ப்பது போல் வர்ஷாவை பார்த்தாள்..

கடலை வெறித்துக் கொண்டு கண்ணீர் வற்றிய விழிகளுடன் தன் கடந்த காலத்தைப் பற்றிய தகவல்களை வர்ஷா விவரித்தபோது மாலதி கொதித்துப் போனாள்..

"இது எப்படி வர்ஷா.. நீயேன் உன் பக்க நியாயத்தை உன் பேரண்ட்ஸிடம் சொல்லவில்லை..?"

"எப்படிச் சொல்லுவது..? பொய் சொல்பவளை.. பொய் சொல்கிறாள் என்று நான் சொன்னால் என்னை இன்னும் பொய்காரியாக்கினார்கள்.. நான் சொல்லிச் சொல்லி ஓய்ந்து விட்டேன்.. அவள் வேண்டுமென்றே என்னை விரட்டுகிறாள் என்பதை என்னால் கடைசி வரைக்கும் என்னைப் பெற்றவர்களுக்கு புரிய வைக்க முடியாமலே போய் விட்டது.. என் சொந்த வீட்டில் நான் அநாதையாக்கப் பட்டேன்.. ஒவ்வொரு நொடியும் ஊசிகளின் மேல் நான் நிற்பது போல் என் வீட்டில் உணர்ந்தேன்.. நான் நடந்து வந்த பாதை முள்பாதை மாலதி.."

இரக்கத்துடன் வர்ஷாவின் கரம் பற்றி அழுத்தினாள் மாலதி.. சொல்லி அழுக ஆளில்லாத தனிமையில் இருந்தவளுக்கு அவள் சொல்வதைக் கேட்கவும்.. ஆறுதல் கொடுக்கவும் ஆள் கிடைத்த நிறைவில் வர்ஷா சொல்லிக் கொண்டே போனாள்..

"அவள் முன் நிற்பதை தவிர்த்தேன் மாலதி.. ஸ்கூலில் அதிக நேரம் செலவளித்தேன்.. கிளாஸ் பர்ஸ்ட் வாங்கினேன்.. அதற்கும் வீட்டில் மண்டகப் படி கிடைத்தது.."

"நன்றாகப் படிப்பது கூடத் தப்பா..?"

"ம்ம்.. என் வீட்டில் அதையும் தப்பாக்கினாள் ஹர்ஷா.."

வர்ஷாவின் மனக் கண்ணில் அவளது பள்ளியிறுதி நாள்கள் விரிந்தன..

ஒருநாள் காலேஜிலிருந்து திரும்பி வந்த ஹர்ஷா தன் பையை வீட்டு ஹாலில் விட்டெறிந்தாள்.. ஜவுளிக் கடைக்குப் போகக் கிளம்பிக் கொண்டிருந்த சந்தானம் புருவங்களை உயர்த்தினார்..

"என்னடாக் கண்ணு.. என் செல்லப் பெண்ணிற்கு ஏன் இத்தனை கோபம்..?"

"அப்பா.. உங்க சின்னப் பெண்ணால் நான் படாத பாடு படுகிறேன்.. இவளால் நான் செத்து விடுவேன் போலிருக்கிறது.."

மல்லிகாவும் சந்தானமும் துடித்துப் போய் விட்டனர்.. ஹர்ஷா சோபாவில் உட்கார்ந்து கொண்டு கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுக ஆரம்பிக்க.. சந்தானமும்.. மல்லிகாவும் அவளின் இருபக்கமும் அமர்ந்தார்கள்.. வர்ஷா அப்போதுதான் புத்தகப் பையை தோளிலிருந்து கழட்டியவாறு வீட்டுக்குள் வந்தாள்.. அவளைப் பார்த்ததும் ஹர்ஷா கிறீச்சிட்டாள்..

"இவளால்தான்.. இவளால்தான்.. என் நிம்மதி போகிறது.. இவள் பிறந்த அன்றைக்கே எனக்கு விஷம் கொடுத்து சாகடித்திருக்கக் கூடாதா.. ஏன் அப்பா என்னை விட்டு வைத்தீர்கள்..?"

"என்ன வார்த்தை சொல்லுகிறாய் ஹர்ஷா.."

"பின்னே என்னப்பா.. உங்களுக்கு இவள் மட்டும் மகளாக இருந்திருப்பாளே.. தேவையில்லாமல் நானும் உங்கள் மகளாக இருந்து கொண்டு அவமானப் பட வேண்டாமே.."

"மனம் நொந்து பேசுகிறாயென்று நினைக்கிறேன்.. என்ன நடந்ததென்று சொல்லு.."

"அப்பா.. என் கிளாஸ் மேட்டின் தங்கை இவளுடன் படிக்கிறாள்.."

"அப்படியா.. உன் கிளாஸ் மேட்டின் தங்கை.. உன் தங்கைக்கு கிளாஸ் மேட்டா.."

"இப்போ அதுவா ரொம்ப முக்கியம்..? அப்பா.. என் கிளாஸ்மேட் சொல்கிறாள்.. உன் தங்கைதான் கிளாஸ் பர்ஸ்ட்டாமே.. அவள் என்னவோ மேலே பெரிய படிப்பு படிக்கப் போகிறாளாமே.. என் அக்கா மக்கு.. வெறும் டிகிரி தான் அவளால் படிக்க முடியும்ன்னு சொன்னாளாமே.. என் தங்கை கதை கதையாய் என்னிடம் வந்து சொன்னாள்.. அப்படியா.. உன் தங்கை உன்னை விடப் பெரிய படிப்பை படிக்கப் போகிறாளான்னு என் பிரண்ட்ஸ் எல்லோரின் முன்னாலேயும் கேட்டுவிட்டாள் அப்பா.. எல்லோரும்

என்னை ஒரு மாதிரியாக பார்த்தார்கள்.." ஹர்ஷா விம்மி அழ ஆரம்பித்தாள்..

## 20

"மாலதி.. ஹர்ஷா தான் நினைத்ததை சாதித்தாள்.. நான் புரொஷனல் கோர்ஸ் எதிலாவது சேர்ந்தால் அவள் தற்கொலை பண்ணிக்குவாள்ன்னு பயமுறுத்தினாள்.. அவள் மட்டும் டிகிரி படிக்க.. நான் புரொபஷனல் கோர்ஸில் சேர்ந்தால் வெளியுலகில் அவளது மதிப்பு என்னாவது என்று கலாட்டா பண்ணினாள்.. மதிப்பில்லாமல் நான் வாழ மாட்டேனென்று குப்புறப் படுத்துக் கொண்டு அழுதாள்.." வர்ஷா கலங்கிய விழிகளுடன் கூறினாள்..

"அப்புறம் என்ன ஆச்சு..?" விடை தெரிந்தும் கேள்வியைக் கேட்டாள் மாலதி..

"வழக்கம் போல் அவளது அழுகையை மட்டும் வீட்டில் மதித்தார்கள்.. என் கனவில் இடி விழுந்தது.."

வர்ஷா.. கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.. சந்தானம் அவளை அழைத்துப் பேசியது இன்று அவள் நினைவில் வந்து நின்றது..

"வர்ஷா.. எனக்கு என் பெண்கள் இரண்டு பேருமே என் இரண்டு கண்கள்.. ஒரு கண்ணில் அடிபட்டால் மறு கண்ணுக்கும் வலிக்க வேண்டும்ன்னு நினைப்பவன் நான்.. நான் பெற்ற பெண்களுக்கு இடையே உயர்வு.. தாழ்வு வந்துவிடக்கூடாது.. ஹர்ஷாவுக்கு தாழ்வு மனப்பான்மை வந்துவிட்டது.. நீதான் விட்டுக் கொடுத்துப் போக வேண்டும்.. ஆயிரம்தான் இருந்தாலும் அவள் உன் கூடப் பிறந்தவள்.. உன் அக்கா.. அவளுக்கு ஒரு மன வருத்தமென்றால் அது உனக்கு இல்லையா..?"

சந்தானம் என்றும் இல்லாத வகையில் வர்ஷாவை அருகே அமர வைத்துக் கொண்டு தலையை வருடியபடி பேசினார்.. அதைவிட அதிசயமாய் ஹர்ஷா அதை ஆட்சேபிக்காமல் இருந்தாள்.. வர்ஷாவின் அடிவயிறு கலங்கியது..

'இந்தப் பீடிகை எதற்காக..?'

"நீ நன்றாகப் படிப்பதில் எங்களுக்குப் பெருமைதான்.. சந்தோசம் தான்.. அதே சமயம் அதையே காரணம் காட்டி உன்னை உயர்வாகவும்.. ஹர்ஷாவைத் தாழ்வாகவும் நினைக்க எங்களால் முடியாது.. வெளியார் அப்படிப் பேசுவதை அனுமதிக்கவும் முடியாது.. அதனால்.."

"அதனால்..?" வர்ஷா திகிலுடன் கேட்டாள்..

"நீயும் உன் அக்காவைப் போலவே டிகிரி படி.. போதும்.."

"அப்பா.."

அடியவயிற்றிலிருந்து தீனமாக அலறிய இளைய மகளின் அழுகுரலை லட்சியம் செய்யாமல் சந்தானம் கடைக்குப் போய் விட்டார்..

"மாலதி.. அன்று நான் வெகுநேரம் அழுதேன்.. என்னைத் தேற்ற யாரும் முன்வரவில்லை.. சாப்பிடாமலே படுத்துவிட்டேன்.. ஏனென்று யாரும் கேட்கவில்லை.. கடைசியில் ஹர்ஷாவின் தீர்மானப்படி மாவட்டத்திலேயே முதல் மாணவியாய் வந்திருந்த நான் புரொபஷனல் கோர்ஸ் எதற்குமே அப்ளை பண்ணாமல்.. டிகிரி படிக்கப் போனேன்.."

அவள் காலேஜிற்கு கிளம்பிய முதல்நாள் ஹர்ஷா அவளைப் பார்த்த வெற்றிப் பார்வையை நினைத்துக் கொண்டாள் வர்ஷா.. அது நினைத்ததை சாதித்த பார்வை.. உயர உயர பறந்தாலும் ஊர் குருவி பருந்தாக முடியாது என்று கூறிய பார்வை.. உன்னால் எதையும் சாதிக்க முடியாது.. நான் உன்னை சாதிக்க விடமாட்டேனென்று எச்சரித்த பார்வை.. உனக்கெல்லாம் இது போதும் என்ற அலட்சியப் பார்வை..

நைந்த உள்ளத்தோடு கல்லூரி சென்ற வர்ஷா.. முதல்வருட செமஸ்டரிலேயே வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்று முதல் மாணவி ஆனாள்.. அதனால் கல்லூரி பிரின்ஸிபால் மேகலாவின் பார்வை அவள் மேல் விழுந்தது..

"வர்ஷாவை பிரின்ஸி மேடம் வரச் சொன்னாங்க.." ஆபிஸிலிருந்து யாரோ வந்து சொல்ல பாடம் நடத்திக்

கொண்டிருந்த லெக்சரர் பாடத்தை நிறுத்திவிட்டு பார்வையாலேயே வர்ஷாவை போக அனுமதித்தாள்..

'எதற்காக இருக்கும்..?' என்ற யோசனையோடு வர்ஷா பிரின்ஸிபாலின் முன்னால் போய் நின்றாள்..

மூக்குக் கண்ணாடியை சரி செய்து கொண்டே தன் எதிரே நின்ற வர்ஷாவைப் பார்த்த மேகலா..

"ஏம்மா.. இவ்வளவு மார்க் எடுத்திருக்கயே.. ஏன் புரொபஷனல் கோர்ஸ் எதிலும் சேராமல் டிகிரியில் சேர்ந்திருக்கிறாய்..?" என்று வினவினாள்..

"என் அக்கா டிகிரி மட்டும் தான் படித்திருக்கிறாள் மேடம்.. அதனால்.."

"அதனால் உன்னையும் டிகிரி படிக்க வைக்கிறார் களா..? இது என்னம்மா கொடுமையாக இருக்கிறது.. அவளைவிட நீ நன்றாகப் படிக்கிறாய்.. நிறைய மார்க் வாங்கியிருக்கிறாய்.. அதற்கான படிப்பை படிக்க வைப்பதை விட்டுவிட்டு இப்படி உன் எதிர்காலத்தை வீணடித்திருக்கிறார்களே.. ம்ம்.. நீ ஒன்று செய்.. என்னுடைய தங்கையின் கணவர் கம்ப்யூட்டர் கோhச்சிங் சென்டர் நடத்துகிறார்.. அதில் மாலை நேரத்தில் சேர்ந்து படி.. வெறும் டிகிரி மட்டும் உன் எதிர்காலத்தை தீர்மானிக்காதும்மா.."

"என் வீட்டில் விட மாட்டார்களே.."

"உனக்கான பீஸை நான் கட்டுகிறேன்.. நீ அதிக நேரம் இருக்க வேண்டியதில்லை.. தினசரி ஒரு மணி நேரமோ.. இரண்டு மணி நேரமோ.. படி.. இது உன் எதிர்காலத்திற்கு நல்லதும்மா.."

வர்ஷா கண்களில் துளிர்த்த கண்ணீர் துளிகளை துடைத்துக் கொண்டாள்..

"அன்றைக்கு அவங்க காட்டிய வழி பின்னாளில் எனக்கு உதவியது மாலதி.. நான் கம்ப்யூட்டர் கோர்ஸுடன்.. வேறு சில கோர்ஸுகளையும் வீட்டுக்குத் தெரியாமல் படித்து முடித்தேன்.. அப்போதுதான் ஒரு நாள்.. நான் கடலோரமாய்

ஹர்ஷா ஒரு இளைஞனுடன் நெருக்கமாகப் பேசிக் கொண்டு போவதைப் பார்த்தேன்.."

"ஓ.. அவள் காதலித்தாளா.."

"ஆமாம்.. நான் காலேஜிற்கு போக... அவள் மேற்கொண்டு எதையோ படிக்கிறேனென்று பேர் பண்ணிக் கொண்டு வெளியே சுற்றிக் கொண்டிருந்தாள்.. வீட்டில் அவளுக்கு மாப்பிள்ளை தேட ஆரம்பித் திருந்தனர்.. நான்கைந்து இடங்களில் இருந்து வந்து பெண் பார்த்து விட்டு வேறு போயிருந்தார்கள்.. இவளும் மறுப்புச் சொல்லாமல் உற்சாகமாய் தயாராகி விட்டு.. மாப்பிள்ளைக்கு மூக்கு கோணல்.. புருவம் நீளம் என்று ஏதாவது காரணங்களைச் சொல்லித் தட்டிக் கழித்துக் கொண்டிருந்தாள்.."

"ஏன்.. இவனைக் காதலிக்கிறேனென்று சொல்லி விட வேண்டியதுதானே.."

"அதைத்தான் நானும் கேட்டேன்.. அதற்கு நீயெல்லாம் எனக்கு அட்வைஸ் பண்ணுகிறாயான்னு சண்டைக்கு வந்தாள்.. விஷயத்தை வீட்டில் சொன்னால்.. நீதான் எவனுடனோ ஊர் சுற்றினாய்.. நான் பார்த்து விட்டுக் கண்டித்தேன்.. அதனால் பிளேட்டை திருப்பிப் போட்டு என் மேல் பொய்யாய் குற்றம் சாட்டுகிறாய்

என்று செல்லிவிடுவேன்.. வீட்டில் உன் பேச்சை கேட்பார்களா.. இல்லை என் பேச்சை கேட்பார்களான்னு நீயே முடிவு பண்ணிக் கொள் என்று மிரட்டினாள்.."

"எக்கேடோ கெட்டுத் தொலைன்னு விட்டுவிட வேண்டியதுதானே.."

"என்னால் அப்படி விட முடியவில்லை.. யார் அவன் என்று துப்புத் துலக்கினேன்.. எனக்குக் கிடைத்த விவரங்கள் திருப்தியாக இல்லை.."

"என்ன சொல்கிறாய் வர்ஷா..?"

"அவன் நல்லவனில்லை மாலதி.. அவன் ஹர்ஷாவை உண்மையாக காதலித்திருக்க மாட்டான்.. அது மட்டும் எனக்கு நிச்சயம்.. அவனுடைய குடும்பத்தினர் பேராசை பிடித்தவர்கள்.. கொலை பாதகத்திற்கும் அஞ்சாதவர்கள்..

இவன் படிக்காதவன்.. உழைக்க அஞ்சுகிறவன்.. போக்கிரி.. அவன் வலையில் எப்படி ஹர்ஷா சிக்கினாள் என்பது

தான் தெரியவில்லை.. நான் அவளை மீட்க வழி தெரியாமல் தவித்தேன்.. என் பெற்றவர்க்குத் தெரியாமல் அவளுடன் போராடினேன்.. திடீரென்று ஒரு நாள் என் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் வடித்தாள்.."

"இதைப் பாருடா.. அவள் கூடத்திருந்துவாளா.."

"திருந்த மாட்டாள் என்பது எனக்கு அப்போது தெரியாதே.. நான் அவளுடைய கண்ணீரைக் கண்டு ஏமாந்து விட்டேன்.."

வர்ஷா மீண்டும் பழைய நாட்களின் நினைவில் ஆழ்ந்தாள்.. அன்று வர்ஷா அவளின் கையைப் பிடித்து அழுது கூறிய வார்த்தைகள் அவளுடைய காதுகளில் எதிரொலித்தன..

"நான் ஏமாந்து விட்டேன் வர்ஷா.. அவன் நல்லவனில்லை.. ச்சீபோ.. இனி என் முகத்திலே விழிக்காதேன்னு காறி உமிழ்ந்து விட்டு வந்து விட்டேன்.. நடந்தவை நம்மோடு இருக்கட்டும்.. இதை வீட்டில் சொல்லி விடாதே.." ஹர்ஷா கெஞ்சலாகக் கூறியதும் வர்ஷா நெகிழ்ந்து விட்டாள்..

"உன்னைக் காட்டிக் கொடுப்பதில்லை என் நோக்கம்.. உன்னைக் காப்பாற்றவே நான் உன்னுடன் சண்டை போட்டேன்.. அவன் நல்லவனில்லையென்று

நீ தெரிந்து கொண்டு விட்டாயே.. எனக்கு அதுவே போதும்.. நான் வீட்டில் சொல்லமாட்டேன்.."

தமக்கையின் கண்ணீரில் வர்ஷா இளகி விட்டாள்.. ஹர்ஷாவும் நல்ல பெண் போல் வீட்டிலேயே இருந்தாள்.. அப்போதுதான் பண்ருட்டியிலிருந்து அவளைப் பெண் பார்க்க வந்திருந்தனர்.. மாப்பிள்ளையின் தகப்பனாரும் பண்ருட்டியில் ஜவுளிக்கடைதான் வைத்திருந்தார்.. ஒரே தொழில்.. நல்ல குடும்பம்.. சிறப்பாக சீர் செய்வார்கள் என்பதால் பெண் கேட்டு வந்திருந்தார்கள்.. ஹர்ஷாவும் அடக்க ஒடுக்கமாக அலங்கரித்துக் கொண்டு வந்து நின்றாள்.. மாப்பிள்ளை வீட்டாருக்கு ஹர்ஷாவை பிடித்து விட்டது.. ஆனால் அவர்கள் எதிர்பார்த்த சீர்வரிசை தான் மயக்கம் போட வைத்தது..

"மல்லிகா.. என்னடி இவ்வளவு அதிகமாகக் கேட்கிறாங்க.."

"நானும் அதைத்தான் யோசிக்கிறேங்க.."

தகப்பனும்.. தாயும் பேசிக் கொண்டிருந்தபோது ஒன்றும் அறியாதவள் போல் ஹர்ஷா அங்கு வந்து நின்றாள்.. வழக்கம்போல் பெரிய மகளைக் கண்டதும் சந்தானம் பாசத்துடன் அழைத்தார்..

"என்னடாம்மா.. நீ இன்னும் தூங்கலையா..?"

"தூக்கம் வரலைப்பா.."

"ஏன்டா.. உடம்பு சரியில்லையா..?"

"அப்படியெல்லாம் எதுவுமில்லைப்பா.. அப்பா.."

"என்னடா.."

ஹர்ஷாவின் குழைவான அழைப்பைக் கேட்டு பரிவாக வினவினார் சந்தானம்.. ஹர்ஷா நாணத்துடன் கால் கட்டை விரலை தரையில் கீறிக் கொண்டு,

"இந்தக் கல்யாணம் கட்டாயம் நடக்குமில்லைப்பா..?" என்று கேட்டாள்..

சந்தானமும்.. மல்லிகாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்..

"ஏண்டா அப்படிக் கேட்கிற..?"

"எனக்கு மாப்பிள்ளையை ரொம்பப் பிடிச்சிருக் குப்பா.."

ஹர்ஷா கைகளால் முகத்தை மூடிக் கொண்டு உள்ளே ஓடி விட்டாள்.. சந்தானம் தீர்மானித்து விட்டார்..

"மல்லிகா.. அந்த வீட்டுப் பத்திரத்தை எடு.."

"என்னங்க.. அதையேன் கேட்கறீங்க.."

"வேறு வழியில்லை மல்லிகா.. மாப்பிள்ளை வீட்டில் கேட்கும் ரொக்கப் பணத்தையும்.. காரையும்.. சீர் வரிசையையும் கொடுக்க வேண்டுமானால் நாம் வீட்டை அடகு வைத்துத்தான் ஆக வேண்டும்.. ஜவுளிக்கடை ஹர்ஷாவின் பெயரில் இருக்கிறது.. அதை அடகு வைக்க வேண்டுமானால் அவளையும் கூப்பிட்டுக் கொண்டு

போக வேண்டும். நம் கல்யாணத்திற்கு அப்பா கடையை அடகு வைக்கிறாரேன்னு நினைத்து குழந்தை கல்யாணமே வேண்டாமென்று சொல்லி விடுவாள்.."

இதைச் சொல்லும்போது கண்ணீரோடு ஏளனமாகச் சிரித்தாள் வர்ஷா..

"ஏன் சிரிக்கிறாய் வர்ஷா.." என்று வினவினாள் மாலதி..

"அவள் குழந்தையாம்.. திட்டம் போட்டு பாசம் வைத்திருந்த தகப்பனைத் தள்ள படு குழியை வெட்டி விட்டுக் காத்துக் கொண்டிருந்தாள் அவள்.. அதை அறியாமல் அப்பா அவளைக் குழந்தையென்றார்.. மாலதி அப்பாவிற்கு அவள் மீது பாசம் அதிகம்..

அந்தப் பாசத்தையே தனது ஆயுதமாய் பயன்படுத்தி அவரை பலவீனப்படுத்தி செயல் இழக்க வைத்து விட்டாள் ஹர்ஷா.."

வர்ஷாவின் கண் முன் கடலூர் வீடு தோன்றியது.. அழகாய் பிரம்மாண்டமாய் சுற்றிலும் தோட்டத்தோடு.. வீட்டுப் போர்டிகோவில் காரோடு இருந்த வீடு..

அந்த வீட்டை இழந்து.. அதைப் போன்ற ஓர் பெரிய வீட்டின் காம்பவுண்டுக்குள் இருக்கும் அவும் ஹவுஸில் வாடகைக்குக் குடியிருக்கின்றனர் வர்ஷாவும்.. மல்லிகாவும்.. அன்று இதுபோல் வரும் என்று சந்தானம் கனவிலும் நினைத்திருப்பாரா..?

# 21

தான் கட்டிய மனைவியும்.. பெற்ற பெண்ணும் அகதிகள் போல் வீட்டை விட்டும்.. ஊரை விட்டும் வெளியேற வேண்டிய நிலைமை வந்து விடுமென்று அறியாத வெள்ளை மனம் படைத்த சந்தானம்.. பெரிய மகளின் திருமண ஏற்பாடுகளை யோசிக்க ஆரம்பித்தார்..

"ஏங்க.. எந்த பேங்கில் லோன் வாங்கப் போகிறீங்க..?"

"பேங்கில் உடனடியாய் பணம் கிடைக்காது மல்லிகா.. அத்தோடு எனக்கு வேண்டியது பெரிய தொகை.. அந்த

அளவு பேங்கில் தரமாட்டார்கள்.."

"அப்போ.. வேறு என்ன செய்யப் போகிறீர்கள்..?"

"செட்டியாரிடம் வீட்டுப் பத்திரத்தை வைத்துக் கடன் வாங்கப் போகிறேன்.."

"என்னங்க.. இது சரிவருமா..?"

"வேறு வழியில்லை மல்லிகா.."

செட்டியாரிடம் வீட்டுப் பத்திரத்தைக் கொடுத்து அவர் நீட்டிய டாகுமெண்டுகளில் கையெழுத்துப் போட்டுவிட்டு.. கட்டுக் கட்டாய் பணத்தைப் பெற்றுக் கொண்டு வந்து வீட்டு பீரோவில் வைத்துப் பூட்டினார் சந்தானம்..

"மல்லிகா.. இன்று நாள் நன்றாக இல்லை.. நாளைக்குப் போய் சம்மந்தி வீட்டில் அவர்கள் கேட்ட ரொக்கப் பணத்தைக் கொடுத்து விட்டு.. காரை புக் பண்ணிவிட்டு வரலாம்.. நாளைக்கு மறுநாள் ஹர்ஷாவிற்கு போட வேண்டிய மீதி நகைகளை வாங்கி விடலாம்.."

"சரிங்க.."

"பணம் பத்திரம்.."

சந்தானம் எச்சரித்துவிட்டு ஜவுளிக்கடைக்குப் போய் விட்டார்.. அவர் இரவில் கடையைப் பூட்டி விட்டு வீட்டுக்கு வந்தபோது மல்லிகா பதற்றத்துடன் வாசலில் நின்று கொண்டிருந்தாள்..

"என்ன மல்லிகா..?"

"ஹர்ஷா இன்னும் வீட்டுக்கு வரலைங்க.."

"எங்கே போனாள்..?"

"யாரோ அவளுடைய பிரண்ட் ஒருத்தி.. உஷான்னு பெயராம்.. பாண்டிக்குப் போகும் ரோட்டில் குடியிருக் கிறாளாம்.. அவளைப் பார்த்துவிட்டு கொஞ்சம் துணிகளை தைக்கக் கொடுத்து விட்டு வருகிறேன்னு ஒரு பேக் நிறைய துணிகளை அள்ளிப் போட்டுகிட்டுப் போனாள்.."

"அந்த உஷா டெய்லரா..?"

"அப்படித்தான் சொன்னாள்.."

"போன வாரம் கடைக்கு வந்து புதுத் துணிகளை எடுத்துக் கொண்டு வந்தாள்.. கல்யாண நாள் நெருங்கு தில்ல.. அதுதான் போயிருப்பாள்.. நீ உள்ளே வா.. வந்து விடுவாள்.. அவள் என்ன சின்னக் குழந்தையா..? இதுதான் அறியாத ஊரா..?"

அப்போதும் சந்தானம் மகளைச் சந்தேகப் படவில்லை.. நேரம் ஆக.. ஆக.. மகள் வீடு திரும்பவில்லை யென்றதும் அவருக்கு மகளின் பாதுகாப்புப் பற்றிச் சந்தேகம் வந்து விட்டது.. காரை எடுத்துக் கொண்டு மல்லிகா சொன்ன முகவரியில் போய் விசாரித்தார்.. உஷா என்று யாரும் அந்தத் தெருவிலேயே குடியில்லை என்று கூறி விட்டார்கள்.. ஹர்ஷாவின் தோழிகளின் வீட்டிற்குச் சென்று அந்த நள்ளிரவில் கதவைத் தட்டி எழுப்பி விசாரித்தார்.. அவளுடைய தோழியர் வட்டாரத்தில் உஷா என்ற பெயரில் யாருமே இல்லையென்று சொல்லி விட்டார்கள்.. நள்ளிரவைத் தாண்டவும் சந்தானத்தை பயம் பிடித்துக் கொண்டது..

"மல்லிகா.. காலம் கெட்டுக் கிடக்குதடி.. நம்ம பெண் யாராவது காவாலிப் பசங்க கண்ணில் சிக்கி நடக்கக் கூடாதது நடந்திருக்குமோ.. என் பெண் என்ன ஆனாள்ன்னு எனக்குத் தெரியலையே.. பேசாமல் போலீஸில் கம்ப்ளெயின்ட் கொடுத்து விடலாமா..?"

"ஏங்க.. நாளைக்கு கல்யாணம் ஆகப் போகிற பெண்.. அவளைப் பற்றி போலீஸ் கம்ப்ளெயின்ட் கொடுப்பதா..?"

"கல்யாணம் ஆகப் போகிற பெண் ராத்திரி முழுவதும் காணாமல் போய் விட்டாள்.. அதைப் பற்றிக் கவலைப் படாமல் போலீஸில் கம்ப்ளெயின்ட் கொடுக்க பயப்படு கிறாயே.."

அவர்கள் போலீஸ் ஸ்டேசனுக்கு போன போது இன்ஸ்பெக்டர் கொதிப்பாக இருந்தார்..

"சொல்லுகிறவனுக்கு என்ன.. வாய் நோகாமல் சொல்லி விடுவான்.. இங்கே லோல் படுகிறவனுக்குத்தான் அந்தக் கஷ்டம் தெரியும்.. மற்றவங்களுக்கு எட்டு மணி நேர

வேலை.. போலீஸ்காரனுக்கு இருபத்தி நாலு மணி நேரமும் வேலை.. வீடு.. குடும்பங்கிறதை

மறந்து விட்டு கொலை கொள்ளை.. கற்பழிப்பு.. ஆள் கடத்தல்ன்னு அநியாயங்களைப் பார்த்துக் கொண்டே எங்க காலம் கழியுது.. அது இந்த உலகத்தில் எவனுக்காவது தெரியுதா.." என்று கத்திக் கொண்டிருந்தவர் சந்தானத்தைப் பார்த்ததும்..

"யார் மேன் நீங்க.. இந்த நடுராத்திரியில் பொம்பளையைக் கூப்பிட்டுக் கொண்டு போலீஸ் ஸ்டேசனுக்கு வந்து நிற்கறீங்களே.. என்ன விசயம்..? யார் இந்த அம்மா.." என்று அதட்டல் போட்டார்..

மல்லிகாவின் உடல் பயத்தில் வெலவெலத்தது.. அவள் சந்தானத்தில் முதுகிற்குப் பின்னால் மறைந்து கொண்டாள்.. அவளின் பயத்தைப் பார்த்த இன்ஸ்பெக் டரின் வேகம் கொஞ்சம் குறைந்தது..

"உட்காருங்க சார்.. என்ன விசயம்..?" என்றார்..

"என் மகள் ஹர்ஷாவை இன்றைக்கு மதியத்தி லிருந்து காணவில்லை.. அவளுடைய டெய்லர் பிரண்ட் ஒருத்தியின் வீட்டிற்கு போய்விட்டு பத்து நிமிடத்தில் வந்து விடுகிறேன்னு சொல்லி விட்டுப் போனாளாம்.. விடியப் போகுது.. இன்னும் அவளைக் காணோம்.."

"அவளுடைய பிரண்ட்ஸ் வீட்டில் விசாரித்தீர்களா..?"

"விசாரித்து விட்டோம்.."

"பெண்ணின் வயது என்ன..?"

"இருபத்தி மூன்று.."

"காதல் விவாகரம் எதுவும் இருக்கிறதா..?"

"என் பெண் அப்படிப் பட்டவளில்லை சார்.."

"எல்லா அப்பாவி அப்பாக்களும் இப்படித்தான் சொல்வார்கள்.."

"என் மகளுக்கு கல்யாணம் நிச்சயம் ஆகியிருக்கு சார்..."

"ஒருவேளை அந்தக் கல்யாணத்தில் விருப்பமில் லாமல் வீட்டை விட்டு ஓடி விட்டதோ.."

"அப்படியெல்லாமில்லை சார்.. என் பெண்தான் இந்த மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்கனும்ன்னு விரும்பி எங்களிடம் சொன்னது.."

"ஐ..ஸீ.. பெண்ணின் போட்டோ கொண்டு வந்திருக்கிறீர்களா..?"

"இதோ இருக்கிறது சார்.."

இன்ஸ்பெக்டர் அதை வாங்க முனையும் போது டெலிபோன் மணி அடிக்கவும் எடுத்துப் பேசினார்..

"அப்படியா.. எங்கே.. கடலோரமாகவா..?" என்று கேட்டு விட்டுப் போனை வைத்தவர் சந்தானத்தைப் பார்த்து..

"ஐ ஆம் ஸாரி.. இருபத்தி மூன்று.. இருபத்தி நான்கு வயதுள்ள பெண் ஒருத்தி.. கடலோரமாக கொலையுண்டு கிடக்கிறாளாம்.. நீங்கள் வந்து பார்த்து அடையாளம் காட்ட வேண்டும்.." என்று கூறினார்..

"ஐயோ.." என்று சந்தானம் நெஞ்சைப் பிடித்துக் கொள்ள மல்லிகா மயங்கிச் சரிந்தாள்.. ஒரு வழியாய் அவர்கள் இருவரையும் ஜீப்பில் தூக்கிப் போட்டுக் கொண்டு அந்த இருளில் கடற்கரையோரமாக அழைத்துக் கொண்டு போனார் இன்ஸ்பெக்டர்..

டார்ச் லைட்டின் வெளிச்சத்தில் உயிரே பதை பதைக்க அந்த முகத்தைப் பார்த்த சந்தானம் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்..

"இது என் பெண் இல்லைங்க.."

இரவு அவர்கள் எப்படி வீடு திரும்பினார்கள் என்று அவர்களுக்கே தெரியாது.. விடிந்த போது வாசலில் ஜவுளிக்கடை கணக்குப் பிள்ளை கோவிந்தன் வந்து நின்றார்..

"என்ன கோவிந்தா.. கடையை திறக்கவில்லையா..?" சந்தானம் தட்டுத் தடுமாறி.. இயல்பாய் முகத்தை வைத்துக் கொள்ள முயற்சி பண்ணிக்கொண்டு வினவினார்..

"இல்லைங்கய்யா.."

"ஏன்..?"

"அந்தக் கடை இனி நமக்கு சொந்தமில்லைங்க ஐயா.."

"என்னப்பா சொல்கிறாய்..?"

"ஆமாங்க ஐயா.. கடையை நம் ஹர்ஷா பொண்ணு விற்று விட்டதாம்.. வாங்கியவர்கள்.. கடையைத் திறக்க வந்திருக்கிறார்கள்.."

சந்தானத்திற்கு ஒன்றுமே விளங்கவில்லை.. காணாமல் போன ஹர்ஷா எப்படிக் கடையை விற்றாள்..? அவசரமாய் கடைக்கு ஓடினார்.. வாங்கியவன் பத்திரத்தைக் காண்பித்தான்.. வாங்கிப் பார்த்தார்... முதல் நாள் அவன் ஹர்ஷாவிடமிருந்து கடையை வாங்கியதாக பதிவாகி இருந்தது... ஹர்ஷா தெளிவாக கையொப்பம் இட்டிருந்தாள்..

'ஹர்ஷாவா இப்படிச் செய்தது..? அவர் மகள் ஹர்ஷாவா இதைச் செய்தது..? இருக்காது..' அவர் மனம் ஓலமிட்டது.. போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினார்.. பதட்டத்துடன் அவர் கூறியவற்றை பொறுமையாகக் கேட்ட இன்ஸ்பெக்டர்..

"உங்கள் நிலைமை எனக்குப் புரிகிறது சந்தானம்.. பதட்டப் படாதீர்கள்.. நாங்கள் இதை விசாரிக்கிறோம்.. இப்போதைக்கு நீங்கள் வீட்டுக்குப் போங்க.." என்றார்..

"சார் கடை..?"

"அதை அடைத்து விடச் சொல்லி விடுகிறோம்.. விஷயம் தெளிவானதும் அதைப் பற்றி ஒரு முடிவுக்கு வரலாம்.."

அன்றைய பகல் மிக நீண்டதாக அமைந்தது அந்தக் குடும்பத்தினருக்கு... வர்ஷாவின் மனதில் சந்தேகம் வந்திருந்தது.. அதை இப்போது சொன்னால் ஏற்கனவே இடிந்து போயிருக்கும் சந்தானம் இன்னும் இடிந்து போவார்.. எனவே தன் மனதை அடக்கிக் கொண்டாள்..

மாலையில் அவர்கள் வீட்டு வாசலில் போலீஸ் ஜீப் வந்து நின்றது.. அதிலிருந்து இறங்கி வீட்டுக்குள் வந்த இன்ஸ்பெக்டர் சந்தானத்தை பரிதாபத்தோடு பார்த்தார்.. சந்தானத்தின் மனம் விதிர்த்தது..

'ஏன் இப்படிப் பார்க்கிறார்..?' யோசனையுடன்..

"உட்காருங்க சார்.." என்றார்..

இன்ஸ்பெக்டர் அமர்ந்தார்..

"என்ன சாப்பிடுகிறீங்க சார்.."

"இப்படி ஓர் நிலைமையிலும் உபசரிக்கிறீங்க சந்தானம்.. உங்களுக்குப் போய் இப்படி ஒரு நிலைமை வந்திருக்க வேண்டாம்.."

"என்ன சார் சொல்றீங்க.."

"மனதை திடப்படுத்திக்கங்க சந்தானம்.. உங்கள் மகள் ஹர்ஷா காணாமல் போகவில்லை.. வீட்டை விட்டு ஓடிப் போயிருக்கிறாள்.. சும்மாவும் அவள் ஓடிப் போகவில்லை.. உங்கள் கடையை விற்று பணத்தை வாங்கிக் கொண்டு போயிருக்கிறாள்.. அது மட்டுமில்லை.. நீங்கள் இந்த வீட்டுப் பெயரில் வாங்கியிருக்கும் பணத்திற்கு மேலே.. நீங்கள் வாங்கிக் கொண்டு வரச் சொன்னதாகச் சொல்லி செட்டியாரிடமும் பணம் வாங்கியிருக்கிறாள்.. அது ஏறக்குறைய இந்த வீட்டை நீங்கள் விற்றதற்கு சமானம்.."

"இன்ஸ்பெக்டர் சார்.."

"இப்போது நெஞ்சைப் பிடித்து என்ன பிரயோஜனம் சந்தானம்.. கண்காணிக்க வேண்டிய நேரத்தில் கண்காணிக் காமல் விட்டு விட்டீர்கள்.. ஒரு கிரிமினலை விட அதிகமான மோசடி வேலைகளைச் கூசாமல் செய்திருக்கிறாள் உங்கள் மகள்.. என் கணிப்பு சரியாக இருக்குமானால்.. உங்கள் வீட்டில் குண்டுமணி தங்கமோ.. ஒரு சல்லிக்காசோ மீதம் இருக்காது.. உங்கள் பெண் அதையும் துடைத்து எடுத்துக் கொண்டு போயிருப்பாள்."

மல்லிகா அவசரமாக வீட்டு பீரோவைத் திறந்து பார்த்தாள்.. அப்படியே சரிந்தாள்..

"என்னம்மா..?"

இன்ஸ்பெக்டர் வினவ தடுமாற்றத்துடன் எழுந்து வந்த மல்லிகா.. சந்தானத்தைப் பார்த்தாள்..

"நீங்கள் செட்டியாரிடம் வாங்கி வந்த பணம்.. வீட்டில் இருந்த நகைகள் எல்லாமும் காணோம்.. என்னுடையது வர்ஷாவுடையது எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போய்விட்டாள்.."

"இதை நான் நினைத்துக் கூட பார்க்கவில்லை இன்ஸ்பெக்டர்.."

"அவளைச் சொல்லிக் குற்றமில்லை... அவள் காதலித்தவன் நல்லவன் இல்லை.. திட்டம் போட்டு உங்கள் மகளை ப்ரெயின் வாஷ் பண்ணி இத்தனையையும் செய்ய வைத்திருக்க வேண்டும்... அவன் குடும்பம் கிரிமினல் குடும்பம்.. இப்போது குடும்பத்தோடு எல்லோரும் ஊரை விட்டுப் போய் விட்டார்கள்.."

சந்தானத்தின் கண் முன் உலகமே இருண்டு தெரிந்தது..

# 22

இன்ஸ்பெக்டர் அனைத்தையும் விவரித்தார்..

"அவனுடன் இரண்டு மூன்று வருடங்களாகவே உங்கள் பெண்ணிற்கு பழக்கம் இருந்திருக்கிறது.. கல்யாணம் செய்து கொள்ள முடிவு செய்ததும் பெரிய தொழில் ஆரம்பிக்க வேண்டும்.. அதற்கு நிறைய முதலீடு போட வேண்டும்.. அதைச் செய்து விட்டால் நான் கோடி கோடியாய் சம்பாதிப்பேன்.. நாம் காலமெல்லாம் ராஜா

ராணி போல் வாழலாமென்று அவன் தூண்டியிருக்கிறான்.. உங்கள் பெண் திட்டம் போட்டுத்தான் உங்களை உங்கள் சக்திக்கு மீறிய இடத்தில் மாப்பிள்ளை

தேட வைத்திருக்கிறாள்.. அவளுக்காக நீங்கள் எந்த எல்லைக்கும் போவீர்கள் என்பதை அவள் அறிந்தே வைத்திருக்கிறாள்.. வீட்டை அடமானம் வைத்து நீங்கள் பணம் கொண்டு வந்ததும் அவள் செயல்பட ஆரம்பித்து விட்டாள்.. ஏற்கனவே அவன் உங்கள் கடையை விலை பேசி வைத்திருந்தானாம்.. வீட்டிலிருந்த உங்கள் மகளின் பெயரிலிருந்த கடைப் பத்திரம் அவன் கைக்குப் போய் வெகு நாட்களாகி விட்டதாம்.. நீங்கள் வீட்டை அடமானம் வைத்துக் கொண்டு வந்த பணத்தை எடுத்துக் கொண்டு உங்கள் மகள் செட்டியார் வீட்டிற்குப் போயிருக்கிறாள்.. பணம் போதாதென்று நீங்கள் கவலைப்படுவதாகவும் வீட்டையே செட்டியார் எடுத்துக் கொள்ளட்டும்.. மேலே

பணம் வாங்கி வாவென்று சொன்னதாகவும் சொல்லியிருக் கிறார்.. திருமணம் முடியும் வரை அந்த வீட்டில் இருந்து கொள்கிறோம்.. அதன் பின் வாடகைக்கு வேறு வீட்டைப் பார்த்துக் கொண்டு மாறி விடகிறோமென்று நீங்க சொல்லச் சொன்னதாய் சொல்லியிருக்கிறாள்.. திருமணம் பேசப்படும் பெண்ணே நேரில் வந்து கேட்கவும்.. செட்டியார் அவள் கேட்ட பணத்தை கொடுத்து விட்டார்.."

"நான் நேரில் போய் கேட்கவில்லையே.."

"உங்களின் வாதம் நியாயப்படி செல்லலாம்.. சட்டப்படி செல்லாது.. ஏனென்றால் நீங்கள் வெற்றுப் பேப்பர்களில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து வைத்திருக்கிறீர்கள்.. அதில் செட்டியார் எதை வேண்டு மானாலும் எழுதி பூர்த்தி செய்து கொள்ளலாம்.. அது உங்களுக்குத் தெரியும்தானே.."

சந்தானம் வாயடைத்துப் போனார்..

"நம்பிக் கெட்டவர்களைப் பார்த்திருக்கிறேன்.. இப்படிப்பட்ட நம்பிக்கை துரோகியைப் பெண்ணாய் பெற்ற மனிதரை இப்போதுதான் பார்க்கிறேன்.. ஐ பிட்டியு.. உங்கள் மகளின் காதலரின் நண்பர்கள் கூட்டத்தைப் பிடித்து உதைத்து விசாரித்ததில் எங்களுக்கு இவ்வளவு உண்மையும் தெரிய வந்தது.. உங்களின் கடையை வாங்கியவர்கள்.. உங்கள் மேல் பொறாமை கொண்ட தொழில் போட்டியாளர்கள்தான்.. தெரிந்தே ஹர்ஷாவின் துரோகத்திற்கு துணை போயிருக்கிறார்கள்.. நேற்று ஹர்ஷா அவர்களுக்கு கடையை விற்று விட்டு அவளுடைய காதலனின் குடும்பத்துடன் ஊரை விட்டே போய் விட்டாளாம்.. அவர்கள் எங்கே போயிருக்கிறார்கள் என்று தெரியாது என்று அவனின் நண்பர்கள் சொல்லு கிறார்கள்.. இப்போது இந்த வீடும்.. கடையும் உங்களுக்கு சொந்தமில்லை சந்தானம்.. ஆகவேண்டியதைப் பாருங்கள்.."

'இனி ஆவதற்கு என்ன இருக்கிறது..' சந்தானம் இடிந்து போய் உட்கார்ந்திருந்தார்.. இன்ஸ்பெக்டர் போய் விட்டார்.. அதற்குள் விசயம் கடைத் தெருவிலும்.. அவர் குடியிருந்த தெருவிலும் பரவி அவரது செல்போனும்.. வீட்டுப் போனும்

அடிக்க ஆரம்பித்தது.. துக்கம் விசாரிக்கத் தெரிந்தவர்கள் வர ஆரம்பித்தார்கள்.. எல்லாவற்றிற்கும் சிகரமாக.. எல்லோரின் முன்னிலையினும் பண்ருட்டியி லிருந்து வந்த மாப்பிள்ளை வீட்டார் கத்திவிட்டுச் சென்றார்கள்..

"தூ.. வீட்டை விட்டு ஓடிப் போகிற பெண்ணை பெற்று வைச்சுக்கிட்டு எந்த மூஞ்சியோடு என்னிடம் சம்பந்தம் பேசின.. உன் வீட்டில் உன் கழுத்தை அறுத்த பெண்ணை ஒரு வேளை நாங்கள் கட்டிக் கொண்டு போயிருந்தால் என்ன ஆகியிருக்கும்..? கழுத்தில் விழுந்த தாலியை மதிக்காமல் இப்படி எங்களையும் நடுத் தெருவில் நிறுத்தி விட்டுத்தானே ஓடியிருப்பாள்..? பெண்ணைப் பெற்றால் வளர்க்கத் தெரியனும்.. நீயெல்லாம் ஒரு தகப்பன்.. வெட்கமில்லாமல் இன்னும் உட்கார்ந்து கொண்டு இருக்கிற.. பூவோடு சேர்ந்தால் நாறும் மணம் பெறும்.. பன்றியோடு சேர்ந்தால்... அதன் நாற்றம் தானே கிடைக்கும்..? உன் வீட்டில் சம்பந்தம் பேசிய தோசத்திற்கு நாங்களும் சேர்ந்து அல்லவா தலை குனிய வேண்டியிருக்கிறது..? குணம் கெட்ட பெண்ணைப் பெற்றவன் நீ.. நீ தலை குனிவதில் அர்த்தம் இருக்கிறது.. உன்னையெல்லாம் மனிதனாக மதித்துப் பெண் கேட்ட தவறைத் தவிர நான் வேறு என்ன பாவம் செய்தேன்.. நான் ஏன் தலை குனிய வேண்டும்..?"

அந்த இரவில் அழுது அழுது ஓய்ந்து போய் மல்லிகாவும்.. வர்ஷாவும் ஹாலில் இருந்த சோபாவில் சுருண்டு விட.. சந்தானம் வலிக்கும் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு படுக்கையறைக் கட்டிலில் சரிந்தார்..

தூக்கத்திலேயே அவரது உயிர் அவரை விட்டுப் பிரிந்து விட்டது..

காலையில் எழுந்த மல்லிகா கணவனைத் தேடிச் சென்றாள்.. அசைவில்லாமல் கிடந்த கணவனைக் கண்டு சந்தேகப்பட்டு அவரைத் தொட்டு எழுப்பினாள்... சந்தானத்தில் உடல் ஜில்லிட்டிருந்தது..

"என்னங்க.." மல்லிகாவின் அலறல் கேட்டு ஓடி வந்த வர்ஷா,

"அப்பா.." என்று அலறி சந்தானத்தின் மீது விழுந்து கதறினாள்..

சொந்தமென்று சொல்லிக் கொண்டு அவர்கள் நன்றாக வாழ்ந்தபோது வந்து உட்கார்ந்து சாப்பிட்டுச் சென்றவர்கள்.. இன்று துக்கம் விசாரிக்கப் போனால்

தாயும் மகளும் தங்கள் பின்னால் ஒட்டிக் கொண்டு வந்து விடுவார்கள் என்ற பயத்தினால்,

"இப்படி ஒரு கேடு கெட்ட குடும்பத்திற்கு நான் துக்கம் விசாரிக்கப் போவேனோ.." என்று சொல்லிக் கொண்டு விலகி நின்று கொள்ள அக்கம் பக்கம் குடியிருந்தவர்கள்.. சந்தானத்தின் இறுதிக் காரியங்களை செய்ய உதவிக்கு வந்து நின்றார்கள்..

சந்தானம் இறந்து எல்லாக் காரியங்களும் முடிந்து ஒரு மாதம் கழிந்த பின்னர் செட்டியார் அவர்களின் வீட்டிற்கு வந்தார்.. தாய்க்கும்.. மகளுக்கும் அவரது வரவின் நோக்கம் புரிந்து விட்டது..

செட்டியார் சங்கடத்துடன் தரையைப் பார்த்துக் கொண்டே பேசினார்..

"அம்மா.. உங்கள் நிலைமை எனக்கும் புரிகிறது.. எனது லேவா தேவித் தொழிலில் நான் யாருக்கும் இவ்வளவு தொகையைக் கடனாகக் கொடுத்ததில்லை.. சந்தானத்தின் நேர்மையை நம்பி நான் பணம் கொடுத்தேன்.. உங்கள் பெரிய மகள் வந்து கேட்காமல் உங்கள் இளைய மகள் வந்து கேட்டிருந்தால் கூட நான் பணம் கொடுத்திருக்க மாட்டேன்.. ஏனென்றால் நீங்கள் உங்கள் இளைய மகளைப் பற்றிப் பாசமாகவும் பெருமையாகவும் ஓர் வார்த்தை கூடப் பேசியதில்லை.. உங்கள் பெரிய மகளைப் பற்றி வார்த்தைக்கு வார்த்தை பெருமையாகப் பேசுவீர்கள்.. அதனால்தான் நான் அந்தப் பெண் கேட்டதும் பணம் கொடுத்து விட்டேன்.. அது என் தவறாகக் கூட இருக்கலாம்.. அதனால் சந்தானத்திற்கு நான் கொடுத்த பணமே.. நான் கொடுத்த கடனாக இருக்கட்டும்.. உங்கள் பெரிய பெண்ணிற்கு கொடுத்த பணத்தை நான் தொழிலில் ஏற்பட்ட நஷ்டக் கணக்காய் எடுத்துக் கொள்கிறேன்..

நீங்கள் இரண்டு பேரும் கவலைப்பட வேண்டாம்.. எப்போது உங்களால் சந்தானம் வாங்கிய பணத்தைக் கொடுக்க முடிகிறதோ.. அப்போது கொடுங்கள்.. வீட்டைக் காலி பண்ணச் சொல்லி விடுவேன் என்ற பயம் வேண்டாம்.. நீங்கள் பாட்டுக்குக் குடியிருங்கள்.. என் பணத்திற்கு வட்டியும் வேண்டாம்.."

மல்லிகாவும் வர்ஷாவும் பிரமித்து விட்டனர்.. மனித நேயம் எத்தனை சக்தி வாய்ந்தது.. வட்டித் தொழில் செய்பவரின் மனதில் அது குடி கொண்டிருக்கிறது.. ஆனால் அந்த வீட்டில் பிறந்து வளர்ந்த பெண்ணின் மனதில் அது குடியில்லையே.. மல்லிகா மரியாதையுடன் செட்டியாரைப் பார்த்துக் கைகூப்பினாள்..

"ஐயா.. உங்களது கருணைக்கு நன்றி.. நீங்கள் அவரிடம் பணம் கொடுத்திருந்தால் என்ன.. ஹர்ஷாவிடம் கொடுத்திருந்தால் என்ன.. இரண்டுமே ஒன்று தான்.. ஏனென்றால் எங்கள் குடும்பத்தின் மொத்தச் சொத்தையும் விற்றுப் பணத்தை அவள் எடுத்துக் கொண்டு போயிருக்கிறாள்.. வீட்டிலிருந்த பணம் நகைகளையும் சேர்த்து அள்ளிக் கொண்டு போய் விட்டாள்.. அவருடைய உயிரையும் கூடத்தான்.. நாங்கள் கழுத்தில் கைகளில் போட்டிருக்கும் நகைகள்தான் மிச்சம்.. ஆயிரக் கணக்கில் நீங்கள் விட்டுக் கொடுக்கலாம்.. லட்சக்கணக்கில் விட்டுக் கொடுக்கிறேன் என்று சொல்கிறீர்களே.. அதை ஏற்றுக் கொள்வது நியாயமில்லை.. கொஞ்ச நாள் டைம் கொடுங்கள்.. இந்த வீட்டை உங்களிடம் ஒப்படைத்து விடுகிறோம்.."

"அம்மா.. நான் உங்கள் கூடப் பிறந்தவன் போல.."

"கூடப் பிறந்தவனே எங்கள் பொறுப்பை தட்டிக் கழித்து விட்டானே.. உங்களைப் போல சிலர் இருப்பதால்தான் உலகத்தில் மழை பொழிகிறது.. நீங்கள் நீண்ட காலம் வாழ வேண்டும்.. அதற்காகத்தான் நான் உங்களது கடனை அடைக்கத் துடிக்கிறேன்.. எங்களைப் போல இன்னும் நாலு பேருக்கு இரக்கம் பார்த்தால் உங்கள் வாழ்க்கை என்ன ஆவது..?"

'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே..' செட்டியார் துயரப் புன்முறுவலுடன் விடைபெற்றர்..

அன்று இரவு வர்ஷா தூங்கியவுடன்.. மல்லிகா சத்தமின்றி எழுந்தாள்.. மேஜை டிராயரைத் திறந்து தூக்க மாத்திரைகள் அடங்கிய பாட்டிலை எடுத்தாள்.. அதைக் கைகளில் சரித்து வாய்க்குள் போடப் போனபோது ஒரு கை அதை தட்டிவிட்டது.. நிமிர்ந்து பார்த்தவள்,

"வர்ஷா.." என்றாள் அதிர்ச்சியுடன்..

"செட்டியார் சொன்னதைக் கேட்டீர்கள் இல்லை யாம்மா.. உங்களுடைய இளைய மகளை மகளாய் நீங்கள் நினைத்ததில்லையென்று சொல்லி விட்டுப் போகிறார்.. அதை உண்மையாக்குகிறீர்களே அம்மா.. சாக வேண்டும்ன்னு முடிவு செய்தால் என்னை விட்டு விட்டுப் போக ஏன் நினைக்கிறீர்கள்...? என்னிடமும் அந்த மாத்திரைகளைக் கொடுங்கள் நாம் சேர்ந்து சாகலாம்.."

"என் மகளே.." மல்லிகா அவளைக் கட்டிக் கொண்டு அழுதாள்..

"நான் இருக்கிறேன் அம்மா.. உங்களுக்கு நான் இருக்கிறேன்.. ஹர்ஷா சுயநலமாய் பணத்தை எடுத்தக் கொண்டு ஓடி விட்டாள்.. அப்பா நம்மை நிர்கதியாய் நிற்கவிட்டு உயிரை விட்டு விட்டார்.. நீங்களும் அது போல் போகப் பார்க்கிறீர்களே.. உங்கள் துயரத்தை பெரிதாய் நினைக்கிறீர்களே.. ஒரு நிமிடம் என்னை நினைத்துப் பார்த்தீர்களா..? நான் என்னம்மா குற்றம் செய்தேன்..? எனக்கென்று யார் இருக்கிறார்கள்..? இந்த உலகத்தில் நான் எப்படித் தனியாக வாழ்வேன்.."

மல்லிகா விசும்பி அழுது கொண்டிருந்தாள்.. அருகே அமர்ந்து வர்ஷா தைரியம் சொல்லிக் கொண்டிருந்தாள்.. இறுதியில் கண்ணீரைத் துடைத்துக் கொண்ட மல்லிகா வர்ஷாவிடம் கரம் நீட்டினாள்..

"சத்தியம் செய்.. காதல் என்ற அந்தக் கருமாந்திர வார்த்தை உன் வாழ்வில் வரக்கூடாது.. எந்தக் காலத்திலும் யாரையும் நீ காதலிக்கக் கூடாது.. பெண்ணை வளர்க்கத் தெரியவில்லை என்று பெயர் வாங்கி விட்டேன்.. இனி

அந்தப் பெயரை நீயும் வாங்கித் தந்து விடக்கூடாது.. நான் கை நீட்டும் மாப்பிள்ளைக்குத்தான் நீ கழுத்தை நீட்ட வேண்டும்.. இதற்கு சம்மதமானால் நான் உயிரோடு இருக்கிறேன்.. இல்லையென்றால் என்னை நீ விட்டு விடு.."

மல்லிகா நீட்டிய கரத்தில் தன் கரத்தை வைத்து வாக்குக் கொடுத்தாள் வர்ஷா..

"நான் உறுதியளிக்கிறேன் அம்மா.. யாரையும் நான் காதலிக்க மாட்டேன்.. யாரிடமும் காதல் சொல்ல மாட்டேன்.. யாருக்காகவும் உங்களை விட்டுப் போக மாட்டேன்.. கடைசி வரை உங்களை நான் பார்த்துக் கொள்கிறேன் அம்மா.."

வர்ஷா சொன்னது போலவே தன் வாழ்க்கையில் உறுதியாக நின்றாள்.. சென்னையில் வேலைக்கு விண்ணப்பித்தாள்.. வேலை கிடைத்ததும்.. நட்பாகப் பழகிய வசந்தா உதவி செய்தாள்.. சென்னையில் வீடும் கிடைத்தது.. அத்தியாவசிய பொருட்களைத் தவிர மற்ற ஆடம்பரப் பொருட்களை வந்த விலைக்கு விற்றுப் பணமாக்கிக் கொண்டார்கள்.. கிளம்பும் நாளில் சாமான்களை லாரியில் ஏற்றி அனுப்பி வைத்து விட்டு செட்டியாரைத் தேடிப் போய் வீட்டுச் சாவியை ஒப்படைத்தார்கள்..

பிறந்து வளர்ந்த செல்வாக்குகோடு வாழ்ந்த ஊரை விட்டுத் தாயுடன் தனியாக சென்னை நோக்கிக் கிளம்பினாள் வர்ஷா..

போர்க்களமே வாழ்வாய் அமைந்து விட்டவளுக்கு போர் புரியத்தான் நேரம் இருக்கும்.. காதலை நினைக்க எப்படி நேரம் இருக்கும்..?

## 23

அலையடித்த கடல் கூட அமைதியாகி விட்டது போல் மாலதிக்குத் தோன்றியது.. வர்ஷா மனதிலிருப் பதைக் கொட்டி விட்டவளாய் அமர்ந்திருந்தாள்.. அழகிய கொடி

போன்ற அந்தப் பெண்ணைப் பார்த்து மாலதிக்குள் துயரம் மண்டியது..

'இவளைப் போய் வார்த்தைகளால் காயப்படுத்தி விட்டேனே.. ஆகாஷ் நல்லவனாக இருக்கலாம்.. ஆனால் இவளால் எப்படி அவனைக் காதலிக்க முடியும்..? மூன்று வருடங்கள் என்ன.. முப்பது வருடங்கள் போனாலும் வர்ஷா ஒரு நாளும் ஆகாஷிடம் காதல் சொல்ல மாட்டாள் என்று விவேக் சொன்னது எவ்வளவு உண்மையான வாதம்.. விவேக்கை மாப்பிள்ளையென்று மல்லிகா நிச்சயம் செய்த போது இவளால் எப்படி மறுக்க முடியும்..? இரண்டு ஆண்களின் வாழ்க்கையோடு விளையாடியது இவள் இல்லை.. விதிதான் இவளது வாழ்க்கையோடு விளையாடி விட்டது.. விவேக் சொன்னது போல் இவள் பரிதாபத்துக்கு உரியவள்..'

"போகலாமா மாலதி... இருட்டி விட்டது.. அம்மா பாவம் பயந்து விடுவார்கள்.. நான் போக வேண்டும்.."

பயப்படத்தான் செய்வார்கள்.. இப்படிப்பட்ட இழப்புக்களை சந்திக்க ஒரு குடும்பப் பெண்மணி பயப்படாமல் என்ன செய்வாள்..?

"ஸாரி வர்ஷா..?"

"எதற்காக மாலதி..?"

"நான் உன் மனதைக் காயப்படுத்தி விட்டேன்.. உன் சூழ்நிலை புரியாமல் பேசி விட்டேன்.."

"பரவாயில்லை.. உங்களைப் போன்றவர்களின் அறிமுகம் கிடைத்ததற்கு நான் உண்மையிலேயே கடவுளுக்கு நன்றி சொல்கிறேன்.. உங்கள் நண்பர்களை மட்டும் நீங்கள் காப்பாற்றவில்லை.. என்னையும் காப்பாற்றி இருக்கிறீர்கள்.. மாலதி.. விவேக்.. என் அம்மா கடைசி வரை கூட இருக்க சம்மதித்தார்.. ஆகையினால்தான்

நான் என் மனம் மறைத்து மௌனம் சாதித்தேன்.. என் அம்மாவிற்கு என்னை விட்டால் சொந்தமென்று சொல்லிக் கொள்ள யாரும் கிடையாது மாலதி.. தற்கொலை பண்ணிக் கொள்ளப் போனவர்களை தடுத்து நிறுத்தி என் கூட சென்னைக்கு அழைத்து வந்தது எதற்காக..? எனக்கொரு

குடும்ப வாழ்வை அமைத்துக் கொண்டு என் கணவன்.. என் குழந்தை.. என் குடும்பமென்று நான் விலகிப் போய் விடுவதற்காகவா..? இல்லை மாலதி.. நான் கடைசி வரை என் அம்மாவைக் கைவிட மாட்டேன்.."

வர்ஷா எழுந்து கொண்டாள்.. மாலதி மௌனமாக அவளுடன் நடந்தாள்..

"ஓகே மாலதி.. நான் வருகிறேன்.."

"பொறு வர்ஷா.. நான் உன்னை வீட்டில் டிராப் பண்ணி விட்டுப் போகிறேன்.."

"நோ தேங்க்ஸ் மாலதி.. உங்களுக்கு வீண் சிரமம் எதற்கு..?"

"அடித்து விடுவேன்.. சிரமம் அது இது என்று பிரித்துப் பேசக்கூடாது.."

வர்ஷாவிற்கு மாலதியின் உரிமை கலந்த கோபம் மனதிற்கு இதத்தைத் தந்தது.. யாருமேயில்லை என்ற தனிமை உணர்வு மறைந்தது.. அவள் காரில் ஏறி மாலதியின் அருகே அமர்ந்தாள்..

"உங்களுடைய குட்டிப் பெண் நிஷா எப்படியிருக் கிறாள் மாலதி..?"

"அவளுக்கென்ன.. அவளுடைய டாடியுடன் வாயடித்துக் கொண்டு ஜாலியாக இருக்கிறாள்.. செம வால்.. அவளிடம் பேசிப்பார்.. உன்னால் அவளை பேச்சில் ஜெயிக்க முடியாது.."

"உங்கள் பெண்ணாயிற்றே.. உங்களின் துறுதுறுப்பு அப்படியே இருக்குமே.."

"ஊஹூம்.. அவள் அப்படியே கரணின் வாரிசு... நான் படபடவென்று பேசி மனதிலிருப்பதை கொட்டி விடுவேன்.. அவள் அவளுடைய டாடி போல் நறுக்கென்று நாலு வார்த்தையில் நம் மூக்கை உடைத்து விடுவாள்.."

மாலதியின் வார்த்தையில் பெருமை தொனித்தது.. என்னதான் படித்திருந்தாலும்.. நாகரிகத்தின் உச்சியில் நின்றிருந்தாலும்.. இந்தப் பெண்கள் தன் பிள்ளைகள் தன் கணவனைப் போலிருப்பதில் எத்தனை பெருமை கொள்கிறார்கள்..

பார்வதியம்மாள் வீட்டு வாசலில் நின்றிருந்தாள்.. கார் கதவைத் திறந்து கொண்டு வர்ஷா இறங்குவதைக் கண்டதும்..

"வர்ஷாவா..? காரிலா வந்திருக்கிறாய்..? யார் காரில் கொண்டு வந்து விட்டது.. இது என்ன புதுப் பழக்கம்..?" என்று அதட்டினாள்..

"மாலதி.. இந்த அம்மா என்னை சந்தேகப்படு கிறார்களே.." வர்ஷா கவலையுடன் கூறவும் மாலதி காரிலிருந்து இறங்கினாள்..

"யாரது.. மாலதியா..? நீ எப்படி இவளைப் பார்த்தாய்..?"

"இவள் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தாள் ஆன்ட்டி.. நான் வீட்டில் டிராப் பண்ணுகிறேன்னு சொல்லி அழைத்துக் கொண்டு வந்தேன்.."

வர்ஷா நிம்மதியுடன் மூச்சு விட்டுக் கொண்டு சென்றாள்..

"ஓஹோ.. அப்படியா நல்ல காரியம் செய்தாய்.. உன் பிரண்ட் பண்ணிய காரியம் உனக்குத் தெரியுமில்ல.."

"தெரியும் ஆன்ட்டி.."

"கல்யாணத்தை நிறுத்தி விட்டான்... இந்தப் பெண்ணின் பாவத்தைக் கொட்டிக் கொண்டான்... நீயெல்லாம் அவனுக்கு புத்தி சொல்லக்கூடாதா..?"

"சொன்னால் அவன் கேட்கிற ரகமா..? விட்டுத் தொலைங்க ஆன்ட்டி.. இவன் இல்லையென்றால்

ஊரில் வேறு மாப்பிள்ளையே இல்லையா..? இவனை விட பெட்டராக நான் மாப்பிள்ளை கொண்டு வருகிறேன் பாருங்கள்.."

பார்வதியம்மாள் வியந்து போனாள்.. சும்மா விவேக் கைப் பற்றிக் குறை கூற வாய் திறந்தவள் 'ஆ'வென்று வாயைப் பிளந்து விட்டாள்..

"என்ன மாலதி இப்படிச் சொல்கிற.. இது என்ன நினைத்தவுடனே நெய்காரன் குதிரையில் ஏறுகிற விஷயமா..? நான் என்னவோ உன்னைக் கண்டதும் மனம் ஆறாமல் உன் பிரண்டைப் பற்றி இரண்டு வார்த்தை சொல்லி விட்டேன்.. அதற்காக வேறு மாப்பிள்ளை

கொண்டு வருகிறேன்னு சவால் விடுகிறாயே.. இது என்ன முடிகிற காரியமா..?"

"ஏன் முடியாது ஆன்ட்டி.. நான் நடத்திக் காட்டுகிறேன்.." என்றபடி மாலதி வர்ஷா சென்று கொண்டிருந்த திக்கைப் பார்த்தாள்..

அவள் பார்வையைத் தொடர்ந்து தன் பார்வையைச் செலுத்திய பார்வதியம்மாள்.. "ம்ஹூம்.." என்று பெருமூச்சு விட்டாள்..

"ஏன் ஆன்ட்டி.."

"இது நல்ல பொண்ணுதான்.. ஆனால் அதிர்ஷ்டக் கட்டை.."

"அப்படிச் சொல்லி நாம் நழுவிவிடக் கூடாது ஆன்ட்டி.."

"வேறு என்ன செய்யச் சொல்கிறாய்.. உன் பிரண்ட் ஆசைப்பட்டான்.. ஆஹா இந்தப் பெண்ணுக்கும் அவள் அம்மாவுக்கும் விடிந்து விட்டதுன்னு நினைத்தேன்..

அவன் என்னவென்றால் எங்கள் நினைப்பில் மண்ணை அள்ளிப் போட்டு விட்டான்.. பாவம் அந்த மல்லிகா.. அவள் பாட்டுக்கு இருந்தவளிடம் வலியப் போய் கல்யாணம் பேசிவிட்டு.. இப்போது வேண்டாம்ன்னு சொன்னால் அவள் மனது என்ன பாடுபடும்..? மாலதி நம்பிக்கை கொடுக்கக் கூடாது... அப்படிக் கொடுத்து விட்டால்.. அதை எப்பாடு பட்டாலும் காப்பாற்ற வேண்டும்.."

"நீங்கள் சொல்வது உண்மைதான் ஆன்ட்டி.."

"விவேக் செய்தது கொலை பாதகம்.."

"நிஜம்தான் ஆன்ட்டி.. ஆனால் அவனையே நினைத்து தொங்கிக் கொண்டிருப்பானேன்..? வர்ஷா போன்ற அழகான படித்த பெண்ணிற்கு ஆயிரம் மாப்பிள்ளைகள் கிடைப்பார்கள்.."

"விவேக்கைப் போல் ஒருவன் கிடைப்பானா..?"

"அவனை விட பெட்டராக ஒரு மாப்பிள்ளை இருக்கிறான்.. அவனைப் பேசி முடிக்கலாமா..?"

"என்னம்மா சொல்கிறாய்..? நீ சொல்வது நிஜம் தானா..?"

"நிஜம்தான் ஆன்ட்டி.. விவேக் மட்டும்தான் என் கூடப் படித்தானா..? எத்தனை பேர் படித்தார்கள்..? அவர்களில் ஆகாஷ்ன்னு ஒரு பிரண்ட் இருக்கிறான்... இன்னும் கல்யாணம் ஆகவில்லை.. அவனைப் பேசி முடிக்கலாமா..?"

"ஏம்மா.. அவன் உன்னுடன் படித்தவன்கிற.. பெரிய படிப்பு படித்தவன் காசு பணம் இருக்கிற நம்மளைப் போல ஆளுகள் வீட்டில் தானே பெண் கட்டுவான்..?

இந்தப் பெண் மாதச் சம்பளம் வாங்கும் பெண்.. தாயும் மகளும்.. அந்தச் சம்பளத்தை வைத்து வாழ்க்கையை ஓட்டுகிறார்கள்.."

"ஆன்ட்டி.. எனக்கே இப்போதுதான் ஒரு விஷயம் தெரியும்.. அதை நான் சொல்லவா..?"

"என்ன விஷயம்..?"

"ஆகாஷ்.. வர்ஷா வேலை பார்க்கும் அதே கம்பெனியில் தான் வேலை பார்க்கிறான்.."

"அட.. அதுவும் அப்படியா..?"

"ஆமாம் ஆன்ட்டி.. ஆகாஷைப் பார்க்கத்தான் நான் அவனுடைய ஆபிஸிற்குப் போனேன்.. பார்த்தால் வர்ஷா வெளியே வருகிறாள்.. என்னடான்னு பார்த்தால் அவனுடைய செக்ரட்டரிதான் வர்ஷா.."

பார்வதியம்மாள் யோசனையாக மாலதியைப் பார்த்தாள்.. மாலதி சுதாரிப்பாக இருந்தாள்..

'இந்தம்மாள் பலே கில்லாடி.. ஆகாஷிற்கு வர்ஷாவின் மேல் காதல் என்பதை எளிதாகக் கண்டுபிடித்து விடுவாள்.. நாம் அதற்கு இடம் கொடுக்கக் கூடாது..'

மாலதி உஷாராய் இருந்தபோது அவள் எதிர்பார்த்து போலவே பார்வதியம்மாள் கொக்கி போட்டாள்..

"எப்படி இவ்வளவு நிச்சயமாய் சொல்கிறாய்..? அந்தப் பையனுக்கு வர்ஷா மேல் ஏதும் அபிப்ராயம் இருக்கிறதா..?"

"சேச்சே.. அப்படியெல்லாம் இல்லை ஆன்ட்டி.. அவனுக்கு என்னவோ கல்யாணம் என்றாலே பிடிக்க வில்லையாம்.. கல்யாணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டு வருகிறான்.. அவனுடைய அப்பா என்ன வென்றால் என்னையோ.. மற்ற

பிரண்ட்ஸையோ கண்டு விட்டால் போதும்.. நடு ரோட்டில் நின்று கொண்டு ரம்பம் போட ஆரம்பித்து விடுகிறார்.."

"அடப்பாவமே.. ஏன் அப்படி அறுக்கிறார்..?"

"அவர் மகனுக்கு நாங்கள் புத்தி சொல்ல வேண்டுமாம்.. எப்படியாவது அவனை சம்மதிக்க வைத்து ஒரு கல்யாணத்தை அவனுக்கு பண்ணி வைத்து விட வேண்டுமாம்.. பெண் யாராக இருந்தாலும் சரியாம்.."

பார்வதியம்மாள் ஆர்வமானாள்..

"இங்கே பாரு.. கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய் எங்கே.. நெய் எங்கேன்னு அலைந்து கொண்டிருக்கிறோம்.."

"அதிலும் சுத்தமான பசு மாட்டு நெய்.."

"அதைச் சொல்லு.. ஊரெல்லாம் தேடினாலும்.. இப்படி இடம் கிடைக்குமா..?"

"கிடைத்து விட்டதே.."

"ஏன் மாலதி நீ சொன்னால் உன் பிரண்ட் கேட்பானா..?"

"தெரியாத பெண்ணாக இருந்தால் யோசிப்பான்.. வர்ஷா தெரிந்த பெண் தானே.. இவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள அவனுக்கு கசக்கவா போகிறது..?"

"அதைச் சொல்லு.. இனிக்கத்தான் செய்யும்.."

"நான் ஆகாஷின் அப்பாவைப் பிடிக்கிறேன் ஆன்ட்டி.. அதற்குப் பின்னால் ஆகாஷிடம் பேசுகிறேன்.."

"அதுதான் சரி.. எதையுமே பெரியவர்களை முன்னால் வைத்துத்தான் செய்ய வேண்டும்.."

"அதனால்தான் உங்களை முன்னால் வைத்திருக் கிறேன்.. உங்களை மாதிரி நல்ல உள்ளம் படைத்த பெரிய மனிதர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்..?"

"அதைச் சொல்லு.. ஏதோ என்னால் முடிந்த உபகாரம்.. அந்தச் சின்னப் பெண்ணின் கழுத்தில் தாலி ஏற வேண்டும்.."

"முயற்சியை ஆரம்பிக்கலாம் ஆன்ட்டி.. முடிவு கடவுளின் கையில்.."

"அதைச்சொல்லு.. நம்ம கையில் என்ன இருக்கு..?"

மாலதியின் கையில் கார் சாவி இருந்தது.. அடுத்து பார்வதியம்மாள்.. அதைச் சொல்லு.. என்று ஆரம்பிப் பதற்குள் அவள் இடத்தைக் காலி பண்ணினாள்..

# 24

மணியன் காலையில் கிளம்பும்போதே வாசவியுடன் சண்டை போட்டுக் கொண்டு கிளம்பி வந்திருந்தான்.. அதே மனப்போக்கோடு அலுவலகத்திற்குள் நுழைந்தவன் எதிரே வந்த ஆகாஷ்,

"குட்மார்னிங்.. மணி.." என்றதைக் கவனிக்காமல் கடந்து செல்லப் போனான்..

"ஏன்டா.. ஒரு மனுசன் குட்மார்னிங் சொன்னால் பதிலுக்கு ஒரு குட்மார்னிங் கூட சொல்ல மாட்டாயா..?"

"யார் குட்மார்னிங் சொன்னது..?"

"அதையேன்டா.. யார் என்னை அடிக்க வந்தது என்கிறது போலக் கேட்கிறாய்.. குட்மார்னிங் சொல்வது அவ்வளவு பெரிய தப்பா..?"

"ஏன்டா.. நீ வேறு காலங்கார்த்தாலே கடுப்படிக்கிற.."

"நான் வேறு என்றால் ஏற்கனவே வீட்டில் உன்னை கடுப்படித்துத்தான் வழியனுப்பி இருக்கிறார்களா..? என்ன.. வாசவியுடன் சண்டையா..?"

"ச்ச்.. உன்னைப் பார்த்தாவது எனக்குத் தெரிந்திருக்க வேண்டும்.."

"என்னவென்று தெரிந்திருக்க வேண்டுமாம்.."

"பிரம்மச்சாரி வாழ்க்கை எவ்வளவு இனிமையானது என்று.."

"அட.. அப்படியா..? இந்த ஞானோதயம் எப்போதிருந்தாம்..?"

"இன்றைக்குக் காலையிலிருந்துதான்.."

"எவ்வளவு நேரம் நீடிக்கும்..?"

"ச்ச்ச்.." என்று அலுத்துக் கொண்டவனின் செல்போன் மணி அடித்தது.. எடுத்து காதுக்கு குடுத்தான்..

"என்னடி..?"

"....."

"ஆமாம்.. நீ மட்டும் சிரித்துக் கொண்டே டாட்டா காட்டினாயா..?"

"....."

"என் முகம் அப்படித்தாண்டி இருக்கும்.. நீ உன் அப்பாவிடம் சொல்லி புன்னகை மன்னன் எவனையாவது பெண் பார்க்க வரச் சொல்லி இருக்க வேண்டியதுதானே.."

"....."

"என்னது.. உனக்கு என் முகமே போதுமா..? இந்தக் கொஞ்சலில் ஒன்றும் குறைச்சல் இல்லை..."

"....."

"பின்னே ஏன்டி.. விடிந்தும் விடியாமல் என்னை அந்தக் கடி கடித்த..?"

"....."

"ஏய்ய்.. உன் தங்கையை நானாடி வீட்டுக்கு வரச் சொன்னேன்..?"

"....."

"லீவுக்கு வந்தால் நீயும் உன் தங்கையுமாக கொஞ்சி விட்டுப் போவதுதானே.. என்னை ஏண்டி குடைகிற..?"

"....."

"ஏய்.. ஏய்.. நானாடி உன் தங்கையிடம் வழிந்தேன்..? நீதானே அவளிடம் நான் குசலம் விசாரிக்கவில்லையென்று குற்றப் பத்திரிகை படித்த.."

"....."

"இதோ பார் வாசவி.. உன்னை விட்டு விட்டு உலக அழகி வந்தாலும் இந்த மணியன் ஏறெடுத்தும் பார்க்க மாட்டான்.."

"....."

"மல்லிகைப்பூதானே.. வாங்கி வந்து விடுகிறேன்.."

"....."

"எனக்கு மட்டும் உன்கூட சண்டை போட வேண்டு மென்று ஆசையா..?"

"....."

"நீ மட்டும் என்னவாம்.. என்னை மயக்கித்தானே வைத்திருக்கிற.."

பெண்டாட்டியிடம் சமாதானமாகிவிட்ட சந்தோஷத் துடன் போனை அணைத்துப் பையில் போட்ட மணியன் ஆகாஷைப் பார்த்து ஈயென்று சிரித்து வைத்தான்..

"சகிக்க மாட்டாத இந்தப் புன்னகை முகத்தையா உன் மனைவி போதுமென்று சொன்னாங்க.. தாலி ஒரு தமிழ் பெண்ணை எப்படியெல்லாம் மாற்றி விடுகிறது பார்.."

"எனக்கென்னடா குறைச்சல்..?" என்று எதிரே வந்த ஷகிலாவைப் பார்த்தபடியே ஆகாஷிடம் வினவினான் மணியன்..

அவள் தோள் பட்டையில் முகத்தை இடித்துக் கொண்டு போனாள்..

"தேவையாடா உனக்கு..? இப்போதுதானே உன் பெண்டாட்டியிடம் உன்னை விட்டு விட்டு உலக அழகி வந்தாலும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டேன்னு சொன்னாய்.. இவள் உலக அழகியைவிட மேலா..?"

"இதையெல்லாம் நீ கண்டுக்காதே மச்சான்.."

"நான் கண்டுகொள்ளாமல் விட்டு விடுவேன்.. உன் மனைவி கண்டு கொள்ளாமல் இருப்பாங்களா..?"

"ஏன்டா.. இப்போதுதான் அவள் வெள்ளைக் கொடி காட்டியிருக்கிறா.. உனக்கு அது பொறுக்கவில்லையா..?"

"காலையில் வீட்டில் என்னடா சண்டை.."

"அதையேண்டா கேட்கிற..?"

"சரி கேட்கவில்லை.."

"ஏன்டா.. அலுப்பில் ஒரு மனிதன் ஒரு வார்த்தையை சொல்லிவிடக் கூடாதா..? அதையே பிடித்துக் கொள் வதா..? என் மச்சினிச்சி ஊரில் இருந்து வந்திருக்கிறாள்.."

"அதற்கென்ன..?"

"அவளிடம் காலையில் சும்மா பேசிக் கொண்டிருந்தேன்.."

"சும்மா பேசிக் கொண்டிருந்த..? அதுவும் நீ..?"

"ஏண்டா.. என் பெண்டாட்டியைப் போலவே நீயும் என்னைச் சந்தேகப்படுவதிலேயே குறியாக இருக்கிற.. ஏம்மா.. படிப்பு முடிந்து விட்டதே.. அடுத்து என்ன செய்யப் போகிறாய்ன்னு கேட்டேன்.."

"பரவாயில்லையே.. அதற்கு அந்தப் பெண் என்ன சொல்லிச்சு.."

"நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்னு சொல்லுச்சு.."

"அதுசரி.. உனக்கேற்ற மச்சினிச்சிதான்.. அப்புறம்.."

"அப்படியாம்மா.. என்னைப் போல் நல்ல மாப் பிள்ளையாய் பார்த்து கல்யாணம் பண்ணிக்கம்மான்னு சொன்னேன்.."

"ஏண்டா.. சின்னப் பெண்ணிடம் போய் சில்மிஷமாய் பேசியிருக்கிறாய்.."

"நீ வேற.. அதுவா சின்ன பெண்..? அது என்ன சொல்லிச்சு தெரியுமா..?"

"என்னடா சொல்லுச்சு.."

"நீங்கள்ளாம் ஓல்டு பேஷன் மாமா.. நான் சைட் அடிக்கக் கூட நீங்கள் லாயக்கில்லை.. எனக்கு உயரமாய்.. அழகாய்.. பணக்காரனாய்.. வெளிநாட்டு மாப்பிள்ளையாய் வேண்டும்.. என் அக்காவைப் போல் என்னை ஏமாளியென்று நினைத்தீர்களான்னு கேட்டு விட்டது.."

அதைக் கேட்ட ஆகாஷ் அடக்க மாட்டாமல் 'ஹாஹா' வென்று சிரித்தான்..

"பார்த்துடா.. பல் சுளுக்கிக்கப் போகுது.. அவள் என்னை வாரியது தெரியாமல் என் பெண்டாட்டி என்னை அனல் பார்வை பார்த்துக் கொண்டு ஏன் என் தங்கையிடம் வழிந்தீர்கள் என் சண்டை போட்டு விட்டாள்.. வழிகிற ஆளா அவள் தங்கை..?"

"ஐயோ பாவம்.. மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் அடியாம் ச்சு.."

"நீ என்னைக் கேலி பண்ணுகிறாயா.. இல்லை என்மேல் பரிதாபப்படுகிறாயா..? நீ ச்சு போடும் தினுசே சரியில்லையே.."

"போடா.. போ.. போய் வேலையைப் பார்.. ஷகிலாவைப் பார்க்காதே.."

ஆகாஷ் சிரித்துக் கொண்டே அவனது கேபினுக்குள் சென்றான்.. அவனது செல்போன் மணி அழைத்தது.. எடுத்துப் பார்த்தான்.. மாலதி அழைத்தாள்..

"சொல் மாலதி.." என்றான்..

"ஆகாஷ் இன்றைக்கு ஈவினிங் என் பிளாட்டிற்கு வா.."

"எனிதிங் இம்பார்ட்டன்ட்.."

"யெஸ்.."

"ஓகே.."

அன்று மாலை ஒரு கையில் கரடி பொம்மையுடனும்.. மறு கையில் இனிப்புப் பெட்டியுடனும்.. மாலதியின் பிளாட் வாசலில் நின்று அழைப்பு மணியை அழுத்தினான் ஆகாஷ்.

"வெல்கம் ஆகாஷ்.." என்றான் கதவைத் திறந்த கரண்..

"தேங்க்ஸ்.. நிஷாக் குட்டி எங்கே.."

"இங்கே.." என்றபடி அவன் கையிலிருந்த கரடி பொம்மையைப் பார்த்த நிஷா..

"ஹேய்.. டெட்டி பியர்.." என்று குதூகலமாய் ஆர்ப்பரித்தபடி பொம்மையை வாங்கிக் கொண்டது..

மாலதி புன்னகையுடன் ஆகாஷின் அருகே வந்தாள்..

"உனக்குத்தான் இதெல்லாம் தோன்றும்.. மணியனின் மண்டை வெறும் மரமண்டை.."

"அவனைத் திட்டத்தான் என்னை வரச் சொன்னாயா..?"

"இல்லைடா.. நான் வர்ஷாவை நேற்று சந்தித்துப் பேசினேன்.."

ஆகாஷின் முகத்தில் எதிர்பார்ப்புடன் கூடிய கேள்விக் குறி ஒன்று தோன்றியது..

"என்ன திடீரென்று..?"

"திடீரென்று இல்லைடா.. நீ இன்னொஸென்ட்.. உன்னைச் சுற்றி நிறைய நடந்து விட்டது.."

"நீ சொல்வது எனக்குப் புரியவில்லை.."

"புரியும்படி சொல்கிறேன் கேள்.. மணி.. என்னைப் பார்க்க இங்கு வந்திருந்தபோது உன் காதலியின் பெயரென்று வர்ஷாவின் பெயரைச் சொன்னான்.. அதைக் கேட்டதும்.. நாங்கள் ஷாக் ஆகி விட்டோம்..."

மாலதி ஆதியிலிருந்து ஆரம்பித்து அந்தம் வரை சொல்லி முடித்தாள்.. ஆகாஷ் அசையாமல் அமர்ந்து விட்டான்.. இவ்வளவு விஷயம் நடந்திருக்கிறதா..? விவேக் அவனுக்காக தான் விரும்பிய பெண்ணை விட்டுக் கொடுத்து விட்டானா..?

"வர்ஷாவின் மனதில் நீதான் இருக்கிறாய் ஆகாஷ்.. அது தெரிந்த பின்னால் விவேக் எப்படி அவளைத் திருமணம் செய்து கொள்வான்..?"

"வர்ஷாவின் மனதில் இவ்வளவு துயரம் இருக்கிறதா..?"

"பூவுக்குள் பூகம்பம் என்கிறது இதுதான் போல.."

"அவள் சிரித்தே நான் பார்த்தது இல்லை மாலதி.."

"இனி அவளை சிரிக்க வைக்க உன்னால் முடியும் ஆகாஷ்.."

"இனி அதுதானே என் வேலை மாலதி.."

"எப்படிடா.. உன் பேரண்ட்ஸ் இதற்கு சம்மதிப் பாங்களா..?"

"நான் சம்மதிக்க வைக்கிறேன்.."

"வர்ஷாவின் அம்மாவிற்கு காதல் என்ற வார்த்தை பிடிக்காது ஆகாஷ்.. நான் அவர்கள் குடியிருக்கும் ஹவுஸ் ஓனரம்மாவிடம் பேசி வைத்திருக்கிறேன்.. உன்னைப் பற்றிச் சொல்லி.. உன்னை நான் வர்ஷாவிற்கு பேசி முடிக்கிறேன்னு சொல்லியிருக்கிறேன்.. நாம் நாமாய் பெண் கேட்டுப் போவது போல் இருக்க வேண்டும்.."

ஆகாஷ் நெகிழ்ச்சியுடன் மாலதியைப் பார்த்தான்..

இவள்தான் எப்படிப்பட்ட தோழியாய் இருந்திருக் கிறாள்.. இந்தக் காலத்தில் உடன் பிறந்தவர்கள் கூட இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.. இவள் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறாள்.. விவேக்.. ஆகாஷ்.. வர்ஷா.. மூவரின் முக்கோணக் காதலை யாருக்கும் எந்தவிதப் பாதிப்பும் வராமல் சீர்படுத்தியிருக் கிறாள்.. வர்ஷாவிடம் பேசி அவளது வாழ்க்கையின் துயர வரலாற்றைத் தெரிந்து கொண்டு வந்திருக்கிறாள்..

"ஏன்டா அப்படிப் பார்க்கிறாய்..?"

"உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் மாலதி.."

"காலா காலத்தில் வர்ஷாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு நான் நிம்மதியாக காய்கறி வாங்க மார்க்கெட் போய் வர வழி செய்.. அது போதும்.."

ஆகாஷ் மனம் விட்டுச் சிரித்தான்..

"அப்பா உன்னை அந்த அளவுக்கு பயமுறுத்தி வைத்திருக்கிறாரா.."

"ஆகாஷ்.. நீ விவேக்கிற்குத்தான் முதலில் தேங்க்ஸ் சொல்ல வேண்டும்.. உன்னையும்.. வர்ஷாவையும் பற்றிக் கேள்விப்பட்ட உடனே வர்ஷாவுடனான திருமண ஏற்பாட்டை நிறுத்தியதோடு இல்லாமல் தன்னை வர்ஷாவின் அம்மாவிடம் கெட்டவனாகக் காட்டிக் கொண்டான்.. ஹி இஸ் ஸோ கிரேட்.."

மாலதியுடன் விவேக்கின் பிளாட்டிற்குப் போனான் ஆகாஷ்.. அழைப்பு மணியோசை கேட்டு கதவைத் திறந்த விவேக் ஆகாஷைக் கண்டதும் தன் இரு கரங்களையும் விரித்தான்.. கண்களில் நீர் மல்க நண்பனின் கரங்களுக்குள் புகுந்து கொண்ட ஆகாஷ்.. தன் கண்ணீரால் விவேக்கின் தோள் பட்டையை நனைத்தான்..

"ஈஸி ஆகாஷ்.."

"நீ செய்தது ஈஸியான காரியம் இல்லைடா.. தேங்க்ஸ்.."

"வர்ஷாவின் மனதில் நீதான் இருக்கிறாய்.. திவ்யாவின் மனதில் நான்தான் இருக்கிறேன்.. உன்னையும்..

என்னையும் நம்மை நேசிப்பவர்களுடன் சேர்த்து வைத்த மாலதிக்குத்தான் இந்த கிரெடிட் எல்லாம் போய்ச் சேர வேண்டும்.."

தன் இரு நண்பர்களும் மனம் விட்டுச் சிரித்ததை மனமாரக் கண்டு ரசித்தாள் மாலதி..

## 25

"அப்பா உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்.."

தோட்டத்துச் செடிகளுக்கு குழாயின் மூலம் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்த பார்த்தசாரதி மகனை ஆச்சரிய மாகப் பார்த்தார்..

'அவருடன் பேச மகன் விரும்புகிறானா..'

அப்படியே தண்ணீர் குழாயை தரையில் போட்டு விட்டு மடித்துக் கட்டியிருந்த வேட்டியை இறக்கிக் கட்டிக் கொண்டார்.. தலையில் முண்டசாய் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து தோளில் போட்டுக் கொண்டார்..

"கொஞ்சம் என்னப்பா நிறைய பேசலாம்... வீட்டுக்குள் போய் பேசலாமா..?"

"வேண்டாம்பா.. வெளியில் போய் பேசலாம்.. வாக்கிங் போகலாமா..?"

பார்த்தசாரதி மகனை நிதானமாகப் பார்த்தார்..

"போகலாமே.."

இருவரும் கடற்கரை சாலையோரமாய் மெதுவாய் நடந்து கொண்டிருந்தார்கள்.. மகன் பேசட்டும் என்று மௌனமாய் நடந்து வந்தார் பார்த்தசாரதி..

"அப்பா.. நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன்.."

"இதை நான் எதிர்பார்த்தேன்.. யார் அந்தப் பெண்..?"

"என் செக்ரட்டரி.. பெயர் வர்ஷா.."

"ஓஹோ.. பெண்ணின் குடும்பம் எப்படி..?"

"அப்பா.. இதைப் பற்றிப் பேசத்தான் நான் உங்களை வெளியே அழைத்து வந்தேன்.."

ஆகாஷ் வர்ஷாவின் மூலக் கதையை விவரித்தான்.. குறுக்கிடாமல் கேட்டுக் கொண்ட பார்த்தசாரதி முகம் சுளித்தார்..

"என்னப்பா இது.. பெண்ணின் அக்கா இருக்கிற சொத்து பத்தையெல்லாம் சுருட்டிக் கொண்டு வீட்டை விட்டு ஓடி விட்டாள்.. அப்பா ஹார்ட் அட்டாக்கில் செத்து விட்டார்.. சொந்த ஊரை விட்டு இந்த ஊருக்கு பிழைக்க வந்திருக்கிறார்கள்.. இப்படி ஒரு கதையோடு இருக்கும் பெண்ணைக் காதலிக்கிற..?"

ஆகாஷின் முகம் கறுத்தது.. எதிர்ப்பு ஆரம்பித்து விட்டது.. சமாளிக்க வேண்டும்..

"ஆமாம் அப்பா.."

"வேறு பெண்ணே உனக்குக் கிடைக்கவில்லையா..?"

"வேறு பெண் எவளும் எனக்கு வேண்டாம்ப்பா."

"இத்தனை கதை போதாதுன்னு கல்யாணம் ஆனால் அந்தப் பெண்ணின் அம்மாவையும் நம் கூட கடைசி வரைக்கும் வைத்துக் கொள்ளணுமின்னு வேற சொல் கிறாய்.. இது நடக்கக் கூடிய காரியமா..?"

"நாம் மனது வைத்தால் கட்டாயம் நடக்கும் அப்பா.."

"அவ்வளவு பெரிய மனது எனக்கில்லை ஆகாஷ்.."

"அப்படியானால்.. என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லி இனிமேல் வற்புறுத்தாதீர்கள்.."

"எதற்கு எதை இணை கூட்டுகிறாய்..?"

"எனக்கு அவள் மட்டும்தான் இணையாக முடியும்.. அப்புறம் உங்கள் இஷ்டம்.."

ஆகாஷ் அடுத்து வந்த நாட்களில் தகப்பனாருடன் பேசுவதைத் தவிர்த்தான்.. மகனின் பிடிவாதம் பார்த்த சாரதியை அசைத்தது.. அவர் மனைவியிடம் பேசினார்..

"என்னங்க கிரகசாரம் இது..? இப்படியும் உலகத்தில் இருக்குமா..?"

"உன் மகன் இருக்கிறானே.."

"நான் ஒரு நாளும் இந்தக் கல்யாணத்திற்கு சம்மதிக்க மாட்டேன்.."

"அவனும் வேறு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்க மாட்டானாம்.."

ராஜேஸ்வரி மகனிடம் கெஞ்சிப் பார்த்தாள்.. அவன் மசியவில்லை.. அவள் கொஞ்சம் இறங்கி வந்தாள்..

"எல்லாம் சரிதாண்டா.. அந்தப் பெண்ணையே உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறோம்.. ஆனால் பெண்ணோட அம்மாகாரியையும் நம் கூடவே கடைசி வரைக்கும் வைத்துக் கொள்ளணுமின்னா நல்லாவா இருக்கு..? கேட்கவே சரியில்லாமல் இருக்கு.. நாள பின்ன நம்ம சொந்த பந்தம் நம்மைக் கேலி பேசாதா..?"

"கேலி பேச இதில் என்னம்மா இருக்கு..?"

"ஏண்டா.. உன் படிப்புக்கும்.. பதவிக்கும் நம் அந்தஸ்திற்கும் நகை நட்டு, வீடு, வாசல், சொத்து சுகத்தோடு பெண்ணைத் தர நம் சொந்தக்காரர்கள் நான்.. நீன்னு போட்டி போட்டுக் கொண்டு கிடக்கும்போது.. ஓடிப் போன அக்கா.. செத்துப்போன அப்பா.. காலமெல்லாம் தலைச் சுமையாய் அம்மான்னு கிடக்கும் ஒருத்தியைப் போய்க் கட்டிக்குவேன்கிறியே.. உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு..?"

"அம்மா.. இப்படியெல்லாம் ஏளனமாய் அவள் நிலை மையை நீங்கள் பேசுவதாக இருந்தால் என்னோடு பேசவே வேண்டாம்.. நம் வீட்டில் இத்தனை ரூம்கள் இருக்கின்றன.. இதில் ஒரு ரூமை வர்ஷாவின் அம்மாவிற்கு கொடுக்கக் கூடாதா..? நம் வீட்டுச் சாப்பாட்டில் ஒரு பிடி சாப்பாட்டை அவங்களுக்கு பகிர்ந்து கொடுக்கக் கூடாதா..? நன்றாக வாழ்ந்தவர்கள்.. வீடு வாசல் சொத்து சுகங்களை இழந்து.. இன்று வர்ஷா ஒருத்தி மட்டுமே அவங்களுடைய வாழ்க்கைக்கு பிடிமானம்ன்னு வாழ்கிறாங்க.. அவங்க கேட்பது என்ன..? நம் வீட்டில் உரிமை கேட்கவில்லை.. இருக்க ஒரு மூலையை கேட்கிறார்கள்.. அதை நீங்கள் கொடுக்கக் கூடாதா..?"

ராஜேஸ்வரியின் மனம் கனத்தது.. இயல்பான கருணை அவளுக்குள் பொங்கியது..

"என்னடா ஆகாஷ் இப்படிச் சொல்கிறாய்..? உதவி செய்வதாக இருந்தால் நான் வேண்டாமென்றா சொல்லப் போகிறேன்.. நீ உறவாக்கப் பார்க்கிறாயே.. இது சரிவராதுடா.. நாம் ஊரோடு ஒத்துப் போகணும்டா.."

"அம்மா.. நம்ம மனசுக்காக நாம வாழணும்.. ஊர் என்ன நினைக்குதுன்னு கவலைப்படுவதை விட்டு விட்டு உங்கள் மகன் என்ன நினைக்கிறான்னு கவலைப் படுங்க.. அவளை விட்டு விட்டு வேறொருத்தியுடன் வாழ என்னால் முடியாது.. இதுதான் என் முடிவு.. அவள் எனக்குக் கிடைக்கவில்லையென்றால்.. நான் வீட்டை விட்டு வெளியில் போய் விடுவேன்.."

இது அப்பட்டமான மிரட்டல்தான்.. ஆனால் ஆகாஷிற்கு வேறு வழி தெரியவில்லை.. வர்ஷாவை மணக்க அவனுக்கு பெற்றோரின் சம்மதம் தேவை.. அதற்காக அவன் சமா, தான, பேத, தண்டங்களைத் தயங்காமல் பிரயோகித்தான்..

பார்த்தசாரதியும்.. ராஜேஸ்வரியும் கூடிக் கூடிப் பேசினார்கள்.. இறுதியில் ஆகாஷின் காதலுக்கு பச்சைக் கொடி காட்டினார்கள்..

"தேங்க்யூம்மா.. தேங்க்ஸ் அப்பா.. அங்கே வந்து எப்படிப் பெண் கேட்பீர்கள்..?"

"என்ன.. என் மகன் உங்கள் மகளைக் காதலிக் கிறான்னு சொல்லிப் பெண் கேட்போம்.. என்னடி ராஜி நான் சொல்வது சரிதானே.."

"காரியத்தை கெடுக்கப் பார்க்கிறீர்களே அப்பா.. வர்ஷாவின் அம்மாவிற்கு காதல் என்ற வார்த்தையே பிடிக்காது.."

"அப்படியா.."

பார்த்தசாரதிக்கும்.. ராஜேஸ்வரிக்கும்.. மல்லிகாவின் மேல் கொஞ்சம் மதிப்பு வந்தது..

"ஏண்டா.. அப்புறம் எப்படிப் பெண் கேட்கச் சொல்லுகிறாய்..?"

"நீங்கள் எனக்குப் பெண் தேடினீர்கள்.. வர்ஷா என் ஆபீஸில் வேலை பார்க்கும் பெண்.. அவளது குணம்.. மணம்.. இதையெல்லாம் காற்றுவாக்கில் கேள்விப்பட்டு அவளைப் பெண் கேட்கப் போனீர்கள்.."

"பொய் சொல்லச் சொல்கிறாய்.."

"நன்மைக்குத்தானே அப்பா.."

"யாருடைய நன்மைக்கு.."

"எல்லோருடைய நன்மைக்காகவும்தான்.."

மகனின் சமயோசிதப் பதிலில் சிரித்து விட்டார் பார்த்தசாரதி.. ஆகாஷின் திட்டப்படியே அவர்கள் பெண் கேட்க சம்மதித்தனர்..

மாலதி பார்வதியம்மாளைத் தேடி மணியனுடன் சென்றாள்..

"அந்த அம்மாளை எங்கே பிடிப்பது மாலதி.."

"நாம் தேடத் தேவையே இல்லை.. அந்த அம்மாள் வாசலில் தான் நிற்பாங்க.."

"அது ஏன் வாசலில் நிற்கிறாங்க..?"

"அவங்க வீட்டு வாசல் அவங்க நிற்கிறாங்க.. நமக்கு ஏண்டா அதெல்லாம்..? அப்புறம் ஒரு விஷயம்.. அந்த அம்மா மகா புத்திசாலி.. உன் திருவிளையாடலை எல்லாம் அவர்களிடம் காண்பித்து விடாதே.. இது ஆகாஷின் வாழ்க்கைப் பிரச்சனை.. ரொம்பக் கஷ்டப்பட்டு இதை ஓர் நல்ல முடிவிற்குக் கொண்டு வந்திருக்கிறேன்.. நீ ஏதாவது குரங்காட்டம் ஆடிக் காட்டிக் கொடுத்து விடாதே.. உன் திருவாயை மூடிக் கொண்டு இரு.."

"எதற்கு இத்தனை பில்ட் அப் கொடுக்கிற..? அந்த அம்மாவே அறுபத்தைந்து வயதுக் கிழவி.. அதனிடம் போய் நான் என்ன நூல் விடப் போகிறேன்னு நீ கிடந்து பயப்படுகிறாய்..?"

"நூல் விடுவதா..? ஏன்டா.. ஒரு பிள்ளையைப் பெற்றவன் போலவா பேசுகிறாய்..? இரு.. திரும்பும்போது வாசவியிடம் சொல்லி வைத்து விட்டுப் போகிறேன்.."

"உன்னோடு இது ஒன்று இருக்கிறது மாலதி.. ஆண்ணா.. ஊண்ணா என் பெண்டாட்டியிடம் சொல்லி விடுவேன்னு மிரட்டுகிறாய்.. ஆகாஷுக்கும் விவேக்கிற்கும் ஜோடி சேர்த்து வைக்கிற.. என்னை மட்டும் சேர்ந்திருக்கும் ஜோடியை பிரித்து வைக்கத் துடிக்கிற.."

"போதும்.. போதும் வாயை மூடிக் கொள்.. அந்த பார்வதி அம்மாள் வாசலில் நிற்கிறாங்க.."

"அட ஆமாம்.. ஆனால் இவங்க ஏன் வாசலிலேயே நிற்கிறாங்க.."

"இப்ப.. அது ரொம்ப முக்கியம்.. வாடா பேசாமல்.."

பார்வதியம்மாள் மாலதியைப் பார்த்ததும் புருவம் உயர்த்தினாள்..

"யாரது.. நம்ம மாலதியா..?"

"ஆமாம் ஆன்ட்டி.. என்ன வாசலில் நிற்கிறீங்க..?"

"காய்கறிக்காரனின் வண்டி வருதான்னு பார்த்துக் கிட்டு இருந்தேன்.."

மாலதி மணியனை 'கேட்டுக் கொள்..' என்பது போல் ஓர் பார்வை பார்த்தாள்.. மாலதியைத் தொடர்ந்து மணியனைப் பார்த்த பார்வதியம்மாள்,

"இந்தப் பையன் யாரு..?" என்று வினவினாள்..

"பையனா..?" மாலதியிடம் பல்லைக் கடித்தான் மணியன்..

"உன்னைப் பற்றி இவங்களுக்கும் தெரிந்து விட்டது போல.."

"என்னவென்று..?"

"பையனுக்கு இங்கிலீஷ்ல் என்னடா சொல்வார்கள்..?"

"பாய்.."

"நீ ப்ளே பாய்தானே.. அதுதான் விளையாட்டுப் பையன்.."

"போதும் மாலதி.."

அவர்கள் பேசிக் கொண்டிருப்பது காதில் விழுகாமல் பார்வதியம்மாள் ஒரு கையை காதுக்கு மேல் வைத்து கேட்க முயன்றாள்..

"என்ன ஆன்ட்டி.."

"நீங்க என்னம்மா பேசிக்கறீங்க..?"

"அது ஒன்றுமில்லை ஆன்ட்டி.. நான் அன்றைக்கு வர்ஷாவின் கல்யாண விஷயம் பற்றிச் சொன்னேனே.. நினைவிருக்கிறதா..?"

"ஆமாம்.. ஆமாம்.. இவன்தான் நீ சொன்ன பையனா..?" பார்வதி அம்மாள் ஆவலாய் வினவ,

"கிழிஞ்சது போ.." என்று முணுமுணுத்தான் மணியன்..

"இவனில்லை ஆன்ட்டி.. அவன் இவனுடன் வேலை செய்கிறவன்.."

"அப்புறம் எதற்கு இவனைக் கூட்டி வந்திருக்கிற.."

மணியன் பார்வதி அம்மாளை விரோதமாய் பார்த்தான்.. மாலதி அவனது கையை ரகசியமாய் கிள்ளி.. "சும்மாயிரு.." என்று முணுமுணுத்தாள்..

"ஆன்ட்டி.. இவன் சொன்னால்தான் அவன் கேட்பான்.."

"எவன்..?"

"மாப்பிள்ளை.."

"ஓ.. அப்படியா.. இவன் சொல்லி அவன் கேட்டு விட்டானா..?"

"கேட்டு விட்டான்.."

"என்னம்மா சொல்கிற..?"

பார்வதி அம்மாள் நம்ப முடியாமல் மாலதியை வீட்டிற்குள் அழைத்துப் போய் அவர்கள் இருவருக்கும் காபி கொடுத்தாள்.. மணியன் கடைசிச் சொட்டு காபியை குடித்து முடித்தபோது மாலதியும் பேச வேண்டியதைப் பேசி முடித்து விட்டாள்..

"அப்போ நாங்க கிளம்புகிறோம் ஆன்ட்டி.."

"மகராசியாய் போயிட்டு வா.. இந்தப் பையனைப் பார்க்க எக்குத் தப்பாய் இருந்தாலும் நல்ல காரியம் பண்ணியிருக்கான்.. இவன் நல்லாயிருக்கணும்.."

வாழ்த்தியவளை.. வெட்டவா.. குத்தவா என்பது போல் மணி முறைக்க ஆரம்பிக்க மாலதி அவனை இழுத்து காருக்குள்

போட்டுக் கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றாள்..

## 26

வர்ஷாவின் சின்னஞ்சிறிய வீடு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.. ஜன்னல்களுக்கு புதிய திரைச்சீலைகள் போடப்பட்டிருந்தன.. பார்வதி அம்மாளின் வீட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட நாற்காலிகள் போடப் பட்டிருந்தன.. தரையில் புது ஜமுக்காளம் விரிக்கப் பட்டிருந்தது.. மல்லிகா சமையலறையில் பரபரப்பாக வேலை செய்து கொண்டிருந்தாள்..

மாலதி வந்து போன அடுத்த நிமிடமே பார்வதி மல்லிகாவைத் தேடி வந்து விட்டாள்..

"மல்லிகா.. இங்கே வா.."

"என்னங்கம்மா.."

"என்மேல் உனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கில்லையா..?"

"என்னம்மா இப்படிக் கேட்டு விட்டிங்க.."

"விவேக் இப்படிப் பண்ணி விட்டதால் என்மேல் கோபமாய் இருப்பாய்.."

"அப்படியெல்லாம் இல்லைம்மா.."

"அப்படியானால் நான் வர்ஷாவிற்கு வேறொரு இடத்தில் மாப்பிள்ளை பார்த்திருக்கிறேன்.. அதை நீ ஏற்றுக் கொள்வாயா..?"

மல்லிகா தயங்கினாள்..

"அம்மா.."

"பயப்படாதே.. இவனும் எனக்குத் தெரிந்த பையன் தான்.. விவேக் படித்த அதே படிப்பைத் தான் இவனும் படித்திருக்கிறான்.. பெரிய வேலையில் இருக்கிறான்.. சொந்த வீடு.. கார் எல்லாம் இருக்கிறது.. கும்பகோணம் பக்கத்தில் கிராமத்தில் வயல்கள் இருக்கிறதாம்.. காவிரிப் பாசனம்.. பெத்தவங்களுக்கு ஒரே பிள்ளை.. விவேக்கை

விட இவன் அதிகமான வசதியையுடைய பையன்.. இத்தனைக்கும் மேலாக.. நம் வர்ஷா வேலை பார்க்கும் ஆபிஸில் தான் அவன் பெர்ஸனல் மேனேஜராக வேலை செய்கிறானாம்.. நாளைக்கு அவர்கள் நம் வர்ஷாவைப் பெண் பார்க்க வருகிறார்கள்.."

"அப்படியா.. வர்ஷா சொல்லவேயில்லையே.."

"அவனுக்கு வர்ஷாவைத்தான் பெண் கேட்கப் போகிறோம்ன்னே தெரியாதாமே.. வர்ஷாவிற்கு எப்படி அவன்தான் பெண் பார்க்க வரப் போகிறான்னு தெரியும்..?"

மல்லிகா மகிழ்ச்சியடைந்தாள்.. அவளது மகள் அறியாமலே அவளது மேலதிகாரி அவளைப் பெண் பார்க்க வருகிறான்..

"என்னம்மா விசேஷம்..?"

"உன்னைப் பெண் பார்க்க வரப் போகிறார்கள்.."

"அம்மா.."

வர்ஷாவின் முகம் ஒளி இழந்தது.. அதைக் கவனிக்காத மல்லிகா தன் போக்கில் பேசிக் கொண்டிருந்தாள்..

"மாப்பிள்ளை வீடு பெரிய இடம்.. நீ அதிர்ஷ்டக்காரி வர்ஷா.."

மல்லிகா சமையலறையில் கேசரியைக் கிண்டி இறக்கி விட்டு பஜ்ஜிகளைப் போட ஆரம்பித்தாள்.. பால் காய்ச்சி... காபி கலக்க ரெடியாக வைத்திருந்தாள்.. உள்பக்கம் திரும்பி சத்தம் கொடுத்தாள்..

"வர்ஷா ரெடியாகி விட்டாயா..?"

"ம்ம்.."

வர்ஷா சமையலறைக்குள் வந்தாள்.. அழகான நீலக்கலர் பட்டு.. தளர்வாய் பின்னிய தலையில் மல்லிகைச் சரம்.. காதுகளில் கல் ஜிமிக்கி.. கழுத்தில் ஹர்ஷாவிடமிருந்து தப்பித்திருந்த கல் அட்டிகை.. மெல்லிய செயின் ஒன்று.. கைகளில் மெல்லிய தங்க வளையல்கள்..

திருப்தியுடன் மகளைப் பார்த்துக் கொண்டாள் மல்லிகா.. வாசலில் பேச்சுக்குரல் கேட்டது.. அவசரமாய் இழுத்துச் செருகியிருந்த சேலையை சரி செய்து கொண்டு

முந்தானையை இழுத்துத் தோளில் போர்த்திக் கொண்டு வாசலுக்கு விரைந்தாள்..

"வாங்க.. வாங்க.."

மாலதி.. கரண்.. மணியன்.. வாசவி.. ஆகாஷ்.. ராஜேஸ்வரி.. பார்த்தசாரதி.. என அனைவரும் உள்ளே வந்தனர்.. நிஷா உள்ளே ஓடிச் சென்று வர்ஷா இருந்த அறையை எட்டிப் பார்த்தது.. வாசவியின் கையில் மயூர் இருந்தான்.. பார்வதி அம்மாள் அவர்களைத் தொடர்ந்து உள்ளே வந்தாள்..

"உட்காருங்க.."

எல்லோரும் அமர்ந்தனர்.. ராஜேஸ்வரியும் பார்த்த சாரதியும் மல்லிகாவைப் பார்த்தனர்.. எளிய நூல் புடவையில் கம்பீரமாக இருந்தாள்.. அவளது அகன்ற விழிகளில் சோகம் இருந்தது.. அவளின் நடை உடை பாவனை அவள் பெரிய வீட்டுப் பெண்மணி என்பதை உணர்த்தின..
பார்வதியம்மாள் பேச்சை ஆரம்பித்தாள்..

"மல்லிகா.. இவங்கதான் மாப்பிள்ளையைப் பெற்ற வங்க.. அவர் தான் மாப்பிள்ளை.. இவங்க ரெண்டு பேரும் மாப்பிள்ளையின் சிநேகிதக் குடும்பங்கள்.."

மல்லிகா எல்லோருக்கும் பொதுவாய் கரம் குவித்தாள்.. பின் பார்த்தசாரதியையும் ராஜேஸ்வரியையும் பார்த்துப் பேச ஆரம்பித்தாள்..

"நீங்க என் பெண்ணைக் கேட்டு வந்ததில் எனக்கு ரொம்ப சந்தோசம்.. ஆனால் எங்களின் கடந்த காலக் கதையை நீங்கள் தெரிந்துக்கணும்.."

பார்த்தசாரதி வியப்படைந்தார்.. இந்தச் சின்ன வீட்டில் நூல் புடவையுடன் நிற்கும் இந்தப் பெண்மணி.. காரில் வந்து இறங்கி.. வைரங்கள் டாலடிக்க வந்து அமர்ந்திருக்கும் வசதியான குடும்பத்தை உடனே வளைத்துப் போட முயலாமல் குடும்பத்தின் நிகழ்வுகளை மறைக்காமல் கூற விரும்புகிறாள்.. அவளது நேர்மை அவரைக் கவர்ந்தது.. மனைவியைப் பார்த்தார்.. ராஜேஸ்வரியின் கண்களிலும் அவரது கருத்தே தெரிந்தது.

"எங்களுக்கு எல்லா விசயமும் தெரியும் அம்மா.. விசாரித்து விட்டுத்தான் வந்திருக்கிறோம்.. நீங்கள் பெண்ணை வரச் சொல்லுங்கள்.."

மல்லிகாவின் முகத்தில் நிம்மதி தெரிந்தது..

"வேறு எதுவும் கேட்கணும்னால் கேட்டுக்கங்க.. ஏன்னா எதையும் மறைத்துக் கல்யாணம் பேச நான் விரும்பவில்லை.. அப்புறம் ஒன்று.. என் மகள் அவளுடைய கல்யாணத்திற்கு அப்புறம் நான் அவளுடன் வந்து இருக்க வேண்டும் என்று கேட்டாள்.. ஆனால் எனக்கு அதில் விருப்பமில்லை.. பெண் கொடுத்த வீட்டில் இருப்பது சரி வராது.. நான் எங்கள் சொந்த ஊருக்கே போய் விடத் தீர்மானித்து இருக்கிறேன்..

எனவே அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்.."

ஆகாஷ்.. 'பார்த்தீர்களா..' என்று பெற்றோரைப் பார்த்து விழியால் கேட்டான்.. ராஜேஸ்வரி மல்லிகாவிற்கு பதில் சொன்னாள்..

"பெண்ணைக் கொடுத்த வீடு என்று ஏன் நீங்க நினைக்கிறீங்க.. அது உங்களின் அண்ணன் வீடுன்னு நினையுங்கள் எல்லாம் சரி வரும்.."

மல்லிகாவின் வார்த்தைகளைக் கேட்டுப் பதறிப் போயிருந்த மாலதிக்கு ராஜேஸ்வரியின் பேச்சைக் கேட்டதும் ஆறுதலாக இருந்தது.. அதற்குள் நிஷா ஓடி வந்து மாலதியின் மடியில் அமர்ந்து கொண்டு அவளது காதில் "நம் வர்ஷா ஆன்ட்டி.." என்று சொல்லியது..

"ஆமாம்.." மகளிடம் பதிலுக்கு கிசுகிசுத்தாள் மாலதி..

உள்ளறையை எட்டிப் பார்த்த மல்லிகா வர்ஷாவை பார்வையால் அழைத்தாள்.. இயந்திரம் போல் உணர்ச்சி யின்றித் தரையைப் பார்த்தபடி வந்து அமர்ந்தாள் வர்ஷா.. அவள் விழிகளில் வெறுமை இருந்தது.. வர்ஷாவைப் பார்த்த ராஜேஸ்வரியின் விழிகளில் ஆச்சரியமும் திருப்தியும் வந்தன.. பார்த்தசாரதியும் அப்படியே..

"பெண் ரொம்ப அழகாய் இருக்கிறாள்.." கணவரிடம் கிசுகிசுத்தாள் ராஜேஸ்வரி..

"இவளது அழகே.. ஆயிரம் சீர்வரிசைக்கு சமானம்.." மனைவியிடம் முணுமுணுத்தார் பார்த்தசாரதி..

"ஆமாங்க.. நம்ம சொந்த பந்தத்தில் இவ்வளவு அழகான பெண்ணை யாரும் கட்டினதே இல்லை.." மெல்லிய குரலில் கூறினாள் ராஜேஸ்வரி..

"நம்மைப் பார்த்து பொறாமைப்படப் போகிறாங்க பாரு..." பெருமையுடன் மனைவியைப் பார்த்தார் பார்த்தசாரதி..

அதுவரை அவர்கள் மனதில் குடிகொண்டிருந்த சின்னச் சின்ன வருத்தங்கள் கூட மறைந்து மாயமாகி விட்டன... வர்ஷாவின் அழகிலும்... அமைதியிலும் ஆகாஷின் பெற்றவர்கள் சமாதானமாகி விட்டார்கள்..

வர்ஷா குனிந்த தலையை நிமிராமல் அமர்ந்திருந்தாள்.. ஆகாஷின் முகத்தில் குறும்பு வந்தது..

"பெண்ணுக்குப் பாடத் தெரியுமா..?" என்று கேட்டான்..

வர்ஷாவின் உடலில் மின்சாரம் பாய்ந்தது.. இந்தக் குரல்.. இந்தக் குரல்.. அவளுடைய ஆகாஷின் குரல் அல்லவா.. சூரியனைப் பார்த்த தாமரையாய் சட்டென்று தலையை உயர்த்திப் பார்த்தாள் வர்ஷா.. ஆகாஷ் சிரித்தபடி அமர்ந்திருந்தான்.. பக்கத்தில் மாலதி.. கரண்.. மணியன்.. வாசவி.. இவர்கள்தான்.. ஆகாஷின் பெற்றோர்களா..?

அவள் அவசரமாய் எழுந்தாள்..

'எதற்கு எழுந்திருக்கிறாள்..' ஆகாஷ் புருவம் தூக்க.. நேராகப் போய் பார்த்தசாரதி.. ராஜேஸ்வரியின் கால்களில் பணிந்தாள் அவள்..

அவ்வளவுதான் ராஜேஸ்வரி மகிழ்ந்து விட்டாள்..

"நீ தீர்க்காயுசாய்.. தீர்க்க சுமங்கலியாய் இருக்கணும்.. எழுந்திரும்மா.." என்று வர்ஷாவை எழுப்பி விட்டாள்..

மீண்டும் பழைய இடத்தில் அமர்ந்த வர்ஷாவிடம் ஓடி வந்தாள் நிஷா.. அன்புடன் அவளை அணைத்து மடியில் வைத்துக் கொண்ட வர்ஷாவின் கண்கள் மாலதியை நன்றிப் பெருக்குடன் பார்த்தன..

மாலதி.. 'சும்மாயிரு..' என்று ஜாடை காட்டினாள்..

அன்றே தாம்பூலம் மாற்றி நிச்சயம் பண்ணி விட்டார்கள்.. வர்ஷாவின் சார்பாக பார்வதியம்மாளை தட்டைப் பெற்றுக் கொள்ளச் சொல்லி விட்டாள் மல்லிகா.. ஆகாஷின் வீட்டிலிருந்து பட்டுப்புடவை.. நகைகள் சீராகக் கொண்டு வந்திருந்னதர்.. மனம் கவர்ந்தவன் வாங்கிக் குடுத்திருந்த பட்டை உடுத்தி நகைகளைப் போட்டுக் கொண்டு சபைக்கு வந்து எல்லோரையும் வணங்கி எழுந்தாள் வர்ஷா.. திருமணத் தேதி குறிக்கப்பட்டது..

எல்லோரும் விடைபெற்றுக் கொண்டிருந்தபோது வர்ஷா மற்றவர்களின் கவனத்தை கவராத வகையில் மாலதியின் அருகே சென்றாள்.. அவளின் கரம் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்..

"ஏய்ய்.. பைத்தியம்.." நண்பனின் காதலியை ஆதரவுடன அணைத்துக் கொண்டாள் மாலதி..

மறுநாள் அலுவலகம் சென்ற வர்ஷா ஆகாஷிடம் மிருந்து எப்போது அழைப்பு வரும் என்று காத்துக் கொண்டிருந்தாள்.. அழைப்பு வரவும் அவசரமாய் எழுந்து அவனது கேபினுக்குள் சென்றாள்.. ஆவலாய் அவனது முகம் பார்த்தவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.. அவன் முகம் கடுகடுவென்று இருந்தது..

"வரும்போது கதவைத் தட்டி பெர்மிஷன் வாங்க வேண்டுமென்று தெரியாதா..? நீங்கள் பாட்டுக்கு வருகிறீர்களே.. மேனர்ஸ் கிடையாதா..?"

"ஸாரி ஸார்.." அவள் கண்கள் கலங்கி விட்டன..

அவளது கலக்கத்தைக் கவனிக்காதவன் போல் அவன் எரிச்சலுடன் கூறினான்..

"டேக் யுவர் சீட்.. ஒரு இம்பார்ட்டன்ட் லெட்டரை ரெடி பண்ணி ஆறு காப்பி பிரிண்ட் அவுட் பண்ணி விடுங்கள்.. ம்ம்.. நான் டிக்டேட் பண்ணுவதை நோட் பண்ணிக் கொள்ளுங்கள்.. க்விக்.. ஆல் ரெடி இட் இஸ் வெரி லேட்.."

ஆகாஷ் எழுந்து லெட்டரை டிக்டேட் பண்ணிக் கொண்டே அறையில் நடந்தான்.. வர்ஷா கண்ணீரை மறைத்துக் கொண்டு குனிந்து எழுதிக் கொண்டிருந்தாள்.. மெல்ல

அவளது முதுகுப்புறம் வந்து நின்றவன் குனிந்து அவளது கன்னத்தில் முத்தமிட்டான்..

"என்னடி.. பயந்து விட்டாயா..?" மென்மையாய் வினவினான்..

"ஆகாஷ்.." வர்ஷா விசும்பவே ஆரம்பித்து விட்டாள்..

"ஏய் எழுந்திரு.." என்று வர்ஷாவை எழுப்பியவன் அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டு.. "தொட்டதெற் கெல்லாம் அழுகையா..?" என்று கடிந்து கொண்டான்..

"நான் எவ்வளவு ஆசையாக பேச வந்தேன் தெரியுமா..?"

"தெரியும்.. இன்று ஆசையாய் என்னுடன் பேச வருவாயென்று தெரியும்.. இன்று ஒரு நாள் நான் இப்படிப் பண்ணியதற்கே அழுகிறாயே.. இதைப் போல் தானே மூன்று வருடங்களாய் நான் ஆசையாய் பேச வந்த போது.. நீ மூட் அவுட் பண்ணி என்னை மனதிற்குள் அழுக வைத்தாய்.."

"அதற்காக என்னைப் பழி வாங்குகிறீர்களா..?"

"போடி.. இவளே.. எனக்கு எப்படி இருந்திருக்கும் என்பதை உனக்கு உணர்த்தினேன்.. அவ்வளவு தான்.. அதற்காக பழி வாங்குவது என்பது போல் பிதற்றாதே.."

ஆகாஷ் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.. முதல் அணைப்பு.. மூன்று வருடங்களாய் மனதிற்குள் நினைத்துக் கொண்டிருந்தவளின் அருகாமை தந்த சுகம்.. அவன் உடல் சூடேற அனைப்பு இறுகியபோது வர்ஷா விலகிக் கொண்டாள்.. அவன் தாபத்துடன் அவளது கரம் பற்றி இழுத்தான்..

"ஸ்ஸ்.. இது ஆபிஸ்.. உங்கள் வீட்டு பெட்ரூ மில்லை.."

"இப்படிச் சொல்லித் தப்பிக்கப் பார்க்கிறாயா..? இருடி.. என் வீட்டு பெட்ரூமில் என்னிடம் வசமாய் மாட்டிக் கொள்ளத்தான் போகிறாய்.. அப்போது எப்படி

நீ தப்பிக்கிறாய்ன்னு நானும் பார்க்கிறேன்.."

அவன் சொன்னது போலவே அவன் வீட்டில்.. மாடியிலிருந்த அவனது பெட்ரூமில்.. இரவு நேரத்தில்.. கழுத்தில் காலையில் அவன் கட்டிய தாலியுடன்.. கால்களில்

காலையில் அவன் போட்டு விட்ட மெட்டியுடன்.. அவனது புது மனைவியாக உரிமையுடன் அவனருகில் வந்து வசமாக மாட்டிக் கொண்டாள் அவள்.. அவன் அவளை நெருங்கி இறுக்கிக் கொண்டான்..

"இப்போது எப்படித் தப்பிப்பாய்..?" அவளது காதோரம் கிசுகிசுத்தான்..

புதுமணத் தம்பதிகள் தேனிலவிற்கு கோவா சென்றார்கள்.. யாருமற்ற தனிமையில் மூன்று வருடங்களாக மனதில் மூண்டிருந்த மோகத் தீயை தணித்துக் கொண்டான் ஆகாஷ்.. அவனது கைகளிலிருந்து விலக மனமில்லாமல் அவனோடு ஒட்டி உறவாடிக் கொண்டிருந்தாள் வர்ஷா.. கால நேரம் பார்க்கத் தேவையில்லாத சூழல்.. படுக்கையில் தாபம் தீர்ந்து சரிந்து கிடந்தவன்.. தன் மார்பில் இருந்த வர்ஷாவின் முகம் தூக்கி நெற்றியில் முத்தமிட்டான்.. அவள் வெட்கச் சிரிப்புடன் மீண்டும் அவனது மார்பில் முகம் புதைத்தாள்..

"வர்ஷா.. கடைசியில் என் காதல் ஜெயித்து விட்டது.."

"ஆமாம்.. மாலதியின் துணையில்லா விட்டால் இது நடந்திருக்காது.."

தேனிலவு முடிந்து திரும்பி வந்தவர்கள்.. மாலதியின் வீட்டிற்கு விருந்து சாப்பிடப் போனார்கள்.. அங்கே மணியன், வாசவி, விவேக், திவ்யா ஜோடியினரும் வந்திருந்தார்கள்..

"எப்போது விவேக்.. உங்கள் கல்யாணம்..?"

"உங்களுக்குக் கல்யாணம் முடியட்டும் என்று காத்திருந்தேன்.. இந்த மாதமே பிப்பீ.. டும்.. டும்.. மேளம் தான்.." விவேக் காதலுடன் திவ்யாவைப் பார்த்தான்..

அவள் முகம் சிவந்தாள்.. அதைப் பார்த்த எல்லோரின் மனங்களும் நிறைந்தன..

மல்லிகாவை வீட்டில் ஒருத்தியாக ஏற்றுக் கொண்டனர் பார்த்தசாரதியும் ராஜேஸ்வரியும்.. தனிமையில் வாடியவள் குடும்பத்திற்குள் வந்து விட்டாள்.. தென்றலைத் தேடி

அலைந்த ஆகாஷும்.. வர்ஷாவும்.. தென்றலின் இதத்தில் மெய்மறந்து வாழ்ந்தனர்..

- முற்றும் -